E-ISSN: 2584-167X

Academic Research News

Development relies in Research

# Academic Research News

*Peer-Reviewed Journal*

## கல்வி ஆராய்ச்சி செய்திகள்

*சக மதிப்பாய்வு செய்யப்படும் இதழ்*

# சிற்றிலக்கிய வாழ்வியல் நெறிகள்
# Life Ethics in Minor Literature

தொகுதி 3, சிறப்பிதழ் 1, ஜூலை 2025

Volume 3, Special Issue 1, July 2025

# Pandian Educational Trust

## Our Journals:

I. International Journal of Tamil language and Literary Studies - E-ISSN – 2581-7140

UGC CARE, MLA, DOAJ, Google Scholar, MIAR, ERIHPLUS, MIR@BEL, ASI, ICI, INTERNET ARCHIVE Indexed

2. Chenkaantal - E-ISSN – 2583-0481

MLA, DOAJ, Google Scholar, MIAR, MIR@BEL, INTERNET ARCHIVE Indexed

3. Pandian Tamil Journal of Temple Studies - E-ISSN – 2583-0880

MLA, DOAJ, Google Scholar, MIR@BEL, INTERNET ARCHIVE Indexed

4. Pandian Journal of Women Studies - E-ISSN – 2583-715X

MLA, DOAJ, Google Scholar, INTERNET ARCHIVE Indexed

5. Literary Druid - E-ISSN – 2582-4155

MLA, Google Scholar, MIAR, ERIHPLUS, MIR@BEL, ASI, ICI, INTERNET ARCHIVE Indexed

6. Pandian Journal of Mathematical Sciences (PJMS) E-ISSN: 2583-8822

DOAJ, Google Scholar, INTERNET ARCHIVE Indexed

7. Academic Research News (கல்வி ஆராய்ச்சி செய்திகள்) E-ISSN - 2584-167X

Google Scholar, INTERNET ARCHIVE Indexed

4 QUALITY EDUCATION

SUSTAINABLE DEVELOPMENT GOALS

*To save environment and end climate change critical situations print if only it is needed.*

ISSN 2584-167X
9 772584 167004

E-ISSN: 2584-167X

# Academic Research News

*Peer-Reviewed Journal*

## கல்வி ஆராய்ச்சி செய்திகள்

*சக மதிப்பாய்வு செய்யப்படும் இதழ்*

# சிற்றிலக்கிய வாழ்வியல் நெறிகள்

# Life Ethics in Minor Literature

தொகுதி 3, சிறப்பிதழ் 1, ஜூலை 2025

Volume 3, Special Issue 1, July 2025

Be Eco-friendly

**Be Eco-friendly**

## Journal Details


| | | |
|---|---|---|
| **Journal title** | **:** | **Academic Research News** |
| **Abbreviated key-title** | **:** | **---** |
| **E- ISSN Number** | **:** | **2584-167X** |
| **Editor-in-Chief** | **:** | **Mrs. A. Gomathi** |
| **Publication frequency** | **:** | **Bi-Annual (Calendar Cycle - June and December)** |
| **Volume/Issue Type** | **:** | **Volume 3 Special Issue 1** |
| **Place of Publication** | **:** | **Virudhunagar** |
| **Start of Publication** | **:** | **July 2025** |
| **Paper Size (Format)** | **:** | **Digital A4 Size** |
| **Medium of Publication** | **:** | **E-version** |
| **Subject** | **:** | **Multidisciplinary Studies** |
| **Language** | **:** | **Tamil, English** |
| **Access Type (URL or DOI)** | **:** | **Gold OA, Online, Indexed long time in Internet Archive** |
| **Subscription Type** | **:** | **APC** |
| **Publisher** | **:** | **Maheswari Publishers,** (The publishing unit of PANDIAN EDUCATIONAL TRUST- TN32D0026797) |
| **Publisher Website** | **:** | **https://pandianeducationaltrust.com/** |
| **Journal Site** | **:** | **https://pandianeducationaltrust.com/academic-research-news.html** |


### பதிப்பாசிரியர் குழு பணி விவரம்/ Editorial Work Flow Details

இந்த **சிறப்பிதழ்** குழு, (எடிட்டோரியல்) நேர்மையான பதிப்பு நெறிமுறைகளின் படி அறிவார்ந்த கட்டுரைகளை நெறிமுறைக் கொள்கைகளுடன் தொகுத்துள்ளது. இது சமர்ப்பித்தல், கருத்துத் திருட்டு சரிபார்ப்பு, திருத்தங்கள், சக மதிப்பாய்வு செயல்முறை, (டபுள் பிளைண்ட்), பெரிய திருத்தங்கள் அல்லது சிறிய திருத்தங்கள், பரிந்துரைகள் மற்றும் திருத்தம், ஏற்பு, மூல கோப்பு தயாரித்தல் மற்றும் இணையதள தயாரிப்பு மற்றும் வெளியீடு ஆகியவற்றை உள்ளடக்கியது.

This Special issue committee curated the scholarly articles with ethical princples according to the norms of the Editorial work flow. It contains of submission, plagiarism check, correction, peer review process, (Double Blind), major corections or minor corrections, suggestions and rectifications, acceptance, copy editing and production and publication online.

# PUBLISHER'S MESSAGE

## Aim & Objectives

***Academic Research News*** **is *a* Peer-Reviewed Journal (E-ISSN: 2584-167X)** published **Bi-yearly (June – December)** which is published by **Maheswari Publishers,** patronized by **Pandian Educational Trust, Virudhunagar, Tamil Nadu, India**. **Academic Research News** aims to bring down Academic Research to promote research support for the academicians and scholars in the field of academic news related to research, indexing, ethical publishing and other related news. Research through this academic medium motivates in all aspects of main and inter-disciplines of the core area of study with authentic e-publication. Making Internationalization of **Academic Research News** in the globalized world aids the scholarly community to gather knowledge on Academic Research in the all fields of learning. The impudence and revelation of academic research on internet could foster green printing and open access nature in the domain research. All of these motivate best distribution of research that produces positive outcomes for the betterment of research and education and the unification of the people in our world. In achieving the aim, our journal **Academic Research News** has been created**.**

## Disclaimer

***Academic Research News*** **E-ISSN: 2584-167X** is committed to research ethics and considers plagiarism as a crime done to the original author. So, the authors are advised to follow academic ethics with respect to acknowledgment of quotations from other scholarly works. The Publisher & Editors will not be held responsible for any lapse of the provider regarding plagiarism in their manuscripts. The submissions must be original, must accompany the declaration form stating the research paper as an original work, and has not been published elsewhere for any academic or research purpose. The contributor will be liable for such lapses on any legal issues and publication ethics. **Contact:** arnmultijournal@gmail.com for submission and other information. For Institutional Subscription contact the publisher.

## Message from the Editor-in-Chief

***Academic Research News*** is a Peer Reviewed Journal which is committed to academic research, welcomes academicians, scholars and students all over the world who to advance their status of academic career and society by their scholarly ideas in all the field of academic studies. Research is to establish, substantiate facts, restate previous works and to resolve issues. An active venture to endow cogent approach to these types for educational reformations through academic research has become the central intent of the journal to bring down scholarly articles to the academic world.


**Publisher Contact:**

**Maheswari Darmalingam**

**Pandian Educational Trust (TN-32-0003213),**

**Maheswari Publishers,** (The publishing unit of PANDIAN EDUCATIONAL TRUST- TN-32-0003213**)**

3/350, Veterinary Hospital Back Side,

Virudhunagar- 626001, Tamil Nadu, India.

**Mobile:** +91 8526769556,

**email:** arnmultijournal@gmail.com



**Copyright © 2025 – Authors'**

***Academic Research News*** **E-ISSN: 2584-167X** is an Open Access journal and the Pdf copy can be reused within the terms of the CC BY license https://creativecommons.org/licenses/by/4.0/. Think before you print so that you can save trees and environment.

# சிற்றிலக்கிய வாழ்வியல் நெறிகள்
# Life Ethics in Minor Literature

**தொகுதி 3, சிறப்பிதழ் 1, ஜூலை 2025**

**Volume 3, Special Issue 1, July 2025**

## Special Issue Editors

**Dr. P. M. Jayakala,**
Associate Professor,
Tamil Research Centre,
Department of Tamil,
S.T.Hindu College,
Nagercoil-2, Tamil Nadu, India.
**Profile:**https://www.sthinducollege.com/department-of-tamil

**Dr. P. Ravindaran**,
Assistant Professor,
Tamil Research Centre,
Department of Tamil,
S.T. Hindu College,
Nagercoil-2, Tamil Nadu, India.
**Profile:**https://www.sthinducollege.com/department-of-tamil

## Editorial Board

**Mrs. A. Gomathi, (Editor-in-Chief)**
Assistant Professor of Commerce (S/F),
Kamaraj College. Thoothukudi, Tamil Nadu, India.
**Email:** editorarn@pandianeducationaltrust.com
**Profile:**https://kamarajcollege.ac.in/commerce/

**Dr. M. Annalakshmi,**
Assistant Professor of Mathematics,
Department of Mathematics,
VHNSN College, Virudhunagar - 626001,
Tamil Nadu, India.
**Email:** annalakshmi@vhnsnc.edu.in
**Profile:** https://www.vhnsnc.edu.in/dl.php?fid=AMAT7&id=15

**Dr. G. Rajesh Kumar,**
Assistant Professor,
Department of English,
Directorate of Distance Education,
Madurai Kamaraj University, Madurai.
**Email:** drrajeshmkudde@mkuniversity.ac.in
**Profile:** https://mkuniversity.ac.in/dde/faculty.php

**Mrs T. Jeyappradha,**
Assistant Professor of Management,
NMSSVN College,
Nagamalai, Madurai. Tamil Nadu, India.
**Email:** jeyappradha@nmssvnc.edu.in
**Profile:**https://nmssvnc.edu.in/academics/departments/department-of-business-administrationaided/

**Dr. D. Maheswari, (Editor-in-Chief - IJTLLS)**
The President,
Pandian Educational Trust, Virudhunagar.
Tamil Nadu, India.
**Email:** president@pandianeducationaltrust.com
**Profile:** http://pandianeducationaltrust.com/trustees.html

**Dr. S. Prema**
Assistant Professor of Tamil,
PSGR Krishnammal College for Women,
Coimbatore - 641004,
Tamil Nadu, India.
**Email:** prema@psgrkcw.ac.in
**Profile:** https://psgrkcw.irins.org/profile/135952

## Associate Editors

**Dr. S. Kulandhaivel,**
Assistant Professor,
Department of English,
Ganesar Arts and Science College,
Melasivapuri-622403, Pudhukkotai
District, Tamil Nadu, India.
**Email:** english.kulandhai@gmail.com

**Dr. M. Vinoth Kumar,**
Head i/c & Guest Lecturer,
Department of English,
Government Arts and Science College,
Nagalapuram, Thothukudi District,
Tamil Nadu, India.
**Email:** vinothkumar@pandianeducationaltrust.com
**Profile:** https://sites.google.com/view/msuccenglish/home

**Dr. B. Senthil Kumar,**
Assistant Professor,
Department of English,
Alagappa Govt. Arts College, Karaikudi,
Sivaganga-630003, Tamil Nadu, India.
**Email:** skbosesk@gmail.com

**Mr. B. Thangamarimuthu,**
Guest Lecturer in English,
Department of English,
Government Arts and Science College,
Nagalapuram, Thothukudi District,
Tamil Nadu, India.
**Email:** goldchangepearl@gmail.com
**Profile:** https://sites.google.com/view/msuccenglish/home

# வாழ்த்துரை



**மருத்துவர் ஆ. நாகராஜன்,**
**தலைவர் – செயலர்,**
**தென் திருவிதாங்கூர் இந்துக் கல்லூரி,**
**நாகர்கோவில், தமிழ்நாடு, இந்தியா.**

**அன்புடையீர்,**

நமது தென் திருவிதாங்கூர் இந்துக் கல்லூரி 72 வருட கால பாரம்பரியமிக்க கல்லூரியாகும். நம் கல்லூரியின் தமிழ்த்துறை உயராய்வு மையமும் பல்கலைக்கழக மானியக் குழுவால் (UGC) அங்கீகரிக்கப்பட்ட தமிழ் மொழி மற்றும் இலக்கிய பன்னாட்டு ஆய்விதழும் இணைந்து ***சிற்றிலக்கிய வாழ்வியல் நெறிகள்*** என்னும் தலைப்பில் தேசியக் கருத்தரங்கத்தினை 20 செப்டம்பர் 2024 அன்று நடத்தியது. இக்கருத்தரங்கு சிற்றிலக்கியங்களின் கருத்தினை எடுத்தியம்பும் நோக்கில் அமைந்தது. இக்கருத்தரங்கின் வழியாக பெறப்பட்ட ஆய்வுக் கட்டுரைகளைத் தொகுத்து தற்போது நூலாக்கம் செய்ய உள்ள தமிழ்த்துறைக்கும் ஒருங்கிணைப்பாளராக இருந்து சிறப்பாக பணியாற்றிய உதவிப் பேராசிரியர் முனைவர் பொ. இரவீந்திரன் மற்றும் இணைப்பேராசிரியர் முனைவர் பா.ம. ஜெயகலா அவர்களுக்கும் எனது உள்ளங்கனிந்த வாழ்த்துகளைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

**நன்றி**

**அன்புடன்**
**மருத்துவர் ஆ. நாகராஜன்**

# வாழ்த்துரை



**முனைவர் தெ.ம. பத்மநாபன்,**
**முதல்வர்,**
**தென் திருவிதாங்கூர் இந்துக் கல்லூரி,**
**நாகர்கோவில், தமிழ்நாடு, இந்தியா.**

நமது தென் திருவிதாங்கூர் இந்துக் கல்லூரி கல்வி சேவை செய்யும் நோக்கத்துடன் 09/01/1952-ஆம் ஆண்டு முதல் சிறப்பாகச் செயல்பட்டு வருகின்றது. இக் கல்லூரியானது 12 துறை சார்ந்த பாடங்களையும் ஆராய்ச்சினையும் செயல்படுத்தி வருகின்றது. நம் தமிழ்த் துறையானது தமிழ் இலக்கியங்கள் சார்ந்தும் தமிழ் மொழிச் சார்ந்தும் பல கருத்தரங்குகளையும், பயிலரங்குகளையும் பலமுறை நடத்தியுள்ளது. அதன் தொடர்ச்சியாக நம் தமிழ்த் துறையும் பல்கலைக்கழக மானிய குழுவால் (UGC) அங்கீகரிக்கப்பட்ட தமிழ் மொழி மற்றும் இலக்கிய பன்னாட்டு ஆய்விதழும் இணைந்து 20/09/2024 அன்று சிற்றிலக்கியங்களின் வகைகளையும் கருத்தாழுமையையும் வரலாற்றையும் விளக்கும் நோக்கில் ***சிற்றிலக்கிய வாழ்வியல் நெறிகள்*** என்னும் தலைப்பில் தேசியக் கருத்தரங்கம் நடத்தியது. கருத்தரங்கில் பெறப்பட்ட ஆய்வுக் கட்டுரைகளைத் தொகுத்து நூலாக்கம் செய்துள்ள தமிழ்த்துறைக்கும், ஒருங்கிணைப்பாளராகிய முனைவர் பொ. இரவீந்திரன் மற்றும் முனைவர் பா. ம. ஜெயகலா அவர்களுக்கும் வாழ்த்துகள் தெரிவிப்பதில் மகிழ்ச்சியடைகின்றேன்.

**நன்றி**

**அன்புடன்**
**முனைவர் தெ.ம. பத்மநாபன்.**

## அணிந்துரை



**பேரா. அ.கா.பெருமாள்**
**நாட்டாரியல், கல்வெட்டியல் ஆய்வாளர்,**
**நாகர்கோவில்.**

*பிரபந்தம்* என்னும் சமஸ்கிருதச் சொல்லைச் *சிற்றிலக்கியம்* அல்லது *சிறு இலக்கியம்* என்று கூறுவது பொது மரபாகும். இச்சொல்லுக்குப் பாமாலை, பனுவல் என்னும் வேறு அர்த்தங்களும் உண்டு. வைஷ்ணவ சம்பிரதாயம் ஆழ்வார்கள் பாடிய பாடல்களைப் பிரபந்தம் என்றுதான் குறிப்பிடுகின்றது. வையாபுரி பிள்ளை பெருங்காப் பியங்களையும் பிரபந்தம் என்று கூறுகிறார். சிலப்பதிகார உரையில் இது இசை வடிவம் என்னும் பொருளில் குறிக்கப்படுகிறது. வாய்மொழி மரபு, நாட்டார் மரபு போன்றவற்றில் இருந்து செப்பம் செய்யப்பட்ட இலக்கியங்களைக் குறிக்க பிரபந்தம் என்ற சொல்லை ஆரம்பகாலத்தில் குறிப்பிட்டு இருக்கலாம் என்ற ஊகம் நாட்டார் வழக்காற்று ஆய்வாளர்களிடம் உண்டு. இந்த ஊகத்தை வட இந்திய மொழியியல் ஆய்வாளர்களும் கூறுகின்றனர். பிரபந்தத்தைக் குறிக்கும் சிற்றிலக்கியம் என்னும் தமிழ்ச்சொல் பிற்காலத்தில் உருவானதுதான். ஒருவகையில் விமர்சகர்களாலும் இலக்கிய வரலாற்று ஆசிரியர்களாலும் பிரபலமாக்கப்பட்ட சொல் என்றுகூட இதைக் கருதலாம்.

சென்னைப் பல்கலைக்கழகத்தின் தமிழ் லெக்சிகனும் (1926) பவானந்தம் பிள்ளையின் அகராதியும் (1925) கதிரைவேல் பிள்ளையின் அகராதியும் (1918) தமிழ்நாட்டுப் பாடநூல் நிறுவனம் வெளியிட்ட மு.சண்முகம் பிள்ளை தொகுத்த அகராதியும் (1986) சிற்றிலக்கியம் என்று சொல்லைச் சொல்லவில்லை. கிரியா தமிழ் அகராதி (1992) சிற்றிலக்கியம் என்பதற்குப் பிரபந்தம் என்ற பொருளைத் தருகிறது. பிரபந்தங்கள் 96 என்னும் வழக்கை முதலில் கூறியவர் வீரமாமுனிவர் என்னும் சிலரின் கருத்து தவறானது. அவருக்கு முன்பே இச்சொல்லை தனிப்பாடல் புலவர்களும் வேறு சிலரும் கையாண்டுள்ளனர். படிக்காசுப் புலவரின் உலா இலக்கியம் பிரபந்த தீபிகை போன்றவற்றில் இந்தச் சொல்லின் பிரயோகம் வருகிறது. தமிழ்ப் பாட்டியல் நூல்கள் 96 வகையான பிரபந்தங்களின் பெயர்களைக் கூறவில்லை. பாட்டியல் நூல்கள் கூறும் பிரபந்த இலக்கியங்களுக்கு உட்படாத சில (வைத்திய பள்ளு) வந்திருக்கின்றன. அந்தாதி வகை இலக்கியம் கி.பி. ஐந்தாம் நூற்றாண்டில் உருவாகிவிட்டது. அதிலிருந்து இன்றுவரை உள்ள காலகட்டங்களில் பல்வேறு பிரபந்தங்கள் வந்துவிட்டன.

தமிழ் இலக்கியப் பரப்பில் 40 வகையான சிற்றிலக்கியங்கள் பற்றிய செய்திகளே ஓரளவு கிடைத்துள்ளன. இவற்றிலும் அந்தாதி, உலா, கலம்பகம், பரணி, பள்ளு போன்ற 12 இலக்கியங்களையே பொதுவாக இலக்கிய வரலாற்று ஆசிரியர்கள் கூறுகின்றார்கள். பிரபந்தங்களின் வடிவங்கள் உருவான காலகட்டங்களில் அரசன் அல்லது தலைவன் அல்லது இறைவனின் புகழ் பாடுவது என்பது பொதுவாக நடந்தது. ஒரு வகையில்

அரசர்களின் புகழைப் பாடுவதற்காக உருவாக்கப்பட்ட வடிவங்களே இவை என்று சந்தேகப்படும் அளவுக்கு இவற்றின் இலக்கண வகைகள் அமைந்திருக்கின்றன என்னும் விமர்சகர்கள் சிலரின் கருத்தும் (கோ. கேசவன்) உள்ளது. 19, 20, 21-ஆம் நூற்றாண்டுகளில் வெளிவந்த பிரபந்த வகைகள் சிலவற்றின் நோக்கமே தனிப்பட்டவரின் துதி பாடுவது பெருமை பேசுவது என்பதுதான். என்றாலும் பிரபந்த நூல்களின் பதிவுகளில் தமிழ் சமூகம் குறித்த வேறு விஷயங்கள் கிடைக்கின்றன என்பது முக்கியமான ஆறுதலான விஷயம். பிரபந்தங்களில் காரைக்கால் அம்மையாரின் அற்புதத் திருவந்தாதி என்ற நூலே பழமையானது (கி.பி. 5 ஆம் நூற்றாண்டு) இதிலிருந்து இன்று வரை (முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் பிள்ளைத்தமிழ் ஜனவரி 2025) தொடர்ந்து பிரபந்த வகைகளில் சில வடிவங்கள் மட்டும் வாழ்ந்து கொண்டிருக்கின்றன. ஒரு வகையில் தமிழில் காவியங்கள் புராணங்கள் போன்ற வடிவங்கள் 18ஆம் நூற்றாண்டிலேயே உருவாகும் நிலையில் தேக்கம் அடைந்து விட்டது. அப்படியானால் பிரபந்த வடிவம் எதனால் வாழ்கிறது முக்கிய காரணம். தலைவனை பாடுவதற்கு ஏற்ற சிறு வடிவம் இது என்பதுதான். ஏற்கனவே உள்ள மாதிரி வடிவங்களை அப்படியே பிரதி செய்து மாற்றம் செய்து விடலாம் என்னும் எளிமையான வசதி என்னும் காரணங்களும் இருக்கலாம்.

சிற்றிலக்கிய வாழ்வியல் நெறிகள் என்னும் தலைப்பில் அமைந்த இந்த நூலில் பிரபந்த வடிவங்கள் மறுபடியும் பரிசீலனைக்கு உட்படுத்தப் பட்டிருக்கின்றன. அந்தாதி, குறவஞ்சி, தூது, பரணி ஆகிய நான்கு வடிவங்கள் பரிசீலனை செய்யப் பட்டிருக்கின்றன. மேலும் இதில் சிற்றிலக்கியம் பற்றிய பொதுவான பார்வையும் கட்டுரைகளாக உள்ளன. இது நல்ல முயற்சி.

அபிராமி அந்தாதியின் வாழ்வியல் என்னும் கட்டுரை மராட்டிய சரபோஜி கால வாழ்வியல் கூறுகளைப் பக்திச் சார்புடன் பொருத்திக் காட்டுகிறது இந்தக் கட்டுரையில் அபிராமிப் பட்டரின் பக்தி நெறி வாழ்வியல் நெறியோடு இணைக்கப்பட்டு காட்டப்படுகிறது. மராட்டியர் நாயக்கர் அரசர்களின் கால சமூகத்தின் சூழலே ஒரு வகையில் இப்படித்தான் இருந்தது.

கலிங்கத்துப் பரணியில் காலமும் கருத்தும் என்ற கட்டுரை தமிழரின் வழிபாட்டு நெறிகளில் இணைப்பை ஒரு உதாரணம் மூலம் விளக்குகிறது. சங்க காலத்தில் கொற்றவையாக இருந்த பெண் தெய்வம் சோழர் காலத்தில் காளியாக மாறுகிறாள். இதற்குரிய பின்னணி சோழர் காலத்தில் இருந்தது. ஒரு வகையில் வீரர்களின் வழிபாடு வீரம் நிறைந்த மண்ணின் பின்னணி இந்த மாற்றத்திற்குக் காரணமாய் இருந்தது என்பதை கட்டுரை ஆசிரியர் பூடகமாகக் காட்டுகிறார்.

பிற கட்டுரைகளும் எடுத்துக்கொண்ட தலைப்பிலிருந்து அகலாமல் உள் நின்ற செய்திகளைச் சுருக்கமாக எடுத்து வைக்கிறது. மிக அண்மையில் இயற்றப்பட்ட பிள்ளைத்தமிழ் வடிவங்களை ஒட்டுமொத்தமாக பார்ப்பது கூட நூற்றாண்டு வாழ்வியல் கூறுகளைப் புரிவதற்கு உதவலாம். இந்த நூலின் கட்டுரை ஆசிரியர்கள் இது பற்றி யோசிக்கலாம். பொதுவாக தமிழகத்தின் கல்லூரிகளிலும் பல்கலைக் கழகங்களிலும் நிகழ்கின்ற கருத்தரங்குகளில் படிக்கப்பட்ட கட்டுரைகள் பெரும்பாலும் நூல் வடிவில் வருவதில்லை. அதற்குரிய முயற்சி குறைவாகவே நடக்கின்றன. அந்த வகையில் இந்த நூல் பாராட்டுக்குரியது.

**நன்றி**

**என்றும் அன்புடன்**
**பேரா. அ.கா.பெருமாள்**

# நன்றியுரை





**முனைவர் பா. ம.ஜெயகலா,**
**இணைப் பேராசிரியர்,**
**தமிழ்த்துறை உயராய்வு மையம்,**
**தென் திருவிதாங்கூர் இந்துக்கல்லூரி,**
**நாகர்கோவில்-2.**

**முனைவர் பொ.இரவீந்திரன்,**
**உதவிப் பேராசிரியர்,**
**தமிழ்த்துறை உயராய்வு மையம்,**
**தென் திருவிதாங்கூர் இந்துக்கல்லூரி,**
**நாகர்கோவில்-2**

**ஓம் கற்பக நாதா நமோ நமோ**
**கணபதி தேவா நமோ நமோ**
**கஜமுக நாதா நமோ நமோ**
**காத்தருள்வாயே நமோ**

**- விநாயகர் துதி**

**வெள்ளைக் கமலத்தில் வீற்றிருப்ப பவளே**
**கள்ளமில்லா யோகிகள் நிஷ்டையில் நித்தியம்**
**வந்து அமர்ந்து ஆசிதரும் அன்னையே**
**வேத வினோதினி நான்முகன் தேவி கலைவாணி**
**உந்தன் கழல் துணையம்மா**

**- கலைவாணி துதி (வாசவன்)**

சிற்றிலக்கியம் என்பது அறம், பொருள், இன்பம், வீடு என்னும் நான்கு உறுதிப்பொருட்களுள் ஏதேனும் ஒன்றைத் தருவதாக அமைவது. இதில் பாடப்பெறும் கடவுள் அல்லது மன்னன் அல்லது வள்ளல் ஆகியோருடைய வாழ்வின் ஒரு சிறு கூறு மட்டுமே விளக்கப்பட்டிருக்கும். சிற்றிலக்கிய வகைகளின் எண்ணிக்கை தொண்ணூற்றாறு என மரபாகக் கூறப்படுகிறது. தொண்ணூற்றாறு வகைகளையும் தாண்டி பலவகை சிற்றிலக்கியங்கள் இக்காலத்தில் வளர்ந்து விரிந்துள்ளன. இத்தகைய சிறிறலக்கியங்களுக்கு பன்னிரு பாட்டியல், வச்சணந்தி மாலை, தொன்னூல் விளக்கம் பிரபந்தத்திரட்டு, பிரபந்ததீபம், பிரபந்ததீபிகை, பிரபந்தமரபியல், சதுரகராதி, வெண்பாப்பாட்டியல் என்பன இலக்கணம் கூறுகின்றன.

தேசியக் கருத்தரங்கினை எங்கள் கல்லூரியில் நடத்துவதற்கு அனுமதி அளித்து, நூலாக்கத்திற்கு வாழ்த்துரை வழங்கிய கல்லூரி **தலைவர் – செயலர் மருத்துவர் ஆ. நாகராஜன்** ஐயா அவர்களுக்கு மனதார நன்றியினை உரித்தாக்குகின்றோம். தேசியக் கருத்தரங்கினை நடத்த அனுமதியளித்து ஒருங்கிணைப்பாளர்களாகிய எங்களை ஊக்குவித்து நூலிற்கு வாழ்த்துரை வழங்கிய பாசத்திற்குரிய **முதல்வர் முனைவர் தெ.ம. பத்மநாபன்** அவர்களுக்கும்

நன்யினைத் தெரிவித்துக் கொள்கின்றோம். நூலிற்கு அணிந்துரை வழங்கிய நாகர்கோவில், நாட்டாரியல், கல்வெட்டியல் ஆய்வாளர், பேரா. அ.கா. பெருமாள் அவர்களுக்கும் நன்றியினை உரித்தாக்குகின்றோம். எங்கள் கல்லூரியோடு இணைந்து இப்பன்னாட்டுக் கருத்தரங்கினை நடத்திய பல்கலைக்கழக மானியக் குழுவால் (UGC) அங்கீகரிக்கப்பட்ட *தமிழ் மொழி மற்றும் இலக்கிய பன்னாட்டு ஆய்விதழ்* **ஆசிரியர் முனைவர் த. மகேஸ்வரி** அவர்களுக்கும் எங்கள் இதயம் கனிந்த நன்றியினை உரித்தாக்குகின்றோம். இக்கருத்தரங்கில் சிறப்புரையாற்றிய மதுரை, தியாகராசர் கல்லூரி, தமிழ்த்துறை, உதவிப் பேராசிரியர், முனைவர் ரே. கோவிந்தராஜ் அவர்களுக்கும், நாகர்கோவில், பயோனியர் குமாரசுவாமிக் கல்லூரி, தமிழ்த்துறை, இணைப் பேராசிரியர், முனைவர் கோ. சி கோலப்பதாஸ் அவர்களுக்கும், விருதுநகர், *தமிழ்மொழி மற்றும் இலக்கியப் பன்னாட்டு ஆய்விதழ்*, பதிப்பாசிரியர், முனைவர் த. மகேஸ்வரி அவர்களுக்கும் நன்றியினைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

கருத்தரங்குச் சிறப்புடன் நடைப்பெற எங்களுடன் இணைந்துப் பணியாற்றிய தமிழ்த்துறைத் தலைவர் மற்றும் பேராசிரியர்கள் அனைவருக்கும் நன்றி. பல்வேறு கல்லூரிகளிலிருந்து கருத்தரங்கில் கலந்துக் கொண்ட பேராசிரியர்களுக்கும் ஆய்வாளர்களுக்கும் கட்டுரையாளர்களுக்கும் நன்றியினைத் தெரிவித்துக் கொள்கின்றோம். இக்கருத்தரங்கில் கலந்துக் கொண்டு நிகழ்ச்சிகளை ஒருங்கிணைத்த எங்களது பாசமிகு முனைவர் பட்ட ஆய்வாளர்களுக்கும் கலந்துக் கொண்ட மாணவச் செல்வங்களுக்கும் எங்கள் நன்றியினை உரித்தாக்குகின்றோம்.

**வானவர் ஏத்தும் மறையோர் முதலிய**
**மக்களின் னோர்க்குத் தக்க தன்மையிற்**
**பிள்ளைக் கவிமுதல் புராணம் ஈறாகத்**
**தொண்ணூற் றாறெனும் தொகைய தான**
**முற்பக ரியல்பை முன்னுறப் பாடும்**
**பிரபந்த மரபியல் பிரபந்த மரபியலே**

**- பிரபந்தமரபியல்**

**நன்றி....**

# பொருளடக்கம் / Contents


| வ. எண்<br>Sl. No | தலைப்பு / பெயர்<br>Title/Author Name | பக்க எண்<br>Page No |
|---|---|---|
| 1. | குற்றாலக் குறவஞ்சி இலக்கியம் காட்டும் மலை வளமும் நாட்டு வளமும்<br>Richness of the Mountains and Country as shown in *Kutrala Kuravanchi*<br>அ. அருண் பெஜோ / A. Arun Bejo<br>முனைவர் பா. ம. ஜெயகலா / Dr. P. M. Jayakala | 1-9 |
| 2. | முக்கூடற் பள்ளுவில் பள்ளர் இன மக்களின் வாழ்வியல் நிலைப்பாடு<br>Livelihood of the Pallar People in *Mukkudarpallu*<br>முனைவர் பொ. இரவீந்திரன் / Dr. P. Ravindaran | 10-19 |
| 3. | சிற்றிலக்கியங்களில் பக்தி நெறி<br>Devotion in Minor Literature<br>முனைவர் கு. கவிதா / Dr. K. Kavitha | 20-29 |
| 4. | கலிங்கத்துப்பரணி நவிலும் காளிதேவியின் சிறப்புகள்<br>Glory of Goddess Kali Evinced in *Kalingathupparani*<br>ஐ. கார்த்திக் / I. Karthick<br>முனைவர் பா. ம. ஜெயகலா / Dr. P. M. Jayakala | 30-35 |
| 5. | சிற்றிலக்கிய வரையறையும் கூறுகளும்<br>Definition and Elements of Minor Literary Forms<br>முனைவர் த. கிறிஸ்டல் ரெஜி / Dr. T. Crystal Reji | 36-46 |
| 6. | அபிராமி அந்தாதியும் வாழ்வியலும்<br>Ethics of Life and *Abirami Anthathi*<br>முனைவர் கோ. சி. கோலப்பதாஸ் / Dr. K. S. Kolappadhas | 47-57 |
| 7. | கலிங்கத்துப்பரணி; காலமும் கருத்தும்<br>*Kalingathupparani;* Timeline and Perception<br>முனைவர் ரே. கோவிந்தராஜ் / Dr. R. Govindaraj | 58-69 |
| 8. | தாமஸ் மலைக் குறவஞ்சியில் நாயகன் நாயகி பாவம்<br>Sentiment of the Leader and the Beloved in *Thomas Malai Kuravanjil*<br>முனைவர் தோ. நிஷா / Dr. T. Nisha | 70-75 |
| 9. | *அழகர் கிள்ளை விடு தூது* வெளிப்படுத்தும் வருணனை சிறப்பு<br>Special Narration in *Azhagar Killai Vidu Thoothu*<br>நா. பத்மஸ்ரீ / N. Padmasree<br>முனைவர் பா. ம. ஜெயகலா / Dr. P. M. Jayakala | 76-84 |
| 10. | குற்றால மலை வளமும் வசந்தவல்லி காதலும்<br>Lushness of the Courtallam Hills and the Love of Vasantavalli<br>முனைவர் பா. ம. ஜெயகலா / Dr. P. M. Jayakala | 85-92 |

**Pandian Educational Trust supports SDG Goals and is a member of UN SDG Publisher compact.**



Academic Research News

*Peer-Reviewed Journal*



**Volume 3, SPL Issue 1, July 2025** **E-ISSN: 2584-167X**

# Richness of the Mountains and Country as shown in *Kutrala Kuravanchi*

**A. Arun Bejo,** Tamil Research Scholar, Reg. no. : 21113154021022, S.T.Hindu College,
Nagercoil, Manonmaniam Sumdaranar University, Tirunelveli-12, Tamil Nadu, India.
**ORCiD: https://orcid.org/0000-0002-0170-7230**
**Dr. P. M. Jayakala,** Associate Professor, Tamil Research Centre, S.T.Hindu College,
Nagercoil, Manonmaniam Sumdaranar University, Tirunelveli-12, Tamil Nadu, India.
**ORCiD: https://orcid.org/0000-0002-0736-0047**
Received: 1 April 2025; Revised: 15 April 2025; Accepted: 29 May 2025; Available Online: 30 July 2025.

## Abstract

*Kuravanji literature has a distinctive place in minor Tamil literature. "Thirukkutrala Kuravanji" was written by Tirikooda Rasappa Kavirayar. This masterpiece has been often honoured as the "Crown of Poetry," and exemplifies the richness of the Kuravanji tradition from its themes and structure. The work connects devotion, romance, folklore, and cultural expression into a refined narrative. The central theme of the work is the worship of God and the depiction of the sacred procession (Thiru Ula) of the Lord. It elevates its devotional essence. There is alos an equal significance in it and that is the love story of Vasanthavalli, it introduces lyrical charm and emotional depth. The Kuravanji drama is characterised by vibrant dialogues such as the exchanges between Singhan and Singhi. It adds dramatic vitality and humour. These elements highlight the poetic talent of Rasappa Kavirayar. Hence, Thirukkutala Kuravanji serves as a cultural resouvoir and presents vivid descriptions of the lives and traditions of the people who inhabited the region. This work is an aesthetic appeal and enriches the understanding of Tamil cultural heritage by blending devotion, folklore, romance, and social life.*

**Keywords:** Sittilakkiyam, Kuravanji, Thalaivan, Thalaivi, Malai Valam, Natu valam.

## References

[1] Innasi.Su (Pub). *Chathurakaradi*. Sandhya Publishing House, Chennai, 2005.
[2] Puliyur Kesigan. *Kutrala Kuravanchi.* Saradha Pathipagam, Chennai, 2009.
[3] ---. *Tolkappiyam*. Sri Senbaga Publishing House, Chennai, 2010.
[4] Punnaivananatha Mudaliar, P.C & Ramasamy Pillai, C. *Kutrala Kuravanchi*. Saiva Siddhanta Publishing House, Tirunelveli, 1950.
[5] ---. *Thirukkutralal Kuravanchi*. Kala Chetram Publication (U.V.S. Library), Chennai, 1945.
[6] ---. *Thirukkutralal Kuravanchi*. Thirukkutralal Swami Koil Publication, Tenkasi, 1953.

**Author Contribution Statement:** NIL.
**Author Acknowledgement:** NIL.
**Author Declaration:** I declare that there is no competing interest in the content and authorship of this scholarly work.
The content of the article is licensed under https://creativecommons.org/licenses/by/4.0/ International License.

Academic Research News

# Academic Research News

*Peer-Reviewed Journal*



**Volume 3, SPL Issue 1, July 2025** **E-ISSN: 2584-167X**

# குற்றாலக் குறவஞ்சி இலக்கியம் காட்டும் மலை வளமும் நாட்டு வளமும்

**அ. அருண் பெஜோ,** தமிழ் முனைவர் பட்ட ஆய்வாளர், பதிவு எண்: 21113154021022, தெ. தி. இந்துக் கல்லூரி, நாகர்கோவில், மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழகம், திருநெல்வேலி - 12, தமிழ்நாடு, இந்தியா.
**ORCiD: https://orcid.org/0000-0002-0170-7230**
**முனைவர் பா. ம. ஜெயகலா,** இணைப்பேராசிரியர், தமிழ் உயராய்வு மையம், தெ. தி. இந்துக் கல்லூரி, நாகர்கோவில், மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழகம், திருநெல்வேலி - 12, தமிழ்நாடு, இந்தியா.
**ORCiD: https://orcid.org/0000-0002-0736-0047**

**ஆய்வுச்சுருக்கம்**

*சிற்றிலக்கிய வகைகள் 96 அதில் முக்கியமான ஒரு வகையாக கருதப்படுவது குறவஞ்சி இலக்கியம். குறவஞ்சி இலக்கியங்களில் தற்போது வரை சிறப்பு பெற்று வரும் இலக்கியம் திரிகூட ராசப்ப கவிராயர் எழுதிய திருக்குற்றால குறவஞ்சி ஆகும். இதனால் இந்நூல் "கவிதை கிரீடம்" என்று அழைக்கப்படுகிறது. இச் சிறப்புமிக்க இலக்கியத்தில் கடவுள் வணக்கம், இறைவனின் திருஉலா, வசந்தவல்லியின் காதல், குறவஞ்சி நாடகம், சிங்கனுக்கும் சிங்கிக்கும் இடையேயான உரையாடல் என பல்வகையான செய்திகள் சிறப்பாக அமைக்கப்பட்டுள்ளன. இவை அனைத்தும் இவ்விலக்கியத்திற்கு மென்மேலும் மெருகூட்டுகின்றன. இலக்கியத்தில் வரும் வர்ணனைகள் பிற சிற்றிலக்கிய வகைகளில் இருந்து இவ் இலக்கியத்தை மேம்படுத்திக் காட்டுகின்றன. இவ்வுலக்கியமானது குற்றால மலையின் பெருமைகளையும் அங்கு காணப்படும் மக்களின் வாழ்வியல் பற்றிய செய்திகளையும் நம் கண் முன்னே எடுத்துக்காட்டுகின்றது.*

**குறிப்புச்சொற்கள்:** சிற்றிலக்கியம், குறவஞ்சி, தலைவி, தலைவன், மலைவளம்.

## முன்னுரை

சிற்றிலக்கிய வகையில் சிறப்பு வாய்ந்தது குறவஞ்சி. இது 16, 17ஆம் நூற்றாண்டளவில் தோன்றி சிறப்பிடம் பெற்றது. இவற்றைப் பற்றிய செய்திகள் தொல்காப்பியர் காலம் தொட்டு காணப்படுகின்றன. குறவஞ்சி நூல்களில் வரும் குறி சொல்லும் நிகழ்வுகள் சங்க காலத்தில் சிறப்புற்றுத் திகழ்ந்தன. சான்றாக தலைவனும், தலைவியும் காதல் கொள்கின்றனர். தலைவன் தலைவியைப் பிரிந்து செல்கின்றான். தலைவனை நினைத்து தலைவி மனம் வருந்தி உடல் மெலிகின்றாள். இதனால் வருந்திய நற்றாயும், செவிலித்தாயும் அவள் மெலிவிற்கான காரணத்தைக் கண்டறிய முயன்றனர். எனவே அவர்கள் கட்டு, கழங்கு, வெறியாடல் போன்றவற்றை நிகழ்த்தி தெய்வத்தின் மூலம் தலைவியின் மெலிவுக்கான காரணத்தை கண்டறிந்து தீர்க்க முயன்றனர். இந்நிகழ்வே குறவஞ்சி இலக்கியத்துக்கு அடிப்படையாகும். இந்நிகழ்வை உறுதிபடுத்திய தொல்காப்பியரும், **"கட்டினும் கழங்கினும் வெறியென இருவரும் ஒட்டிய திறத்தால் செய்திக் கண்ணும்" (தொல். பொருள். நூ. 25:112-113)** என்று குறிப்பிடுகின்றார். பிற்காலத்தில் குறவஞ்சிக்கு சிறப்பான இலக்கணம் வகுத்த வீரமாமுனிவர் தம் சதுரகராதியில், **"ஆசிரியப்பா, வெண்பா, தரவு, கொச்சம், கலித்துறை, ஆசிரிய விருத்தம், கலிவிருத்தம், போன்ற இயற்றமிழ் செய்யுளுடன் சிந்து, கீர்த்தனை, கண்ணிகள் போன்ற இசைப்பாடல்களுடன் வருவது" (சதுரகராதி, ப. 338)** என்று கூறிச்செல்கின்றார். எனவே சொல்லழகும், பொருளழகும், ஓசைநயமும், எதுகை, மோனை போன்ற தொடையும், வனப்பும் கலந்து உலக வழக்காக வருவது குறவஞ்சியாகும். இவ்வாறு பன்னெடுங்காலம் கூறப்பட்ட குறி நிகழ்வுகள் நன்கு இலக்கிய வடிவம் பெற்று 16ஆம் நூற்றாண்டளவில் குறவஞ்சி நூலாக உருப்பெற்றது. குறம் என்ற இலக்கிய வடிவில் தலைவிக்கு குறத்தி குறி கூறும் நிகழ்ச்சி மட்டும் இடம் பெறும். குறவஞ்சி என்பது மேற்சொன்னவற்றுடன் இன்னபிற நிகழ்வுகளும் இடம்

Academic Research News

# Academic Research News

*Peer-Reviewed Journal*



**Volume 3, SPL Issue 1, July 2025** **E-ISSN: 2584-167X**

பெறும். பல குறவஞ்சி நூல்கள் தமிழில் தோன்றினாலும் குற்றாலக் குறவஞ்சிக்கு அவை ஈடாகவில்லை. அது பலகாலம் நாடகமாக நடிக்கப் பெற்ற சிறப்பு வாய்ந்தது.

**குற்றாலக் குறவஞ்சியின் நிகழ்விடம்**

குற்றாலக் குறவஞ்சியின் நிகழ்விடம் குற்றால மலையாகும். இது பாண்டிய நாட்டிலுள்ள பாடல் பெற்ற தலமாகும். இது இன்றைய திருநெல்வேலி மாவட்டத்தில் தென்காசிக்கு அடுத்துள்ளது. திருக்குற்றாலம் பாண்டிய நாட்டிலுள்ள சிறப்பு பெற்ற 14 தலங்களில் ஒன்றாகும். இது நிலவளமும், நீர்வளமும் ஒருங்கே கொண்டது. இங்கு எழுந்தருளியுள்ள இறைவன் திருக்குற்றால நாதனாவான். இம்மலையில் தோன்றும் அருவிகள் மிகவும் சிறப்புமிக்கவையாகும். இவை சிவமது கங்கை, செண்பகத் தடாகம், பொங்குமாக் கடல், வடஅருவி, சித்ராநதி போன்றவையாகும். இவற்றை பஞ்சதீர்த்தம் என்றழைப்பர். குற்றாலநகருக்கு 21 பெயர்கள் வழங்கி சிறப்பிக்கப் படுகின்றது. குற்றால நகரைச் சிறப்பிக்க வந்த ஞானசம்மந்தப் பெருமான், **“போதும் பொன்னும் உந்தி அருவி புடைசூழக் கூதல் மாரிதுண் துளி தூங்கும் குற்றாலம்” (திருக்குற்றாலப் பதிகம், 8)** என்று புகழ்வதை எண்ணிப் பார்க்கலாம். குற்றலாமலை பலவகை மூலிகைகள் நிறைந்த பகுதியென்பதால் மிகவும் சிறப்பு பெறுகின்றது.

**குற்றாலக் குறவஞ்சியின் ஆசிரியர்**

குற்றாலக் குறவஞ்சியின் ஆசிரியர் திரிகூடராசப்பக் கவிராயராவார். இவர் தென்காசியை அடுத்த மேலகரம் என்ற ஊரினர். சைவ வேளாள மரபினர். கவிநலமும், இலக்கியத் திறனும் ஒருங்கே கொண்டவர். மடக்கு, திரிபு, சிலேடை போன்ற சொல்லணிகளும், உவமை முதலிய பொருளடைகளும் கொண்டு கவிபுனைவதில் வல்லவர். குற்றாலநாதர் மீது நீங்காத பக்தி கொண்டவர். இவர் குற்றாலநாதர் மீது 14 நூல்கள் பாடிய போதிலும் குற்றாலக் குறவஞ்சி நூலே யாவற்றிலும் மேம்பட்டதாகத் திகழ்கின்றது. இவரின் கவித் திறனையறிந்த மதுரைநாயக மன்னர் முத்து விஜயசொக்கநாத நாயகர் இவருக்கு “குற்றாலநாத வித்துவான்” என்ற பட்டம் வழங்கியதுடன், நிலங்களை மானியமாய் வழங்கியும் சிறப்பித்தான். அந்நிலம் இன்றும் “குறவஞ்சிமேடு” என்று அழைக்கப்பட்டு வருகின்றது. இவர் வடகரை நாட்டின் அரசரான சின்னணஞ்சாத் தேவரின் அவைக்களப் புலவராகவும் திகழ்ந்தார். தன்னைப் புரந்த வள்ளல்கள் எல்லோரையும் தன்நூலில் பாராட்டுவதின் மூலம் நன்றி மறவாப் பெருந்தகையாளராய்த் திகழ்ந்தார். இவர் குற்றாலக் குறவஞ்சி நூலை கி.பி.1711ஆம் ஆண்டில் இயற்றியதாக ஆய்வாளர்கள் கணிப்பர்.

**மலைவளம்**

ஆண் குரங்குகள் பல்வகைப் பழங்களைப் பறித்துக் கொடுத்துப் பெண் குரங்குகளோடு தழுவும் அக் குரங்குகளால் சிதறியெறியப்படுகின்ற பழங்களை வானுலகத்தில் வாழும் தேவர்கள் இரந்து இரந்து வேண்டிக் கேட்பார்கள். வனவேடர்கள் தம் கண்களால் ஏறெடுத்துப் பார்த்து உற்று நோக்கித் தேவர்களை அழைப்பார்கள் வானின் வழியாகச் செல்கின்ற சித்தர்கள் கீழிறங்கி வந்து காயசித்தி மருந்துகளாகிய வன மூலிகைகளை வளர்ப்பார்கள் தேன் கலந்த மலையருவியினது அலைகள் மேலெழுந்து வானத்தினின்றும் வழிந்து ஓடும் அதனால் செந்நிற ஞாயிற்றின் தேரிற்பூட்டிச் செல்லும் குதிரைக் கால்களும் தேர்ச்சக்கரமும் வழுக்கி விழும் வளைந்துள்ள இளம் பிறையைச் சூடியிருக்கின்ற சடைமுடியையுடைய அழகரான திருக்குற்றால நாதர் எழுந்தருளியிருக்கின்ற திருக்குற்றாலமாகிய இச் சிறப்புவாய்ந்த திரிகூடமலையே எங்களுக்குரிமையாக நாங்கள் வாழ்கின்ற மலையாகும். இதனை,

**வானரங்கள் கனிகொடுத்து மந்தியொடு கொஞ்சும்**
**மந்தி சிந்து கனிகளுக்கு வான்கவிகள் கெஞ்சும்**
**கானவர்கள் விழிஎறிந்து வானவரை அழைப்பார்**
**கமனசித்தர் வந்துவந்து காயசித்தி விளைப்பார்**
**தேனருவித் திரையெழும்பி வானின்வழி ஒழுகும்**

Academic Research News

*Peer-Reviewed Journal*



**Volume 3, SPL Issue 1, July 2025** **E-ISSN: 2584-167X**

**செங்கதிரோன் பரிக்காலும் தேர்க்காலும் வழுகும்**
**கூனலிளம் பிறைமுடித்த வேணிஅலங் காரர்**
**குற்றாலத்திரிகூட மலைஎங்கள் மலையே (குற்., பா. 1-4)**

என்னும் பாடல் வாயிலாக உணரலாம். ஒலிக்கின்ற அலைகளையுடைய நீர் வீழ்ச்சி, செல்லும் வேகத்தில் கழங்காடுகின்றது என்று எண்ணும்படி முத்துக்களை ஒதுக்கிச் செல்லும். அவ்வருவி, மக்கள் வாழ்கின்ற வீட்டின் முற்றங்களிலெல்லாம் பரவிச் சென்று சிறுமிகளின் மணல்வீடுகளை அழித்துக் கொண்டு ஓட்டம் பிடிக்கும். நாங்கள் மலைக்கிழங்குகளைத் தோண்டியும், தேன் இறால்களைப் பிய்த்து எடுத்தும், மலையின் செழிப்பைப் பாடிக்கொண்டே கூத்தாடுவோம. பூண்கட்டிய யானைக்கொம்புகளை ஒடித்து உலக்கையாகக் கொண்டு வறுத்த தினைத் தானியத்தை இடிப்போம். இளமை பொருந்திய குரங்குகள் இனிமையுள்ள மாம் பழங்களையே பந்தாகக் கொண்டு அடித்து விளையாடும். தேன் பெருகி ஓடுகின்ற செண்பகப் பூவின் மணம், தேவருலகினிடத்தே போய்ப் பரவும். அருட்கொடை வழங்குகின்ற தேவாதி தேவராகிய குறும்பலா மரத்தினடியில் எழுந்தருளியிருக்கின்ற திருக்குற்றால நாதருக்குரியதான எல்லா வளப்பமும் பெருகியிருக்கின்ற திருக்குற்றாலமலையே எங்களுக்குரியதாக நாங்கள் வாழுகின்ற மலை. இதனை,

**முழங்குதிரைப் புனலருவி கழங்கெனமுத் தாடும்**
**முற்றம்எங்கும் பரந்துபெண்கள் சிற்றிலைக் கொண்டோடும்**
**கிழங்குகிள்ளித் தேனெடுத்து வளம்பாடி நடிப்போம்**
**கிம்புரியின் கொம்பொடித்து வேம்புதினை இடிப்போம்**
**செழுங்குரங்கு தேமாவின் பழங்களைப்பந் தடிக்கும்**
**தேன்அலர்சண் பகவாசம் வானுலகில் வெடிக்கும்**
**வழங்குகொடை மகராசர் குறும்பலவின் ஈசர்**
**வளம்பெருகும் திரிகூட மலைஎங்கள் மலையே (குற்., பா. 5-8)**

என்னும் அடிகள் வழி அறியமுடிகின்றது. ஆடுகின்ற நாகப் பாம்புகள் கக்கிய எண்ணிறந்த மணிகள் எங்கும் ஒளிகொடுக்கும். யானைகளானவை திங்களைத் தாம் உண்ணும் கவள உருண்டையென எண்ணி அது செல்கின்ற வான்வழியில் போகவொட்டாமல் தடைசெய்யும், மலைக் குறவர்கள் தினைப்பயிரை விதைப்பதற்காக அழிக்கப் படுகின்ற காடுகளிலெல்லாம் உள்ள பலவகை மரங்களும் அகில் குங்குமம் சந்தனமரங்களும் கண்டோர் வியக்கும்படி தம் மணங்களைப் பரப்பும்; காடுகளில் எங்கும் ஓடிச்சென்று வரையாடுகள் துள்ளிக் கீழே பாயும். காகமும் பறவாத உயர்ந்த மலையில் மேகக் கூட்டங்கள் உச்சியில் சாய்ந்தோடும். நீண்ட குறும்பலாவடியில் எழுந்தருளியிருக்கின்றவரும் கைலை மலையில் வாழ்பவருமாகிய திருக்குற்றாலநாதரின் நிலைபெற்றிருக்கின்ற திருக்குற்றாலமலையே எங்களுக் குரியதாக நாங்கள் வாழ்கின்ற மலை. இதனை,

**ஆடுமர வீனுமணி கோடிவெயில் எறிக்கும்**
**அம்புலியைக் கவளமென்று தும்பிவழி மறிக்கும்**
**வேடுவர்கள் தினைவிரைக்கச் சாடுபுனந் தோறும்**
**விந்தைஅகில் குங்குமமுஞ் சந்தனமும் நாறும்**
**காடுதொறும் ஓடிவரை ஆடுகுதி பாயும்**
**காகமணு காமலையில் மேகநிரை சாயும்**
**நீடுபல வீசர்கயி லாசகிரி வாசர்**
**லைதங்கும் திரிகூடமலை எங்கள் மலையே (குற்., பா. 9-12)**

இப்பாடல் உணர்த்துகின்றது. திருக்கைலைமலையென்று கூறப்படுகின்ற வடக்குப் பக்க மலைக்குத் தென்பக்கத்தில் இருக்கின்ற மலையாகும்; இது பெரிய பொன்மலை என்னும் மேருமலை போன்ற உயர்ந்த மலை. சிவசைலம் என்னும் தெற்கு பக்கமுள்ள மலைக்கு வடக்குப் பக்கமாக இருக்கின்ற மலை. இம்மலை மற்ற எல்லா மலைகளின் சிறப்பெல்லாம் தனக்குள்

நிறையக்கொண்டிருக்கும் வளமுடையது. அது வைரமணியுடன் பலவகை மணிகளையும் விளைத்துத் தருவது. வான்வழியாகச் செல்லும் ஞாயிறு குகைகளையே வழியாகக்கொண்டு நுழைந்து செல்வதற்கு இடனாக இருப்பதும் அந்த மலை. அறிதுயில் புரிகின்ற திருமாலான வருங்கூடத் துயில் விட்டெழுந்து எல்லா உலகங்களிலும் போய்த் தேடுகின்ற மேன்மையாளராகிய திரிகூடநாதப் பெருமானுக்குரிய திரிகூட மலைதான் எங்களுக்குரியதாக நாங்கள் வாழ்கின்ற மலை. இதனை,

**கயிலைஎனும் வடமலைக்குத் தெற்குமலை அம்மே**
**கனகமகா மேருஎன நிற்குமலை அம்மே**
**சயிலமலை தென்மலைக்கு வடக்குமலை அம்மே**
**சகலமலை யுந்தனக்குள் அடக்குமலை அம்மே**
**வயிரமுடன் மாணிக்கம் விளையுமலை அம்மே**
**வான்இரவி முழைகள்தொறும் நுழையுமலை அம்மே**
**துயிலுமவர் விழிப்பாகி அகிலமெங்கும் தேடும்**
**கூடமலை எங்கள்மலை அம்மே (குற்., பா. 13-16)**

என்னும் பாடல் பகர்கின்றது. கொல்லி மலையானது எனக்குப் பின் பிறந்த செல்லி என்னும் பெயருடையாளுக்குரிய மலையாகும்; அவளின் கணவனுக்கு இருப்பது பழனிமலை. ஞாயிறு மேலே செல்கின்ற விந்தை என்னும் மலையே என் தந்தைக்குரிய மலை! இமயமலை என்னுடைய தமையனுக்குரிய மலை சொல்லுதற்கரிய சுவாமி மலை என்னும் மலையே என் மாமியாளுக்குரிய மலையாகும் அம்மே! என் தோழிக்குரிய மலையோ நாஞ்சில் நாட்டிலுள்ள வேள்வி யென்னும் மலையாகும் அம்மே! மேகங்கள் குமுறலாகிய பறையை முழக்க, அதற்கேற்ப மயிலினங்கள் நடனஞ்செய்கின்ற திரிகூட மென்னும் திருக்குற்றாலமலையே எங்களுக்குச் செல்வப்பொருளாக இருக்கின்ற நாங்கள் வாழும் மலை. இதனை,

**கொல்லிமலை எனக்கிளைய செல்லிமலை அம்மே**
**கொழுநனுக்குக் காணிமலை பழநிமலை அம்மே**
**எல்லுலவும் விந்தைமலை எந்தைமலை அம்மே**
**இமயமலை என்னுடைய தமையன்மலை அம்மே**
**சொல்லரிய சாமிமலை மாமிமலை அம்மே**
**தோழிமலை நாஞ்சிநாட்டு வேள்விமலை அம்மே**
**செல்இனங்கள் முழவுகொட்ட மயிலினங்கள் ஆடும்**
**ரிகூடமலை யெங்கள் செல்வமலை அம்மே (குற்., பா. 17-20)**

இப்பாடல் வாயிலாக அறிய முடிகின்றது. எங்கள் குலம் தவிர வேறொரு சாதியில் நாங்கள் பெண்கள் கொடுக்கமாட்டோம். வேறொரு குலத்தில் பெண்களை மணம் செய்யவும் மாட்டோம். குறவர் சாதியினராகிய நாங்கள் ஒருவரை நட்புக் கொண்டால் இடையில் அந்நட்பை விட்டுவிடமாட்டோம். நாங்கள் அச்சங்கொள்ளும்படி தினைப் புனத்தினிடத்தே வருகின்ற யானை முதலிய விலங்குகளைத் துரத்தி வேங்கை மரமாக நின்று எங்களுக்கு நிழல் தந்த முருகப் பெருமானுக்கு வள்ளி யென்னும் ஒரு பெண்ணை முன்பு கொடுக்கலானோம். அதற்காக எங்களுக்குரிமையான வேறு மலைகள் எல்லாவற்றையும் மகட்கொடைப்பொருளாக வழங்கலானோம். ஞாயிறு திங்கள் சுற்றிவருகின்ற மேருமலையைத் துருவன் என்பவனுக்குக் கொடுத்துதவினோம். சிறந்தவராகிய திருக்குற்றால நாதருக்குரிய இத்தகைய திரிகூட மலையே எங்களுக்குரியதாக நாங்கள் வாழ்கின்ற மலை. இதனை,

**ஒருகுலத்திற் பெண்கள்கொடோம் ஒருகுலத்திற் கொள்வோம்**
**உறவுபிடித் தாலும்விடோம் குறவர்குலம் நாங்கள்**
**வெருவிவருந் தினைப்புனத்திற் பெருமிருகம் விலக்கி**
**வேங்கையாய் வெயில்மறைந்த பாங்குதனைக்குறித்தே**
**அருள்இலஞ்சி வேலர்தமக் கொருபெண்ணைக் கொடுத்தோம்**

**ஆதினந்து மலைகளெல்லாம் சீதனமாக் கொடுத்தோம்**
**பரிதிமதி சூழ்மலையைத் துருவனுக்குக் கொடுத்தோம்**
**பரமர்திரி கூடமலை பழையமலை அம்மே. (குற்., பா. 21-24)**

என்னும் பாடல் அடிகள் சுட்டுகின்றன.

**குறத்தி நாட்டு வளம்**

வடபால் இருப்பது ஆரிய நாடு. தென்பால் இருப்பது குற்றாலம் என்னும் தென் - ஆரிய நாடு. இங்குக் காமத்துரை மன்மதன் வந்தான் என்று அவனது குயில் - சின்னம் முன்னே வந்து ஊதும்.ஆரம் தாங்கிய மின்னல் போன்ற மகளிர் தங்களின் அல்குல் தேரினை அழகுபடுத்திக்கொள்வர்.நிலா என்னும் குடையைப் பிடித்துக்கொண்டு, கிளியாகிய குதிரை பூட்டி, தென்றல் தேரில் ஏறிக்கொண்டு மாரன் உலா வருவான். இதனை,

**சூர மாங்குயிற் சின்னங்கள் காமத்**
**துரைவந் தான்துரை வந்தானென் றூத**
**ஆர மாமுலை மின்னார் அவரவர்**
**அல்குல் தேர்கள் அலங்காரஞ் செய்யப்**
**பார மாமதி வெண்குடை மிஞ்சப்**
**பறக்கும் கிள்ளைப் பரிகள்முன் கொஞ்சத்**
**தேரின் மாரன் வசந்தன் உலாவுந்**
**திருக்குற் றாலர்தென் ஆரிய நாடே (குற். குறத்தி நாட்டு., பா. 37:1)**

என்னும் பாடல் வாயிலாக அறியமுடிகியது. மகளிர் கார்மேகம் போன்ற கூந்தலை உடையவர்கள். இதனைக் கண்டு நாணிய மேகம் கடலைச் சேர்ந்து தன் நிறத்தைக் கருநிறம் ஆக்கிக்கொள்ளும். மின்னல் என்னும் வில்லை வளைத்து மழைத்தாரை அம்புகளைப் பொழியக் கொண்டல் என்னும் தேரில் ஏறி சூரியன் தேரைச் சூழும் கார்காலம் தன் வெற்றியைக் கொண்டாடும் தென்-ஆரிய நாடு இது. இதனை,

**காரைச் சேர்ந்த குழலார்க்கு நாணிக்**
**கடலைச் சேர்ந்த கறுப்பான மேகம்**
**வாரைச் சேர்ந்து முலைக்கிணை யாகும்**
**மலையைச் சேர்ந்து சிலையொன்று வாங்கி**
**நீரைச் சேர்ந்த மழைத்தாரை அம்பொடு**
**நீளக் கொண்டலம் தேரேறி வெய்யவன்**
**தேரைச் சூழ்ந்திடக் கார்காலம் வெல்லும்**
**திருக்குற்றாலர்தென் ஆரிய நாடே (குற். குறத்தி நாட்டு., பா. 37:2)**

என்னும் பாடல் அடிகள் எடுத்துரைக்கின்றன. துறையில் கிடக்கும் எருமை சொரியும் பாலை வாளைமீன் பருகி, தாழப் பழுத்திருக்கும் பலாவில் பாய, அந்தப் பலாப்பழம் வாழைமீது சாய, வாழைமரம் தாழைமரத்தில் சாய, வருகின்ற விருந்தினரை ஓம்புபவர் போல வாழையிலைக் குருத்தை விரித்து, தாழை தன் சோற்றினைக் கொட்டும் தென்-ஆரிய நாடு இது. இதனை,

**சூழ மேதி இலங்குந் துறையிற்**
**சொரியும் பாலைப் பருகிய வாளை**
**கூழை வாசப் பலாவினிற் பாயக்**
**கொழும்ப லாக்கனி வாழையிற் சாய**
**வாழை சாய்ந்தொரு தாழையில் தாக்க**
**வருவிருந்துக் குபசரிப் பார்போல்**
**தாழை சோறிட வாழை குருத்திடும்**
**சந்திர சூடர்தென் ஆரிய நாடே (குற். குறத்தி நாட்டு., பா. 37:3)**

இப்பாடல் வரிகள் தெளிவுப்படுத்துகின்றன. மகளிர் மொழி இனிப்பைப் பழிக்க விரும்பிய மண்ணாகிய ஆடவருக்குள்ளே மூடி, வளர்ந்து, பெண்ணின் தோளை இனிப்பால் வென்று,

**Volume 3, SPL Issue 1, July 2025** **E-ISSN: 2584-167X**

கரும்புச்சுளை முத்துக்களை ஈன்று, மகளிர் சிரிப்பை வெல்லும் பூக்களைப் பூத்து, பிரியும் காலத்தில் பெண்மையை வெல்வதற்காக மன்மதனுக்கு வில்லாக இருப்போம் என்று கரும்பு ஓங்கும் தென்ஆரிய நாடு இது. இதனை,

**அந் நலார்மொழி தன்னைப் பழித்ததென்று**
**ஆடவர் மண்ணில் மூடும் கரும்பு**
**துன்னி மீள வளர்ந்து மடந்தையர்**
**தோளை வென்று சுடர்முத்தம் ஈன்று**
**பின்னும் ஆங்கவர் மூரலை வென்று**
**பிரியுங் காலத்திற் பெண்மையை வெல்லக்**
**கன்னல் வேளுக்கு வில்லாக ஓங்கும்**
**கடவுள் ஆரிய நாடெங்கள் நாடே (குற். குறத்தி நாட்டு., பா. 37:4)**

இப்பாடல் அடிகள் விளக்குகின்றது. நிலவுலகுக்கு முதலாக விளங்கும் நாடு.எல்லாத் தேவர்கள் மீதும் அன்பு கொண்ட நாடு.திசையெலாம் புகழைப் பரப்பும் நாடு.துரோகம் சிறிதும் இல்லாத நாடு. முக்கண் சிவன் விளையாடும் நாடு.முந்திய நான்கு வேதங்களையும் பாடும் நாடு. அம்மையப்பரின் ஆரியநாடு. இதனை,

**தக்க பூமிக்கு முன்புள்ள நாடு**
**சகல தேவர்க்கும் அன்புள்ள நாடு**
**திக்கெ லாம்வளர்ந் தோங்கிய நாடு**
**சிலத்து ரோகமும் நீங்கிய நாடு**
**முக்க ணான்விளை யாடிய நாடு**
**முதிய நான்மறை பாடிய நாடு**
**மைக்க ணாள்குழல் வாய்மொழி பாகர்**
**வசந்த ஆரிய நாடெங்கள் நாடே (குற். குறத்தி நாட்டு., பா. 37:5)**

என்னும் பாடல் வாயிலாக அறியலாம். ஐந்நூறு மகம் ஆண்டுகள் பழமையான நாடு. அனேக கோடி யுகம் பழமையான நாடு. தாமரை என்னும் எண் கொண்ட ஆண்டுகளுக்கு முன் தோன்றிய நாடு. திருமகளும் கலைமகளும் வணங்கும் நாடு. அகத்தியன் வந்த நாடு. இதனை,

**அஞ்சுநூறு மகம்கொண்ட நாடு**
**அநேக கோடி யுகங்கண்ட நாடு**
**கஞ்ச யோனி உதிக்கின்ற நாடு**
**கமலை வாணி துதிக்கின்ற நாடு**
**செஞ்சொல் மாமுனி ஏகிய நாடு**
**செங்கண் மால்சிவன் ஆகிய நாடு**
**வஞ்சி பாகர் திரிகூடநாதர்**
**வசந்த ஆரிய நாடெங்கள் நாடே (குற். குறத்தி நாட்டு., பா. 37:6)**

இப்பாடல் வரிகள் நமக்கு தெவிவூட்டுகின்றன. மாதம் மூன்று மழை பொழியும் நாடு. வருடத்துக்கு மூன்று போகம் விளையும் நாடு. வேதம் மூன்றும்பல்கும் நாடு. மூவகைச் சிறப்புக்களும் கொண்ட நாடு. மூவகை மெய்யறிவு நன்மை விளைவிக்கும் நாடு. மூவுலகும் இதனை வலம்வந்து வணங்கும் நாடு. முத்தமிழ் ஓசையாக விளங்கும் குற்றால நாதரின் ஆரியநாடு. இதனை,

**மாதம் மூன்றும் மழையுள்ள நாடு**
**வருடம் மூன்று விளைவுள்ள நாடு**
**வேதம் மூன்றும் பலாவுள்ள நாடு**
**விஷேசம் மூன்றும் குலாவுள்ள நாடு**
**போதம் மூன்றும் நலம்செயும் நாடு**
**புவனம் மூன்றும் வலஞ்செயும் நாடு**

**நாதம் மூன்றுரு வானகுற் றால**
**நாதர் ஆரிய நாடெங்கள் நாடே (குற். குறத்தி நாட்டு., பா. 37:7)**

இவ்வரிகள் மூலம் உணர்த்துகின்றன. இங்கு நீங்குவது பாவம்.நெருங்குவது கரும்பும் நெல்லும்.தொங்குவது மாம்பழக் கொத்து.சுழல்வது தயிர் கடையும் மந்து. வெடிப்பது முல்லைமொட்டு.ஒலிப்பது மங்கல-முரசு.இது ஈசரின் ஆரியநாடு. இதனை,

**நீங்கக் காண்பது சேர்ந்தவர் பாவம்**
**நெருங்கக் காண்பது கன்னலிற் செந்நெல்**
**தூங்கக் காண்பது மாம்பழக் கொத்து**
**சுழலக் காண்பது பூந்தயிர் மத்து**
**வீங்கக் காண்பது மங்கையர் கொங்கை**
**வெடிக்கக் காண்பது கொல்லையின் முல்லை**
**ஏங்கக் காண்பது மங்கல பேரிகை**
**ஈசர் ஆரிய நாடெங்கள் நாடே (குற். குறத்தி நாட்டு., பா. 37:8)**

என்னும் பாடல் வாயிலாக அறியலாம்.ஓடுவது வெள்ளநீர். ஒடுங்குவது யோகியர் உள்ளம். வாடுவது மகளிர் இடை. வருந்துவது கரு வெளிப்படுத்தும் சங்கு. போடுவது நிலத்தில் விதை. புலம்புவது மகளிர்காலிலுள்ள கொளுசு.தேடும் பொருள் நல்லறம், புகழ். இப்படிப்பட்டது திருக்குற்றாலத் தென்ஆரிய நாடு இதனை,

**ஓடக் காண்பது பூம்புனல் வெள்ளம்**
**ஒடுங்கக் காண்பது யோகியர் உள்ளம்**
**வாடக் காண்பது மின்னார் மருங்குல்**
**வருந்தக் காண்பது சூலுளைச் சங்கு**
**போடக் காண்பது பூமியில் வித்து**
**புலம்பக் காண்பது கிண்கிணிக் கொத்து**
**தேடக் காண்பது நல்லறம் கீர்த்தி**
**திருக்குற் றாலர்தென் ஆரிய நாடே (குற். குறத்தி நாட்டு., பா. 37:9)**

இப்பாடல் வரிகள் தெள்ளம் தெளிவாக விளக்குகின்றன.

**முடிவுரை**

புற்றீசல் போல் ஏராளமான குறவஞ்சி நூல்கள் தோன்றினாலும் அவை யாவும் குற்றாலக் குறவஞ்சிக்கு ஈடாகவில்லை. குறவஞ்சி என்றால் குற்றாலக் குறவஞ்சி என்று சொல்லுமளவுக்கு இந்நூல் சிறப்பிடம் பெறுகின்றது. கவிஞர் தன்காலத்து சிறப்பு நிகழ்வுகளையும், வரலாற்றுச் செய்திகளையும், இயற்கை அமைப்புகளையும் தன்நூலுள் பதிவு செய்துவிட்டு சென்றுள்ளார். குறவர் வாழ்வியல் நிலையை இத்துணை சிறப்புடன் கூறுவதால் கவிஞர் குறவர்களைப் பற்றி நன்கறிந்தவர் என்பதுடன், அவர்களின் இன்ப துன்பங்களில் தோய்ந்தவர் என்பது தெளிவு. பழம் தமிழ்க்குடிகளான குறவர் வாழ்வியலை இத்தனை சிறப்புடன் எடுத்துரைப்பதன் மூலம் இந்நூல் சிற்றிலக்கிய வகையில் மட்டுமல்லாமல் தமிழ் இலக்கியத்திலும் தலைசிறந்த இடத்தைப் பெறுகின்றது. மலைகளிலும், காடுகளிலும், நீர் நிலைகளிலும் அலைந்து திரிந்து வேட்டையாடித் தானும் உண்டு பிறருக்கும் அளித்து, அனைத்து மக்களுக்கும் குறி சொல்லி, முக் காலத்தையும் உணர்த்தி, அவர்தம் கவலையைப் போக்கிய பண்டைய தமிழ்க் குடிகளான குறவர்களின் வாழ்வியலை, அவர்கள் பேசிய மொழியின் ஊடாகவே அனைவரும் அறியும்வண்ணம் எளிய நடையில் உரைத்ததன் மூலம் குற்றாலக் குறவஞ்சி நூல் தமிழ்த்தாயின் மணிமகுடமாகத் திகழ்கிறது என்பதில் எள்ளளவும் ஐயமில்லை.

**குறிப்புகள்**

[1] இன்னாசி, சு (பதி). *சதுரகராதி.* சந்தியா பதிப்பகம், சென்னை, 2005.

**Volume 3, SPL Issue 1, July 2025** **E-ISSN: 2584-167X**

[2] புலியூர் கேசிகன். *குற்றாலக் குறவஞ்சி.* சாரதா பதிப்பகம், சென்னை, 2009.
[3] ---. *தொல்காப்பியம்.* ஸ்ரீ செண்பகாப் பதிப்பகம், சென்னை, 2010.
[4] புன்னைவனநாத முதலியார், பு. சி & இராமசாமிப் பிள்ளை, செ. *குற்றாலக் குறவஞ்சி.* சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகம், திருநெல்வேலி, 1950.
[5] ---.*குற்றாலக் குறவஞ்சி.* கலா சேத்திரம் வெளியீடு (உ.வே.சா.நூலகம்), சென்னை, 1945.
[6] ---.*திருக்குற்றாலக் குறவஞ்சி.* திருக்குற்றாலநாத ஸ்வாமி கோயில் வெளியீடு, தென்காசி, 1953.

**நிதிசார் கட்டுரையாளர் உறுதிமொழி:** இல்லை
**கட்டுரையாளர் நன்றியுரை:** இல்லை
**கட்டுரையாளர் உறுதிமொழி: இக்கட்டுரையில் எவ்வித முரண்பாடும் இல்லை என்று உறுதிமொழி அளிக்கிறேன்.**
இக்கட்டுரை கிரியேட்டிவ் காமன்சு ஆட்ரிபியூசன் 4.0வின் **Creative Commons Attribution4.0** கீழ் பன்னாட்டு உரிமம் பெற்றுள்ளது.

Academic Research News
*Peer-Reviewed Journal*

**Volume 3, SPL Issue 1, July 2025** **E-ISSN: 2584-167X**

# Livelihood of the Pallar People in *Mukkudarpallu*

**Dr. P. Ravindaran**, Assistant Professor, Department of Tamil, S.T. Hindu College, Nagercoil-2, Tamil Nadu, India.
ORCiD: https://orcid.org/0000-0001-9468-7314
Received: 19 April 2025; Revised: 29 May 2025; Accepted: 9 June 2025; Available Online: 30 July 2025.

## Abstract

*"Mukkudarpallu" is one of the 96 types of Minor Literature in Tamil. If one or more of the four elements, such as virtue, material, pleasure, and liberation, are lacking in a piece of literature, it is considered to be a piece of Minor Literature. Among the types of literature, Pallu Literature has a special place in it. Pallu literature emerged in the 17$^{th}$ century. "Mukkudarpallu" is very special among Pallu literature. The author has created this literature to understand the laypeople. Although elements of Pallu literature are found in many literatures, such as "Tolkappiyam" and Sangam literature, it emerged as a separate literature in the 12$^{th}$ century. Pallu literature has the speciality of describing the life of farmers. "Mukkudarpallu" is sung on the character Mukkudal Nathan Azhagar. Mukkudtal is the place where the Thamirabarani, Sittraru, and Godandarama rivers meet in Tirunelveli district. "Mukkudarpallu" glorifies Thirumal, Garudazhwar, Senai Mudaliar, and Nammalzhwar as Gods. In "Mukkudarpallu", the Pallan, the Elder Palli, the Younger Palli, the farmers and the villagers are the main characters. In this book, one can see that the Elder Palli speaks disparagingly of Lord Shiva, and the Younger Palli speaks disparagingly of Thirumalai. It also discusses the worship of minor deities and the special qualities of the Mukkudal, where the Pallan and Palli reside. It also tells about tillage, type of cattle, type of paddy, and distribution of harvested paddy, folk deity worship, rain signs, and the Palliar Poosal.*

**Keywords:** *Mukkudarpallu*, Livelihood, Mukkoodal, Pallar People.

## References

[1] Kalavathi, V. Munaivar. *Thamizh Ilakkiya Varalaaru* – II, New Century Book House Pvt. Ltd., Chennai-050, 2023.
[2] Puliyoor Kesikan. *Mukkoodar Pallu*. Pari Nilaiyam, Chennai-109, 2001.
[3] Ravisankar, C, Munaivar. *Thamizhum Ariviyalum*. New Century Book House Pvt. Ltd., Chennai-050, 2024.
[4] Rajam, S. *Mukkudarpallu*. Pari Nilaiyam, Chennai-109, 1959.

**Author Contribution Statement:** NIL.
**Author Acknowledgement:** NIL.
**Author Declaration:** I declare that there is no competing interest in the content and authorship of this scholarly work.
The content of the article is licensed under https://creativecommons.org/licenses/by/4.0/ International License.

Academic Research News

*Peer-Reviewed Journal*



**Volume 3, SPL Issue 1, July 2025** **E-ISSN: 2584-167X**

# முக்கூடற் பள்ளுவில் பள்ளர் இன மக்களின் வாழ்வியல் நிலைப்பாடு

**முனைவர் பொ. இரவீந்திரன்**, உதவிப்பேராசிரியர், தமிழ்த்துறை,தென் திருவிதாங்கூர் இந்துக்கல்லூரி, நாகர்கோவில்-2, தமிழ்நாடு, இந்தியா.

ORCiD: https://orcid.org/0000-0001-9468-7314

**ஆய்வுச்சுருக்கம்**

*“முக்கூடற்பள்ளு” 96 வகை சிற்றிலக்கியங்களில் ஒன்று. ஒரு இலக்கியத்தில் அறம், பொருள், இன்பம், வீடு என்ற நான்கில் ஒன்றோ ஒன்றுக்கு மேற்பட்டோ குறைந்து இருப்பின் அது சிற்றிலக்கியம் ஆகும். சிற்றிலக்கிய வகைகளுள் பள்ளு இலக்கியத்திற்கு தனி சிறப்பிடம் உண்டு. பள்ளு இலக்கியங்கள் 17-ஆம் நூற்றாண்டில் தோற்றம் பெற்றது. பள்ளு இலக்கியத்தில் முக்கூடற்பள்ளு மிக சிறப்பானதாகும். இந்த இலக்கியத்தைப் பாமர மக்கள் புரிந்துக்கொள்ளும் வகையில் நூல் ஆசிரியர் படைத்துள்ளார். சிற்றிலக்கியத்தின் கூறுகள் தொல்காப்பியம், சங்க இலக்கியம் என பல இலக்கியங்களில் காணப்பட்டாலும் தனி இலக்கியமாக 12- ஆம் நூற்றாண்டில் தோன்றியது. பள்ளு இலக்கியம் உழவர்களின் வாழ்வியலை எடுத்து கூறும் சிறப்பினை உடையது. முக்கூடற்பள்ளு முக்கூடற் நாதன் அழகர் மீது பாடப்பட்டுள்ளது. முக்கூடல் என்பது திருநெல்வேலி மாவட்டத்தில் உள்ள தாமிரபரணி, சிற்றாறு, கோதண்டராம ஆறு கூடும் இடமாகும். முக்கூடற்பள்ளு திருமால், கருடாழ்வார், சேனை முதலியார், நம்மாழ்வார் ஆகியோரை கடவுளாக கொண்டு வாழ்த்துகின்றது. முக்கூடற்பள்ளுவில் கதை மாந்தர்களாக பள்ளன், மூத்தப் பள்ளி, இளையப்பள்ளி, உழவர்கள் மற்றும் ஊர் மக்கள் ஆகியோர் இடம் பெற்றுள்ளனர். இந்நூலில் சிவபெருமானை மூத்தப்பள்ளி இகழ்ந்து பேசுவதையும், திருமாலை இளையப் பள்ளி இகழ்ந்துப் பேசுவதையும் அறிய முடிகின்றது. மேலும், இந்நூல் சிறுதெய்வ வழிபாடு, பள்ளன், பள்ளியர் குடியிருக்கும் முக்கூடலின் சிறப்பு, உழவுத்தொழில், மாட்டின் வகை, நெல் வகை, அறுவடை, நெல் பங்கீடு, நாட்டுப்புற தெய்வ வழிபாடுகள், மழைக்குறி, பள்ளியர் பூசல் போன்ற கருத்துகளை எடுத்துரைக்கின்றது.*

**குறிப்புச்சொற்கள்:** முக்கூடற்பள்ளு, வாழ்வாதாரம், முக்கூடல், பள்ளர் மக்கள்.

## முன்னுரை

சிற்றிலக்கிய வகைகளில் ஒன்று பள்ளு இலக்கியம். இவ்விலக்கியம் பள்ளர்களின் வாழ்வியலை எடுத்துரைக்கின்றது. பள்ளு இலக்கியங்களில் சிறப்பானது முக்கூடற் பள்ளாகும். முக்கூடல் நாதராகிய அழகர் மீது பாடப்பட்டுள்ளது. பள்ளர்களின் வாழ்வியலை அறிவதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

## அழகரின் சிறப்புகள்

திருமால் ஒளி வீசும் பச்சை நிறமான மரகதத்தின் நிறம் உடையவர். மண்ணுலகில் வாழும் எல்லா உயிரினங்களுக்கும் காவலாக விளங்குபவர். இந்த உலகிற்கு நல்வழிக் காட்டுவதற்காக இராமனாகவும் கண்ணனாகவும் திகழ்ந்தவர். முக்கூடலில் எழுந்தருளி இதழ்கள் விரிந்த மலர்களை உடைய துளசி மாலையை அணிந்திருப்பவன். ஆதிசேசன் என்னும் பாம்பினைத் தன்னுடைய படுக்கையாக் கொண்டு பாற்கடலில் துயில் கொள்பவன். துணிவுடைய உன்னுடைய மனமும் பாதங்களும் வலிமை மிக்க தோள்களும் என்னுடைய துணை என்று இந்திரன் கூறியுள்ளார். தேவர்களின் தலைவன் இந்திரனின் பகைவர்களான அசுரர்களை அழித்தவன். தேவர்களும் அசுரர்களும் வணங்கும் தன்மையுடையவன். ஊழிக்கால முடிவில் உலகமெல்லாம் பெருவெள்ளத்துள் ஆழ்ந்து அனைத்தும் அழிந்து நீருள் ஒடுங்கும்.அப்போது மாயையாகிய சக்தியைப் பாம்பணையாகக் கொண்டு அதன் மேல்

**Volume 3, SPL Issue 1, July 2025** **E-ISSN: 2584-167X**

பாற்கடலில் அறிதுயில் அமர்ந்து விளங்குபவன் மாயனாகிய பெருமாள். இந்நிலவுலகத்தின் காத்தல் கடமையைப் பூண்டு ஒழுகும் காவலன். காயாம்பூவின் நிறத்தைப் போன்ற நீலமேக வண்ணனாகப் பக்தர்களுக்குச் சேவை செய்பவன். செந்தாமரை மலரிலே வீற்றிருப்பவள் திருமகள். அவளைத் தன் திருமேனியாகிய கோவிலின் அகத்தேயும் மார்பின் மேலேயும் மிக்க விருப்பம் உடையவராகச் சுமந்துக் கொண்டிருப்பவர்.

**மருதூர் வளம்**

மருதூரில் கோவில் கொண்டிருப்பவர் சிவபெருமான். அவருக்கு வழி வழியாக அடிமைப்பட்டவள் மருதூர்ப் பள்ளி. தன்னுடைய ஒளியுடைய முகம் பள்ளருக்கு மட்டுமே தோன்ற வயலில் இறங்கி நாற்றினை நட்டதனால் அந்த ஒரு போகத்திலேயே ஐந்து போக விளைச்சல் விளைந்தது. மருதூர்ப் பள்ளி கைராசிக்காரி என்பதனை,

**ஆதிமரு தீசிருக்கும் ஆட்பட்டு அழகருக்கும்**
**பாதியடி மைப்படுமோ பள்ளிமரு தூரிளையாள்**
**சோதிமுகம் மள்ளருக்கே தோன்றவய லுற்று நட்ட**
**போதிலொரு பூவில் ஐந்து பூவும் பயிரமே (பா. 10)**

இப்பாடலடிகள் எடுத்துரைக்கின்றன.

**தென்கரை வளம்**

தென்கரையில் வானில் இருண்ட மேகங்கள் திரண்டு நிலவை மறைத்தன. அங்கு சூரியனின் வெப்பமாகிய வெயில் காய்வதை காணலாம். மக்களின் வயிறு காய்வதை காண முடியாது. வெண்மையான தயிர்த் துண்டுகள் கலங்குவதை காணலாம் மக்கள் மனம் கலங்குவது காண முடியாது. நாளிகைகளும் வாரங்களும் மாய்ந்துக் கொண்டுப் போவதை காணலாம். ஆனால் மக்கள் பசியால் மாய்தலை என்றும் காண முடியாது. மேகங்கள் சுழன்றுப் பொழியும் மழை வெள்ளத்தை காணலாம். மக்கள் மறுகி வாடுவதை காண முடியாது. செந்நெற் குலைகள் காய்த்துச் சாய்ந்து கிடப்பதைக் காணலாம். மக்கள் தலை சாய்ந்து நடக்கும் நிலையினைக் காணவே முடியாது. தாபத நிலையினர் தனித் திருப்பதை காணலாம். கணவன் மனைவி தனித்திருப்பதைக் காண முடியாது. உரைத்திடும் சந்தனம் தேய்வதைக் காணலாம். உரைத்திடும் செய்யுட்களில் பொருள் தேய்வதை காண முடியாது. இத்தகைய வளம் உடையது சீவல மங்கை தென்கரை நாடு. இதனை,

**காயக் கண்டதுசூரிய காந்தி**
**கலங்கக் கண்டது**
**வெண்தயிர்க் கண்டம்**
**மாயக் கண்டது நாழிகை வாரம்**
**மறுகக் கண்டது**
**வான்சுழி வெள்ளம்**
**சாயக் கண்டது காய்க்குலைச் செந்நெல்**
**தனிப்பக் கண்டது**
**தாபதர் உள்ளம்**
**தேயக் கண்டது உரைத்திடும் சந்தனம்**
**சீவல மங்கைத்**
**தென்கரை நாடே. (பா. 23)**

இப்பாடலடிகள் எடுத்தியம்புகின்றன. தாமரை மலரானது தன் தலையினை உயர்த்தி வரப்பிலே வளர்ந்திருக்கும். இஞ்சியின் இலையினை வருடிவிடும். இஞ்சியோ மஞ்சளின் கழுத்தை தழுவியவாறு தொடும். மஞ்சள் தன் அருகிலேயே அசைந்தாடி நிற்கும். செந்நெற் பயிருடன் அளவளாவி நிற்கும். செந்நெல் செங்கரும்புக்குக் கை கொடுத்து நிற்கும். இவ்வாறு ஒவ்வொன்றும் ஒன்றுக்கொன்று ஆதரவாக வளர்கின்ற செழுமையுடையது சீவலமங்கைத் தென்கரை நாடு. இதனை,

**Volume 3, SPL Issue 1, July 2025** **E-ISSN: 2584-167X**

**பங்க யந்தலை நீட்டிக் குரம்பினில்**
**பச்சை இஞ்சியின்**
**பார்சடை தீண்டும்**
**தங்கும் இஞ்சியும் மஞ்சட் கழுத்தைத்**
**தடவி மெள்ளத்**
**தொடுமந்த மஞ்சள்**
**அங்க சைந்திடும் காய்க்கதிர்ச் செந்நெல்**
**அளாவி நிற்குமச்**
**செந்நெலு மப்பால்**
**செங்க ரும்புக்குக் கைதரும் போல்வளர்**
**சீவல மங்கைத்**
**தென்கரை நாடே (பா. 27)**

இப்பாடலடிகள் வழி அறியமுடிகின்றது.

**வடகரை வளம்**

ஆசூர் நாட்டில் வெண்மையான திங்களில் தான் கறை காணப்படும் மக்கள் உள்ளங்களில் எவ்வித கரையும் காணப்படுவதில்லை. கம்பங்களில் கட்டப்பட்டிருக்கும் யானைகள் மதம் பட்டு நிற்குமே அல்லாமல் மக்கள் கடன்பட்டு வாழ்வதில்லை. பறவைகள் சிறைப்பட்டிருக்குமே அல்லாமல் மக்கள் எவரும் சிறைப்பட்டிருப்பதில்லை. நெய் பொருந்திய விளக்கில் திரி பொருத்தப்பட்டிருக்குமே அல்லாமல் அங்குள்ளவர்களின் அறிவிலோ நடத்தையிலோ எவ்வகை திரிவையும் காண முடிவதில்லை. வீட்டுக்கு அம்மிகள் கொத்தியதால் குறைபட்டிருக்குமே அல்லாமல் மக்களின் வாழ்க்கை தரம் குறைபட்டிருப்பதை காண முடியாது. கொடிகளும் அவை தழுவி படரும் பூங் கொம்புகளும் குழையுடையதாக இருக்குமே தவிர மக்கள் குழைந்து கும்பிட்டு வாழ்பவராக எவரும் இல்லை. செய்யுட்களின் அருமையான பொருட்களில் நயங்கள் மறைக்கப்பட்டிருக்குமே அல்லாமல் வயல்களுள் விளையும் விளைச்சலில் எவ்விதமான ஒளிவு மறைவுமே காணப்படுவதில்லை. இத்தகைய வளமுடைய நாடு ஆசூர் வடகரை நாடு என்பதை,

**கறைப்பட் டுள்ளது வெண்கலைத் திங்கள்**
**கடம்பட் டு ள்ளது**
**கம்பத்து வேழம்**
**சிறைபட் டுள்ளது விண்ணெழும் புள்ளு**
**திரிபட் டுள்ளது**
**நெய்படும் தீபம்**
**குறைபட் டுள்ளது கம்மியர் அம்மி**
**குழைபட் டுள்ளது**
**வில்லியங் கொம்பு**
**மறைபட் டுள்ளது அரும்பொருட் செய்யுள்**
**வளமை ஆசூர்**
**வடகரை நாடே (பா. 22)**

இவ்வடிகள் வழி அறியலாம். வடகரையில் மிகவும் உயர்ந்த தென்னை மரங்களின் இளநீர்களை கமுகு மரங்கள் தாங்கிக் கொள்ளும். அதன் காய்களை மாமரங்கள் சுமந்துக் கொண்டிருக்கும். மாமரங்களின் காய்களைப் பலாமரங்கள் தாங்கிக் கொண்டிருக்கும். பலாக்கனியோ அதனை அடுத்திருக்கும் வாழை மரங்கள் மீது சாய்ந்திருக்க வாழைக்குலையை மாதுளங்கொம்பு தாங்கிக் கொள்ளும். இவ்வாறு மரங்கள் ஒன்றோடுடொன்று இணைந்து தாங்கிக்கொள்ளும் வளமுடைய நாடு ஆசூர் வடகரைநாடு என்பதனை,

Volume 3, SPL Issue 1, July 2025 E-ISSN: 2584-167X

**மீது யர்ந்திடும் தெங்கிளநீரை**
**மிடைந்த பூகஞ்**
**சுமந்து தன் காயைச்**
**குத மொன்றிச் சுமக்கக் கொடுக்கும்**
**சூதந் தன் தன்கனி**
**தூங்கும் பலாவில்**
**ஓதும் அந்த பலாக்கனி வாழை**
**உளுக்க வேகமந்து**
**ஒண்குலைசாய்க்கும்**
**மாது ளங்கொம்பு வாழையைத் தாங்கும்**
**வளமே ஆசீர்**
**வடகரை நாடே (பா. 26)**

இப்பாடலடிகளின் வழி மூத்த பள்ளி பெருமிதத்துடன் எடுத்துரைக்கின்றாள்.

**முக்கூடல் வளம்**

முக்கூடலில் ஒளி வீசும் மணிகள் பதித்த மாளிகைகள் திரு வீதிகளில் நெருக்கமாக இருக்கும். சோலைகளில் திரியும் வண்டினங்கள் ரீங்காரப் பண்ணினைப் பாடி இரும்பு உள்ளங்களை உருகச் செய்யும். நால்வகை சாதியினரும் ஒன்றே குலம் என்ற அறத்தைப் பெருக்கிக் கொண்டிருப்பார்கள். நீர் முகப்பார் குடங்ககளில் வாளை மீன்கள் நிறைந்து நெருக்கடி நிலவச் செய்து கொண்டிருக்கும். எருமையானது கழனிகளில் மலிந்து கிடக்கும் நீர்ப்பூக்களை மேய்ந்து அதன் கண் உள்ள மதுவை உட் கொண்டதனால் செருக்கி திரியும். மேட்டு நிலங்களில் குளிர்ந்த மலர்கள் இதழ் விரித்திருக்கும். இதனை,

**சோதி மாமணி வீதி நெருக்கும்**
**சுரும்பு பாடி**
**இரும்பும் உருக்கும்**
**சாதி நால்வளம் நீதி பெருக்கும்**
**தடத்து வாளை**
**குடத்தை நெருக்கும்**
**போதில் மேய்ந்திள மேதி செருக்கும்**
**புனமெல லாநதண**
**மலர்விண் டிருக்கும்**
**ஆதிநாதர் அனாதி யொருத்தர்**
**அழகர் முக்கூடல்**
**ஊரெங்கள் ஊரே (பா. 24)**

இவ்வடிகள் நமக்கு தெளிவுப்படுத்துகின்றன.

**தெய்வ வழிபாடு**

மாதம் மும்மாரியாக மழைப் பெய்வதற்கு தெய்வங்களை முறையாகப் போற்றி வந்தமையை,

**திங்கள்மும் மாரியுல கெங்கும் பெய்யவே**
**தெய்வத்தைப் போற்றி வந்தாற்**
**கைதருங் காண்**
**பொங்கலு மிட்டுத்தேங் காயும் கரும்பும்**
**பூலா வுடையாருக்குச்**
**சாலக் கொடுங்கள்**
**குங்குமத் தோடுசந் தனமுங் கலந்து**
**குமுக்கா வுடையா ரய்யர்**

Volume 3, SPL Issue 1, July 2025 E-ISSN: 2584-167X

**தமக்குச் சாத்தும்**
**கங்கணங் கட்டியே ஏழுசெங் கடாயும்**
**கரையச் சாத்தா முன்னே**
**விரைய வெட்டும் (பா. 33)**

இப்பாடலடிகள் எடுத்துரைக்கின்றன. பூலாவுடையாருக்குப் பொங்கலிட்டுத் தேங்காயும் கரும்பும் நிரம்ப படையலிட்டனர். குங்குமத்தோடு சந்தனத்தையும் கலந்துக் குமுக்கா உடையார் அய்யனுக்குச் சாத்திப் போற்றியுள்ளனர். உச்சியிலே கொண்டைப் பூவினையுடைய செஞ் சேவலைச் சாத்திர முறைப்படி புலியூருடையாருக்குப் பலியிட்டதை,

**பூத்தலைச் செஞ்சேவற் சாத்திரத் தாலே**
**புலியூ ருடையார்**
**கொள்ளப் பலிதானிடும்**
**வாய்த்தசா ராயமும் பனையூற்றுக் கள்ளும்**
**வடக்குவாய்ச் செல்லியுண்ணக்**
**குடத்தில வையும்**
**தோத்திரம் பண்ணும் பண்ணுங் கூத்தாடியே**
**தொழுது தொழுது**
**வேண்டும் மழைபெய்யவே (பா. 34)**

இப்பாடலடிகள் விளக்குகின்றன. சாராயமும் கள்ளும் வடக்கு வாசல் செல்லியானவள் உண்ணுமாறு குடங்களில் வைத்தனர். பண்பாடி கூத்தாடி தொழுது மழை பெய்யுமாறு பள்ளர்கள் அழகரின் திருநாமங்களை வாழ்த்தி வேண்டினர்.

**நெல்வகைகள்**

பழந்தமிழர்கள் வானிலை அறிவியல் அறிந்து இயற்கையோடு இயைந்து உழவுத் தொழிலில் ஈடுபட்டுள்ளனர். இவற்றை பல இலக்கியங்கள் வழி அறியப்பட்டாலும் குறிப்பாக முக்கூடற்பள்ளு இலக்கியத்தில் உழவுத் தொழில் பற்றியும் நெல் வகைகள் பற்றியும் அதிக அளவில் அறிய முடிகின்றது. ”பள்ளு இலக்கியங்களில் ஏறத்தாழ 150 வகைகளின் பெயர்கள் சுட்டப்பட்டுள்ளன. தமிழர்கள் இயற்கையோடு இயைந்த வாழ்வை வாழ்ந்தனர் என்பதை நெல் வகைகளுக்கு இடப்பட்ட பெயரினைக் கொண்டே நாம் உணரலாம். தமிழர்கள் தாங்கள் கண்ட இயற்கை பொருள்களையும், வேளாண் தொழிலோடு தொடர்புடைய பொருள்களையும், சமுதாய வாழ்வில் இடம்பெறும் இன்றியமையாப் பொருள்களையும், தெய்வங்களையும், மக்களில் சிறந்தாரையும், நெல்லின் வண்ணம், வடிவம், சுவை, இயல்பு இவற்றிற்கு ஏற்ப பொருத்திப் பெயரிட்ட திறம் எண்ணுதற்கு வியப்பிற்குரியதாகும்.” (முனைவர் செ. ரவிசங்கர், பக், 104 -105)

ஒவ்வொரு நெல்லும் தனிப்பட்ட வடிவத்தையும் சுவையையும் மருத்துவ பயனையும் கொண்டுள்ளது. “நெல் வகைகள் ஒவ்வொன்றும் வெவ்வேறு வடிவங்களைக் கொண்டவை. நீண்டும், குறுகியும், பருத்தும், மெலிந்தும் காணப்படும் அவற்றின் வடிவங்களுகேற்ப பெயர்கள் வழங்கப்பட்டன. நெல்லின் வடிவத்தைக் கொண்டு மூக்கு நீண்டிருப்பதும் வால் நீண்டிருப்பதுமென இருவகையாக்கிப் பெயரிட்டனர்.

**1. மூக்கு நீண்டிருப்பது - நெடுமூக்கன், மூக்கன் சம்பா, மூக்கன்நெல்**
**2. வால் நீண்டிருப்பது - வாலான் நெல்**
**பொதுப்பெயர் – கட்டைவாலன், குதிரை வாலான்**
**3. காடையின் கழுத்து - காடைக் கழுத்தன்**
**4. யானைக் கொம்பு வடிவம் - ஆனைக்கொம்புச் சம்பா**
**5. மூங்கில் முத்து வடிவம் – மூங்கிற்சம்பா**
**6. கோதுமை வடிவம் - கோதுமைச் சம்பா**

நெல்லில் கதிர் பிடிப்பதற்கு முன்பு வெயில் மிகுதியாக கிடைப்பதால் ஒளிச் சேர்க்கையும் மிகுதியாக நடைபெறுகிறது." (முனைவர்செ. ரவிசங்கர், ப. 105) நெல்லின் வடிவத்தைக் கொண்டு பெயர் இடப்பட்டிருப்பது சிறப்பாகும். இன்று பல வகையான நெல் வகைகள் அழிந்துவிட்டன.

"நெல்லின் நிறம், அரசியின் நிறம் ஆகியவற்றைக் கொண்டு நெல்லுக்குப் பெயர்கள் சூட்டப்பட்டன.

**1. கருமை வண்ணமுடையவை - கருங்குறுவை, கருஞ்சூரை, கருப்பன்**

**2. செம்மை நிறத்தையும், மங்கலப் பொருளையும் இணைத்துப் பெயரிடப்பட்ட நெல் வகை - குங்குமச் சம்பா, குங்குமப்பாளை**

**3. பால்போன்ற வெண்மையான கடுக்கண் போன்ற அரிசியையுடைய நெல் வகை – பாற்கடுக்கண்**

**4. வெண்மை நிறத்திலேயே பல்வகை நெல் வகைகள் உள்ளன. வெள்ளை முடங்கன், பெரு வெள்ளை, முழு வெள்ளை, தும்பை பாசி**

**5. பச்சை நிறம் - பச்சைப் பெருமாள்**

**6. செம்மையான நிறம் மிளகைப் போன்ற வடிவம் - செஞ்சம்பா, செந்தாழை, செம்மிளக்கி" ( முனைவர் செ. ரவிசங்கர், ப. 106)**

பள்ளர்கள் பயன்படுத்திய நெல் விதைகளை முக்கூடற்பள்ளு நயம் பட எடுத்துரைக்கின்றது. மணல்வாரி, பூம்பாளை, குரும்பை என்பன போன்ற பலவகையான நெல் வகைகளைப் பயிரிட்டதை,

**பலவெள் ளாண்மையிட் டேன்மணல் வாரியைப்**
**பண்டு நம்பெரு மாள்கட் டழித்தார்**
**செலவு போனதும் போய்ச்சில் பூம்பாளை**
**செண்ட லங்காரர் தோப்புக்கே காணும்**
**கலக வேற்கைத் திருமங்கை யாழ்வானைக்**
**காணேன் மச்சு முறித்தானைக் காட்டிச்**
**சொலவொண் ணாத் தெய்வ தாசி களுக்கே**
**சொறி குரும்பை விற்றார் பலர் ஆண்டே (பா. 69)**

என்ற பாடல் அடிகள் வழி அறிய முடிகின்றது. இராசவாணன் என்னும் நெல் பயிரிட்டதனை,

**ஈடி லாவகைக் கின்னம் எழுதி**
**இராச வாணனை இரண்டுபங் கிட்டு**
**நாடி யேகாவை அம்பல வாண**
**நயினார் பேரிற்பின் பாதியும் கூட்டி (பா. 71)**

இவ்வடிகள் சுட்டுகின்றன.

சித்திர காலி வாலான், சிறை மீட்டான், மணல் வாரி, கருஞ்சம்பா, செஞ்சூரை, சீரகச் சம்பா, முத்து விளங்கி, மலை முண்டன்,பொற்பாளை, நெடுமூக்கன், அரிக்கிராவி, மூங்கிற் சம்பா, கத்தூரிவாணன், கடை கழுத்தன், இரங்கல் மீட்டான், கல்லுண்டை பூம்பாளை, பாற்கடுக்கன், வெள்ளை, புத்தன், கருங்குறுவை, புனுகுச் சம்பா ஆகிய வித்து வகைகளையெல்லாம் இரண்டு பூவுக்கும் காணுமளவுக்குத் தொகுத்துப் பள்ளன் சேரியில் விதைத்ததை,

**சித்திரக் காலிவாலான் சிறை மீட்டான் மணல் வாரி**
**செஞ்சம்பா கருஞ்சூரை சீரகச்சம்பா**
**முத்து விளங்கிமலை முண்டன்பொற் பாளைநெடு**
**மூக்கன் அரிக்கிராவிவி மூங்கிற் சம்பா**
**கத்தூரி வாணன் காடைக் கழுத்தன் இரங்கல் மீட்டான்**
**கல்லுண்டை பூம்பாளைபாற் கடுக்கன் வெள்ளை**

Volume 3, SPL Issue 1, July 2025 E-ISSN: 2584-167X

**புத்தன கருங்குறுவை புனுகுச்சம் பாவும் இரு**
**பூவுக்கும் விதை சேரிற் போட்டேனா னாண்டே (பா. 109)**

இவ்வரிகள் எடுத்துரைக்கின்றன.

**மாட்டு வகைகள்**

முக்கூடற்பள்ளில் பள்ளர்கள் பல வகையான மாட்டுவகைகளைப் பயன்படுத்தியுள்ளனர். ஆயிரமல்லியன், ஒற்றைக் கொம்பன் மாடுகளைப் பயன்படுத்தியதை,

**அதிசயந் தன்னைக் கேட்கில் முக்கூடல்**
**அழகர் பண்ணைக்கு உழவுமா டெங்கே?**
**விதிவசந் தன்னில் ஆயிர மல்லியன்**
**மேற்றி சைமுகஞ் சேர்ந்தது காணேன் (பா. 72)**
**ஒற்றைக் கொம்பனைத் தாண்டவ ராயன்**
**உள்ளூர்க் கோவிலுக் குள்ளே யடைத்தான் (பா. 73)**

இப் பாடலடிகள் வழி அறியலாம். குடைக்கொம்பன் செம்மறையன் குத்துக் குளம்பன், மோழை குடைச் செவியன், குற்றாலன், கூடுகொம்பன், மடப்புல்லை, கரும்போரான், மயிலை, சுழற்சிக் கண்ணன், மட்டைக் கொம்பன், கருப்பன், மஞ்சள் வாலன், படைப்புப்பிடுங்கி, கொட்டைப் பாக்கன், கருமறையன், பசுக் காத்தான், அணிற்காலன், படலைக் கொம்பன், விடத்தலைப்பூ நிறத்தான், வெள்ளைக்காளை என்பன போன்ற மாடுகள் இருந்ததை,

**குடைக்கொம்பன், செம்மறையன்**
**குத்துக் குளம்பன் மோழை**
**குடைச் செவியன் குற்றாலன்**
**கூடுகொம்பன்**
**மடப்புல்லைக் கரும்போரான்**
**மயிலை சுழற்சிக் கண்ணன்**
**மட்டைக்கொம் பன்கருப்பன்**
**மஞ்சள் வாலன்**
**படைப்புப் பிடுங்கி கொட்டைப்**
**பாக்கன் கருமறையன்**
**பசுக்காத்தான் அணிற்காலன்**
**படலை கொம்பன்**
**விடத்தலைப் பூ நிறத்தான்**
**வெள்ளைக் காளையும் இந்த**
**விதத்திலுண் டாயிரந்தான்**
**மெய்காண் ஆண்டே (பா. 110)**

இப்பாடலடிகள் விளக்குகின்றன.

**உழவுத் தொழில்**

உழவுத் தொழில் உலகெங்கும் நடக்கும் உன்னதமானத் தொழிலாகும். இத்தொழிலினை சிற்றிலக்கியத்தில் பள்ளு இலக்கியம் மிகச்சிறந்த முறையில் எடுத்துரைக்கின்றது. "உழவுத் தொழில் செய்யும் மக்கள் பள்ளர்கள் ஆவர். இவர்களில் பெண்கள், பள்ளியர், பள்ளத்தியர் என அழைக்கப்படுவர். எனவே, வயல்களில் உளவுத் தொழில் செய்யும் மக்களின் வாழ்க்கையைப் பாடும் இலக்கியம் பள்ளு இலக்கியம்.” (கலாவதி, ப. 28)

பஞ்சாங்கம் பார்த்து சப்தமி திதியும் புதன்கிழமையும் சுவாதி நட்சத்திரமும் கூடிய நாளில் ஏர்பூட்டி, உழவுத் தொழில் மேற்கொள்ள சென்றதை,

**சத்தமி புதன்சோதி தைதுலக் கரணம்**
**தவறாத சுபயோகந் தருபஞ் சாங்கம்**

Volume 3, SPL Issue 1, July 2025 E-ISSN: 2584-167X

**மெத்தநன் றெனப் பார்த்து மேலான வேதியர்கள்**
**மிக்க துலாமுகிழ்த்தம் விதித்தார் இன்று**
**பத்தர்பணி முக்கூடல் பரமனார் அழகர் தம்**
**பண்ணைக்கே ரிடவேணும் பள்ளா என்றே**
**உத்தாரம் பண்ணைக் காரன் உரைத்தான்**
**உரையைக் கேட்ட வுடனே குடும்பன்**
**ஏர்கொண் டுழச் சென்றானே (பா. 114)**

இவ்வடிகள் நமக்கு எடுத்துரைக்கின்றன. சாத்தன், பெரியான், அரியான், சடையான், உடையான், கட்டைச் சங்கன்,புங்கன், போத்தன், அருதன், சிங்கன் என சேரியிலுள்ள பள்ளர்கள் எல்லாரும் கூடி குரவையிட்டு ஏர்மங்கலம் பாடி ஏர்பூட்டி உழுதலை,

**சாத்தன் பெரியான் கொன்னைத்**
**தாண்டி அரியான்**
**சடையான் உடையான் கட்டைச்**
**சங்கன் புங்கன்…**
**…கூத்தன் முதலா யுள்ள**
**பள்ளர் எல்லாம்**
**குரவையிட் டேரைப் பூட்டிக்**
**கூடி யுழுதார் ( பா. 115)**

இவ்வடிகள் நமக்கு பகிர்கின்றன.

**விதைத்தல்**

பள்ளன் எல்லோருடனும் கூடி தொழுது தெய்வக் கடன்களை முடித்து விட்டு தொளியிலேயே விதைகளை எடுத்துத் தெளித்ததை,

**உழுத உழவைக் கண்டு களித்தான் பள்ளர்**
**உள்ள பேரையெல்லாம் விளித்தான்**
**தொழுது தெய்வக்கடன் கழித்தான் – அந்தத்**
**தொளியில் விதைகள் எல்லாம் தெளித்தான் (பா. 122)**

இவ்வடிகள் நமக்குப் பகர்கின்றன.

**விதைகள் முளைத்தல்**

விதைத்த விதைகள் முளைக்க தொடங்கின. பள்ளன் அதற்கு சரியான அளவில் தண்ணீர் அடைத்து நார்த்தாங்கால் வெட்டி விட்டான். மரக்கொம்புகளை வெட்டி நாற்றங்கால் சுற்றி வேலிநட்டுப் பாதுகாவல் செய்தார். இதனை,

**முளைக்குத் தண்ணீரை அடைத் திட்டான் – கொல்லை**
**முழுதும் மறுநாள் வெட்டி விட்டான்**
**வளைத்து வேலிசூழ நட்டான் - நாற்று**
**வளர்க்க நாளும் ஒருப் பட்டான்**
**வளர்ந்த நாற்றைமுகங் கண்டான்- சேரி**
**மள்ளர் கூடமது வுண்டான் (பா. 124)**

இவ்வடிகள் வழி அறியலாம். நாற்று வளர்வதைக் கண்டு மகிழ்ச்சியடைந்து மதுவுண்டு களித்தான்.

**நாற்று நடுதல்**

முக்கூடல் நகரில் நல்ல நாளில் நாற்று நடுதல் ஆரம்பமானது. முதலில் தரிசை முதலுழவு செய்தனர். பின்னர் மறித்து மறித்து முச்சாலடித்து நாலு உழவுகளையும் உழுது முடித்தனர். அதன் பின் மூன்று மரம் அடித்து வயல்களைச் சமமாக்கி திருத்தினர். முக்கூடல் அழகரின் திருப்பாதங்களை வணங்கி நாற்று முடிகளை நெற்றியில் வைத்து நாலு திசையும் நோக்கி வாழ்த்திக் கும்பிட்டார்கள். அதன் பின் நாற்று நடுபவர்களைப் பகுத்து நிற்க வைத்து குரவை

Volume 3, SPL Issue 1, July 2025 E-ISSN: 2584-167X

ஒலியினை எழுப்பி பயிர் நெருங்காமல் தொளியிலே பதியுங்கள் என்று பள்ளிகளுக்கு ஆணையிட்டதை,

**முந்தித் தரிசை அடித்து மறித்து**
**முச்சாலடித்திட் டுழவு நாலும்**
**முழுதும் உழுது திருத்தும் பரம்பு**
**மூன்றுந் தடவியே**
**அந்தத் தொளிக்குச் சமைந்த நாற்றை**
**அடுத்த வயலிற் பிடுங்கி வேறே**
**அடுக்கி முடிந்து வட்ட வட்டங்க**
**ளாய்க் குவித்தபின்**
**வந்தித் தழகர் பதத்தைத் துதித்து**
**வைத்த நாற்றை எடுத்து நெற்றியில்**
**வைத்துநாலு திசையும் நோக்கி**
**வாழ்த்திக் கும்பிட்டே**
**பந்தி பகுந்து நிரையை வகுத்துப்**
**பரவை யொலிபோல் குரவை எழுப்பிப்**
**பயிர் நெருங்காமல் கலந்து போகாமல்**
**பதியும் பள்ளீரே (பா. 126)**

இவ்வரிகள் எடுத்துரைக்கின்றன.

**முடிவுரை**

*முக்கூடற்பள்ளு* என்பது இடத்தால் பெயர் பெற்றது. இன்று முக்கூடல் என்பது சீவலப்பேரி என்று அழைக்கப்படுகின்றது. முக்கூடல் நகரின் சிறப்பினை கற்பனை நயம் பட அழகாக ஆசிரியர் விவரித்துள்ளார். இந்நூல் வழி பள்ளரின் வாழ்வில் பற்றியும், தெய்வ வழிபாடு பற்றியும் அழகாக எடுத்துரைக்கின்றது. அதுமட்டுமல்லாமல் அழகர் நகர்,தென்கரைவளம், வடகரை வளம், மருதூர் வளம் பற்றியும் அறிய முடிகின்றது. மேலும், உழவுத் தொழிலில் பள்ளர் இன மக்களின் சிறப்பினையும் இந்நூல் எடுத்தியம்புகின்றது. அத்தோடு வித்து வகைகள், மாடுகள், விதைகள் முளைத்தல், நாற்று நடுதல் பற்றி சிறப்பாக இந்நூல் வழி அறிய முடிகின்றது. இந்நூலின் வழி பழமையான பள்ளர் இன மக்களின் வாழ்வியலையும், உழவுத் தொழிலின் மேன்மையையும் பழமையையும் இன்றைய மக்களுக்கு தெரியப்படுத்த இவ்வாய்வுக்கட்டுரை துணை நிற்கும்.

**குறிப்புகள்**

[1] கலாவதி, வி, முனைவர். *தமிழ் இலக்கிய வரலாறு* – II, நியூ செஞ்சுரி புக் ஹவுஸ், சென்னை, 2023.
[2] புலியூர்க் கேசிகன். *முக்கூடற் பள்ளு*. பாரி நிலையம், சென்னை -109, 2001.
[3] ரவிசங்கர், செ. முனைவர். *தமிழும் அறிவியலும்*. நியூ செஞ்சுரி புக் ஹவுஸ், சென்னை, 2024.
[4] ராஜம், எஸ். *முக்கூடற் பள்ளு*. பாரி நிலையம், சென்னை -109, 1959.

**நிதிசார் கட்டுரையாளர் உறுதிமொழி:** இல்லை
**கட்டுரையாளர் நன்றியுரை:** இல்லை
**கட்டுரையாளர் உறுதிமொழி: இக்கட்டுரையில் எவ்வித முரண்பாடும் இல்லை என்று உறுதிமொழி அளிக்கிறேன்.**

இக்கட்டுரை கிரியேட்டிவ் காமன்சு ஆட்ரிபியூசன் 4.0வின் **Creative Commons Attribution4.0** கீழ் பன்னாட்டு உரிமம் பெற்றுள்ளது.

Academic Research News

*Peer-Reviewed Journal*



**Volume 3, SPL Issue 1, July 2025** **E-ISSN: 2584-167X**

# Devotion in Minor Literature

**Dr. K. Kavitha,** Assistant Professor, Sree Ayyappa College for Women, Chunkankadai, Kanyakumari, Tamil Nadu, India.
ORCiD: https://orcid.org/0009-0007-1851-3612
Received: 31 March 2025; Revised: 17 April 2025; Accepted: 29 May 2025; Available Online: 30 July 2025.

## Abstract

*There are many types of short stories written in Tamil. These short stories flourish without diminishing the harmony of Tamil. Short stories play a significant role in the history of Tamil literature. Tamil short stories excel with a variety of poetic themes such as history, love, war stories, justice, social life, devotion, philosophy, etc. The period when short stories appeared in Tamil is very ancient and is well-documented. The Sangam period is considered to be the golden age in the history of Tamil literature. The ancient Tamil epics "Ettuthogai" and "Patuppattu" emerged during this period. The collections of many individual poems and literature composed individually by poets emerged during this period. "Thirumurukatruppadai", "Sirupanatruppadai," "Perumpanatruppadai," "Porunaratruppadai," "Kootharatruppadai", or "Malaipadukadam" are considered to be the Tamil Minor Literature (Chitrilakyam). Since the Atruppadai books mentioned here originated in the Sangam period, it can be understood that the origin of the Minor Literature is the Sangam period. The Minor Literature that originated in the Sangam period began to flourish and grow further from the end of the fourth century AD, the period of Bhakti Revival. Karaikalammaiyar created a decisive moment in the history of Tamil literature by creating a new type of Minor Literature. Great people like Avinashi Araikizhar, Jeyankondar, Ottakkoothar, Umapathi Sivachariyar, and Trikutaraasappa Kavirayar created new types of Minor Literature. Many later followed the new paths shown by them. It was believed that for the progress of society, the hearts of the people should be filled with a sense of God. In addition to the praise of the king, the leader of the country, hymns that praise God, the first of the world, have been shown in the Minor Literature. The devotional hymns such as "Navamanimalai," "Dwetmanimalai," "Mummanimalai," "Nanmanimalai," and "Parimanimalai" are evidence that tells us about the sense of God and the development of devotion that prevailed in the Tamil society.*

**Keywords**: Devotion, Tamil Literature, Minor Literature, Prabantham, Aatruppadai, Malai.

## References

[1] Shantha, M. S. *Sivaprakashar's Ilakkiya Noolkal Oru Thiranayvu*. Vidya Pathippagam, Chennai - 600 005, 1983.
[2] Suresh, C. Ra., Rajesh, P. *Tamil Ilakkiyankalil Panpattu Koorukalum Vazhviyal Nerimuraikalum*. Kavya Pathippagam, Chennai - 600 024, 2016.
[3] Suyambu, P. *Tamil Ilakkiya Varalaru*. Bharathi Pathippagam, Thisayanvilai – 627657, 2016.
[4] Seyaraman, N.V. *Sittilakkiyat Thiranayvu*. Ilakkiayap Pathippagam, Chennai - 18, 1980.
[5] Seyaraman, N.V. *Ilakkiyak Kovai*. Ilakkiayap Pathippagam, Chennai - 18, 1980.
[6] Chellappa, C.K. *Tamil Ilakkiya Vimarsanam*. Elutthup Pirasuram, Chennai, 1974.
[7] Muthushanmugam, Nirmalamohan. *Sittilakkiyankalin Thottamum Vakaiyum*. Muthu Pathippagam, 1979.

**Volume 3, SPL Issue 1, July 2025** **E-ISSN: 2584-167X**

[8] John Samuel, G. *Ilakkiyat Thiranayvu Mutharpakuthi*. Ulakatthamizharaycchi Niruvanam, Chennai - 600 020, 1976.

**Author Contribution Statement:** NIL.
**Author Acknowledgement:** NIL.
**Author Declaration:** I declare that there is no competing interest in the content and authorship of this scholarly work.
The content of the article is licensed under https://creativecommons.org/licenses/by/4.0/ International License.

Academic Research News
# Academic Research News
*Peer-Reviewed Journal*


**Volume 3, SPL Issue 1, July 2025** **E-ISSN: 2584-167X**

# சிற்றிலக்கியங்களில் பக்தி நெறி

**முனைவர் கு. கவிதா,** உதவிப்பேராசியர், ஸ்ரீ ஐயப்பா மகளிர் கல்லூரி,
சுங்கான் கடை, கன்னியாகுமரி, தமிழ்நாடு, இந்தியா.
ORCiD: https://orcid.org/0009-0007-1851-3612

**ஆய்வுச் சுருக்கம்**

*தமிழில் அமைந்த சிற்றிலக்கியங்கள் பல வகையின. தமிழின் சீரிளமை குன்றாமல் இச்சிற்றிலக்கிய மலர்கள் பூத்து விளங்குகின்றன. தமிழிலக்கிய வரலாற்றில் சிற்றிலக்கியங்களின் பங்கு பெரிது. வரலாறு, காதல், போர்ச் செய்திகள், நீதி, சமுதாய வாழ்வு, பக்தி, தத்துவம் முதலாய பலவகைப் பாடுபொருண்மைகளைக் கொண்டனவாய் தமிழ்ச் சிற்றிலக்கியங்கள் மிளிர்கின்றன. சிற்றிலக்கியங்கள் தமிழில் தோன்றிய காலம் மிகுதியும் தொன்மை சான்றது. தமிழ் இலக்கிய வரலாற்றில் பொற்காலம் எனப் போற்றப்படும் சிறப்புடையது சங்க காலம். எட்டுத்தொகை, பத்துப்பாட்டு எனும் தமிழின் தொன்மையான பேரிலக்கியத் தொகுப்புக்கள் இக்காலத்தில் எழுந்தன. தனிப்பாடல்கள் பலவற்றின் தொகுப்பு நூல்களும், புலவர்களால் தனித்துப் பாடப்பெற்ற இலக்கியங்களும் இக்காலத்தில் எழுந்துள்ளது. சங்க இலக்கியப் பேரிலக்கியத் தொகுப்புகள் இரண்டனுள் பத்துப்பாட்டில் பத்து நூல்கள் அமைந்துள்ளன. இவற்றில், திருமுருகாற்றுப்படை, சிறுபாணாற்றுப்படை, பெரும்பாணாற்றுப்படை, பொருநராற்றுப்படை, கூத்தராற்றுப்படை அல்லது மலைபடுகடாம் எனவரும் ஐந்தும் ஆற்றுப்படை என்னும் சிற்றிலக்கிய நூல்களாகவே அமைந்துள்ளன. சங்க காலத்திலேலே இங்குக் குறிப்பிடப் பெறும் ஆற்றுப்படை நூல்கள் தோற்றம் பெற்றுள்ளமையால் சிற்றிலக்கியங்களின் தோற்ற காலம் சங்க காலம் என உணர முடியும். சங்க காலத்தில் தோற்றம் பெற்ற சிற்றிலக்கியங்கள், பக்தி மறுமலர்ச்சிக் காலமாகிய கி.பி. நான்காம் நூற்றாண்டின் இறுதி முதலாக மேலும் தழைத்து வளரத் தொடங்கின. காரைக்காலம்மையார் புதுவகைச் சிற்றிலக்கியங்களைத் தோற்றுவித்துத் தமிழ் இலக்கிய வரலாற்றில் ஒரு திருப்புமுனையை உருவாக்கினார். காரைக்காலம்மையாருக்குப் பின்னர், சேரமான் பெருமாள் நாயனார். அவிநாசி ஆறை கிழார், செயங்கொண்டார், ஒட்டக்கூத்தர், உமாபதி சிவாச்சாரியார், திரிகூடராசப்ப கவிராயர் போன்ற பெருமக்கள் சிற்றிலக்கியங்களில் புதிய வகைகளை உருவாக்கினர். இவர்கள் காட்டிய புதுத்தடங்களைப் பிற்காலத்தில் பலர் பின்பற்றினர். சமுதாய முன்னேற்றத்துக்கு மக்கள் நெஞ்சம் இறையுணர்வு உடையதாகத் திகழ வேண்டும் என்று எண்ணப்பட்டது. நாட்டுத் தலைமகனாகிய மன்னனைப் புகழ்ந்துரைப்பதோடு, உலக முதல்வனாகிய இறைவனைப் புகழ்ந்துரைக்கும் துதிநூல்களும் சிற்றிலக்கிய வரிசையில் எழுந்துள்ளன. நவமணிமாலை, இரட்டைமணிமாலை, இரட்டை மணிக்கோவை, மும்மணிமாலை, மும்மணிக்கோவை, நான்மணிகோவை, நான்மணி மாலை, இணைமணி மாலை என வரும் பக்திப் பொருண்மை தழுவிய சிற்றிலக்கியங்கள் சமுதாயத்தில் நிலவிய இறையுணர்வையும் பக்தி மேம்பாட்டையும் நமக்குக் கூறும் சான்றுகளாக உள்ளன.*

**குறிப்புச்சொற்கள்:** பக்தி, தமிழ் இலக்கியம், சிறு இலக்கியம், பிரபந்தம், ஆற்றுப்படை, மாலை.

## முன்னுரை

மனித சமுதாய வாழ்வியல் பண்பாடுகளை விளக்கிக் காட்டும் கருவியே இலக்கியம். மொழி தோன்றிய பின்னர் நாகரிகத்தின் முதிர்ச்சி நிலையில் இலக்கியம் உருப்பெறுகின்றது. நாகரிக வளர்ச்சிக்கும், சமுதாய இயல்பிற்கும், பண்பாட்டுச் சிறப்பிற்கும், காலச் சூழலின் அமைப்புக்கும் ஏற்ப, இலக்கியமும் பல்வேறு பிரிவினதாய்ப் பல்கிப் பெருகுகிறது.

**Volume 3, SPL Issue 1, July 2025** **E-ISSN: 2584-167X**

சங்க காலத்தில் தன்னுணர்ச்சிப்பாக்கள் மிகுந்திருந்தன அகப்பொருளும் புறப்பொருளும் தழுவிய நிலையில் காதற் பாடல்களும், வீரப்பாடல்களும் எழுந்தன. புலவர்கள் அகமாந்தர்களாகவும் புறமாந்தர்களாகவும் மாறி உணர்ச்சியைச் சொல் வடிவங்களில் வெளிப்படுத்தினர். பின்னர், கதையைக் கருவாகக் கொண்டு சொல்லாலும் பொருளாலும் தொடர்ந்து செல்லும் காப்பிய நூல்கள் எழுந்தன. அதனைத் தொடர்ந்து சைவ, வைணவ அருளாளர்கள் பக்தி இலக்கியங்களைப் படைத்தனர் சாத்திர நூல்களும் உருப்பெற்றன. சங்க காலம் முதலாகக் கருக்கொண்டு மெல்ல வளர்ச்சியுற்று வந்த சிற்றிலக்கியங்கள் கி.பி, 12ஆம் நூற்றாண்டு முதல் தமிழுலகில் பெருஞ்செல்வாக்கு பெற்றன. கடவுளர்களும் குறுமன்னர்களும், வள்ளல்களும் அருளாளர்களும், ஞானியர்களும் சிற்றிலக்கிய உலகில் பாட்டுத்தலைவர்களாக ஏற்றம் பெற்றனர். தமிழகத்தின் மூலை முடுக்கெல்லாம் நிறைந்து விளங்கிய தெய்வத் திருக்கோயில்களைக் களமாகக் கொண்டு பல சிற்றிலக்கியங்கள் எழுந்தன. எளிய மக்களின் வாழ்வியல் நடைமுறையும் கூட, சிற்றிலக்கியங்களின் கருப்பொருளானது. ஒட்டக்கூத்தர், உமாபதி சிவாச்சாரியார், குமரகுருபரர், தாயுமானவர், பட்டினத்தார் பல பட்டடைச் சொக்கநாதர் போன்ற பெரும் புலவர்கள் சிற்றிலக்கிய உருவாக்கத்தில் பெரிதும் ஈடுபாடு கொண்டு உழைத்தனர். இங்ஙனம் கி.பி. 12ஆம் நூற்றாண்டு முதல் கி.பி. 19ஆம் நூற்றாண்டு வரையுள்ள காலப்பகுதி சிற்றிலக்கிய நூல்களின் பொற்காலமாகத் திகழ்ந்தது. இக்கால எல்லையில் சிற்றிலக்கியங்கள் தமிழுலகில் செல்வாக்கு பெற்று விளங்கின.

**பிரபந்தம் - சிற்றிலக்கியம்**

சிற்றிலக்கியங்கள் என்ற சொல்லாட்சி அண்மைக் காலத்தில்தான் வழக்குக்கு வந்தது. இச்சொல்லாட்சி வழக்குக்கு வருவதற்கு முன்னர் பிரபந்தம் என்ற சொல்லால் சிற்றிலக்கியங்கள் குறிப்பிடப்பட்டன. பிரபந்தம் என்பது வடசொல். இதற்கு நன்கு கட்டப்பட்டது என்பது பொருள். **“தண்டியலங்காரத்தின் காப்பியம்” என்னும் சொல் பின்னர்ப் ‘பிரபந்தம்’ என்று கூறப்பட்டது. பிரபந்தம் என்பது வடசொல். ஆதலால் அண்மைக்கால அறிஞர்கள் அதற்கு மாற்றுச் சொல்லாகச் சிற்றிலக்கியம் என்பதை வழக்கில் கொண்டு வந்துள்ளனர்” (முனைவர் பெ. சுயம்பு, ப. 285).** எழுத்து, அசை, சீர், தளை, அடி, தொடை முதலான செய்யுள் உறுப்புக்களால் இணைக்கப்பட்டு ஒரு குறிப்பிட்ட பாடுபொருண்மையை மையமாகக் கொண்டு ஆக்கப்படுபவை இலக்கியங்கள். இம்முறையில் இலக்கியம் என்னும் தமிழ்ச் சொல்லும் பிரபந்தம் என்ற வடசொல்லும் பொருள் நோக்கில் ஒன்றாகவே காணப்படுகின்றன. தமிழில் *எட்டுத்தொகை*, *பத்துப்பாட்டு*, காப்பியங்கள், பக்தி நூல்கள் ஆகியன இலக்கியம் என்னும் சொல்லால் குறிப்பிடப்பெற்றமையால், அந்தாதி, சதகம், பிள்ளைத்தமிழ், பரணி போன்ற இலக்கியங்கள் தோன்றிய காலத்தில் அவைகளைக் குறிக்க, பிரபந்தம் என்னும் வடசொல் பயன்படுத்தப்பெற்றது. பின்னர், பிரபந்தம் என்னும் சொல் இலக்கியம் என்பதையே குறிக்கும் என்பதற்காக, அந்தாதி முதலானவற்றைச் சிறு பிரபந்தங்கள் அல்லது சில்லறைப் பிரபந்தங்கள் என்று அடை கொடுத்து வழங்கும் வழக்காறு காணப்பட்டது. பின்னர் தனித்தமிழாட்சி வளர்ச்சியுள்ள காலத்தில் சிறு பிரபந்தங்கள் என்ற சொல்லால் குறிப்பிடப்பெறும் அந்தாதி முதலானவற்றைச் சிற்றிலக்கியங்கள் எனக் கூறும் வழக்கு ஏற்பட்டு நிலைப்பெற்றது “சிற்றிலக்கியம் என்ற சொல்லாட்சி இருபதாம் நூற்றாண்டில் புதிதாகத் தோன்றிய உரைநடை வடிவங்களான சிறுகதை, நாவல் ஆகியவற்றின் தாக்கமாகவும் இருக்கலாம் என்று கூறப்படும் கருத்தும் இவண் சிந்திக்கத்தக்கது.” (டாக்டர் முத்துச் சண்முகம், நிர்மலா மோகன், பக். 4, 5)

**சிற்றிலக்கிய வகைகள்**

தமிழில் தொண்ணூற்றாறு வகைப் பிரபந்தங்கள் என்று கூறுவது இலக்கிய வழக்கு. ஆனால் இந்த எண்ணிக்கையும் நூல்களின் வகையும், சிற்றிலக்கிய அமைப்பிலக்கணத்தை விவரிக்கிற பாட்டியல் நூல்களில் வேறுபடுகின்றன. தமிழில் அமைந்துள்ள சிற்றிலக்கியங்கள் சங்க காலம் தொடங்கி கி.பி. 20ஆம் நூற்றாண்டு வரை வளர்ந்து வரும் சீரும் சிறப்பும்

Academic Research News
Peer-Reviewed Journal

Volume 3, SPL Issue 1, July 2025 E-ISSN: 2584-167X

உடையவை. தமிழ்ச் சிற்றிலக்கிய வகைகளைத் தொண்ணூற்றாறு என்னும் பட்டியலில் அடக்கிக் காட்டும் முயற்சி கி.பி. 16ஆம் நூற்றாண்டில் எழுந்தது. இந்தக் கால கட்டத்துக்கு முன்னர் எழுந்த ஒரு சில இலக்கிய வகைகளும் பின்னர் எழுந்த பல இலக்கிய வகைகளும் பட்டியலில் அடக்கிக் கூறப் பெறவில்லை. “இன்று வரை தமிழில் தோன்றியுள்ள இலக்கிய வகைகளின் மொத்த எண்ணிக்கை ஏறத்தாழ 330 ஆகும்.” (டாக்டர் ந. வீ. செயராமன், ப. 92) சிற்றிலக்கியங்கள், முடியாச்சிக் காலம் முதல் இன்றைய குடியாச்சிக் காலம் வரை நாளும் தோன்றித் தமிழைச் செழிக்கச் செய்து வருகின்றன. சமுதாய வாழ்வியலை விளக்கிக் காட்டும் பணியில் பேரிலக்கியங்களைவிடச் சிற்றிலக்கியங்கள் பெரும் பங்கு வகிக்கின்றன. பேரிலக்கியங்கள் நாடக வழக்கில் கட்டுக்கோப்பான அமைப்பு முறையில், மரபுநிலை திரியாமல் பாடப்பெறுகின்றன. ஆனால் சிற்றிலக்கியங்களோ, நிலைபெறும் போராட்ட உணர்வோடு உலகியல் வழக்கில் உள்ளதை உள்ளவாறு கூறும் நிலையில், எளிய மொழியமைப்பில் பாடப்பெறுகின்றன. எனவே தான் சமுதாய நோக்கையும் போக்கையும் பேரிலக்கியங்களைவிடச் சிற்றிலக்கியங்கள் சிறந்த முறையில் வெளிப்படுத்துகின்றன.

**பக்தி சிற்றிலக்கியங்கள்**

பக்தி உணர்வை வெளிப்படுத்துவதற்குத் தமிழ்ச் சிறந்த மொழியாகும். எனவே ஒவ்வொரு சமயத்தவரும் கடவுளரைப் பாடுவதற்கும், சமயக் கோட்பாடுகளை விளக்குவதற்கும் பக்தியை வெளிப்படுத்துவதற்கும் பலவகை இலக்கியங்களைத் தமிழில் படைத்துள்ளனர்.

சிற்றிலக்கியங்களில் பெரும்பான்மையானவை பக்திச் சிற்றிலக்கியங்களாகத் திகழ்க்கின்றன. இறைவனைப் பாட்டுடைத் தலைவராக்கி காப்பு, செங்கீரை, தால், சப்பாணி, முத்தம், வாரானை, அம்புலி, சிறுபறை, சிற்றில், சிறுதேர் எனப் பத்துப் பருவங்களில் ஆண்பாற் பிள்ளைத் தமிழும், இறுதியில் அமைந்த மூன்று பருவங்களுக்குப் பதிலாக, கழங்கு, அம்மானை, ஊசல் என்பவற்றைக் கூட்டிப் பெண்பாற் பிள்ளைத் தமிழும் எழுந்தன. “பெரியாழ்வார் பாடிய சில பாசுரங்களைப் பிள்ளைத்தமிழாகக் கருதிக் கண்ணன் பிள்ளைத்தமிழ் என்று வழங்கும் மரபும் காணப்படுகிறது.” (முனைவர் பெ. சுயம்பு, ப.306) பதினெட்டு வகை உறுப்புக்கள் பொருந்தி வர கலம்பக இலக்கியங்கள் எழுந்தன. இறைவன் உலா வருங்காலை எழுபருவப் பெண்டிர் காதல் கொண்டார் என்னும் கருப்பொருள் அமைய உலா இலக்கியங்கள் பாடப்பெற்றன. இறைவன் உலாவின் போது கண்ட பெண்ணொருத்தி அஃறிணை அல்லது உயர்திணைப் பொருளைத் தூது விடுத்துத் தன் காதல் கூறி, மாலை வாங்கி வருமாறு தூது இலக்கியங்கள் உள்ளன. இறைவனைத் துதிக்கும் துதிப் பொருண்மை அமைய சதக இலக்கியங்கள் எழுந்தன. இறைவன் மீது காதல் கொண்ட பெண்ணொருத்திக்கு அவள் விரும்பியவனைக் கூடுவாள் என்று குறத்தியொருத்தி குறி கூறும் குறவஞ்சி இலக்கியங்கள் வளர்ந்தன. சமயப் போராட்டத்தை மையமாகக் கொண்டு படைக்கப் பெற்ற பாத்திரங்களை வைத்து, பள்ளர் வாழ்வியல் முறைகளை விளக்கும் பள்ளு இலக்கியங்கள் உருவாயின. இவை அனைத்தும் பொருண்மை அடிப்படையில் எழுந்த பலவகைப் பக்திச் சிற்றிலக்கியங்கள் ஆகும். “பள்ளு இலக்கியங்களுள் முக்கூடற் பள்ளுவே இலக்கிய நயமிக்கது. திருநெல்வேலி மாவட்டத்துச் சித்திரா ஆறு (சிற்றாறு), தாமிரபரணி ஆறு, கோதாண்டராமன் ஆறு மூன்றும் கூடும் இடம் முக்கூடல். அவ்வூரில் எழுந்தருளியிருக்கும் அழகர் பெருமானைச் சிறப்பிக்குமாறு முக்கூடற் பள்ளு இயற்றப்பட்டுள்ளது. (முனைவர் பெ. சுயம்பு, ப. 30)

கோவை இலக்கியத்தில் திருக்கோவையார், தூது இலக்கியத்தில் நெஞ்சுவிடுதூது, பரணி இலக்கியத்தில் அஞ்ஞவதைப் பரணி, மோகவதைப் பரணி, பாசவதைப் பரணி ஆகியன. குறவஞ்சி இலக்கியத்தில் ஞானக் குறவஞ்சி, பள்ளு இலக்கியத்தில் ஞானப்பள்ளு போன்றவை தத்துவச் சாயலில் அமைந்த சிற்றிலக்கியங்கள், தத்துவ விளக்கங்கள் வாயிலாகப் பக்திநெறி புலப்படுத்தப்பட்டுள்ளது. எட்டுப்பாடல்களால் வரும் அட்டமங்கலம், ஒன்பது பாடல்களால் வரும் நவமணிமாலை, பத்துப்பாடல்களால் வரும் ஒருபா ஒருபஃது, பதிகம் ஆகியன. இருபது பாடல்களால் வரும் இருபா இருபஃது, இரட்டைமணி மாலை ஆகியன. முப்பது பாடல்களால்

Volume 3, SPL Issue 1, July 2025 E-ISSN: 2584-167X

வரும் மும்மணிக்கோவை, மும்மணி மாலை, தண்டகமாலை ஆகியன. நாற்பது பாடல்களால் வரும் நான்மணிமாலை, அறுபது பாடல்களால் வரும் மணிமாலை, நூறுபாடல்கள் வரும் இணைமணிமாலை ஆகியனவற்றின் பொருண்மை பக்தியே. இறைவனைப் பாட்டுடைத் தலைவராக்கிப் பாடப்பெற்ற துதி நூல்களாக இவை விளங்குகின்றன. இவையனைத்தும் பக்திச் சிற்றிலக்கியங்கள் என்னும் பெயருக்கு உரியவை. பயின்று வரும் பாடல்களின் எண்ணிக்கை அடிப்படையிலும் பாவகைகளைப் பொறுத்தும் இவ்வகைப் பக்திச் சிற்றிலக்கியங்கள் எண்ணிக்கையில் பலவாகப் பெருகியுள்ளன.

**பக்திச் சிற்றிலக்கியங்களின் வளர்ச்சி**

பக்திச் சிற்றிலக்கியங்கள் சங்க காலத்திலேயே அமைந்துள்ளது என்பது குறிப்பிடத்தக்க செய்தியாகும். திருக்கோவையார், திருவாலங்காட்டு மூத்த திருப்பதிகங்கள், திருவிரட்டை மணிமாலை, அற்புதத் திருவந்தாதி, சேஷத்திரத்திருவெண்பா, பொன்வண்ணத்தந்தாதி, ஆரூர் மும்மணிக்கோவை, திருக்கைலாய ஞான உலா, கைலைபாதி காளத்திபாதி அந்தாதி, திருவலஞ்சுழி மும்மணிக்கோவை, போற்றித் திருக்கலிவெண்பா, மூத்த நாயனார் திருவிரட்டை மணிமாலை, சிவபெருமான் திருவிரட்டை மணிமாலை, சிவபெருமான் திருவந்தாதி, சிவபெருமான் திருமும்மணிக்கோவை, மூத்தபிள்ளையார் திரு மும்மணிக்கோவை, கோயில் நான்மணிமாலை, திருக்கழுமல மும்மணிக்கோவை, திருவிடை மருதூர் மும்மணிக்கோவை, திருவேகம்பமுடையார் திருவந்தாதி, திருநாரையூர் விநாயகர் திருவிரட்டை மணி மாலை, திருத்தொண்டர் திருவந்தாதி, ஆளுடைய பிள்ளையார் திருவந்தாதி, திருமும்மணிக்கோவை, திருவுலாமாலை ஆகியன திருமுறை ஆசிரியர்களால் பாடப்பெற்ற சைவ சமயப் பக்தி இலக்கியங்கள் ஆகும். “திருக்கோவையார் சிவபெருமானைப் பாட்டுடைத் தலைவனாகக் கொண்டது. திருக்கோவையாருக்கத் திருச்சிற்றம்பலக் கோவையார் என்ற பெயரும் உண்டு. கவிதைச் சிறப்பாலும் காலத்தாலும் பிற கோவைகளிலிருந்து முதன்மை பெற்று விளங்குகிறது. சிறப்புக் கருதியே இக்கோவை ஆர் என்னும் மரியாதை விகுதியுடன் கூறப்படுகிறது.” (முனைவர் பெ. சுயம்பு, ப. 293) வைணவ ஆழ்வார்களும் பக்திச் சிற்றிலக்கியங்கள் பல தந்துள்ளனர். பன்னிரு ஆழ்வார்களால் திருமாலைப் பாட்டுடைத் தலைவராகக் கொண்டு பாடப்பெற்ற முதல் திருவந்தாதி, இரண்டாம் திருவந்தாதி, மூன்றாம் திருவந்தாதி, நான்முகன் திருவந்தாதி, பெரிய திருவந்தாதி, இராமாநுச நூற்றந்தாதி, சிறய திருமடல், பெரிய திருமடல் ஆகியவை ஆழ்வார்கள் தந்த வைணவப் பக்திச் சிற்றிலக்கியங்கள் ஆகும். நாடெங்கும் அமைந்த திருத்தலங்களில் கோயில் கொண்டருளிய இறைவர்களைப் பாட்டுடைத் தலைவர்களாகக் கொண்டு அல்லது முன்னிலைப்படுத்திப் பலவகைப் பக்திச் சிற்றிலக்கியங்கள் எழுந்தன. புரவலர்கள் ஆங்காங்குள்ள இறைவர் மீது சிற்றிலக்கியங்கள் பாடப் புலவர்களை ஊக்குவித்தனர். இம்முறையில் பக்திச் சிற்றிலக்கியங்கள் பலவாய்ப் பல்கிப் பெருகின. சிற்றிலக்கிய மரத்தின் பக்திக்கிளைப் பக்திச் சிற்றிலக்கியக் கனிகளால் தழைத்துப் பொலிந்தது.

**பதிகம் கூறும் பக்திநெறி**

காரக்காலம்மையார் பாடிய திருவாலங்காட்டு மூத்த திருப்பதிகங்களில், திருவாலங்காட்டில் இறைவன் நிகழ்த்தும் திருக்கூத்தின் இயல்பும், அக்கூத்துக்கு உரிய ஆடரங்காக இடுகாடு விளங்குவதும் விளக்கப்பட்டுள்ளது. சிவபெருமானாகிய இறைவன் இடுகாட்டில் திருக்கூத்து ஆடும்பொழுது நீண்ட அவர் திருச்சடை எட்டுத்திசையும் வீசுகிறது. அவர் ஊழின் வலியால் இறந்த உயிர்கள் உள்ளம் குளிரவும், அமைதி அடையவும் திருக்கூத்து நிகழ்த்துகின்றார் என்பதனை,

**ஈமம் இடுசுடு காட்டகத்தே**
**ஆகம் குளிர்ந்தன லாடும் எங்கள்**
**அப்பனிடம் திரு ஆலங்காடே (திரு.மூத்திருப்பதிகம். பா. 3)**

என்ற பாடலால் மூலமும்,

Academic Research News
Peer-Reviewed Journal

Volume 3, SPL Issue 1, July 2025 E-ISSN: 2584-167X

**…காரைக்காற்பேய்**
**செப்பிய செந்தமிழ் பத்தும் வல்லார்**
**சிவகதி சேர்ந்தின்பம் எய்துவாரே (திரு.மூத்திருப்பதிகம். பா. 11)**

என்ற பாடல் மூலமும் அறியலாம். தன்னிடத்து அன்பு செலுத்தும் உயிர்களுக்கு இன்பம் அருள்வது இறைபண்பு எனக் கூறுவதன் மூலம், இறைவனிடத்துப் பக்தி செலுத்த வேண்டிய இன்றியமையாமை இங்கு உணர்த்தப்படுகிறது.

**திருஇரட்டை மணிமாலை கூறும் பக்தி நெறி**

காரைக்காலம்மையார் பாடிய திருஇரட்டை மணிமாலை பக்தி நெறிகளின் பல்வேறு கோணங்களை விளக்குகின்றது. இவ்வுலக வாழ்வில் அடியாருக்குத் துன்பங்கள் வருதல் இயற்கை. துன்பங்கள் தாக்கும் போது, உள்ளம் தளராது இறைவனை எண்ணுதல் வேண்டும் சிவனை மனம் சலியாது வணங்குவோரை துயர்வந்து அணுகாது என்பதனை,

**கிளர்ந்துந்து வெந்துயர் வந்தடும் போதஞ்சி**
**நெஞ்சமென்பாய்த்**
**தளர்ந்திங் கிருத்தல் தவிர்திகண் டாய்தள**
**ராதுவந்தி (திரு இரட்டை மணிமாலை, பா. 1)**

என்ற பாடல் உணர்த்துகிறது. இறைவனேயன்றி வேறு துணையில்லை என இடைவிடாது எண்ணுதல் வேண்டும். இறைவன் திருப்புகழையே பேசுதல் வேண்டும். இத்தகைய பக்திநெறிக் கோட்பாடுகளில் வாழும் அடியவர்களை மீண்டும் பிறவாமல் காக்கும் படி இறைவன் விளங்குகின்றான், என்பதனை,

**ஆவாஎன்று ஆழாமைக் காப்பானை**
**எப்பொழுதும்**
**ஓவாது நெஞ்சே உரை (திருஇரட்டை மணிமாலை, பா. 6)**

என்ற பாடல் மூலம் அறியலாம். இறைவனை மலர்தூவி வழிபடலும் ஒரு வகைப் பக்திநெறி என்பதனை,

**தழற்கொண்ட சோதிச் செம் மேனியெம்**
**மானைக்கைம் மாமலர்தூய்த்**
**தொழக்கண்டு நிற்கிற்கு மோதுன்னி**
**நம்அடுந்தொல்வினையே (திருஇரட்டை மணிமாலை, பா. 11)**

என்ற பாடலில் இறைவன் திருப்பாதங்களைப் பக்தியுடன் என்னும் அடியவரைத் தொல்வினைகள் சாராது எனவும், இறைவனுக்கு மலர்தூவி வழிபட்டாலும் தொல்வினைகள் நம்மை நெருங்காது எனவும் கூறப்பட்டுள்ளது.

**மும்மணிக்கோவை கூறும் பக்தி நெறி**

திருவாரூர் மும்மணிக்கோவை பதினோராம் திருமுறையில் இடம்பெற்றுள்ளது. சேரமான் பெருமாள் நாயனார் திருவாரூர் சிவபெருமானைப் பாடியது. அகப்பொருண்மையைத் தழுவி இறைவனிடம் மையல் கொண்ட பெண்ணாகத் தம்மைப் பாவித்து அகப்பொருள் ஒழுகலாற்றுடன் இந்நூலில் பக்திநெறி விளக்கப்படுகின்றது.

தலைவனைக் கூடாது இருக்கும் தலைவியின் வேதனையைச் சுட்டும் குறிப்புக்கள் இறைவனைச் சார விரும்பும் அடியவரின் உளப்பாங்கையும் நிலையையும் குறிப்பாக வெளிப்படுத்துகின்றன.

**கலைபினை திரியக் கையற வெய்தி**
**மெல்விரல் நெரித்து விம்மி வெய்துயிர்த்து**
**அல்லியங்கோதை அழலுற்றா அங்கு**
**எல்லையில் இருந்துயர் எய்தினான் (திருவாரூர் மும்மணிக்கோவை, பா. 7)**

எனவரும் பாடலில் அணிந்த உடை கட்டவிழ தனது மெல்லிய விரல்களை நெரித்து, ஏங்கி, நெடிய பெருமூச்சிட்டு, பூமாலை ஒன்று தீயில் வாடுதல் போலத் துயருற்றாள் எனத்

**Volume 3, SPL Issue 1, July 2025** **E-ISSN: 2584-167X**

தலைவியின் துயரம் நிறைந்த மனநிலை விளக்கப்படுகிறது. இந்நிலை, இறைவனைக் கூட விரும்பும் அடியவருக்கும் அமைதல் வேண்டும் என்னும் பக்திநெறி இதில் விளக்கப்பட்டுள்ளது.

**நான்மணிமாலைக் கூறும் பக்தி நெறி**

தில்லைச் சிற்றம்பவனிடத்துச் செலுத்தப்படும் பக்திபெருநெறிகளை விளக்குவது பட்டினத்துப்பிள்ளையார் அருளிச் செய்த கோயில் நான்மணி மாலை நுல். இறைவனின் புராண வரலாறுகள் அனைத்தும் அடியவரின் மேம்பாட்டுக்காக இறைவன் மேற்கொண்ட திருவிளையாடல்களைச் சுட்டுவன. இம்முறையில் இறைவன் பிட்சாடனராய் கீழ் நிலையில் பிச்சை ஏற்ற நிகழ்ச்சியும், தொண்டருக்கு ஏவல் செய்யும் நிகழ்ச்சியும் இந்நூலில் குறிப்பிடப்படுகிறது.

இறைவன் தன் மெய்யடியார் பெயர்களைக் கொண்ட புத்தகம் ஒன்றை வைத்திருப்பதாகவும், இந்நூலில் தன் பெயரையும் சேர்த்துக் கொள்ள வேண்டும் என்று பட்டினத்தடிகள் தன் பக்திநெறியைப் புலப்படுத்துகிறார்.

**தமர்பெயர் எழுதிய வரிநெடும் புத்தகத்து**
**என்னையும் எழுத வேண்டுவன் (கோயில். நான். பா. 4)**

என்பதே அப்பாடலாகும். மற்றுமொரு பாடலில்,

**ஆடும் அம்பலக் கூத்தனைப்**
**பாடுதல் பரவுதல் பணிதலோ இலமே (கோயில். நான். பா. 8)**

இறைவன் திருப்புகழைப் பாடுவதும், பரவுவதும், பணிவதும் அடியவரின் பக்தி நெறி, வாயால், மனத்தால், உடலால் இறைவனை வணங்குதல் வேண்டும் என்றும் இப்பக்திநெறி விளக்கப்படுகிறது. வாக்கால் பக்திச் செலுத்துவதை,

**வாயினால் இப்போதே மன்றில் நடமாடும்**
**நாயனார் என்றுரைப்போம் நாம் (கோயில். நான். பா. 13)**

என்றும் பாடுவார். இங்ஙனம் இறைவனிடம் செலுத்தும் பக்தி நெறிகளும் இறைவன் அடியவரிடத்துக் கொண்ட பெருங்கருணைத் திறமும் இந்நூலில் இனிதுற விளக்கப்பட்டுள்ளன.

**சதகம் கூறும் பக்தி நெறி**

குமரேச சதகம் குருபாத தாசரால் முருகப்பெருமான் மீது பாடப்பெற்ற நூல். இறைவன், அன்பருக்குத் துயர் நேரும்போது ஏற்ற உதவிகளை அளிப்பவன். இறைவனை, 'மெய்த்துணை' எனக் கொண்டு ஒருமை உள்ளத்தோடு பக்தி செலுத்தும் முறையைக் குமரேச சதகம் வலியுறுத்துகிறது. இறைவனை மெய்த்துணையாக ஏற்கும் நிலையில் இல்லாத உள்ளங்களுக்குக் குமரேச சதகம் தெளவி நிலையையும் காட்டுகிறது. உலக அமைதி உண்டாக்கத் தோன்றியவன் முருகன்; சரவணப்பொய்கையில் திருவிளையாடல் புரிந்தவன்; சிவபிரானுக்கு பிரணவப் பொருளை உரைத்தவன்; நான்முகனைச் சிறையில் அடைத்தவன்; சூரபதுமன் உடலை இருகூறாக்கித் தேவரைச் சிறைவிடுத்தவன். இங்ஙனம் இறைவனின் பேராற்றலை விளக்குவதன் மூலம் பக்குவப்படாத உள்ளங்களுக்குத் தெளிவுகாட்டி, இத்தகைய பேரருளும் பெருங்கருணைத் திறனும் வாய்ந்த இறைவன் திருத்தாள்களை மெய்த்துணையாகப் பற்ற வேண்டும் என அறிவுறுத்துகின்றார். இறைவனிடம் பக்தி கொண்டவர் இரக்க நெஞ்சினராக இருப்பர் என்றும், இரக்க நெஞ்சினராய அடியாரிடத்து ஈகை என்னும் அறம் விளங்கும் என்றும், ஈகையறம் கொண்டோரிடம் பகை வெல்லும் திறம் இருக்கும் என்றும் பக்தி உணர்வு தரும் சிறப்பு நிலைகளையும் ஒன்றனைப் பற்றி ஒன்று வளரும் முறைமையையும் குருபாததாசர் சிறப்புற விளக்கியுள்ளார். பக்தி உணர்வு பலவகைப் பண்புகளையும் வளர்க்கின்றது என இதன் ஆற்றல் விளக்கப்படுகின்றது.

**பக்தியுடன் இனியதயை உள்ளவர் இடந்தனில்**
**பகர்தருமம் மிக இருக்கும்**
**பகர்தருமம் உள்ளவர் இடந்தனில் சத்துரு**

Academic Research News

*Peer-Reviewed Journal*



Volume 3, SPL Issue 1, July 2025 E-ISSN: 2584-167X

**பலாயனத் திறல் இருக்கும் (கும. சத. பா. 7)**

எனவரும் பாடல்பகுதி இதனை விளக்கும். இங்ஙனம் பக்திநெறிகளைச் சதகங்கள் சிறப்புற விளக்குகின்றன.

**அந்தாதி கூறும் பக்தி நெறி**

காரைக்காலம்மையார் பாடிய அற்புதத் திருவந்தாதியை அடிப்படையாகக் கொண்டு, அந்தாதி கூறும் பக்திநெறிகள் இங்கு விளக்கப்பட்டுள்ளது. மொழி பயிலத் தொடங்கிய காலம் முதல் இறைவன் பெருமையைக் கூறி, இறைவன் சேவடியில் காதல் கொண்டு வாழ்ந்தால், இறைவன் உயிர்களின் இடர் தீர்ப்பான் என்பார் அம்மையார். இதனை,

**பிறந்து மொழிபயின்ற பின்னெல்லாம் காதல்**
**சிறந்துநின் சேவடியே சேர்ந்தேன் (அற்.திரு. பா. 1)**

என்ற பாடல் மூலம் தெரிந்து கொள்ளலாம்.

பக்தி நெறியில் ஒருவனையே தலைவனாகக் கொள்ளும் மனத்திண்மை இன்றியமையாதது. மற்றொரு தலைவரைச் சாரோம், மற்றொருவருக்கு ஆட்படோம், அன்பு செலுத்தோம் என்றெல்லாம் பக்தி வெளிப்பாட்டில் ஒருமைப்பாட்டு நெறியையும் அம்மையார் வலியுறுத்துகிறார். இறைவனைத் தலைவனாகக் கொண்டு, தம்மனத்தகத்து பெறலரும் வைப்பாக வைத்து வழிபடும் அடியவர்களுக்கு உலகில் அரிய பொருள் யாதொன்றும் இல்லை.

**எனக்கு இனிய எம்மானை ஈசனையான் என்றும்**
**மனக்கினிய வைப்பாக வைத்தேன் - எனக்கவனைக்**
**கொண்டேன் பிரானாகக் கொள்வதுமே இன்புற்றேன்**
**உண்டோ எனக்கரிய தொன்று (அற். திரு. பா. 10)**

என்பது அம்மையார் வாக்கு.

இறைவனையே பக்தி நெறியால் அறிகின்றோம். அறிகின்ற உணர்வை அறிவிப்பவனும் இறைவனே. அறிவாக இருந்து அறிகின்றவனும் அவனே. அறிகின்ற மெய்ப்பொருளெல்லாம் அவனாகவே விளங்குகின்றான். இங்ஙனம் அவனருளால் அவன்தாள் வணங்குவது போல, அறியப்படுபவனாய், அறிவிப்பவனாய், அறிகின்றவனாய், அறியும் பொருளாய் விளங்கும் இறைவனின் பெருநிலை பக்திநெறியில் உணர்வது இன்றியமையாதது என விளக்கப்படுகிறது.

**அறிவானுந் தானே அறிவிப்பான் தானே**
**அறிவாய் அறிகின்றான் தானே - அறிகின்ற**
**மெய்ப்பொருளும் தானே விரிசுடர்பார் ஆகாயம்**
**அப்பொருளுந் தானே அவன் (அற்.திரு. பா. 20)**

என்பதே அப்பாடல். இங்ஙனம் அந்தாதி இலக்கியங்கள் பக்திப் பெருநெறியை அழகுற விளக்குகின்றன.

**முடிவுரை**

சிற்றிலக்கியங்கள், முடியாட்சிக் காலம் முதல் இன்றைய குடியாட்சிக் காலம் வரை நாளும் தோன்றித் தமிழைச் செழிக்கச் செய்து வருகின்றன. சமுதாய வாழ்வியலை விளக்கிக் காட்டும் பணியில் பேரிலக்கியங்களைவிடச் சிற்றிலக்கியங்கள் பெரும் பங்கு வகிக்கின்றன. பேரிலக்கியங்கள் நாடக வழக்கில் கட்டுக் கோப்பான அமைப்பு முறையில், மரபு நிலை திரியாமல் பாடப்பெறுகின்றன. ஆனால் சிற்றிலக்கியங்களோ, நிலை பெறும் போராட்ட உணர்வோடு உலகியல் வழக்கில் உள்ளதை உள்ளவாறு புனையும் உத்தி நிலையில், எளிய மொழியமைப்பில் பாடப்பெறுகின்றன. எனவே தான் சமுதாய நோக்கையும் போக்கையும் பேரிலக்கியங்களைவிடச் சிற்றிலக்கியங்கள் சீரிய முறையில் வெளிப்படுத்துகின்றன. சிற்றிலக்கியங்கள் தமிழ்த்தாயின் நல்லணிகளாக, தமிழ்ப்பண்பாட்டின் பெருமையை உலகுக்கு எடுத்துக்காட்டும் அழியாச் சான்றுகளாக விளங்குகின்றன. பக்திப் பெருநிலத்தில் பல்வேறு காலங்களின் சூழ்நிலைக்கும், சார்புக்கும் ஏற்ற வகையில் தோற்றம் பெற்றவை பக்திச்

Volume 3, SPL Issue 1, July 2025 E-ISSN: 2584-167X

சிற்றிலக்கியங்கள். இவற்றை அடிப்படையாகக் கொண்டு பக்தி நெறியின் வளர்ச்சிக் கோணங்களை முழுமையாக அறிய இயலும். வரலாறு, சமுதாயம், அகம், புறம், நீதி போன்ற கூறுகளைத் தழுவி எழுந்த பிற சிற்றிலக்கியங்களைவிட, பக்திச் சிற்றிலக்கியங்கள் என்றும் அழியாப் பெருநிலையும் நிலைபேறும் உடையவை ஆகும்.

**குறிப்புகள்**

[1] சாந்தா, மா. சு. *சிவப்பிரகாசரின் இலக்கிய நூல்கள் ஒரு திறனாய்வு.* வித்யா பதிப்பகம், சென்னை - 600 005, 1983.

[2] சுரேஷ், சி.ரா., இராஜேஷ், ப. *தமிழ் இலக்கியங்களில் பண்பாட்டு கூறுகளும் வாழ்வியல் நெறிமுறைகளும்.* காவ்யா வெளியீடு, சென்னை - 600 024, 2016.

[3] சுயம்பு, பெ., *தமிழ் இலக்கிய வரலாறு.* பாரதி பதிப்பகம், திசையன்விளை – 627657, 2016.

[4] செயராமன், ந. வீ. *சிற்றிலக்கியத் திறனாய்வு.* இலக்கியப் பதிப்பகம், சென்னை – 18, 1980.

[5] செயராமன், ந.வீ. *இலக்கியக் கோவை.* இலக்கியப் பதிப்பகம், சென்னை – 18, 1980.

[6] செல்லப்பா, சி.க. *தமிழில் இலக்கிய விமர்சனம்.* எழுத்துப் பிரசுரம். சென்னை, 1974.

[7] முத்துச்சண்முகம், நிர்மலாமோகன். *சிற்றிலக்கியங்களின் தோற்றமும் வகையும்.* முத்து பதிப்பகம், 1979.

[8] ஜான் சாமுவேல், ஜி. *இலக்கியத் திறனாய்வு முதற்பகுதி.* உலகத்தமிழாராய்ச்சி நிறுவனம், சென்னை - 600020, 1976.

**நிதிசார் கட்டுரையாளர் உறுதிமொழி:** இல்லை

**கட்டுரையாளர் நன்றியுரை:** இல்லை

**கட்டுரையாளர் உறுதிமொழி: இக்கட்டுரையில் எவ்வித முரண்பாடும் இல்லை என்று உறுதிமொழி அளிக்கிறேன்.**

இக்கட்டுரை கிரியேட்டிவ் காமன்சு ஆட்ரிபியூசன் 4.0வின் [Creative Commons Attribution4.0](#) கீழ் பன்னாட்டு உரிமம் பெற்றுள்ளது.

Academic Research News

# Academic Research News

*Peer-Reviewed Journal*



**Volume 3, SPL Issue 1, July 2025** **E-ISSN: 2584-167X**

# Glory of Goddess Kali Evinced in *Kalingathupparani*

**I. Karthick**, Reg. No. 21113154021023, Research Scholar, Department of Tamil,
S.T. Hindu College, Nagercoil-629 002. Manonmaniam Sundaranar University, Tirunelveli.
**ORCiD: https://orcid.org/0000-0001-5257-9892**
**Dr. P. M. Jayakala,** Associate Professor, Tamil Research Centre, S.T.Hindu College,
Nagercoil, Manonmaniam Sumdaranar University, Tirunelveli-12, Tamil Nadu, India.
**ORCiD: https://orcid.org/0000-0002-0736-0047**
Received: 11 April 2025; Revised: 25 April 2025; Accepted: 9 May 2025; Available Online: 30 July 2025.

## Abstract

*The worship of Goddess Kali or Kotravai is very significant in the Tamil cult tradition. Koravai is the land deity of the desert and was later elevated to the status of a war goddess in the cult tradition. The Cholas worshipped the goddess Kali with importance before war. The Cholas who ruled Tanjore built a temple named 'Nisumba Suthani' for Kali and worshipped it. Jeyankondar was the court poet of Kulothunga Chola I. He has sung the heroic merits of the Chola king in his book "Kalingathupparani". In it, he has set various references and glories about Goddess Kali in the work. This article aims to explore the features and worship methods of Goddess Kali found in the book "Kalingathupparani."*

**Keywords:** *Kalingatupparani*, Goddess Kali, Worship Methods, Glory of Kali.

## References

[1] Thamilannal. *Tamil Ilakkiya Varalaru*. Meenakshi Putthaka Nilaiyam, Madurai - 625 001, 2016.
[2] Bhathmadevan. (Etd). *Bharathiyar Kavidaigal*. Novino Offset, Chennai, 2013.
[3] Pulioorkesigan. Kalingathuparani, Sree Bharathi Publications, Chennai -33, 2024.
[4] Pulioorkesigan. *Sanga Ilakkiya Urai*, Saratha Publication, Namakkal, 2012.
[5] Vinuprabha, V. "Ainthinaigalil Valibadugal." *International Journal of Tamil Language and Literary Studies*, Volume 3, January 2021.

**Author Contribution Statement:** NIL.
**Author Acknowledgement:** NIL.
**Author Declaration:** I declare that there is no competing interest in the content and authorship of this scholarly work.
The content of the article is licensed under https://creativecommons.org/licenses/by/4.0/ International License.

Academic Research News
Peer-Reviewed Journal
31
Volume 3, SPL Issue 1, July 2025 E-ISSN: 2584-167X

# கலிங்கத்துப்பரணி நவிலும் காளிதேவியின் சிறப்புகள்

**ஐ. கார்த்திக்,** முனைவர் பட்ட ஆய்வாளர், பதிவு எண்: 21113154021023, தெ. தி. இந்துக் கல்லூரி, நாகர்கோவில், மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழகம், திருநெல்வேலி - 12, தமிழ்நாடு, இந்தியா.
ORCiD: https://orcid.org/0000-0001-5257-9892
**முனைவர் பா. ம. ஜெயகலா,** இணைப்பேராசிரியர், தமிழ் உயராய்வு மையம், தெ. தி. இந்துக் கல்லூரி, நாகர்கோவில், மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழகம், திருநெல்வேலி - 12, தமிழ்நாடு, இந்தியா.
ORCiD: https://orcid.org/0000-0002-0736-0047

**ஆய்வுச்சுருக்கம்**

*தமிழர் வழிபாட்டு மரபில் காளி அல்லது கொற்றவை தெய்வ வழிபாடானது மிகவும் குறிப்பிடத்தக்கதாகும். பாலை நிலக்கடவுளாக விளங்கிய கொற்றவை பிற்காலத்தில் போர் தெய்வமாக வழிபாட்டு மரபில் மேல்நிலையாக்கம் பெற்றாள். சோழர்கள் கொற்றவை என்னும் காளி தெய்வத்திற்கு முக்கியத்துவம் கொடுத்து வழிபட்டனர். தஞ்சை ஆண்ட சோழர்கள் கொற்றவையை 'நிசும்ப சூதனி' என்ற பெயரில் ஆலயம் அமைத்து வழிபட்டனர். முதற்குலோத்துங்கச் சோழனின் அவையின் புலவராக விளங்கிய ஜெயங்கொண்டார் கலிங்கத்துப்பரணி என்னும் நூலில் சோழ மன்னனின் வீர சிறப்புகளைப் பாடியுள்ளார். மேலும் காளிதெய்வம் பற்றிய பல்வேறு குறிப்புகளையும், சிறப்புகளையும் நூலில் அமைத்துள்ளார். இவ்வகையில் அமைந்துள்ள கலிங்கத்துப்பரணி என்னும் நூலில் காணப்படுகின்ற காளி தேவியின் சிறப்புகளையும், வழிபாட்டு முறைகளையும் ஆராய்ந்து அறியும் நோக்கோடு இவ்வாய்வு கட்டுரை அமைகின்றது.*

**குறிப்புச்சொற்கள்:** *கலிங்கத்துப் பரணி,* காளி தேவி, வழிபாட்டு முறைகள், காளியின் சிறப்புகள்.

## முன்னுரை

காளி என்னும் தெய்வம் போர்க்கடவுளாகவும், வெற்றியைத் தரும் தெய்வமாகவும் வணங்கப்படுபவள். காடுறை தெய்வமாகத் திகழும் காளி தேவியின் அழகு, அணிகலன்கள், வழிபாட்டு முறைகள் முதலியவற்றை கலிங்கத்துப் பரணியில் காணமுடிகின்றது. புராணத்தொன்மங்களில் காளி தேவி பற்றிய சிறப்புகள் நிறைந்திருக்கின்றன. அவற்றையும் கலிங்கத்துப்பரணியில் காண முடிகின்றது. இவற்றை ஆராயும் நோக்கில் இக்கட்டுரை நகர்கின்றது.

## கலிங்கத்துப்பரணி

சிற்றிலக்கிய வகைகளில் ஒன்றாக விளங்குவது பரணி என்னும் இலக்கிய வடிவமாகும். பரணி இலக்கியங்களுள் சிறப்புக்குரியதாக விளங்குவது முதலாம் குலோத்துங்கச் சோழனின் சிறப்பினைப் பாடும் கலிங்கத்துப் பரணியாகும். செயங்கொண்டாரின் கலிங்கத்துப்பரணியை ஒட்டக்கூத்தர் 'தென் தமிழ் தெய்வப்பரணி' என்று சிறப்பித்துள்ளார்.கற்பனை வளமும், உவமைகளும் நிறைந்து சந்தத்தமிழோடு அமைக்கப்பட்டுள்ளது. "செயங்கொண்டார் பாடிய கலிங்கத்துப் பரணியே காலத்தால் முற்பட்டதாகும்." (தமிழண்ணல் பக். 275) இந்நூல் மன்னனின் போரின் சிறப்புகளைப் பாடும்போது போர் தெய்வமான காளி தேவியின் சிறப்புகளையும் பெருமளவில் எடுத்துரைத்துள்ளது.

## காளி தேவி

காளி தேவி வழிபாடு பன்னெடும் காலமாகத் தமிழர் மரபில் இருந்து வந்துள்ளது. காளிதேவி காலத்தினைக் கட்டுப்படுத்தும் ஆற்றலையும், உயிர்களின் பாவ புண்ணியங்களைத் தீர்மானித்து வீடுபேற்றினைத் தருபவளாகவும் மக்களால் நம்பப்படுகிறாள். காலன் என்ற

Volume 3, SPL Issue 1, July 2025 E-ISSN: 2584-167X

சிவபெருமானின் சக்தி வடிவமாகவே காளி தேவி போற்றப்படுகின்றாள். அதர்மம் புரிவோரை அழித்து தர்மத்தைக் காப்பவளாகவும் காளிதேவி புராணங்களில் அறியப்படுகின்றாள். இராமகிருஷ்ண பரமஹம்சர், பாரதியார் போன்றோர் காளி தேவியை வழிபட்டுள்ளனர். கலைகளின் அரசியாகவும் காளி தேவித் திகழ்கின்றாள்.

**காளி தேவியின் பெருமை**

காளி தேவியானவள் அனைத்து தெய்வமகளிரும் வணங்கும் தன்மையை உடையவள். அவளே அத்தனைக்கும் அருள்பவள் என எண்ணி பேய்களும் கூட அவளை அகலாது இருக்கின்றன என்பதை.

**எவ் வணங்கும் அடி வணங்க**
**இப் பெருமை படைத்துடைய**
**அவ் வணங்கை அகலாத**
**அலகைகளை இனிப் பகர்வாம் (கலிங்கத்துப்பரணி, 135)**

என்ற பாடல் நமக்கு எடுத்துரைக்கின்றது.

**காளியின் இருப்பிடம்**

பாலைவனமே காளி உறையும் இடம் என்று கலிங்கத்துப்பரணி கூறுகின்றது. முதல் குலோத்துங்கச் சோழனின் வீரத்தினால் பாண்டியர்கள் ஓடிச் சென்ற வழிகள் வெம்மை மிகுந்தது. வெள்ளாறு என்னும் ஆறும், கோட்டாறு என்னும் ஊரும் புகையால் மூடிக்கொள்ளும்படி செய்த வெப்பத்தினால் அழிந்த வெந்த வனமே காளியின் உறைவிடம் என்பதை,

**வெள்ளாறும் கோட்டாறும் புகையால் மூட**
**வெந்த வனம் இந்த வனம் ஒக்கும் ஒக்கும். (கலிங்கத்துப்பரணி, 95: 3-4)**

என்ற வரிகள் இயம்புகின்றன.

**பெருங்கோயில்**

அண்டமே காளியின் பெருங்கோயிலாகும். காளி வீற்றிருக்கும் கோயிலாக கலிங்கத்துப்பரணி பிரம்மனால் படைக்கப்பட்ட இப்பேருலகினையே குறிப்பிடுகின்றது. இதனை,

**ஓதி வந்த அக் கொடிய கானகத்து**
**உறை அணங்கினுக்கு அயன் வகுத்த இப்**
**பூதலம் பழங்கோயில்... (கலிங்கத்துபரணி, 97: 1- 3)**

என்ற வரிகள் நமக்கு உரைக்கின்றன.

**புதிய கோயில்**

காளி புவியில் வீற்றிருக்கும் புதிய கோயிலானது முதல் குலோத்துங்கச் சோழனின் வெற்றியினால் இறந்த வீரர்களின் எலும்புகளால் அமைக்கப்பட்டதாகும். இக்கோயிலானது பெரிய மதிலுடனும், கோபுரத்துடனும் கொள்ளி வாய் பேயின் காவலுடனும் அமைந்திருந்தது.

**கொள்ளி வாய் பேய் காக்கும்**
**கோபுரமும் நெடு மதிலும் வெள்ளியால் சமைத்ததென**
**வெள்ளெலும்பி னால் சமைத்ததே. (கலிங்கத்துப்பரணி, 104)**

என்ற வரிகள் காட்சிப்படுத்துகின்றன.

இக்காலகட்டத்திலும் காளி தேவியின் திருக்கோயில்களில் மனித எலும்புகளை அணிந்த காளி தேவியின் சிற்பங்களைக் காண முடிகின்றது.

**சிவபெருமானும் காளி தேவியும்**

சிவபெருமானின் ஒரு பகுதியாக சக்தி என்னும் தெய்வ வடிவம் விளங்குகின்றது. சக்தி தேவியின் வெகுண்ட வடிவமாகவே காளி திகழ்கின்றாள். இதனை,

**ஓங்காரத்து உட் பொருளாய்**
**ஒருவாது நடந்தானை**

**நீங்காமல் நின்றானை**
**எவ் வண்ணம் நிகழ்த்துவாம்? (கலிங்கத்துப்பரணி, 134)**

என்ற பாடல் உணர்த்துகின்றது.

**நஞ்சை வென்றவள்**

பாற்கடலில் வெளிப்பட்ட ஆலகாலவிடத்தை சிவபெருமான் உலக மக்களின் நன்மை வேண்டி ஏற்றருளினார். அச்சமயம் அவரது துன்பத்தை நீக்கி விடத்தைக் கண்டத்திலேயே தங்கச் செய்தவள் காளி தேவியாவாள். இதனை,

**இமைய வரைத் தகை தற்கு, இருளும் மிடற்று இறைவற்கு**
**இனிய தரத்து அமுதக் கனி அதரத்தினளே. (கலிங்கத்துப்பரணி, 129: 3-4)**

என்ற வரிகள் பகர்கின்றன.

**அனைத்தையும் ஈன்றவள்**

உலக இயக்கமான ஆக்குதல், காத்தல், அளித்தல், அருளல் என்னும் தொழில்களைப் புரிகின்ற தேவர்களையெல்லாம் படைத்தவள் காளி தேவி சிவன், பிரம்மா, விஷ்ணு, முருகன் விநாயகர் என்னும் தேவர்களை எல்லாம் படைத்து உலகை இயக்குபவள் காளி தேவி. இதனை,

**கலைவளர் உத்தமனைக், கரு முகில் ஒப்பவனைக்,**
**கரட தடக் கடவுள் கனக நிறுத்தவனைச்,**
**சிலை வளைவுற்று அவுணத் தொகை செகவிட்ட பரித்**
**திறலவனைத் தரும் அத் திரு உதரத்தினளே. (கலிங்கத்துப்பரணி, 126)**

என்ற பாடல் நமக்கு கூறுகின்றது.

காளிதேவியை வணங்கிய பாரதியாரும் காளியை அனைத்துமாகி நின்றவள் என்று பாடியுள்ளார். இதனை,

**யாது மாகி நின்றாய் -காளி**
**எங்கும் நீ நிறைந்தாய்**
**பூத மைந்து மானாய்- காளி**
**பொறிக ளைந்து மானாய்**
**போதமாகி நின்றாய்- காளி**
**பொறியை விஞ்சி நின்றாய் (பாரதியார் கவிதைகள், பக். 155)**

என்ற காளிப்பாட்டு நமக்கு எடுத்துரைக்கின்றது.

**பாதத்தின் அணிகள்**

உலகினைத் தன் தலையில் தாங்குகின்ற ஆதிசேடன் என்னும் நாகத்தினையும், பாற்கடலைக் கடைய தேவர்களுக்கு உதவிய வாசுகி என்னும் நாகத்தினையும் வடமாகக் கொண்டு மணிகள் கோர்க்கப்பட்ட சிலம்பினைக் காளிதேவி தன்னுடைய கால்களில் அணிந்துள்ளாள். இதனை,

**ஒரு மலை மத்து வலத்து உலவு கயிற்றினும், மற்று**
**உலகு பரித்த பணத்து உரக வடத்தினும், அப்**
**பருமணி முத்து நிரைத்து, உடுமணி அதத்த இணைப்**
**பரி புரம் வைத்த தளிர்ப் பத உகளத்தினளே (கலிங்கத்துப்பரணி, 122)**

என்ற வரிகள் எடுத்துரைக்கின்றன.

**காளி தேவியின் உடைகள்**

தனது துன்பத்தை நீக்கிய காளி தேவிக்கு மனமுவந்து ஆடைகளை சிவபெருமான் வழங்கினார். யானைத் தோலினாலாகியச் சேலையையும், அந்த யானையின் குடலோடு பாம்பையும் சேர்த்து முறுக்கிய இடைக்கச்சையையும் சிவபெருமான் வழங்கினார். அவற்றை மகிழ்வோடு அணிந்து கொண்டவளாகக் காளி தேவி விளங்குகிறாள். இதனை,

**படர் சடை முக்ககண்ணுடை பரமர் கொடுத்த களிற்று**

**Volume 3, SPL Issue 1, July 2025** **E-ISSN: 2584-167X**

**உரிமிசை, அக்கரியின் குடரோடு கட் செவியிட்டு**
**ஒரு புரி இட்டு இறுகப் புனையும் உடுக்கையளே. (கலிங்கத்துப்பரணி, 125: 2-4)**
என்ற பாடல் வரிகள் விவரிக்கின்றன.

**காளியின் முக அழகு**

அழகு மிகுந்த சந்திரனைப் போன்ற முகத்தினை உடையவள் காளி தேவி. அத்தகு தேவியின் முகத்தில் விளங்குகின்ற செந்தூரப் பொட்டானது உதிக்கின்ற சூரியனைப் போன்ற அழகினை உடையதாகக் காணப்பட்டது. இதனை,

**திருமதி ஒக்கும் எனத், தினகரன் ஒக்கும் எனத்**
**திகழ் வதனத்தி னிடைத் திலக வனப்பினளே (கலிங்கத்துப்பரணி, 131: 3-4)**
என்ற வரிகள் நவில்கின்றன.

**காளியின் வழிபாடு**

காளி தேவி வீற்றிருக்கும் கோயிலில் வீரர்கள் தம்மைத்தாமே பலியாக இட்டு வழிபட்டுள்ளனர். இதனை, **நீண்ட பலிபீடத்தில் அறிந்து வைத்த / நெடுங்குஞ்சிச் சிரத்தை.... (கலிங்கத்துப் பரணி, 112: 1-2)** என்ற வரிகள் காட்சிப்படுத்துகின்றன. மேலும், காளி தேவிக்கு ஏற்றப்பட்ட ஓமத்தீயில் தம்முடைய விலா எலும்பினையும், உடலில் வலியும் குருதியினை நெய்யாகவும் இட்டு வழிபாடு செய்துள்ளனர். இதனை,

**சொல் அரியஓமத் தீ வளர்ப்ப ராலோ;**
**தொழுதிருந்து பழு எலும்பு தொடர வாங்கி**
**வல் எரியின் மிசை எரிய விடுவராலோ,**
**வழி குருதி நெய்யாக வளர்ப்ப ராலோ. (கலிங்கத்துப்பரணி, 110)**
என்ற பாடல் நமக்கு பகர்கின்றது.

வீரர்கள் போருக்கு செல்லும் முன்பு போர்த் தெய்வமான காளிக்கு பலி முதலான பூஜைகளைக் கொடுத்து வழிபாடு செய்துள்ளனர் "சங்ககால மக்கள் தான் வழிபட்ட தெய்வமே தங்களுக்கு வலிமையைத்தரும் என்று எண்ணி வாழ்ந்தனர். எச்செயலைத் தொடங்கும் முன்பும் தெய்வத்திற்கு வழிபாடு நிகழ்த்தியுள்ளனர்." (வா. வினுப்பிரபா) இன்றும் காளிதேவி ஆலயங்களில் குருதி பூஜை என்னும் பலிபூஜை சிறப்பான பூஜையாக நிகழ்த்தப்படுகின்றது.

பாலை நில மக்கள் காளி தேவிக்கு உரிய காலத்தில் காப்பு கட்டி, விரதமிருந்து பலி பூஜைகளை நிகழ்த்தியதை குறுந்தொகை பாடல் ஒன்றும் குறிப்பிடுகின்றது. இதனை,

**விடர்முகை அடுக்கத்து விறல்கெழு சூலிக்குக்**
**கடனும் பூணாம் கைந்நூல் யாவாம்**
**புள்ளும் ஓராம் விரிச்சியும் நில்லாம் (குறுந்தொகை, 218 1-3)**
என்ற பாடல் வழி நாம் உணர முடிகின்றது.

**மறுமையிலும் அருள்பவள்**

காளி தேவியை சூழ்ந்திருக்கும் பேய்கள் தம்முடைய பசி என்னும் பெரும் பிணியை நீக்கி அருளுமாறு காளி தேவியிடம் வேண்டுதல் விடுகின்றன. இதனை,

**சாவத்தான் பெறுதுமோ- சதுமுகன்தான்,**
**கீழ் நாங்கள் மேனாள் செய்த**
**பாவத்தால், எம் வயிற்றில் பசியை வைத்தான்;**
**பாவியேம் பசிக்கு ஒன்று இல்லேம்! (கலிங்கத்துப்பரணி, 217)**
காளி தேவி மயானத்தையே இருப்பிடமாகக் கொண்டிருப்பவள் மனிதன் தன் வாழ்நாள் முடிந்து இறந்த பின்பும் பேயாகப் பிறவி செய்கிறான். அத்தகு பேய்களின் பசி என்னும் பிணியை போக்கி அருள்பவள் காளிதேவி என்ற கருத்து இங்கு புலனாகின்றது.

**முடிவுரை**

கலிங்கத்துப் பரணி முதலாம் குலோத்துங்கச் சோழனின் வீரத்தையும், சோழ மன்னர்களின் சிறப்புகளையும் எடுத்துக் கூறும் நோக்கில் அமைக்கப்பட்ட நூலாகும். எனினும்,

Volume 3, SPL Issue 1, July 2025 E-ISSN: 2584-167X

போரின் தெய்வமான காளி தேவியின் சிறப்புகள் இந்நூலில் பெருமளவில் இடம்பெற்றுள்ளன.காளி தேவி வீற்றிருக்கும் திருக்கோயிலின் சிறப்பு, காளி தேவிக்கு சிவபெருமான் வழங்கிய அணிகளின் சிறப்பு முதலியவை இந்நூலில் ஜெயங்கொண்டாரால் எடுத்துரைக்கப்பட்டுள்ளன. மேலும், போர்த்தெய்வமாக விளங்கிய காளிதேவிக்கு வழங்கிய வழிபாட்டு முறைகளையும்,காளி என்னும் கொற்றவை வழிபாடு தமிழ் மக்களிடையே தொன்று தொட்டு வரும் தன்மையும் இக்கட்டுரை வாயிலாக புலனாகின்றது.

**குறிப்புகள்**

[1] தமிழண்ணல். *தமிழ் இலக்கிய வரலாறு*. மீனாட்சி புத்தக நிலையம், மதுரை-625 001, 2016.

[2] பத்மதேவன். (தொகுப்பாசிரியர்) *பாரதியார் கவிதைகள்*. நொவினோ ஆப்செட், சென்னை, 2013.

[3] புலியூர் கேசிகன். *கலிங்கத்துப்பரணி உரை*. ஸ்ரீ பாரதி பப்ளிகேஷன், சென்னை-33, 2024.

[4] புலியூர்க்கேசிகன். *சங்க இலக்கியம் உரை*. சாரதா பதிப்பகம், நாமக்கல், 2012.

[5] வினுப்பிரபா, வா. *ஐந்திணைகளில் வழிபாடுகள். தமிழ் மொழி மற்றும் இலக்கிய பன்னாட்டு ஆய்விதழ்*, தொகுதி 3, ஜனவரி 2021.

**நிதிசார் கட்டுரையாளர் உறுதிமொழி:** இல்லை

**கட்டுரையாளர் நன்றியுரை:** இல்லை

**கட்டுரையாளர் உறுதிமொழி: இக்கட்டுரையில் எவ்வித முரண்பாடும் இல்லை என்று உறுதிமொழி அளிக்கிறேன்.**

இக்கட்டுரை கிரியேட்டிவ் காமன்சு ஆட்ரிபியூசன் 4.0வின் **Creative Commons Attribution4.0** கீழ் பன்னாட்டு உரிமம் பெற்றுள்ளது.

Academic Research News

*Peer-Reviewed Journal*



**Volume 3, SPL Issue 1, July 2025** **E-ISSN: 2584-167X**

# Definition and Elements of Minor Literary Forms

**Dr. T. Christal Rejee**, Assistant Professor, Department of Tamil, Bharath Institute of Higher Education and Research, Chennai, Tamil Nadu, India.

**ORCiD: https://orcid.org/0009-0002-9604-8350**

Received: 1 April 2025; Revised: 25 April 2025; Accepted: 2 June 2025; Available Online: 30 July 2025.

## Abstract

*Literature should provide readers with a sense of aesthetic pleasure. Its true purpose lies in expressing the socio-political, economic, and cultural dimensions that extend beyond beauty and style. In this regard, literary fiction attains its highest value, for it reflects contemporary issues, social concerns, and prevailing trends of thought. By doing so, it becomes an artistic endeavour and also mirrors the human condition and collective experience. The concept of literary fiction is closely aligned with the northern term Prabandham and it has been explored and redefined across centuries. This form of writing goes beyond ornamental expression by embracing a broader canvas where human emotions, social realities, and cultural practices find representation. Minor Literature includes Ula, Thoothu, Bharani, Pillaithamizh, Andathi, Attrupadai, Kaiyaru Nilay, Madal Kuravanji etc. Sangam literature has served as a guiding light for such developments. It provided the foundation for later works of literary fiction to flourish and to inspire many generations of writers. Hence, this article examines the elements in detail by highlighting the significance of literary fiction in shaping thought and society.*

**Keywords:** Minor Literature, Bharani, Thoothu, Madal, Kuraththi Song.

## References

[1] Eeswarapillai, T. *Thamizhil sitrilakkiya Varalaru Part 1*. 2005.
[2] Srinivasan, R. *Thamizh Ilakkiya Varalattru Katturaigal*. 1997.
[3] Selvaraj, N. *Irubatham Nootrandu Sitrillakiyangal*. 2019.
[4] Tamilannal. *Puthiya Nookil Thamizh Ilakkiya Varalaru*. 1980.
[5] Marx, A. *Sitrillakiyangal- sila Kurippugal*. 2007.
[6] Vimalanandam, Madhu. S. *Thamizh Ilakkiya Varalaru*. 2004.
[7] *Tamil Adon Dictionary*, 2010.

**Author Contribution Statement:** NIL.
**Author Acknowledgement:** NIL.
**Author Declaration:** I declare that there is no competing interest in the content and authorship of this scholarly work.

The content of the article is licensed under https://creativecommons.org/licenses/by/4.0/ International License.

Academic Research News

# Academic Research News

*Peer-Reviewed Journal*



**Volume 3, SPL Issue 1, July 2025** **E-ISSN: 2584-167X**

## சிற்றிலக்கிய வரையறையும் கூறுகளும்

**முனைவர் த. கிறிஸ்டல் ரெஜி,** உதவிப்பேராசிரியர், தமிழ்த்துறை,
பாரத் உயர்கல்வி மற்றும் ஆராய்ச்சி நிறுவனம், சென்னை, தமிழ்நாடு, இந்தியா.
**ORCiD: https://orcid.org/0009-0002-9604-8350**

**ஆய்வுச்சுருக்கம்**

*இலக்கியம் என்பது தனது வாசகர்களுக்கு வெறும் அழகியல் உணர்வை மட்டும் தருவதாக அமைதல் கூடாது. அதற்கப்பால் காணப்படுகின்ற சமூக அரசியல் பொருளாதார பண்பாட்டுக் கூறுகளை வெளிப்படுத்துவதாக அமைதல் வேண்டும். அவ்வகையில் சமகாலச் சிக்கல்களையும் எண்ணப் போக்குகளையும் எதிரொலித்துக் காட்டுவதில் சிற்றிலக்கியங்கள் சிறப்பிடம் பெறுகின்றன. பிரபந்தம் என்ற வடசொல்லுக்கு நிகரான சிற்றிலக்கியம் என்ற சொல் உணர்த்தும் சிற்றிலக்கிய வரையறை ஆராய்கின்றது. பிற்காலங்களில் தோன்றி சிறந்து விளங்கிய சிற்றிலக்கியங்களுக்கு வழிகாட்டியாக சங்க இலக்கியங்கள் இருந்துள்ளன. இதில் சிற்றிலக்கிய கூறுகளான உலா, தூது, பரணி, பிள்ளைத்தமிழ், அந்தாதி, ஆற்றுப்படை, கையறுநிலை, மடல் குறவஞ்சி போன்ற பல்வேறு செய்திகள் சான்றாக அமைந்துள்ளது. இவைக் குறித்து விரிவாக இக்கட்டுரையானது எடுத்துரைக்கின்றது.*

**குறிப்புச்சொற்கள்:** சிற்றிலக்கியம், பரணி, தூது, மடல், குறத்திப்பாட்டு

### முன்னுரை

அறம், பொருள், இன்பம், வீடு என்னும் நாற்பொருளில் ஒன்றோ பலவோ குறைந்து வரின் அதனை சிற்றிலக்கியம் என்பர்.அத்தகைய சிறப்புப் பொருந்திய இலக்கியத்திற்கான வரையறையை சிற்றிலக்கியம் சிறப்புறப் பெற்று விளக்குகிறது.அது போன்றுசிற்றிலக்கிய வகைகளின் கூறுகளும் சங்கப் பாடல்களில் விரவிக் கிடக்கின்றன.குறிப்பாக சங்கப் பாடல்களில் இடம் பெற்றுள்ள பரணி தூது மடல் குறம் கார் ஆற்றுப்படை கையறுநிலை ஆகியனவற்றில் சிற்றிலக்கியக் கூறுகள் இடம் பெறும் விதம் பற்றியும் வளர்ச்சி பற்றியும் ஆராய்வது இக்கட்டுரையின் நோக்கம்.

### சிற்றிலக்கியம்- சொல் வரலாறு

சோழர் காலத்தில் தொடங்கி அவர்களுக்குப் பிறகு தமிழகத்தை ஆண்ட நாயக்கர் காலத்தில் தோன்றிய இலக்கியங்கள் சிற்றிலக்கியங்கள் எனப்படுகின்றன. 'சிற்றிலக்கியம்' என்ற சொல்லாட்சி வழக்கிற்கு வருவதற்கு முன்பு 'பிரபந்தம்' என்ற வடமொழிச் சொல்லாட்சி காணப்பட்டது. 'பிரபந்தம்' என்ற சொல்லுக்கு நன்கு கட்டப்பட்டது என்பது பொருளாகும். கி. பி. 12 ஆம் நூற்றாண்டைச் சார்ந்த அடியார்க்கு நல்லார் உரையில் “பிரபந்தம் என்பது அடிவரையறையின்றிப் பல தாளத்தாற் புணர்ப்பது” என்று குறிப்பிடப்படும் கருத்தும் இங்கு நோக்கத்தக்கது. பொதுவாக எல்லா இலக்கியங்களும் நன்கு கட்டப்பட்டவையே. எனவே “பிரபந்தம்” என்ற சொல் சிற்றிலக்கியத்தை மட்டும் குறிக்கவில்லை என்பதை ஊணர்ந்து “சிறு பிரபந்தம்” எனும் சொல்லைப் பயன்படுத்தத் தொடங்கினர். பின்னர் தமிழ் மொழியின் மீதுள்ள ஆர்வம் காரணமாக “சிற்றிலக்கியம்” என்ற சொல்லாட்சி பயன்படுத்தப்பட்டது. இத்தகைய சிற்றிலக்கியச் சொல்லாட்சி பற்றிக் கூறுகையில் “உரிச்சொல் என்பதன் இடத்தை நிகண்டு என்பது குறித்துள்ளது போல் சிறுகாவியங்கள் சிற்றிலக்கியங்கள் என்ற பொருளில் பிரபந்தம் பெருவழக்காயிற்று” (தா. ஈசுவர பிள்ளை, ப. 48) என்று தா. ஈசுவர பிள்ளை எடுத்துரைத்துள்ளார்.

இடைக்காலத் தமிழக வரலாற்றில் பிரபந்தம் எனக் காணப்படும் சொல்லாட்சி பின்னர் “சிற்றிலக்கியம்” என்றும் “சிறு காப்பியம்” என்றும் வழங்கலாயிற்று. தண்டியலங்காரம்

Volume 3, SPL Issue 1, July 2025 E-ISSN: 2584-167X

காப்பியம் என்றும் பெருங்காப்பியம் என்றும் பாகுபடுத்தி இலக்கணம் கூறுகின்றது. "வடமொழி இலக்கணம் வழித் தமிழ் இலக்கியங்களை வகைப்படுத்தியதன் விளைவாகவே "சிறுகாப்பியம்" எனும் சொல் வழங்கப்பட்டுள்ளது. அதனால் சிற்றிலக்கியம் என்ற பெயர்ப் பொருத்தத்தை விடப் பரணி இலக்கியம் உலா இலக்கியம் பள்ளு இலக்கியம் எனச் சுட்டப் பெறுவது தகவுடையது" என்ற கருத்தும் சிற்றிலக்கியச் சொல் வரலாற்றில் குறிப்பிடத் தகுந்தது. "பிரபந்தம்" என்னும் வடமொழிச்சொல் பிற்காலத்தில் மறைய "சிற்றிலக்கியம்" என்ற சொல்லாட்சி நிலைபெற்றது" (தா. ஈசுவர பிள்ளை, ப. 48)

**சிற்றிலக்கியம் - விளக்கம்**

சிற்றிலக்கியம் என்னும் இலக்கிய வகை பற்றி அறிஞர்களின் பல்வேறு கருத்துக்களைக் காண இயலுகிறது. "பிரபந்தம் என்பது தொண்ணூற்றாறு வகைப்பட்ட நூல்" (தமிழ் அடோன் அகராதி. ப. 78) என்று அகராதி பொருள் தருகிறது. மேலும் ரா. சீனிவாசன் பிரபந்தம் பற்றி எடுத்துரைக்கையில் "காவியத்தின் ஒரு கூறாகிய ஒரு துறை மட்டும் பாடப்படுவது பிரபந்தம்" (ரா. சீனிவாசன், ப. 60) என்று சுட்டியுள்ளார்.

தா.ஈசுவரப்பிள்ளை சிற்றிலக்கியத்திற்கு விளக்கம் தருகையில் "குறைந்த எண்ணிக்கையுடைய பாடல்களைக் கொண்டும் எண் வகை யாப்பினாலும் குறிப்பிட்ட அமைப்பு நிலையினாலும் படைக்கப்பெறும் இலக்கிய வகையே சிற்றிலக்கியம்" (தா.ஈசுவரப்பிள்ளை, ப. 48) என்று எடுத்துரைக்கின்றார்.

சிற்றிலக்கியத்தின் உள்ளடக்கம் பற்றிக் குறிப்பிடுகையில் "சிற்றிலக்கிய வகைகள் நெடும்பாட்டு போல்வன. முற்ற முடிந்த ஒரு குறிப்பிட்ட பொருளின் மேல்வன... சங்க காலத்துப் பாட்டுக்கள் போலக் குறிப்பிட்ட இறைவனை மன்னனை வள்ளலைப் பற்றிப் புகழ்வதற்காக சிறப்பாக எடுத்துரைப்பதற்காக ஏழுதப்பட்டன" (தமிழண்ணல், ப. 47) என்று தமிழண்ணல் எடுத்துரைக்கின்றார்.

"பேரிலக்கியங்கள் அறம் பொருள் இன்பம் வீடு நான்கும் உணர்த்தும். இவற்றில் ஒன்றோ பலவோ குறைந்துவரின் அவை சிற்றிலக்கியங்களாம். பின்னை நாளில் புற்றீசல் போன்று கிளர்ந்த இந்நூல்கள் 96 வகையாகக் கொண்டு இவற்றிற்கேற்ப இலக்கணம் வகுத்தனர்" (மது. ச. விமலானந்தன், ப. 72) என்ற மது. ச. விமலானந்தன் கருத்தும் குறிப்பிடத்தக்கது.

**சிற்றிலக்கியத்தின் தோற்றத்திற்கு தொல்காப்பியம் ஓர் அடித்தளம்**

சிற்றிலக்கியத்தின் தோற்றத்திற்குரிய தொன்மை வரலாற்றை அறிவதற்குத் தொல்காப்பியம் அடித்தளமாக அமைகின்றது. காலந்தோறும் மக்களின் தேவைக்கேற்ப கவிஞரின் கற்பனைக்கேற்ப இலக்கியங்கள் தோன்றிக் கொண்டே வருகின்றன. இக்கருத்திற்கு வலிமை சேர்க்கும் வகையில் தொல்காப்பியர் புதியனவாக எழும் இலக்கிய வகைகளைப் போற்ற வேண்டும் என்ற நிலையில் "விருந்து" என்னும் வனப்பினைப் படைத்துள்ளார்.

**விருந்தே தானும்**

**புதுவது கிளந்த யாப்பின் மேற்றே (தொல்., செய்., 239)** என்ற நூற்பா எதிர்காலத்தில் தோன்றக்கூடிய இலக்கியங்களையும் கற்றுக் கொள்ள வழிகாட்டுகிறது என்றே பொருள் கொள்ள வேண்டும். பேராசிரியர் இதற்கு உரை கூறுகையில் "புதுவது கிளந்த யாப்பின் மேற்றே என்றது என்னையெனின் புதிதாகத் தாம் வேண்டியவற்றால் பல செய்யுளும் தொடர்ந்து வரச் செய்வது. அது முத்தொள்ளாயிரமும் பொய்கையார் முதலானோர் செய்த அந்தாதிச் செய்யுளுமென உணர்க. கலம்பகம் முதலியனவும் சொல்லும்" என்று விளக்கம் தந்துள்ளார். எனவே சிற்றிலக்கியத் தோற்றத்திற்கு அடிப்படை வித்து தொல்காப்பியத்தில் காணக் கிடக்கின்றது எனலாம்.

**குழவி மருங்கினும் கிளவதாகும் (தொல்., பொருள்., புறத்திணையியல். 82)**
**எரொடு தோற்றமும் உரித்தென மொழிப (தொல்., பொருள்., புறத்திணையியல். 83)**
**கூத்தரும் பாணரும் பொருநரும் விறலியும்**

**Volume 3, SPL Issue 1, July 2025** **E-ISSN: 2584-167X**

**ஆற்றிடைக்காட்சி உறழத் தோன்றிப்**
**பெற்ற பெருவளம் பெறார்க்கு அறிவுறீஇச்**
**சென்று பயனெதிர்ச் சொன்ன பக்கமும் (தொல்., பொருள்., புறத்திணையியல். 36)**

என்ற தொல்காப்பிய நூற்பாக்கள் தரும் செய்திகள் முறையே பிள்ளைத்தமிழ் உலா ஆற்றுப்படை என்னும் சிற்றிலக்கிய வகைகளாகப் பிற்காலத்தே உருப்பெற்றன என்ற கருத்து நிலவுகின்றது. அதனைப் போன்றே தொல்காப்பியர் புறப்பொருள் துறைகளாகக் குறிப்பிடும் களவஞ்சி காஞ்சி மாலை நொச்சி மாலைபுறநிலை வாழ்த்துவாயுறை வாழ்த்து இயன்மொழி போன்ற இன்ன பிறவும் பிற்காலத்தே அவ்வப் பெயர்களிலேயே சிற்றிலக்கியங்களாகத் திகழ்வதைக் காண முடிகின்றது. எல்லா வகை இலக்கியத்திற்கும் தொன்மையைத் தேடிக் காண்பது தமிழருக்குரிய ஒரு மரபாகும். அவ்வகையில் மேற்கூறப் பெற்ற கருத்துக்களின் மூலம் சிற்றிலக்கிய வகைகள் தொல்காப்பியம் என்ற தொன்மை நூலுடன் தொடர்பு கொண்டுள்ள பாங்கினை அறிய இயலுகின்றது.

**சிற்றிலக்கியம் தோற்றத்திற்கான காரணிகள்**

தமிழ் இலக்கியங்கள் யாவுமே அவை தோன்றிய காலத்து அரசியல் நிலை சமுதாயச் சூழல்மக்களின் கருத்தோட்டம் கலையுணர்வு முதலியவற்றை அடிப்படைக் காரணிகளாகக் கொண்டுள்ளன. அவ்வகையில் தமிழில் தோன்றியுள்ள சிற்றிலக்கியங்களில் தமிழகம் பற்றிய அக்கால அரிய செய்திகள் பலவற்றை அறிய முடிகின்றது. இத்தகைய சிற்றிலக்கியத்தின் தோற்றத்திற்கான சூழல் குறித்து ஆ. மார்க்ஸ் குறிப்பிடுகையில் “பேரரசுகளை உருவாக்கிக் கட்டிக் காத்து அரசியல் நிர்வாகம் செய்வதிலும் வாழ்க்கையில் பெரும் பகுதியைப் போர் செய்வதிலும் கழித்திருந்த பேரரசர்கள் இடையிடையேக் கேட்டு மகிழச் சிறு பிரபந்தங்களே தகுதியாக இருந்தமையால் காவிய காலத்தில் சிற்றிலக்கிய வடிவங்கள் தோன்றிப் பின்னர் வளர்ந்தன” (ஆ. மார்க்ஸ். ப. 23) என்று குறிப்பிடுகின்றார்.

மேலும் சிற்றிலக்கியத் தோற்றத்திற்கான சூழலினை எடுத்துரைக்கையில் 13ஆம் நூற்றாண்டிற்குப் பின் தமிழகம் அன்னியர் ஆட்சியில் இருந்தது. அவர்கள் மொழியே செல்வாக்குப் பெற பைந்தமிழ் புறக்கணிக்கப் பெற்றது. புலவர்கள் போற்றுவாரின்றித் திக்கற்று நின்றனர். வாழ்வே குலைந்து நிற்கும் போதுவளமார் காவியங்களோவகையான இலக்கியங்களோ தோன்ற முடியுமா? செந்தமிழ்ச் சிறப்பறியா சிற்றின்பச் சிந்தை மிக்க சிற்றரசர்கள் மற்றும் செல்வந்தர் கை பார்த்து இருந்தனர் கவிஞர்கள். காலத்தின் கோரப்பிடியிலே சிக்கித் தவித்த கவிஞர்கள்அவர்கள் உளம் மகிழவே சிற்றிலக்கியங்கள் பல செய்து வயிற்றுப் பாட்டைக் கவனித்தார்கள். தமிழன்னையை அணி செய்யத் தரமான இலக்கியம் யாத்த நிலைபோய்தனிப்பட்டோரைப் பாராட்டிப் பயன் பெறுதற்காகப் பிரபந்தங்கள் பல பாடினர் என்று இலக்கிய வரலாற்றாசிரியர்கள் கூறிச் செல்வர்.

மேற்கூறப்பெற்ற சூழலில் உருவாகிய சிற்றிலக்கியம் பல வடிவங்கள் பெற்றமைக்கான காரணிகளை தா. ஈசுவரப்பிள்ளை பின்வருமாறு பகுத்துக் கூறியுள்ளார். அவை:

1. **சமுதாய மாற்றம் காரணமாக புதிய இலக்கிய வகைகள் பல தோன்றுதல்.**
2. **சங்க அகப்பொருள் துறைகளைத் தனி இலக்கியமாகப் படைக்கும் வேட்கை அதிகரித்ததன் விளைவு.**
3. **அகப்பொருள் போன்றே புறப்பொருள் துறைகளையும் தனி இலக்கியமாகப் படைக்கும் ஆர்வம்.**
4. **மரபு வழியாக வந்த இலக்கிய வடிவங்களை இணைத்துப் புதிய இலக்கியம் படைக்கும் எண்ணம்.**
5. **தல இறைவனைப் புகழும் நோக்கத்துடனும் இறைவனின் சிறப்பை எடுத்து இயம்புதல் மூலம் மக்களின் சமய உணர்வைத் தூண்டும் வேட்கையுடனும் இலக்கியம் படைத்தல்.**

Volume 3, SPL Issue 1, July 2025 E-ISSN: 2584-167X

6. **வாழ்வியல் நிகழ்வுகளைப் பதிவு செய்யும் எண்ணத்துடனும் ஓர் இலக்கியத்திற்குப் போட்டியாக மற்றொரு இலக்கியத்தைப் படைக்கின்ற நோக்கத்துடனும் இலக்கியம் படைத்தல்.**
7. **குறிப்பிட்ட எண்ணிகையில் பாடல் பாடும் ஆர்வமும் ஒரே வகை யாப்பைப் பயன்படுத்திப் பல பாடல்கள் இயற்றும் வேறுபட்ட நோக்கமும் செயல்பட்டமை.**
8. **மகளிர் விளையாட்டுகளை இலக்கியமாகப் படைத்தல் மட்டுமின்றி அவர்கள் உடல் ஊறுப்புகளை வருணிக்கும் நோக்கத்துடன் இலக்கியம் படைக்கும் எண்ணம் தோன்றியமை ஆகியனவாகும்.**

இதன் மூலம் சிற்றிலக்கியம் என்ற சொல் உணர்த்தும் பொருளினை அறியலாம்.

**சங்க இலக்கியங்களில் சிற்றிலக்கியக் கூறுகள்**

**பரணி**

96 வகை சிற்றிலக்கியங்களில் ஒன்று பரணி .'பரணி' என்பதின் பெயர் காரணம் பற்றி பல்வேறு கருத்துக்கள் நிலவுகின்றன .இவை தொல்காப்பியர் கூறும் வனப்பில் 'விருந்து' ஆகும். மேலும் இலக்கண விளக்கம்

**ஆனை ஆயிரம் அமரிடை வென்ற**
**மானவனுக்கு வகுப்பது பரணி (இலக்கணவிள., பா. 13)**

என வரையறுக்கிறது. இதன் வித்து வெறி பாடிய காமக்கண்ணியார் பாடிய பாடலில் அமைந்துள்ளது.

**வெடிவேய் கொள்வதுபோல ஓடி**
**தாவுபு உகளும் மாவே பூவே**
**விளங்கு இழை மகளிர் கூந்தற் கொண்ட**
**நரந்தப் பல்காழ்க் கோதை சுற்றிய**
**ஐது அமைபரணி வணர் கோட்டுச் சீறியாழ்க்**
**கைவார் நரம்பின் பாணர்க்கு ஒக்கிய**
**நிரம்பா இயல்பின் கரம்பைச் சீறூர்**
**நோக்கினர்ச் செகுக்கும் காளை ஊக்கி**
**வேலின் அட்டகளிறு பெயர்த்து எண்ணின்**
**விண் இவர் விசும்பின் மீனும்**
**தண் பெயல் உறையும் உறை ஆற்றாவே (புறநானூறு, 302)**

மன்னனின் குதிரைகளின் ஆற்றலை பாணருக்கு அளிக்கும் கொடைத்தன்மையையும் பாடிய புலவர் அவனது வீரத்தைப் போற்றும் போது கொல்லும் காளையை ஒத்தவன், களிறென சினந்தெழுவான், போர்க் களத்தில் அவன் கொன்று குவித்த களிறுகளின் எண்ணிக்கை வானத்து மீன்களினும் மழைத் துளிகளினும் மிக்கவையாகும் என்று புகழ்கின்றார். இங்கு எண்ணிலடங்காத யானைகளைக் கொன்றுகுவிக்கும் பேராற்றல், வலிமையுடையவன் என்ற பரணி இலக்கியத்தின் அடிப்பொருள் இடம்பெறுவதை அறியலாம். பின்னாளில் இப்பரணி கலிங்கத்துப்பரணி, தக்கையாகப்பரணி, அஞ்ஞவதைப் பரணி எனத் தனி இலக்கியமாக வளர்ந்துள்ளதை அறியலாம்.

**தூது**

ஒருவரிடம் ஒரு செய்தியை சொல்லி வருவதற்கோ ஒரு பொருளை பெற்று வருவதற்கோ ஆற்றல் மிக்க மற்றொருவரை அனுப்புவது தூது ஆகும். இது தொல்காப்பியம் காலம் தொட்டே ஒரு இலக்கிய பிரிவாக இருந்து வருகின்றது. இது அகப்பொருள் பற்றியது, புறப்பொருள் பற்றியது என இரு வகையில் அடங்கும். மன்னர்கள் அனுப்புகின்ற தூது புறத்திணையில் அடங்கும். காதலர்கள் அனுப்புகின்ற தூது அகத்திணையில் அடங்கும். ஒரு தலைவன் மேல் காதல் கொண்ட தலைவி தன் காதல் நோயின் துயரத்தை காதலனுக்கு எடுத்துக்கூறி 'தூது சொல்லி வா" மாலை வாங்கி வா' என்று உயர்திணை பொருளேனும் அஃறிணை பொருளேனும்

தூது விடுவதாக பாடப்பெறும் இலக்கிய வகை ஆகும் .இதனை 'காமம் மிக்க கழிபடர் கிளவி' என்பர். இதன் இலக்கணத்தை,

**ஓதல் பகையே துதிவை பிரிவே**
**அவற்றுள் ஓதலும் தூதும் உயர்ந்தோர் மேன (தொல்., பொரு., பா. 30)**
**சொல்லாமரபின் அவற்றொடு கெழீஇச்**
**செய்யா மரபில் தொழில்படுத்தடக்கியும் (தொல்., பொரு., பா. 32)**

எனத் தொல்காப்பியர் வரையறுக்கிறார். இத்தூது இலக்கியக் கூறு சங்கப்பாடல்களில் இடம் பெறுகின்றது.

சங்கப்பாடல்களுள் அகத்துறைப் பாடல்களில் தாம் தூதுப் பாடல்கள் மிகுதியாக இடம் பெற்றுள்ளன. தலைவன் தலைவி இருவருக்கும் ஒருவருக்கொருவர் தூது போக்கு நெறிகாணப்படுகிறது.தலைமகன் பிரிந்து நீட்டித்துழி நெஞ்சினைத் தூது விட்ட தலைமகள் அது வாராது தாழ்த்துழி, தோழிக்குச் சொல்லுவதாக பின்வரும் ஐங்குறுநூற்று பாடல் அமைந்துள்ளது.

**சூழ்கம் வம்மோ தோழி பாழ்பட்டுப்**
**பைதுஅற வெந்த பாலைவெங்காட்டு**
**அருஞ்சுரம் இறந்தோர் தேஎத்துச்**
**சென்ற நெஞ்சம் நீடியே பொருளே (ஐங்., பா. 317)**

இதன்வழி தலைவி தன் நெஞ்சைத் தூது விட்ட செய்தியை அறிகிறோம்.

அதியமான் நெடுமானஞ்சி என்னும் மன்னன் தன் பகையரசனான தொண்டைமானிடத்தில் ஔவையாரைத் தூது விடுத்த செய்தியை புறநானூற்றுப் பாடல் எடுத்துக் காட்டுகிறது.

**இவ்வே பீலி அணிந்து மாலைசூட்டி**
**கண்திரள் நோன்காழ்த்திருத்தி நெய் அணிது**
**கடியுடை வியல்நக ரவ்வே அவ்வே**
**பகைவர்க்குத்தி கோடுநுதி சிதைந்து**
**கொள்துறைக் குற்றில மாதோ என்றும்**
**உண்டாயின் பதம் கொடுத்து**
**இல்லாயின் உடன் உண்ணும்**
**இல்லோர் ஒக்கல் தலைவன்**
**அண்ணல் எம்கோமான் வைந்நுதிவேலே (புறநானூறு, 95)**

படைக்கலங்கள் பீலி அணியப் பெற்று மாலை சூட்டப்பெற்று அழகுபடுத்தி, நெய் தடவப்பட்டு, காவலுடன் உன் அரண்மனையில் உள்ளன. செல்வம் உளதாயின் உணவிட்டும் இல்லையெனில் பகிர்ந்து உண்டு மகிழும் வறியவர் விரும்பும் எம் தலைவனாகிய அதியமானின் படைக்கலன்கள் ஒடிந்தும் சிதைந்தும் முறிந்தும் பகைவரைத் தாக்குதலால் உருமாறியும் குலைந்தும் உலைக்களத்தில் இருக்கின்றன என்று சந்து செய்விக்கும் நோக்கில் ஔவையார் தானே தூது சென்றமையை இதன் வழி அறியலாம்.இதனை புறத்தூது வகையில் கொள்ளலாம். வெள்ளிவீதியார் பாடிய பாடலொன்று அகத்தூதிற்கு சான்றாக அமைகின்றது.

**சிறு வெள்ளாங்குருகே சிறு வெள்ளாங்குருகே**
**துறைபோகு அறுவைத்தூமடி அன்ன**
**நிறம்கிளர் தூவிச் சிறு வெள்ளாங்குருகே**
**எம் ஊர்வந்து எம் உண்துறைத்துழைஇ**
**சினைக்கெளிற் ஆரிள்கையை அவர் ஊர் பெயர்தி**
**அனைய அன்பினையோ பெருமறவியையோ**
**ஆங்கண் தீம்புனல் ஈங்கண் பரக்கும்**
**கழனி நல்ஊர் மகிழ்நர்க்கு என்**

Volume 3, SPL Issue 1, July 2025 E-ISSN: 2584-167X

**இழைநெகிழ் பருவரல் செப்பாதோயே (நற்றிணை, 70)**

இங்கு பிரிவுநோயால் துயருற தலைவி தலைவனிடம் வெளிய நாரையைத் தூது விடுத்து தன் துன்பம் நீங்க உதவுமாறு வேண்டுகிறாள்.சங்கப்பாடல்களில் அகம் புறம் துறைகளில் அமைத்துப் பாடப்பெற்ற தூது கிபி.17ம் நூற்றாண்டில் தனியொரு சிற்றிலக்கியமாக உருப் பெற்றுள்ளதை அறியலாம்.

**கார்**

பன்னிரு பாட்டில் குறிப்பிடும் கலம்பக உறுப்புகளில் ஒன்று கார். பொருள் காரணமாகப் பிரிந்த தலைவனை எண்ணி வாடும் தலைவி கார் காலத்தால் தனக்குண்டான துன்பங்களைக் குறித்துப் பாடுவதாக அமைவது. கார்காலம் பற்றி ஒக்கூர் மாசாத்தியார் குறுந்தொகையில் பின்வருமாறு பாடுகிறார்.

**இகாமை பாரார்ளம்நசைஇச் சென்றோர்**
**இவணும் வாரார் எவணரோ?என**
**பெயல் புறந்தந்த பூங்கொடி முல்லைத்**
**தொகுமுகை இலங்கு எயிறு ஆக**
**நகுமே தோழி! நறுந்தண்காரே (குறுந்தொகை, 126)**

அன்புத் தோழியிடம் பொருள் தேடச்சென்ற தலைவன் திரும்பிவராமையால் வருந்தி குளிர்ந்த கார்காலம் மழை பெய்வித்தலால் முல்லைப் பூங்கொடியில் அரும்புகள் ஒளிவீசி காட்சியளிக்கின்றன. அவை பற்களாக என்னைக் கண்டு நகைக்கின்றனவே எனத்தலைவி புலம்புகிறாள். முல்லைத் திணைக்கு உரிய பெரும்பொழுது கார்காலம்.இக்கார்காலப் பொழுது அகத்திணை மாந்தர்களின் வாழ்வோடு உணர்வோடு கலந்தது. இப்பொழுது சிற்றிலக்கிய வகைகளுள் ஒன்றான கலம்பக உறுப்புகளுள் அமைந்து தனி இலக்கியமாக மலர சங்கப்பாடலில் வித்தாக அமைந்துள்ளதை அறியலாம்.

**குறத்திப் பாட்டு**

முத்தமிழில் ஒரு கூறான நாடக இலக்கியத்திற்கு சான்றாக விளங்குபவவை குறவஞ்சி இலக்கியம், பள்ளிலக்கியம், தொண்டி நாடகம் ஆகியன. இவற்றுள் குறவஞ்சி இலக்கியம் என்பது பாட்டுடை தலைவன் உலா வருவதை கண்டு காதல் கொண்டு காம வேதனையில் வாடி தவிக்கும் தலைவிக்கு குறத்தி ஒருத்தி குறி கூறுவதாக வரும் பொருள் அமைதியை கொண்டதாகும். பிற்காலத்தில் தனி இலக்கியமாக எழுதுவதற்கு முன்னரே இதன் இலக்கிய கூறுகள் தொல்காப்பியம் அகநானூறு, குறுந்தொகை, பெருங்கதை, திவ்ய பிரபந்தம், திருக்கோவை போன்ற இலக்கியங்கள் பல்கி கிடக்கின்றன. பன்னிருப்பாட்டியல் கூறும் குறத்திப்பாட்டே பிற்காலத்தில் குறவஞ்சி இலக்கியமாக வளர்ச்சி பெற்றது. இதனை

**கட்டினும் கழங்கினும் வெறியென இருவரும்**
**ஒட்டிய திறத்தாற் செய்திக் கண்ணும் (தொல்., பா. 25)**

என தொல்காப்பியம் குறிபார்த்தல் பற்றிக் குறிப்பிடுகின்றது .

குறம், குறத்திப்பாட்டு, குறவஞ்சி எனப் பல பெயர்களில் சிற்றிலக்கியம் வளர்ந்துள்ளது. கலம்பக உறுப்புகளுள் வரும். குறம் என்பது தலைவி விரும்பிய தலைவனுடன் சேரும் வாய்ப்பினைக் குறமகள் ஒருத்தி குறி பார்த்து உரைப்பதாக வருவது. இக்குறத்திப் பாட்டின் வித்தினை ஔவையார் பாடிய அகப்பாடலில் காணலாம்.

**அகவன் மகளே! அகவன் மகளே!**
**மனவுக்கோப்பு அன்ன நல்நெடுங் கூந்தல்**
**அகவன் மகளே!பாடுக பாட்டே**
**இன்னும் பாடுக பாட்டே அவர்**
**நல் நெடுங்குன்றம் பாடிய பாட்டே (குறுந்தொகை. 23)**

தோழி, தலைவன் -தலைவி களவொழுக்கத்தை அறத்தொடு நிற்றல் துறை வழியாக நற்றாய்க்குத் தெரிவிக்க முனைகிறாள். குறத்தியை அழைத்து தலைவி விரும்பும் தலைவனின்

நல் நெடுங்குன்றத்தைப் பாடுக என அறிவுறுத்துகிறாள். தனிப் பெரும் இலக்கியமாக 18ம் நூற்றாண்டில் மலர குறத்திப்பாட்டு அடிப்படையாகின்றது என்பதை அறியலாம்.

**மடல்**

மடல் குறித்த செய்திகள் சங்க இலக்கியங்களில் மிகுதியாக இடம் பெற்றுள்ளது.மடல் ஏறுதல் மகளிர்க்கு இல்லை. ஆண்கள் தான் மடலேறுவேன் என அச்சுறுத்தவும் மடலேறவும் முயல்வான். அது மகளிர்க்குச் சிறப்புடையது அல்ல என்பதைத் *தொல்காப்பியம்*,

**எத்திணை மருங்கினும் மகடூஉ மடல்மேல்**
**பொற்புடை நெறிமை இன்மையான (தொல்., பா. 981)**

என குறிப்பிடுகின்றது. மடல் என்பது அகத்திணை சார்ந்த ஒரு துறையாக அமையினும் சிற்றிலக்கிய வரிசையில் இடம் பெற்றுள்ளது. திருமங்கை ஆழ்வார் பாடிய 'பெரிய திருமடல்' சிறிய திருமடலில்' பெண்கள் மடல் ஏறுவதாக இவ் பக்தி பாசுரங்கள் காட்டுகின்றன. மடல் பாடிய மாதங்கீரனார் என சங்கக்கால ஆண் புலவர் சிறப்பிக்கப்படுகிறார். அள்ளூர் நன்முல்லையார் குறுந்தொகையில் தலைவன் தலைவியின் பால் கொண்ட காதலால் மணம் புரியும் ஆவலில் மடல் ஏறுவதாக பாடுகிறார். மடல் ஏறினால் தலைவிக்குப் பழிநேரும். தான் அவலத்தில் உயிர் வாழ்ந்தால் தனக்கு பழியைத்தரும் என அமைந்த பாடல் பின்வருமாறு,

**காலையும் பகலும் கையறு மாலையும்**
**ஊர் துஞ்சு யாமமும் விடியலும் என்று இப்**
**பொழுது இடைதெரியின் பொய்யே காமம்**
**மா என மடலொடு மருகில் தோன்றித்**
**தெற்றெனத் தூற்றலும் பழியே**
**வாழ்தலும் பழியே பிரிவு தலைவரினே (குறுந்தொகை, 32)**

மடல் பற்றிய செய்தி சங்க இலக்கியங்களில் மிகுதியாக இடம் பெற்றுள்ளது. குறுந்தொகை, கலித்தொகை, திருக்குறள், வளையாபதி ஆகிய நூல்களிலும் மடல் குறித்த செய்தியை காண முடிகிறது. மடல் தனியொரு சிற்றிலக்கியமாக வளர்வதற்குச் சங்கப் பாடல்கள் முன்னோடியாக அமைந்துள்ளமை கண்கூடு.

**இயன்மொழி வாழ்த்து**

பாட்டுடைத் தலைவனின் இயல்பாக இருக்கும் பண்புகளைக் கூறி வாழ்த்துவது இயன்மொழி வாழ்த்து எனப்படும். புறநானூறு மற்றும் பதிற்றுப்பத்தில் வாழ்த்துப் பாடல்கள் இடம் பெற்றுள்ளன.

**அளிதோ தானே பாரியது பறம்பே**
**நளிகொள் முரசின் மூவிரு முற்றின்**
**உழவர் உழாதன நான்குபயன் உடைத்தே**
**ஒன்றே சிறியிலை வெரிதின் நெல்விளையும்மே**
**இரண்டே தீஞ்சுளைப் பழம்மூழ்க் கும்மே…**

**…ஆடினர் பாடினர் செலினே**
**நாடும் குன்றும் ஒருங்கு ஈயும்மே (புறம்., 58)**

என்னும் பாடலில் பாரியின் இயல்பான ஆட்சி சிறப்பையும், பாரியின் கொடை வள்ளல் தன்மையையும், அவனிடம் அடைக்கலம் சென்றவர்கள் கூறி வாழ்த்துகின்றனர்.

**விறலியாற்றுப்படை**

புறநானூற்றில் விறலியாற்றுப்படை என்ற வகையில் சில பாடல்கள் காணப்படுகின்றன. அதன் பின் ஆற்றுப்படை நூல்கள் பிற்காலத்தில் தோன்றத் தொடங்கின. பரிசுப் பெற்ற பாணன் முதலியோர் தாம் பெற்ற பெருஞ்செல்வத்தைத் தம் இனத்தைச் சார்ந்தவர்க்குக் கூறி தம்மைப் போல் மற்றவரும் பயன் பெறும் வகையில் தாம் பரிசுப் பெற்ற வள்ளல் அல்லது அரசனிடம் ஆற்றுப்படுத்துவது ஆற்றுப்படையாகும்.

**Volume 3, SPL Issue 1, July 2025** **E-ISSN: 2584-167X**

திருமேனி இரத்தினக் கவிராயரின் புலவர் ஆற்றுப்படை, தொழுவூர் வேலாயுத முதலியாரின் நெஞ்சாற்றுப்படை, பின்னத்தூர் நாராயணசாமி ஐயரின் இறையனார் ஆற்றுப்படை என இலக்கியங்கள் வளர்ந்துள்ளன. இதற்கான வித்தை ஔவையார் விறலியாற்றுப்படை என்றுப் பாடிய பாடல் புறநானூற்று நூலில் இடம்பெற்றுள்ளது. அப்பாடல்,

**ஒரு தலைப்பதலை தூங்க ஒருதலைத்**
**தூம்பு அகச்சிறுமுழாத் தூங்கத்தூக்கி**
**கவிழ்ந்த மண்டை மலர்க்குநர் யார்?எனச்**
**சுரன் முதல் இருந்த சில்வளை விறலி**
**செல்வை ஆயின் சேணோன் அல்லன்**
**முனைசுட எழுந்த மங்குல் மாப்புகை**
**மலைசூழ் மஞ்சின் மழகளிறு அணியும்**
**பகைபுலத்தோனே பல்வேல் அஞ்சி**
**பொழுது இடைப்படா அப் புலரா மண்டை**
**மெழுகு மெல் அடையின் கொழு நிணம் பெருப்ப**
**அலத்தற்காலை ஆயினும்**
**புரத்தல் வல்லன் வாழ்க அவன் தாளே (புறநானூறு, 102)**

அதியமான் நெடுமானஞ்சியின் விருந்தோம்பும் பண்பினை கொடைத் தன்மையை ஔவையார் விறலிக்கு எடுத்துரைத்து ஆற்றுப்படுத்துகிறார்.

**அந்தாதி**

தமிழ் இலக்கியத்திற்கு வடமொழியின் தாக்கத்தால் அமைந்தது அந்தாதி என்பர். இது ஒவ்வாத கூற்றாகும். அந்தாதி தனி இலக்கியமாக இல்லாவிடினும் புறநானூற்றில்,

**மண் தினிந்த நிலனும்**
**நிலன் ஏந்திய விசும்பும்**
**விசும்பும் தைவரு வழியும்**
**வளி தலைஇய தீயும்**
**தீ முரணிய நீரும் (புறம்., 2)**

என்று முரஞ்சியூர் முடிநாகராயர் பாடிய பாடலின் முதல் ஐந்து வரிகளில் அந்தாதி அமைப்பு இடம்பெறுவது நோக்கத்தக்கது. மேலும் சிறுபாணாற்றுப்படையில் விறலி வருணனை அந்தாதி யாப்பு வகையில் அமைந்துள்ளது. ஐங்குறுநூற்றின் தொண்டிப் பத்தும் அந்தாதி யாப்பில் காணலாம் .

**கையறு நிலை**

மனித இறப்பின் காரணமாக ஏற்படும் இழப்பு சோகமானதாகும். இத்தகைய கையறுநிலை பாடல்கள் சங்க இலக்கியங்களுள் மிகுந்து காணப்படுகின்றன. போர் அல்லது உடல் நலக்குறைவால் இறந்துபோன இனக்குழு தலைவன் அல்லது குறுநில மன்னன் அல்லது வேந்தனுக்கு ஏற்படும் வேதனையாகும். வீரத்தை காட்டி போராடி மாண்ட வீரனுக்காக நடப்பட்ட நடுகல்லை சோகத்துடன் பார்த்து வருந்துதல் . வடக்கிருத்தல் காரணமாக உயிர் இழந்தவன் குறித்து வருந்துதல்.

**அற்றைத் திங்கள் அவ்வெண் நிலவில்**
**எந்தையும் உடையோம் எம் குன்றும் பிறர்கொளா**
**இற்றைத் திங்கள் இவ்வெண் நிலவின்**
**வென்னெறி முரசின் வேந்தரெம்**
**குன்றும் கொண்டார்யாம் எந்தையும் இலமே (புறம்., 112)**

மூவேந்தரும் முற்றுகையிட்டிருந்த அன்று இவ் வெண்ணிலவின் ஒளியிலே எம் தந்தையுடன் கூடி மகிழ்ந்தோம். இப்பறம்பு மலை எங்களுடையதாக இருந்தது. ஆனால் இன்று பகைவர் எம்

Academic Research News
Peer-Reviewed Journal

Volume 3, SPL Issue 1, July 2025 E-ISSN: 2584-167X

குன்றைக் கவர்ந்து கொள்ள நாங்கள் தந்தையை இழந்து தவிக்கிறோம் என தந்தையோடு இருந்த நாளை எண்ணி தனியே தவிக்கும் துயரை கூறுவதாக இப்பாடல் அமைந்துள்ளது.

மன்னர் இறந்தநிலையில் பாடப்பெறும் பாடல் கையறுநிலை என்பதாகும். நந்திவர்மன் மாண்ட கதை நாடறியும் எனும் பழமொழியும் உண்டு. நந்திக்கலம்பகத்தில் இடம்பெறும் கையறுநிலைப்பாடல் மனதை உருகச் செய்வது. அவல உணர்வை இழப்பினை வெளிப்படுத்தும் உருக்கமான கையறுநிலை என்னும் துறை சிற்றிலக்கியங்களுள் ஒன்றாக அமைகின்றது. அதியமான் நெடுமானஞ்சி இறந்த நிலையில் அவனது பிரிவை எண்ணி உருகிப் பாடும் கையறுநிலை ஔவையாரின் மூன்று பாடல்களிலும் பாரி வேந்தன் இறப்பினை எண்ணி அவர் மகளிர் (பாரிமகளிர்) பாடிய பாடலிலும் இடம் பெற்றுள்ளது. சான்றாக ஔவையாரின் பாடல் ஒன்றைக் காணலாம்.

**எறிபுனற் குறவன் குறையில் அன்ன**
**கரிபுற விறகின் ஈமஒள் அழல்**
**குறுகினும் குறுகுக குறுகாது சென்று**
**விசும்புற நீளினும் நீள்க பசுங்கதிர்த்**
**திங்கள் அன்ன வெண்குடை**
**ஞாயிறு அன்னோன் புகழ் மாயலவே (புறநானூறு, 231)**

ஈமத்தீயில் அதியமானின் இறந்த உடல் கிடக்கிறது. அந்தத்தீ அவனது உடலைச் சிதைக்காமல் குறையினும் குறைக. இல்லையெனில் குறையாமல் வானளவு முட்டச்சென்று நிறையினும் நிறைக. எனினும் திங்களைப் போன்ற வெண்கொற்றக்கொடைக் கொண்ட ஞாயிறு போன்ற அதியமானின் புகழ் என்றும் அழியாதது என மனமுருகிப்பாடுகிறார்.

கிள்ளிவளவனை பற்றி மாசாத்தனார், இரக்கமில்லாத எமனே! நீ அறிவற்றவன். வேறு வழியின்றி நீ விதைத்த நெல்லையே உண்டு ஏப்பம் விட்டுவிட்டாய். நான் சொல்லப்போகும் உண்மையை நீ போகப் போக உணர்வாய். வீரரும் யானைகளும் குதிரைகளும் இரத்த ஆறு ஓடும் போர்க்களத்தில் செத்து மடிய அன்றாட போரில் ஈடுபட்டு பல உயிர்களைக் கொண்டு உனது பசிக்கு இரையாக கொடுத்த ஆற்றல் உடையவன். உன்னைப் போன்று பொன் அணியையும் பொற்பூணும் பூண்ட கிள்ளிவளவன். வண்டுகள் மொய்க்கும் வெற்றி மலர்மாலை சூடிய என் தலைவனை கொன்று விட்டாயே! இனி உன் பசிக்கு யார் உணவு தருவார்? என்பதை,

**நனிபே தையே நயனில் கூற்றம்**
**விரகுஇன் மையின் வித்துஅட்டு உண்டனை**
**இன்னும் காண்குவை நன்வாய் ஆகுதல்**
**ஒளிறுவாள் மறவரும் களிறு மாவும்**
**குருதியங் குரூ உப்புனல் பொருகளத்து ஒழிய**
**நாளும் ஆனான் கடந்து அட்டு என்றுநின்**
**வாடுபசி அருந்திய பழிதீர் ஆற்றல்**
**நின்னோர்அன்ன பொன்னியல் பெரும்பூண்**
**வளவன் என்னும் வண்டுமூசு கண்ணி**
**இனியாள் மாற்றுநின் பசிதீர்ப்போரே (புறம்., 256)**

இப்பாடல் வழி அறியலாம். கையறுநிலையின் வித்து சங்கப் பாடல்களில் காணப்பெறுவதை அறியலாம்.

**முடிவுரை**

தொல்காப்பியர் குறிப்பிட்டுள்ள எண் வகை வனப்புகளில் விருந்து என்பது சிற்றிலக்கியம் தோன்ற களமாக விளங்கியுள்ளது. அறம் பொருள் இன்பம் வீடு என்னும் நான்கு உறுதிப்பொருளில் ஒன்றோ பலவோ குறைந்து தொடர்நிலை செய்யுளாக வாழ்வின் ஒரு பகுதியை மட்டும் பாடும் இலக்கியமாக சிற்றிலக்கியம் திகழ்கிறது இறைவன் மன்னன் குறுநில

**Volume 3, SPL Issue 1, July 2025** **E-ISSN: 2584-167X**

மன்னன் கவிஞர்கள் அறிஞர்கள் வள்ளல்கள் போன்றோரை பாட்டுடை தலைவராகக் கொண்டு பாடப்படுவது தொல்காப்பியத்தில் சிற்றிலக்கியங்களுக்கான வித்துக்கள் காணப்படுகின்றன. அகத்திணை புறத்திணை மற்றும் அதன் துறைகளில் காணப்படும் வித்துக்களை கருவாகக் கொண்டு பல சிற்றிலக்கியங்கள் தோற்றம் பெற்று வளர்ந்துள்ளன. பிற்காலத்தில் தோன்றி சிறந்து விளங்கிய சிற்றிலக்கியங்களுக்கு வழிகாட்டியாக சங்க இலக்கியங்கள் இருந்துள்ளன. இச்சிற்றிலக்கிய கூறுகள் பிற்காலத்தில் சிற்றிலக்கியமாக விளங்குவதே காண முடிகிறது இதற்கு சான்றாக குறத்திப்பாட்டு போன்றவற்றை கூறலாம் சங்க இலக்கியங்களில் குறத்தி பாடுவதாக அமைந்துள்ள பாடலே பின்னர் குறம் என்னும் சிற்றிலக்கியம் தோன்ற காரணமாக அமைந்தது. இதில் தூது, உலா, பரணி, பிள்ளைத்தமிழ், அந்தாதி, ஆற்றுப்படை, கையறுநிலை, மடல், குறவஞ்சி போன்ற பல்வேறு இலக்கியங்களில் சான்றாக அமைந்துள்ளது காண முடிகிறது.

**குறிப்புகள்**

[1] ஈசுவரப்பிள்ளை, தா. *தமிழில் சிற்றிலக்கிய வரலாறு முதற்பகுதி* . 2005.
[2] சீனிவாசன், ரா. *தமிழ் இலக்கிய வரலாற்றுக் கட்டுரைகள்.* 1997.
[3] செல்வராஜ், நா. *இருபதாம் நூற்றாண்டுச் சிற்றிலக்கியங்கள்.* 2019
[4] தமிழண்ணல், *புதிய நோக்கில் தமிழ் இலக்கிய வரலாறு.* 1980.
[5] மார்க்ஸ், அ. *சிற்றிலக்கியங்கள் சில குறிப்புகள்.* 2007.
[6] விமலானந்தம், மது. ச. *தமிழ் இலக்கிய வரலாறு.* 2004.
[7] *தமிழ் அடோன் அகராதி.* 2010.

**நிதிசார் கட்டுரையாளர் உறுதிமொழி:** இல்லை
**கட்டுரையாளர் நன்றியுரை:** இல்லை
**கட்டுரையாளர் உறுதிமொழி: இக்கட்டுரையில் எவ்வித முரண்பாடும் இல்லை என்று உறுதிமொழி அளிக்கிறேன்.**
இக்கட்டுரை கிரியேட்டிவ் காமன்சு ஆட்ரிபியூசன் 4.0வின் **Creative Commons Attribution4.0** கீழ் பன்னாட்டு உரிமம் பெற்றுள்ளது.

Academic Research News

Academic Research News
*Peer-Reviewed Journal*



**Volume 3, SPL Issue 1, July 2025** **E-ISSN: 2584-167X**

# Ethics of Life and *Abirami Anthathi*

**Dr. K. S. Kolappadhas,** Associate Professor of Tamil,
Pioneer Kumaraswamy College, Nagercoil, Tamil Nadu, India.
ORCiD: https://orcid.org/0000--0003-1600-8034
Received: 11 April 2025; Revised: 29 April 2025; Accepted: 5 June 2025; Available Online: 30 July 2025.

## Abstract

*Sri Abirami Pattar lived 300 years ago. He was born in a Brahmin family. His parents' names are not known, but he was called Abhirami Pattar along with the name of the Goddess who graces the place. He practised Shakti Pooja and Yoga at his time. Therefore, he always saw the Goddess Abirami in the highest heaven in the form of light and was immersed in bliss. Since Abirami Pattar was full of devotion and was not attached to worldly life in the path of liberation, other people could not understand Pattar. Goddess Abirami (Embrati) appeared as a fruit of wisdom and looked at Abirami Pattar and, with a sigh, said continue the work that you have started and complete it. Then she disappeared. The first thing that drives a person is the ego. If a person wants to say that he does not have an ego and says to others If others don't believe me, ask those around me. They will tell you that I don't have a single bit of ego. Even if one says this with a humble face, the ego is still raised in its head. So, the ultimate desire of every person is to reach God or to attain liberation. It can be said that the life of Abirami Pattar can be seen as the best example of living a benevolent life.*

**Keywords:** Abirami Pattar, *Abirami Anthathi*, Matriarchy, Fate, Blessings.

## References

[1] Ananthan. *Tamil Ilakkiya Varalaru*. Kanmani Pathippagam, Trichy, 2003.
[2] Ilayaperumal, Ira. *Abiramipattar Aruliya Abirami Anthathi Moolamum Uraiyum*. Sakunthalai Nilaiyam, Chennai, 2018.
[3] Bakthavathsala Barathi. *Ilakkiya Manidaviyal*. Adaiyalam, Trichy, 2014.
[4] ---.*Pathinen Keezhkkanakku Noolkal. Moolamum Thelivuraiyum (Muthal Thokuthi)*. Tamizh Nilaiyam, Chennai, 2007.

**Author Contribution Statement:** NIL.
**Author Acknowledgement:** NIL.
**Author Declaration:** I declare that there is no competing interest in the content and authorship of this scholarly work.

The content of the article is licensed under https://creativecommons.org/licenses/by/4.0/ International License.

Academic Research News

# Academic Research News

*Peer-Reviewed Journal*



**Volume 3, SPL Issue 1, July 2025** **E-ISSN: 2584-167X**

# அபிராமி அந்தாதியும் வாழ்வியலும்

**முனைவர் கோ. சி. கோலப்பதாஸ்,** தமிழ்த்துறை, இணைப்பேராசிரியர்,
பயோனியர்குமாரசுவாமிக் கல்லூரி, நாகர்கோவில், தமிழ்நாடு, இந்தியா.
**ORCiD: https://orcid.org/0000--0003-1600-8034**

**ஆய்வுசுருக்கம்**

*சுமார் 300 ஆண்டுகட்கு முன் தோன்றியவர் ஸ்ரீஅபிராமிபட்டர். அந்தணர் மரபில் தோன்றியவர் இவருக்குப் பெற்றோர் இட்டபெயர் இன்னதெனத் தெரியவில்லை எனினும் அத்திருத்தலத்தில் அருள்பாலிக்கும் அம்பிகையின் திருநாமத்துடன் சேர்த்து அபிராமிபட்டர் என அழைக்கப்பட்டார். சக்திபூஜையும், யோகநெறியும் செவ்வனே பயின்றுவந்தார். அதனால் என்றும் உச்சித்திலகத்தில் அம்பிகையை ஒளிவடிவமாகக் கண்டு பேரின்பத்தில் ஆழ்ந்தவர். பக்தி நிறைந்து முக்தி நெறியில் உலகப்பற்றற்று விளங்கியதால் பட்டரை மற்றவர்களால் புரிந்துக்கொள்ள முடியவில்லை. ஞானப்பழமாய் காட்சியளித்த எம்பிராட்டி பட்டரை நோக்கி, வாய் சோர்ந்து மன்னனிடம் கூறிய சொல்லையும் மெய்யே என நிறுவினோம் தொடங்கிய அந்தாதியைத் தொடர்ந்து முடிப்பாயாக என ஆணையிட்டு மறைந்தருளினாள். மனிதனை துரத்துவதில் முதல் இடம் பிடித்திருப்பது அகம்பாவம் எனக்கு அகம்பாவம் துளியும் கிடையாது நம்பாவிட்டால் என்னுடன் இருப்பவர்களைக் கேட்டுப்பார் துளிக்கூட அகம்பாவம் இல்லை எனக்கு என்பதை அவர்களே சொல்வார்கள் என்று அடக்கத்தைக் குறிக்கும் முகமாகச் சொன்னனாலும் கூட, அதிலும் அகம்பாவம் தலைநீட்டிவிடுகிறது மனிதனை அகம்பாவம் துரத்துகிறது. ஒவ்வொரு மனிதனின் இறுதி ஆசை இறைவனை அடைதல் அல்லது முக்தி அடைதல் ஆகும். மனிதனின் வாழ்வு அபிராமிபட்டரின் அபிராமி அந்தாதியில் அமைந்துள்ளது எனலாம்.*

**குறிப்புச்சொற்கள்:** அபிராமிபட்டர், அபிராமி அந்தாதி, தாய்வழிசமூகம், விதி, புண்ணியம்.

**முன்னுரை**

இளமையில் கல் என்பது முதுமொழி. இளமையில் கற்பது கல்லில் எழுதிய எழுத்தை ஒக்கும். இளமைப் பருவத்தை வீணாக்காது கற்றல் நன்று. வயதான பிறகு தான் பக்தி நூல்கள், வேதாந்த நூல்கள், ஆகமங்கள், உபநிடதங்கள், இதிகாசங்கள், புராணங்கள் முதலிய சமய நூல்களை படிப்பது என்று வைத்துக் கொள்ள வேண்டாம். முதுமைப் பருவத்தில் கண்பார்வை குறைந்து, அறிவுக் கூர்மை மழுங்கி, ஐம்புலன்களும் தளர்ந்து உடல் சோர்வு கண்ட பிறகு ஆர்வம் இருக்காது. எனவே, இளமைப் பருவமே சமயக்கருத்துக்களை அறிவது அவசியமாகும். பாலில் உறையிட்டுத் தயிராக்குவதைப் போலக் கொஞ்சம் கொஞ்சமாகத்தான் படிக்க வேண்டும். தயிரைப் பக்குவமாகக் கடைந்து பிறகு அதிலிருந்து வெண்ணெய் எடுக்கின்றோம். வெண்ணெய் மோரில் மிதக்கின்றது. தயிரிலிருந்து எடுக்கப்பட்ட வெண்ணெய் பின் மோரோடு ஒட்டுவதில்லை. இவ்வுலகில் ஞானமாகிய வெண்ணெய் கைவரப் பெற்றால் உலகப் பற்று நம்மை அணுகாது. அவ்வாறு உலகபற்று நம்மை அணுகாமல் இருக்க பக்தி இலக்கியம் படிப்பது அவசியமாகும்.

**அபிராமி பட்டர்**

சுமார் 300 ஆண்டுகட்கு முன் தோன்றியவர் ஸ்ரீ அபிராமி பட்டர். அந்தணர் மரபில் தோன்றியவர். இவருக்குப் பெற்றோர் இட்ட பெயர் இன்னதெனத் தெரிய வில்லை எனினும் அத்திருத்தலத்தில் அருள்பாலிக்கும் அம்பிகையின் திருநாமத்துடன் சேர்த்து அபிராமி பட்டர் என அழைக்கப்பட்டார்.இப்பெரியார் சக்தி பூஜையும், யோக நெறியும் செவ்வனே பயின்று வந்தார். அதனால் என்றும் உச்சித் திலகத்தில் அம்பிகையை ஒளி வடிவமாகக் கண்டு

**Volume 3, SPL Issue 1, July 2025** **E-ISSN: 2584-167X**

பேரின்பத்தில் ஆழ்ந்தவர். பக்தி நிறைந்து முக்தி நெறியில் உலகப் பற்றற்று விளங்கியதால் பட்டரை மற்றவர்களால் புரிந்துக் கொள்ள முடியவில்லை.

அக்காலத்தில் தஞ்சையை சரபோஜி மன்னர் ஆண்டு வந்தார். தெய்வ பக்தியும் மதப் பற்றும் மிகுந்தவர். அவர் ஒரு தை அமாவாசை தினத்தன்று காவிரி சங்கமத்திலே நீராடினார். திரும்பிய வழியில் ஸ்ரீ அமுதகடேசுவரையும் ஸ்ரீ அபிராமி அம்மையையும் வழிபட விரும்பித் திருக்கடவூரை அடைந்தார். நித்திய அனுஷ்டானங்களை முடிந்து விட்டுத் திருக்கோயிலுக்குச் சென்றார். அப்போது அபிராமி பட்டர் அம்பிகையின் சந்நிதியில் இவ்வுலக நினைவு ஏதுமின்றித் தியானத்தில் அமர்ந்திருந்தார். அவரது புத்தொளி வீசும் முகமும், தியான நிலையையும் சரபோஜி மன்னரைக் கவர்ந்தது. அருகில் இருந்தோரை நோக்கி, இவர் யார் என்று வினவினார். அரசர் ஒன்றும் கூறாது உட்சென்று அம்பிகையைத் தரிசனம் செய்தார். ஆனால், அரசனின் மனதில் பட்டரின் தோற்றம் மீண்டும் மீண்டும் வந்து கொண்டே இருந்தது. எனவே,திரும்பி வரும்போது பட்டரோடு ஏதேனும் பேச வேண்டும் என்ற பேரவாவில் அவரை நோக்கி, பட்டரே இன்று என்ன திதி என்று கேட்டார்.

கற்பனைக்கெட்டாத பெருவெளியில் முளைத்தெழுந்த முழுமதியாக அம்பிகையைக் கண்டு அக்காட்சியிலே களித்து நின்ற அபிராமி பட்டருடைய செவியில் அரசர் கேட்டது அரை குறையாக விழுந்தது. முழுமதியின் ஒளி வட்டத்திடையே அம்பிகையின் அருள் தோற்றத்தை ஆனந்தமாய்க் கண்டு பரவச முற்றிருந்த நிலையில் வாய் குழறி, இன்று பௌர்ணமி என்று விடையளித்தார். அரசரும் அவருடைய பரிவாரமும் அகன்ற பின்னர் தியானம் கலைந்தெழுந்த அபிராமிபட்டர் நிகழ்ந்ததை அறிந்து பெரிதும் வருந்தினார். பட்டர் தனக்கென்று ஒன்றும் இன்றி யாவற்றையும் அம்பிகைக்கே அர்ப்பணம் செய்து விட்ட வைராக்கியம் உடையவர். ஆதலினால் அந்த அம்பிகையை அப்பழியினின்றும் தம்மை மீட்க வேண்டும் என்று வேண்டினார். அம்பிகையின் சந்நிதியில் ஆழமான ஒரு குழி வெட்டி அதில் பெருநெருப்பு மூட்டி அதன் மேலே ஒரு விட்டத்தினின்றும் நூறு ஆரம் கொண்ட ஓர் உறியைக் கட்டித் தொங்கவிட்டார். பிறகு அதன் மீதேறி அமர்ந்து அம்பிகையே மனதால் நினைந்து, தலையால் வணங்கி சோர்வினால் வந்த மாபெரும் பழியைத் துடைத்துத் தரணி போற்றும் தலைமையைத் தாராளெனின் என் உடலை இவ்வெரிக்கு இட்டு உயிர் துறப்பேன் எனக் கடுஞ்சூள் உரைத்து ‘உதிக்கின்ற’ எனத் தொடங்கும் இந்த அந்தாதியைப் பாடத்தொடங்கினார். ஒவ்வொரு பாடலும் முடிந்த உடனே உரியின் ஒவ்வொரு கயிற்றை அரிந்துக் கொண்டே வந்தார். இந்நிலையில் கதிரவனும் மேலைக் கடலை நண்ணினான். அப்போது 79-வது பாடலாகிய

**விழிக்கே அருளுண்டு அபிராம வல்லிக்கு வேதம் சொன்ன**
**வழிக்கே வழிபட நெஞ்சுண்டு எமக்கு அவ்வழி கிடக்கப்**
**பழிக்கே சுழன்று வெம் பாவங்களே செய்து பாழ்நரகக்**
**குழிக்கே அழுந்தும் கயவர் தம்மோடு என்ன கூட்டினையே (79)**

என்ற பாடல் முடிந்த உடனே ஸ்ரீ அபிராமியம்மை பட்டருக்கு வெளிப்பட்டுத் தோன்றி காட்சி கொடுத்தருளினாள். அத்தோடு தன் தாடங்கம் ஒன்றைத் தனியே எடுத்து வான வீதியில் தவழ விட்டாள். அத்தாடங்கம் வட்ட மதியின் உருவாய்ப் பல கோடி நிலவின் ஒளியாய் நீல வானக் கடலிலே ஊர்ந்து வந்தது.ஆனந்தமயமாய், ஞானப் பழம்பாய்க் காட்சியளித்த எம்பிராட்டி பட்டரை நோக்கி, வாய் சோர்ந்து மன்னனிடம் கூறிய சொல்லையும் மெய்யே என நிறுவினோம் தொடங்கிய அந்தாதியைத் தொடர்ந்து முடிப்பாயாக என ஆணையிட்டு மறைந்தருளினாள்.

**தாய்வழி சமூகம்**

சங்க காலத்தில் தமிழ்ச் சமூகமானது மனித குலத்தின் தொடக்க நிலையான தாய்வழி மரபையும் அதனையடுத்து ஏற்பட்ட தந்தைவழி மரபையும் கொண்டதாகும். சங்க நூல்களில் பதிற்றுப்பத்து தமிழ்ச் சமூகங்களில் காணப்பட்ட மருமக்கள் தாய முறையை விளக்கும். ஒரு சமூகத்தின் அமைப்பானது (social structure) தாய்வழியில் அமைந்துள்ளதா, தந்தை வழியில்

**Volume 3, SPL Issue 1, July 2025** **E-ISSN: 2584-167X**

அமைந்துள்ளதா என்பதை உறுதிப்படுத்துவதாகும். சங்க காலத்திற்குப் பின்னர் தாய் வழி சமூகங்கள் முற்றிலுமாக அழிந்துவிட்டது என்று கருதமுடியாது. தமிழ் மரபு தொன்மையானது மட்டுமல்ல தொடர்ச்சியான மரபு. அந்த மரபின் தொடர்ச்சியே பெண் தெய்வ வழிபாடு ஆகும். அந்த அடிப்படையில் அபிராமி அந்தாதி ஒரு சிறந்த பக்தி இலக்கிய படைப்பாகும். அரசன் கேட்ட கேள்விக்கு தவறான பதிலை சொல்லிவிட்டோமோ என்று பயந்த அபிராமி பட்டர் அபிராமி தாயை நோக்கி தன் வேண்டுதலை சொல்லும் விதமாக அமைந்ததே அபிராமி அந்தாதி.

**முடியாட்சியும் அபிராபி பட்டரும்**

முடியாட்சி அரசில் அனைத்து வல்லமையும் கொண்டவர் அரசர். இவரே நாட்டின் ஒழுங்கைக் காக்கிறார். ஆனால் பூவுலகம் உள்ளிட்ட ஒட்டுமொத்த பிரபஞ்சத்தின் ஒழுங்கைக் காப்பவர் கடவுள். ஆக,பிரபஞ்சம் முழுமைக்குமான ஒழுங்கைக் காக்கும் இறைவனின் அருள் பெறாமல் எந்த மன்னனும் நீண்ட ஆயுளையோ, போரில் வெற்றியையோ, நாட்டின் நீதி, நிர்வாகம், பொருள், வளம், பஞ்சமின்மை, நோய் நொடியின்மை ஆகியவற்றையோ பெற இயலாது. இந்நிலையில் பிரபஞ்சத்தை இயக்கும் கடவுளரின் ஆற்றலைப் பெறுதல் என்பதே அரசனின் தொடர் விழைவாக இருந்தது.

பிராமணர்களின் வழி இவ்வாற்றலைப் பெற முன்வந்த பின் அரசு சார்ந்த வேள்வியும் யாகமும் பெருகின. குறிப்பிட்ட கால இடை வெளியில் மீண்டும் யாகமும் வேள்வியும் செய்து இறையாற்றலைத் தன்வயப்படுத்த மன்னர்கள் விரும்பினர். இத்தகு ஆற்றலைப் புதுப்பிக்கும் செயலானது ஒரு தொடர்ச்சியான விழைவாக இருந்ததால் வேத காலம் தொட்டு முடியாட்சி என்பது யாக, வேள்வி மையமிமட்ட சடங்கியல் சார்ந்ததாக உருவானது (kingship is a sacrificial organization) ‘முடியாட்சி என்பதே யாகம், வேள்வி சார்ந்து நடத்தப்பட்டது’ என்றாகிவிட்டது. அடுத்தடுத்த வரலாற்றுக் கட்டங்களில் சிறிது சிறிதாக இத்தன்மை மேலும் வலிமை பெற்றுவிட்டது.

நாட்டின் அனைத்து வல்லமையையும் (power) கொண்டவர் மன்னர். இவர் தம் வல்லமையால் எல்லோரையும் விட உயர்ந்து நிற்கிறார். அந்த அதிகாரம் எல்லாவற்றிர்கும் காரணமாக அமைகிறது. இந்த நிலையில் தான் அரசனின் கேள்விக்கு நாம் தவறாக பதில் உரைத்துவிட்டேன் என்று கருதிய அபிராமி பட்டர் தன் உயிரை மாய்த்துக்கொள்ள விரும்பினார். ஆனால் தாய் உள்ளம் கொண்ட அம்பிகை அபிராமி பட்டரை காத்தருளினார் என்பதே வாழ்வியலின் திருப்புமுனையாகும்.

**அபிராமிபட்டரும் வாழ்வியலும்**

அம்பிகையை நேரில் தரிசித்த அபிராமிபட்டர். இவர் பெயரைச் சொன்னதும் அபிராமி அந்தாதிதான் நினைவுக்கு வரும் அபிராமி அந்தாதி உயர்ந்ததுதான் சந்தேகம் இல்லை. ஆனால், அதில் உள்ள பல பாடல்களுக்கு விளக்க உரை இருந்தால்தான் பொருள் புரியும். ஆனால், படிக்கும்போதே எளிமையாகப் பொருள் புரியும் வண்ணம். நேருக்கு நேராக அம்பிகையிடம் முறையிடும் விதமாக அமைந்துள்ள பலப் பாடல்களையும் அபிராமி பட்டர் எழுதியுள்ளார். அபிராமியம்மைப் பதிகங்கள் என்ற பெயரில் அமைந்துள்ள அப்பாடல்கள் மக்கள் மத்தியில் ஏனோ பரவவே இல்லை. அந்தப் பாடல்களில் இருந்து ஒரு பாடல்,

**மிகையுந் துரத்தவெம் பிணியுந் துரத்த**
**வெகுளி யானதுந் துரத்த**
**மிடியுந் துரத்தநரை திரையுந் துரத்தமிகு**
**வேதனைகளுந் துரத்த**
**பகைந்தூத்தவஞ் சனையந் தூத்த**
**பசியென் பதுந்துரத்த**
**பாவந்துரத்த பதிமோகந்தூக்க**
**பலகாரியமுந் துரத்த**

Volume 3, SPL Issue 1, July 2025 E-ISSN: 2584-167X

**நகையுந்துரத்த ஊழ் வினையுந் துரத்த**
**நாளும் துரத்த வெகுவாய்**
**நாவறண் டோடிக்கால் தளர்ந்திடும் என்னை**
**நமனும் துரத்து வானோ?**
**ஆகில உல கங்கட்டும் ஆதார தெய்வமே**
**ஆதி கடவூரின் வாழ்வே**
**அமுதீசர் ஒரு பாகம் அகலாத சுகபாணி**
**அருள் வாமி! அபிராமியே! (அபிராமி அம்மை பதிகம், 11)**

தன்னந்தனி ஆளாக ஒருவன் ஓடிக்கொண்டிருக்கிறான். ஏராளமானோர் அவனைத் துரத்ததிக்கொண்டு ஓடுகிறார்கள் யார் அந்த மனிதன் துரத்துபவர்கள் யார் ஏன் துரத்துகிறார்கள் இதற்கு மிக அருமையான விளக்கம் தருகிறார் அபிராமிபட்டர். ஓடும் மனிதன் நாம் தான் நம்மைத் துரத்துவோர் குறித்து பெரிய பட்டியலே போடுகிறார் மனிதனை துரத்துவதில் முதல் இடம் பிடித்திருப்பது அகம்பாவம் எனக்கு அகம்பாவம் துளியும் கிடையாது நம்பாவிட்டால் என்னுடன் இருப்பவர்களைக் கேட்டுப்பார் துளிக்கூட அகம்பாவம் இல்லை எனக்கு என்பதை அவர்களே சொல்வார்கள் என்று அடக்கத்தைக் குறிக்கும் முகமாகச் சொன்னாலும் கூட, அதிலும் அகம்பாவம் தலை நீட்டிவிடுகிறது மனிதனை அகம்பாவம் துரத்துகிறது.

மிகை என்பதற்கு தீய செயல்கள் தவறுகள் தண்டனை என்னும் அர்த்தங்களும் உண்டு. அதன்படி பார்த்தால். தீய செயல்கள் துரத்த தவறுகள் துரத்த தண்டனை துரத்த தீய செயல்களும் அதனால் விளைந்த தவறுகளும் அவற்றுக்கு உண்டான தண்டனைகளும் நம்மைத் துரத்துகின்றன. இதிலிருந்து தப்பிப் பிழைத்தால் வெம்பிணியும் துரத்துகிறது என்கிறார். நோய்கள் துரத்துகின்றன. ஒவ்வொன்றுக்கும் ஒவ்வொரு காலம் உண்டு. ஆனால், இந்த நோய்களுக்கு மட்டும் காலம் என்பதே கிடையாது கருவில் இருக்கும் குழந்தை முதல், கடைசி காலத்தை நெருங்கிக்கொண்டிருக்கும் முதியோர்கள் வரை எல்லோரையும் நோய் தாக்குகிறது. நோய்க்கு ஆண், பெண் படித்தவன், படிக்காதவன், ஏழை,பணக்காரன் என்ற பேதமெல்லாம் கிடையாது எல்லோரையும் பாதிக்கும்.

தலைவலி போன்ற சாதாரண பிணிகள் மட்டுமல்ல தற்கால சிக்குன் குன்யா, கொரானா, பலவிதமான புற்றுநோய்கள் மருத்துவமே கிடையாது என்று சொல்லக்கூடிய எய்ட்ஸ் வரையிலும் அனைத்து நோய்களும் மனித குலத்தைத் துரத்துகின்றன. இந்தக் கொடுமையைக் குறிப்பதற்காகவே வெம்பிணியும் துரத்த என்றார் அபிராமிபட்டர். அடுத்தது கோபம்தான் சாதாரணமாகவே கோபம் பெருவியாதி மேலும் மனிதகுலத்துக்கு வியாதி வந்துவிட்டால் கேட்கவே வேண்டாம். யாரைப் பார்த்தாலும் எரிந்து விழுவோம் வியாதியும் கோபமும் நம்மைத் துரத்துவது மட்டுமல்ல நம்முடன் இருப்பவர்களையும் நம்மிடமிருந்து துரத்திவிடும் அதையே, வெகுளியும் துரத்த எனக் குறிப்பிடுகிறார். மிடியும்துரத்த அதாவது வறுமையும் நம்மைத் துரத்துகிறது. அது மட்டுமல்ல நாம் வறுமையில் இருக்கிறோம் என்றால் நம்மை நெருங்கவிடாமல் நம் உறவினர்கள் துரத்துவார்கள் எங்கே உதவி கேட்டு வந்துவிடுவானோ என்ற எண்ணமே அதற்குக் காரணம் இவ்வளவு நேரம் பார்த்த துரத்தல்களில் இருந்து தப்பிப் பிழைத்தாலும் நரை திரை மூப்புகளில் இருந்து தப்பிப் பிழைக்க முடியாது. நரை திரையும் துரத்த உடம்பில் தோல் சுருங்கி தலையும் வெளுத்துப் போய் நம்மைத் துரத்துகிறது.

வேதனைகளை நோக்கித் துரத்துகிறது தலை நரைத்துவிட்டது கறுப்புச் சாயம் பூசிவிடலாம் ஆனால் முதுமை வந்துவிட்டதே ஒருவேளை நம்மை வீட்டை விட்டு வெளியேற்றி முதியோர் இல்லத்தில் சேர்த்துவிடுவார்களோ நம் குழந்தைகள் மரியாதை கொடுக்காமல் நம்மை அவமானப்படுத்தி விடுவார்களோ என்ற வேதனை புலம்பல் வெளிப்படும். அக்கம் பக்கமெல்லாம்போய்ப் புலம்பச் சொல்லும் அதையே அடுத்ததாக மிகு வேதனைகளும் துரத்த

Volume 3, SPL Issue 1, July 2025 E-ISSN: 2584-167X

என்கிறார் அபிராமிபட்டர். பகை என்று வந்த பின்னர் கேட்கவே வேண்டாம். வஞ்சனை வெளிப்படும். அடுத்துக் கெடுப்பது கூடவே இருந்து குழி பறிப்பது யாருக்கும் தெரியாமல் வேரில் வெந்நீரை ஊற்றுவது என வஞ்சனை பட்டியல் நீண்டுகொண்டே போகும் வஞ்சனை வெளிப்படாத வரையிலும் அது நம்மைத் துரத்தித் துரத்திச் செயல்படச் செய்துகொண்டே இருக்கும். வஞ்சனை வெளிப்பட்டுவிட்டாலோ அதன் விளைவுகள் நம்மைத் துரத்தும் முக்கியமான ஒன்று எல்லோரையும் துரத்தும் எப்போதும் துரத்தும் பசி பசி தீர அறுசுவை உணவுதான் வேண்டும் என்பது இல்லை. அப்போதைக்கு ஏதாவது கிடைத்தால் போதும் ஆனால் நம்மைத் துரத்தும் பசியை துரத்துவதற்காக செய்யும் செயல்களையே பாடல் பகுதிகள் சொல்கின்றன.

**வருணனை**

அபிராமிஅந்தாதி கடவுளை பற்றி பாடபெற்றது என்றாலும் வருணனைகள் நிறைந்து காணப்பட்டன. என்பதற்கு இப்பாடல் சான்றாகும்.

**உதிக்கின்ற செங்கதிர், உச்சித் திலகம், உணர்வுடையோர்**
**மதிக்கின்ற மாணிக்கம், மாதுளம் போது, மலர்க்கமலை**
**துதிக்கின்ற மின்கொடி, மென்கடிக் குங்கும தோயம் என்ன**
**விதிக்கின்ற மேனி அபிராமி என்றன் விழுத்துணையே. (1)**

உதயமாகின்ற செங்கதிரவன் மேல் நெற்றியில் அணியும் சிந்துரத்திலகம் ஞானம் உடையவர்கள் நன்கு மதிக்கின்ற மாணிக்கம் மாதுளமலர் தாமரை மலரில் எழுந்தருளிய திருமகள் துதி செய்கின்ற மின்னற்கொடி, மெல்லிய வாசனையையுடைய குங்குமக் குழம்பு ஆகிய பொருள்களைப் போன்றவள் என்று கூறுகின்ற திருமேனியையுடைய அபிராமியம்மையே என்னுடைய மேன்மையான துணை ஆவாள்.

**அம்பிகையின் வேறுபெயர்கள்**

சுந்தரி, வந்தரி, சிந்துர வண்ணத்தினாள், அந்தரி, நீலி, கன்னிகைபயிரவி, பஞ்சமி, பாசாங்குசை, பஞ்ச பாணி, உயர்சண்டி காளிகலாவயிரவி மண்டலி மாலினிசூலி வராகி என்ற பல்வேறு நாமங்கள் கொண்டவர் அம்பிகை ஆவாள்.

**சுந்தரி எந்தை துணையின் பாசத் தொடரையெல்லாம்**
**வந்தரி, சிந்துர வண்ணத்தினாள் மகிடன் தலைமேல்**
**அந்தரி, நீலி, அழியாத கன்னிகை ஆரணத்தோன்**
**சுந்தரி கைத்தலத் தாள் மலர்த்தாள்என் கருத்தனவே. (8)**

சுந்தரி எந்தையாகிய சிவபெருமானுக்குரிய தேவி என்னுடைய சாபமாகிய தளைகளை எல்லாம் அழிக்கும் சிந்தூரநிறம் பொருந்தியவள் மகிஷாசுரனது சிரத்தின் மேல் நிற்கும் சுந்திரி, நீல நிறத்தை உடையவள் என்றும் அழிவில்லாத கன்னிகை பிரமதேவனது கபாலத்தைத் தாங்குகின்ற திருக்கரத்தை உடையவள். இத்தகைய அபிராமியின் தாமரை மலரைப் போன்ற திருத்தாள்கள் என் உள்ளத்துள்ளே என்றும் எழுந்தருளியிருக்கிறாள். அவள் வஞ்சகர் உயிரை பலியாக கொள்ளும் பெருமையுடையவள் கலைகளுக்கு தேவி வட்டமான மேகலையை உடையவள் குற்றம் தீர்ந்த வேதங்கயின் நாயகியாகவும் விளங்குபவள்.

**மோட்ச சாதனம் பெறுதல்**

ஒவ்வொரு மனிதனின் இறுதி ஆசை இறைவனை அடைதல் அல்லது முக்தி அடைதல் ஆகும். ஒரு சாதாரண மனிதனின் தேடலுக்கும் ஒரு மானின் தேடலுக்கும் இருக்கின்ற சுதந்திரம் முற்றிலும் வேறுப்பட்டது. மகான் நாடுகின்ற சுதந்திரம் அவரை எல்லையற்ற இன்பத்திற்கு விவரிக்க முடியாத ஆனந்தத்திற்கு அழைத்துச்செல்கிறது. சாதாரண மனிதன் தன் உலக ஆசைகளினால் ஆன்மாவை மேலும் மேலும் பல்வேறு சங்கிலிகளால் கட்டி சிறையில் அடைத்துவிடுகிறான். அந்த உலக சங்கிலிகளிலிருந்து விடுபட்டு மோட்சத்தை அடைய அதாவது முக்தி என்னும் ஆனந்தத்தை அளிப்பாயாக என வேண்டுகிறார்.

**நின்றும் இருந்தும் கிடந்தும்நடந்தும் நினைப்பது உன்னை**

Academic Research News

*Peer-Reviewed Journal*



**Volume 3, SPL Issue 1, July 2025** **E-ISSN: 2584-167X**

**என்றும் வணங்குவது உன்மலர்த்தாள் எழு தாமரையின்**
**ஒன்றும் அரும்பொருளே, அருளேஉமையே இமயத்து**
**அன்றும் பிறந்தவளே, அழியா முத்தி ஆனந்தமே (10)**

எழுதாமல் மேட்கப்படுகின்ற வேதத்தின் அரிய பொருளே. சிவபிரானது திருவருள் வடிவே, உமாதேவியே அன்று இமாசலத்தில் அவதரித்தாய் அழியாத முத்தியின்பமாக உள்ளாய் அடியேன் நின்றபடியும் தியானம் செய்வது உன்னையே என்றைக்கும் வழிபடுவது நின்றன் திருவடித்தாமரையே.

**தீராத நோய் தீர்ப்பவள்**

வாழ்வு சிலநேரம் இன்பமயமானதாகவும் சில நேரம் துன்பமயமானதாகவும் இருக்கின்றது இதில் எந்த நிலை உருவாகும்போதும் மேலானதெரு அன்பை இறைவன் தருவான் என்ற நம்பிக்கையில் வாழ்வு நகர்கிறது. ஆனால் அவன் அருளின்றி ஒரு நொடிகூட உயிர்வாழமுடியாது. இதற்கு இடையில் பல விதமான நோய்கள் உடலை வருத்துகின்றன. பிறவிப்பிணியை நீக்க வேண்டும். நாம் உடல் நோயை நோய் என்கிறோம் உடல் நோய்க்கு மருந்து உண்டு பிறவி நோய்க்கு மருந்தில்லை. பிறவி நோயை நீக்கும் மருந்து இறைவன் கையில் தான் உள்ளது. உண்மையில் நோய் என்பது பிறவி நோயாகும். பிறவி நோயை அழிக்க அபிராமி அம்மையை வேண்டுகிறார்.

**மணியே, மணியின் ஒளியே,ஒளிரும் மணிபுனைந்த**
**அணியே அணியும் அணிக்கு அழகேஅணு காதவர்க்குப்**
**பிணியே,பிணிக்கு மருந்தேஅமரர் பெருவிருந்தே**
**பணியேன் ஒருவரை நின்பத்மபாதம் பணிந்தபின்னே. (24)**

மாணிக்கம் போன்றறோய் அம்மாணிக்க மணியின் கண் உள்ள பரகாசம் போன்றோய் விளங்குகின்ற மாணிக்கங்களால் செய்யப் பெற்ற ஆபரணம் போன்றோய் நின்திருமேனியில் அணியப்படுகின்ற மணிகளுக்கு அழகாயிருப்பாய் நின்னை அணுகாமல் வீணே பொழுதுப் போக்குபவர்களுக்கு நோய் போன்றோய் நின்னை அணுகிய அடியவர்களது பிறவிநோய்க்கு மருந்து போன்றோய் தேவர்களுக்குப் பெரிய விருந்து போன்றோய், அடியேன் நின்னுடைய தாமரை போன்ற திருவடிகளை வணங்கிய பின்னர் வேறு ஒருவரைப் பணியேன். இனிமேல் எனக்கு எந்த பிணியும் வரக்கூடாது என்கிறார்.

**சகல சௌபாக்கியங்களும் உண்டாக**

ஒரு மனிதனின் அத்தியாவசிய தேவை தனம் அதாவது பணம் அல்லது செல்வமாகும் அந்த செல்வத்தை அளிப்பாயாக மேலும் ஒருவனை அறிவு தளத்தில் மேம்படுத்தி ஞானத்தை அழிக்க கூடியக் கல்வியை அளிப்பாயாக மனிதனை தளர்வு அடைய செய்யக் கூடியது மனமாகும். வாழ்க்கை என்பது நிலையற்றது அது கலைகின்ற கனவு ஆகும். அழகும் வாலிபமும் வாடிவிடும் அம்மையே நீயே என் தாய் நீயே என் தந்தை நீயே என் கணவன் நீயேஎன் அன்பு நீயேஎன் பிரபு நீயே என் கடவுள் எல்லாம் நீயே எனக்கு எல்லாமாகி இருக்கின்றாய் மனஒருமைப்பாட்டை ஒவ்வொரு நேரமும் என் மனதிற்கும் என் உடலுக்கும் கொடுப்பாயாக மனம் போதிய அளவு அடக்கப்படாமல் இருப்பதால் இடையூறுகள் ஏற்பட்டுக்கொண்டே இருக்கின்றன. ஆன்மாவை துயரங்களில் பங்கு கொள்ளாமல் பிடித்து வைத்துக்கொள்வது பெருமை வாய்ந்தது. அதற்கு அபிராமி அன்னையே அருள்புரிவாயாக.

**தனம் தரும்,கலவிதரும்ஒருநாளும் தளர்வு அறியா**
**மனம்தரும், தெயவ வடிவும் தரும்நெஞ்சில் வஞ்சமில்லா**
**இனம்தரும் நல்லன எல்லாம்தரும்அன்பர் என்பதர்க்கே**
**கனம்தரும் பூங்குழலாள் அபிராமி கடைக்கண்களே. (69)**

மேகத்தைப் போன்று, பூவை அணிந்த கூந்தலையுடைய அபிராமியின் கடைக்கண் அத்தேவியின் அன்பர்களுக்கு எல்லா வகை ஐசுவரியங்களையும் தரும், கல்வியைக் கொடுக்கும். ஒரு நாளேனும் தளர்ச்சியை அறியாத உறுதியான மனத்தை அளிக்கும். தெய்வீக

Volume 3, SPL Issue 1, July 2025 E-ISSN: 2584-167X

அழகை வழங்கும், மனத்தில் வஞ்சம் இல்லாத உறவினரையும் நண்பரையும், ஈயும் இன்னும் எவை எவை நல்ல பொருள்களோ அவை எல்லவற்றையும் வழங்குவாயாக.

**நிலம், வீடு போன்ற செல்வங்கள் பெருக**

ஒரு மனிதனின் அடிப்படைத் தேவை நிலம், வீடு, செல்வம் இதனை அடைய அம்பிகையை வழிப்படவேண்டும். சமுதாயத்தில் எவரோடும் சேர்ந்து வாழவேண்டும். அதற்கு உலகாய தேவைகள் அவசியமாகிறது. அதனை சிலர் இறைவனிடம் வேண்டிப்பெறுகின்றனர். மனைவி, கணவன், குழந்தைகள், வேலைக்காரர்கள், வீடு, செல்வம் இவை போன்றவை. ஆனால் இந்த உலகம் உணக்கானது அல்ல மனிதப்பிறவி வெடுத்த நாம் இந்த உலகில் வாழ்ந்தே ஆகவேண்டும் என்கிற தேவை இருக்கிறது. இந்த கருத்தின் அடிப்படையில் செயல்படுகிறோம். அதுவே நமக்கு கிடைக்கிறது.

**பாரும், புனலும், கனலும்,வெங்காலும், படர்விசும்பும்**
**ஊரும் முருகு சுவைஒளிஊறுஒலி ஒன்று படச்**
**சேரும் தலைவி,சிவாகாமசுந்தரி, சீறடிக்கே**
**சாரும் தவம்உடை யார்படையாத தனம்இல்லையே. (68)**

பூமியும், நீரும்,நெருப்பும், வாயுவும், ஆகாசமும், ஆகிய ஐந்து பூதங்களிலும் முறையே பரவிய இவ்வுலகில் மணமும் சுவையும், ஒளியும் பசிசமும் சத்தமுமாகிய தன்மந்திரைகள் இசையும் படி அவற்றினிடத்தே பரந்து நிற்கும் பரமேசுவரியாகிய சிவகாம சுந்தரியின் சிறிய திருவடிக் கண்ணே சார்ந்து நிற்கும் தவத்தை உடைய அடியார்கள் தமக்கே உரியனவாகப் பெறாத செல்வம் ஒன்றும் இல்லை. ஆகவே எனக்கு எல்லாச் செல்வங்களையும் அருள்வாயாக.

**யோகசித்தி கிடைக்கும்**

இறைவனை அடைய யோகசித்தி பெறவேண்டும் உங்கள் இதயத்தில் ஒரு வெளி இருப்பதை உணருங்கள் அதில் சுடர் ஒன்று ஒளிவிடுகிறது. அதுதான் உங்கள் ஆன்மா. அதனுள் உங்கள் கடவுள் பேரொளியாக இருப்பதாக எண்ணுங்கள் உங்கள் இதயத்தில் தியானம் செய்யுங்கள். பிரம்மசரியம், அகிம்சை, எதிரிகளிடம் இரக்கம் ,உண்மை பேசுதல் கள்ளுண்ணாமை, பிறர்மனை நயவாமை, பிறருக்கு உபகாரம் செய்தல்,களவு செய்யாமை, கொலை செய்யாமை, புலால் உண்ணாமை, இறை நம்பிக்கை இவையெல்லாம் மனித மாண்புகள். இவற்றில் நிறை நிலை அடைய வேண்டும். இதற்கு முயற்சி செய்ய வேண்டும் தன்னை முழுமையாக இறைவனுக்கு அற்பணம் செய்ய வேண்டும். எந்தஒரு ஆசையுடனும் இறைவனை சரணடைந்தால் அவனருள் கிடைப்பது கடினம் எனவே ஞானம், பத்தி, தியாகம், வைராகியம் இவற்றால் வழிப்பட்டால் யோகசித்திக் கிடைக்கும் என்கிறார்.

**சிறக்கும் கமலத் திருவே! நின்சேவடி சென்னிவைக்கத்**
**துறக்கம் தரும்நின் துணைவரும்நீயும், துரியம்அற்ற**
**உறக்கம் தரவந்து உடம்பொடுஉயிர்உறவு அற்றுஅறிவு**
**மறக்கும் பொழுதுஎன் முன்னேவரல்வேண்டும் வருந்தியுமே (89)**

சிறப்புற்ற தாமரையில் வீற்றிருக்கும் தேவி நின் சிவந்த திருவடியைத் தன் செந்நியிலே ஒருவன் அவனுக்கு மோட்ச பதவியைத் தரும் நின்னுடைய பதியாகிய பரமேசுவரரும் நீயும் உடம்போடு உயிருக்கு உள்ள நட்பு அற்ற அறிவு அழிந்து எல்லாம் மறக்கின்ற மரண காலத்தில் துரியம் கடந்த நிலையில் வரும் சிவானந்த அனுபவமாகிய துக்கத்தைத் தரும் பொருட்டு எழுந்தருளி வந்து அங்ஙனம் வருதல் வருத்தம் தருவதாயினும் அவ்வருத்தத்தை ஏற்று அடியேனுக்கு முன்னே வந்து காட்சி கொடுத்தருளுதல் வேண்டும் எனக் கேட்கிறார்.

**பிறவிப் பிணி**

மானிடபிறவி என்பது ஒரு பிணியாகும். இதனை வெல்ல இறைவனை அடைவது அவசியமாகும். மானிடபிறவியை வென்றால்தான் முத்தியை அடையமுடியும் ஒவ்வொரு மனிதனின் வாழ்வின் இறுதிநிலை முக்தியை நோக்கியதாக அடையவேண்டும் அதற்கு பிறவாமை வேண்டும்.

Academic Research News

Academic Research News
*Peer-Reviewed Journal*

**Volume 3, SPL Issue 1, July 2025** **E-ISSN: 2584-167X**

**பிறவிப்பெருங்கடல் நீந்துவர் நீந்தார்**
**இறைவன் அடிசேரா தார் ( குறள் 10)**

இதனை அனைத்து ஆன்மீக பெரியோர்களும் பாடியுள்ளனர். அதேபோல் அபிராமி பட்டரும் பல பாடல்களை பாடியுள்ளார்.

**கொடியே, இளஞ்சிக் கொம்பே, எனக்குவம் பேபழுத்த**
**படியே மறையின் பரிமள மே, பனி மால் இமயப்**
**பிடியே, பிரமன் முதலாய தேவரைப் பெற்ற அம்மே!**
**அடியேன் இறந்துஇங்கு இனிப் பிறவாமல் வந்து ஆண்டு கொள்ளே. (22)**

கொடி போன்றோய், இளைய வஞ்சிப்பூங் கொம்பே எனக்குக் காலமல்லாத காலத்திலே பழுத்த திருவுருவே, வேதமாகி மலரின் மனம் போன்றோய், குளிர்ச்சியையுடைய பெரிய இமாசலத்தில் விளையாடும் பெண்யானையே, பிரமன் முதலிய தேவர்களைப் பெற்ற தாயே, அடியேன் இவ்வுலகத்தின் இறந்த பின்னர் மீண்டும் பிறவாமல் இருக்கும்படி அடியேன்பால் எழுந்தருளி வந்து அடியேனை ஆண்டு கொண்டருள் செய்வாயாக.

**உமையும் உமையொரு, பாகனும் ஏக உருவில்வந்து இங்கு**
**எமையும் தமக்கு அன்பு செய்யவைத் தார் இனி எண்ணுதற்குச்**
**சமயங்களும் இல்லை,ஈன்றெடுப் பாள் ஒரு தாயும் இல்லை**
**அமையும் அமையுறு தோளியர் மேல்வைத்த ஆசையுமே. (31)**

உமாதேவியும் அத்தேவியை ஒரு பாகத்தில் உடைய சிவபிரானும் சேர்ந்து ஒருருவாக எழுந்தருளி வந்து பரிபக்குவமற்ற என் போன்றோரையும் தம் திருவடிக்கு அன்பு செய்யும்படி நன்னிலையில் வைத்திருளினர். ஆதலின் இனிமேல் கடைப்பிடிப்போமென்று எண்ணி நாம் ஆராய்தற்குரிய சமயங்கள் வேறு இல்லை எமக்குப் பிறவிப் பிணி நீங்கியதாதலின் இனி எம்மைப் பெற்று எடுப்பதற்குரியளாகிய தாயும் இல்லை! மூங்கிலைப் போன்ற தோளையுடைய மகளிர்பால் வைத்த மோகம் போதும்.

**என்குறை தீரநின்று ஏத்துகின் றேன் இனி யான்பிறக்கின்**
**நின்குறையே அன்றி யார்குறை காண்? இரு நீள்விசும்பின்**
**மின்குறை காட்டி மெலிகின்ற நேரிடை மெல்லியலாய்!**
**தன்குறை தீரஎங் கோன்சடை மேல்வைத்த தாமரையே. (72)**

உயர்ந்த வானத்தின் கண் மின்னலுக்கு குற்றத்தைக் கற்பித்து அதனினும் நுணுகிய திருவிடையையும் மென்மையாகிய இயல்பையும் உடையாய். ஏம்பிரானாகிய சிவபெருமான் நின் ஊடல் கண் தன் குறையை நீக்கும் அவ்வூடலைத் தீர்க்கும் பொருட்டு நின்னை வணங்கித் தன் சடையின் மேல் வைத்த நின்றன் திருவடி தாமரைகளையே என் குறைகள் நீங்கும்படி நின்று துதிக்கின்றேன். இனிமேல்யான் பிறவியை அடைந்தால் நின்குற்றமே, அல்லாமல் வேறு யார் குற்றம்?.

**அணிமாதி சித்திகளைப் பெற வேண்டுதல்**

**சித்தியும், சித்தி தரும்தெய்வம் ஆகித் திகழும்பரா**
**சுத்தியும், சக்தி தழைக்கும் சிவமும் தவம்முயல்வார்**
**முத்தியும், முத்திக்கு வித்தும், வித் தாகி முளைத் தெழுந்த**
**புத்தியும், புத்தியினுள்ளே புரக்கும் புரத்தை அன்றே. (29)**

அட்டமாசித்திகளும் அச்சித்திகளைத் தரும் தெய்வமாகி விளங்குகின்ற பராசக்தியும், சக்தியைத் தம்மிடத்தே தழைக்கச் செய்த பரமசிவமும் தவம் புரிவார் பெறும் மோட்ச ஆனந்தமும், அந்த முக்தியடைய பெறுவதற்கு அடியிரும் மூலமும், மூலமாகித் தோன்றி எழுந்த ஞானம் ஆகிய எல்லாமாக இருப்பவள், அறிவினுக்குள்ளே நின்று பாதுகாக்கும் திரிபுரசுந்தரியே எனக்கு சித்திகளை தருவாயாக.

**அம்பிகையே என்னைக் காப்பாயாக**

**இழைக்கும் வினைவழியே அடும் காலன், எனை நடுங்க**

Volume 3, SPL Issue 1, July 2025 E-ISSN: 2584-167X

**அமைக்கும் பொழுது, வந்து அஞ்சல்என் பாய், அத்தர் சித்தமெல்லாம்**
**குழைக்கும் களபக குவிமுலை யாமளைக் கோமளமே!**
**உழைக்கும்பொழுது, உன்னையே அன்னையே என்பன் ஓடிவந்தே. (33)**

இறைவரது திருவுள்ளம் முழுதும் உருகும்படி சியாமளாவாகிய மெல்லியலே, அடியேன் செய்யும் பாவத்தின் விளைவாக அது பற்றி என்னை வந்து கொல்லப் புகும் எமன் அடியேன் நடுங்குபடி என்னை அழைக்கும் சமயத்தில் வருந்தும் பொழுது நின்பால் ஓடிவந்து நின்னையே ‘அன்னையே சரணம்’ என்ரு புகலடைவேன் அக்காலத்தில் என்பால் எழுந்தருளி,‘நீ அஞ்சற்க’ என்று கூறி என்னைப் பாதுகாத்தருள வேண்டும்.

**பூர்வ புண்ணியம் பலன்**

**நாலடியாரில் பழவினை என்று ஒரு அதிகாரமே உள்ளது.**

**பல்லாவுள் உய்த்து விடினும் குழக்கன்று**
**வல்லதாம் தாய்நாடிக் கோடலைத் தொல்லைப்**
**பழவினையும் அன்ன தகைத்தேதற் செய்த**
**கிழவனை நாடிக் கொளற்கு (நாலடியார்-101)**

பல பசுக்களின் கூட்டத்தில் கொண்டு போய்விட்டாலும் இளைய பசுங்கன்று தன் தாயைத் தேடி அடைதலில் வல்லதாகும். அதுபோல முற்பிறப்பில் செய்த பழ வினையும் அவ்வினை செய்தவனைத்தேடி அடைதலில் வல்லதாகும்.

பூர்வ புண்ணியம் என்பது நாம் முற்பிறவியில் செய்திருக்கும் நன்மை தீமையைப் பொறுத்தே அமைகிறது. பூர்வ புண்ணியம் வலிமை பெற்றிருந்தால் அவருக்கு எல்லா சக்திகளும் எளிதாக கைகூடும். அதற்காக உளைக்காமல் இரு என்று அர்த்தமல்ல. நிறைய புண்ணிய காரியங்கள் செய்வது, மிகவும் நேர்மையாக வாழ்க்கை நடத்துதல், இறைவனிடம் நம்பிக்கையுடன் இருத்தல் போன்றவை செய்தால் பூர்வ புண்ணியம் நன்றாக இருக்கும் என்பர். ஆகவே எப்போதும் நல்ல விசயங்களையே செய்வோம். அடுத்த பிறவிக்காக அல்ல நாடும் நாமும் நலமாக வாழ நல்ல செயல்களை மட்டுமே செய்வோம்.

ஜனனீ ஜென்ம சௌக்கியானாம் வர்த்தினி குலசம்பிரதாம் பதவீ பூர்வ புண்ணியானாம் லிக்கியதே ஜென்மபத்திகா என்கிறது சாஸ்திரம்.

**வாணுதற் கன்னியை, விண்ணவர் யாவரும் வந்து இறைஞ்சிப்**
**பேணதற்கு எண்ணிய எம்பெரு மாட்டியைப் பேதைநெஞ்சில்**
**காணுதற் கண்ணியள் அல்லாத கன்னியைக் காணும் அன்பு**
**பூணுதற்கு எண்ணிய எண்ணம் அன்றோ முன்செய் புண்ணியமே. (40)**

ஒளிபொருந்திய நெற்றியிலே திருவழி படைத்தவளை தேவர்கடிளல்லோரும் வந்து வழிபடத் தூண்டும் எம் தலைவியை அறியாமையுடைய நெஞ்சினாற் காண்பதற்குரிய கன்னியைத் தரிசித்துப் பேறுபெறும் அன்பை மேற்கொள்ளுவதற்கு எண்ணிய எண்ணன்றோ முற்பிறவிகளிலே செய்த புண்ணியத்தின் பயனாவது ஆகும்.

**விதியைவெல்லுதல்**

விதியைவெல்லுவது அரிதாகும் ஆனால் அம்பிகையை வழிப்பட்டால் விதியையும் வெல்ல முடியும் என்பதனை இப்பாடல் மூலம் எடுத்துரைக்கிறார்.

**தங்குவர் கற்பகத் தாருவின் நீழலில் தாயர் இன்றி**
**மங்குவர், மண்ணில் வழுவாப் பிறவியை, மால்வரையும்**
**பொங்குஉவர் ஆழியும்,ஈரேழ் புவனமும், பூத்தஉந்திக்**
**கொங்குஇவர் பூங்குழ லாள் திருமேனி குறித்தவரே. (75)**

எட்டுத் திசைகளிலுள்ள மலைகளையும் உப்புத் தன்மையையுடைய ஏழு கடல்களையும் பதினான்கு புவனங்களையும் பெற்றெடுத்த திருவயிற்றையும் மணமிக்க மலரை அணிந்த கூந்தலையும் உடைய தேவியின் திருவுருவத்தைத் தியானம் செய்யும் அடியார் இந்திர பதவி

Academic Research News

# Academic Research News

*Peer-Reviewed Journal*



**Volume 3, SPL Issue 1, July 2025** **E-ISSN: 2584-167X**

பெற்றுக் கற்பக விருட்சத்தின்ட நிழலில் வீற்றிருப்பார், பின்பு பூமியில் பிறந்திருந்த இடையறவின்றி வரும் பிறவியைத் தம்மைப் பெறும் தாயார் இல்லாமையாலே மங்கச் செய்வர்.

**முடிவுரை**

மனிதப்பிறவி துன்பமயமானது இதை வெல்லுவது கடினமாகும் ஒவ்வொரு நாளும் ஒவ்வொருவிதமான துன்பத்தினை மனிதர்கள் அனுபவிக்கின்றனர். மனிதனுக்கு ஏற்ப சூழல் காரணமாக அவரவருக்கு இன்பமும், துன்பமும் மாறிமாறி வருகின்றது. இதை வெல்ல இறைவன் ஒருவராலேயே முடியும் என்பதனை எடுத்துரைக்கும் விதமாக அபிராமி பட்டரின் வாழ்வும் அபிராமி அந்தாதியும் அமைந்துள்ளது எனலாம்.

**குறிப்புகள்**

[1] ஆனந்தன். *தமிழ் இலக்கிய வரலாறு*. கண்மணி பதிப்பகம், திருச்சி, 2003.
[2] இளையபெருமாள், இரா. *அபிராமிபட்டர் அருளிய அபிராமி அந்தாதி மூலமும் உரையும்*. சகுந்தலை நிலையம், சென்னை, 2018.
[3] பக்தவத்சல பாரதி. *இலக்கிய மானிடவியல்*. அடையாளம், திருச்சி, 2014.
[4] ---. *பதினெண் கீழ்க்கணக்கு நூல்கள் - மூலமும் தெளிவுரையும் (முதல் தொகுதி)*. தமிழ் நிலையம், சென்னை, 2007.

**நிதிசார் கட்டுரையாளர் உறுதிமொழி:** இல்லை
**கட்டுரையாளர் நன்றியுரை:** இல்லை
**கட்டுரையாளர் உறுதிமொழி: இக்கட்டுரையில் எவ்வித முரண்பாடும் இல்லை என்று உறுதிமொழி அளிக்கிறேன்.**

இக்கட்டுரை கிரியேட்டிவ் காமன்சு ஆட்ரிபியூசன் 4.0வின் **Creative Commons Attribution4.0** கீழ் பன்னாட்டு உரிமம் பெற்றுள்ளது.

Academic Research News

Academic Research News

Peer-Reviewed Journal



Volume 3, SPL Issue 1, July 2025 E-ISSN: 2584-167X

# *Kalingathupparani;* Timeline and Perception

**Dr. R. Govindaraj,** Assistant Professor of Tamil, Thiagarajar College, Madurai, Tamil Nadu, India.
ORCiD: https://orcid.org/0009-0007-8650-9666

Received: 1 April 2025; Revised: 21 April 2025; Accepted: 9 May 2025; Available Online: 30 July 2025.

## Abstract

*Since the Sangam period, minor literary traditions have been gradually developing around the 12th century BCE. They began to exert a notable influence within the Tamil literary world. In the context of the Tamil language, it is plausible that these smaller literary genres originated as early as the Tolkappiyam period. The literary genres and devices such as song, oral expression, narrative text, rhythm, and figurative devices, are often associated with categories like Ammai, Aesthetics, Dhol, Virunthu, Iiyaibu, Pulan, and Ilaivu are considered part of minor literature (Citrilakkiyam). Several Tamil works including Panniru Patiyal, Venba Patiyal, Navaneetha Patiyal, Prabandha Marabiyal, Chidambara Patiyal, Ilakkana Vilakka Patiyal, Thonnool Vilakkam, Muthuveeriyam, Prabandha Thirattu, and the scholarship of U. V. Swaminatha Iyer, have contributed to define the scope of minor literature. Among them, "Kalingattuparani: occupies a distinctive place. The Parani form has been exemplified in this work. It has evolved as a celebratory genre extolling victory in war. Significantly, in the role of Parani, which was linked to divine worship was gradually transferred to the glorification of kingship and royal conquest. The structural and thematic traces of this Parani form can already be discerned in the Tolkappiyam and early Sangam texts. Thus, this article explores the subject under the themes of its timeline and perception in "Kalingattuparani."*

**Keywords:** *Kalingathuparani*, Kotravai, War, Karunakara Thondaiman, Ananthapadaman.

## References

[1] Ragava Iyenkar, R. *Panniru Paddiyal*. Senthamizhp Pirasuram, 1951.
[2] Ramakrishnan, Ira. *Sittilakkiyam Oor Arimugam*. Saratha Pathippagam, Chennai, 2022.
[3] Kannaiya, A.V. *Kalingathuparani*. P.N. Acchukkudam, 1941.
[4] Gopalaiyar. A. *Moovarula (Rasarasa Sozhan Ula).* Senthamizh Manthiram, Putthakacchalai, 1925.
[5] Sanmukam Pillai, M. Suntharamoorthi. E. *Thivakaram Muthal Thokuthi*. Chennai Palkalaik Kazhakam, 1990.
[6] Saminathaiyar, U.V. *Purapporul Venpamalai*. U.Ve. Saminathaiyar Nool Nilaiyam, 1895.
[7] Sivagnanam, M. P. *Silappathikaram Mathuraik Kandam*. Ainthinai Pathippagam, 2003.
[8] Seenivasan, R. *Silappathikaram Moolamum Thiranayvum*. Aniyakam Pathippagam, 1990
[9] Jeyaraman, N.V. *Sittilakkiya Selvankal*. Manivasakar Pathippagam, Chidambaram, 2021.
[10] Balasubramaniyan, S. *Thiruppavai Vilakkam*. Pari Nilaiyam, 1995.
[11] Manikkavasakan, G. *Kalingathuparani*. Uma Pathippagam, 1998.
[12] Vimalananatham, Mathu. S. Tamil Illakkiya Varalaru. Mullai Nilaiyam. Chennai, 2014.
[13] Vellaivaranar, K. *Tholkappiyam Seyyuliyal Uraivalam*. 1989.
[14] Vaitthiyanatha Thesikar. *Ilakkana Vilakkap Paddiyal*. Sarasvathi Mahal Noolakam, Tanjore, 1974.

**Volume 3, SPL Issue 1, July 2025** **E-ISSN: 2584-167X**

[15] Javakar, K. *Thinaikkodpadum Thamizhk Kavithaiyiyalum*. Kavya Pathippakam, Chennai, 2010.

**Author Contribution Statement:** NIL.
**Author Acknowledgement:** NIL.
**Author Declaration:** I declare that there is no competing interest in the content and authorship of this scholarly work.
The content of the article is licensed under https://creativecommons.org/licenses/by/4.0/ International License.

Academic Research News

# Academic Research News

*Peer-Reviewed Journal*



**Volume 3, SPL Issue 1, July 2025** **E-ISSN: 2584-167X**

# *கலிங்கத்துப்பரணி; காலமும் கருத்தும்*

**முனைவர் ரே. கோவிந்தராஜ்,** உதவிப்பேராசிரியர், தமிழ்த்துறை, தியாகராசர் கல்லூரி, மதுரை, தமிழ்நாடு, இந்தியா.
**ORCiD: https://orcid.org/0009-0007-8650-9666**

**ஆய்வுச் சுருக்கம்**

*சங்க காலம் முதலாகக் கருக்கொண்டு மெல்ல மெல்ல வளர்ச்சியுற்று வந்த சிற்றிலக்கியங்கள் கி.பி.12ஆம் நூற்றாண்டு முதல் தமிழுலகில் பெருஞ் செல்வாக்குப் பெற்றன. தமிழ் மொழியைப் பொறுத்தவரையில் தொல்காப்பியர் காலத்தில் சிற்றிலக்கிய வகை தோன்றிவிட்டதெனலாம். இவ்விலக்கியத்தில் உள்ள பாட்டு, உரை, வாய்மொழி, பிசி, அங்கதம், முதுசொல், வனப்பு என்ற பெயரில் அம்மை, அழகு, தொன்மை, தோல், விருந்து, இயைபு, புலன், இழைவு ஆகிய பதிவுகள் சிற்றிலக்கியத்தின் கூறுகள் எனலாம். பன்னிரு பாட்டியல், வெண்பாப் பாட்டியல், நவநீதப் பாட்டியல், பிரபந்த மரபியல், சிதம்பரப் பாட்டியல், இலக்கணவிளக்கப் பாட்டியல், தொன்னூல் விளக்கம், முத்துவீரியம், பிரபந்த தீபிகை, சுவாமிநாதம், பிரபந்தத் திரட்டு, ஆகிய நூல்கள் சிற்றிலக்கியத்தின் இலக்கணத்தை வரையறுத்துக் கூறுகின்றன. இச்சிற்றிலக்கிய வகைகளில் கலிங்கத்து பரணியும் ஒன்றாகும். இந்த பரணி தெய்வத்திற்குரிய இடம் அரசனுக்கெ மாறி போர் வெற்றியை கொண்டாடும் இலக்கியமாக பரணி வளர்ச்சி அடைந்திருக்கிறது. இதன் வடிவங்கள் தொல்காப்பியத்திலும் சங்க பனுவல்களிலும் உள்ளன. எனவே 'கலிங்கத்துப்பரணியின் காலமும் கருத்தும்' என்னும் பொருண்மையில் இக்கட்டுரை அமைகிறது.*

**குறிப்புச்சொற்கள்:** *கலிங்கத்துப் பரணி,* கொற்றவை, போர், கருணாகர தொண்டைமான், அனந்தபத்மன்.

**முன்னுரை**

சங்க காலம் முதலாகக் கருக்கொண்டு மெல்ல மெல்ல வளர்ச்சியுற்று வந்த சிற்றிலக்கியங்கள் கி.பி.12ஆம் நூற்றாண்டு முதல் தமிழுலகில் பெருஞ் செல்வாக்குப் பெற்றன. தமிழ் மொழியைப் பொறுத்தவரையில் தொல்காப்பியர் காலத்தில் சிற்றிலக்கிய வகை தோன்றிவிட்டதெனலாம். இவ்விலக்கியத்தில் உள்ள பாட்டு, உரை, வாய்மொழி, பிசி, அங்கதம், முதுசொல், வனப்பு என்ற பெயரில் அம்மை, அழகு, தொன்மை, தோல், விருந்து, இயைபு, புலன், இழைவு ஆகிய பதிவுகள் சிற்றிலக்கியத்தின் கூறுகள் எனலாம். பன்னிரு பாட்டியல், வெண்பாப் பாட்டியல், நவநீதப் பாட்டியல், பிரபந்த மரபியல், சிதம்பரப் பாட்டியல், இலக்கணவிளக்கப் பாட்டியல், தொன்னூல் விளக்கம், முத்துவீரியம், பிரபந்த தீபிகை, சுவாமிநாதம், பிரபந்தத் திரட்டு, ஆகிய நூல்கள் சிற்றிலக்கியத்தின் இலக்கணத்தை வரையறுத்துக் கூறுகின்றன. "காப்பியம் போல் கதைத் தொடர்ச்சி இல்லாமல் அறம், பொருள், இன்பம், வீடு ஆகியவற்றில் ஏதேனும் ஒன்றினை கொண்டு பாடப்பட்டிருக்கும். பேரிலக்கியங்கள் அறம், பொருள், இன்பம், வீடு நான்கும் உணர்த்தும். இவற்றில் ஒன்றோ பலவோ குறைந்துவரின் அவை சிற்றிலக்கியமாகும். பின்னைய நாளில் புற்றீசல் போன்று கிளைத்த நூல்கள் 96 வகையாகக் கொண்டு, இவற்றிற்கேற்ப இலக்கணம் வகுத்தனர். பன்னிரு பாட்டியல், வெண்பாப் பாட்டியல், நவநீதப் பாட்டியல், இலக்கண விளக்கப் பாட்டியல், சிதம்பரப் பட்டியல், பிரபந்தத் திரட்டு போன்ற பிரபந்த இலக்கண இயம்பும்." (விமலானந்தம், மது. ச.) தனிப்பாடல்களையும் சிற்றிலக்கிய வகையில் அடக்குகின்றனர். அவற்றைத் தொகுத்துப் பார்க்கும் போது பின்வரும் விளக்கம் கிடைக்கின்றது:

Volume 3, SPL Issue 1, July 2025 E-ISSN: 2584-167X

1. **இறைவன், மன்னன், வள்ளல், சாதாரண மக்கள் முதலியவர்களில் ஒருவரைத் தலைவராகக் கொண்டு பாடப்படும் இலக்கிய வகை.**
2. **பாட்டுடைத் தலைவனின் வாழ்க்கையின் ஒரு பகுதியை மட்டும் பாடுபொருளாகக் கொள்ளும்.**
3. **அறம், பொருள், இன்பம், வீடு என்ற நான்கு உறுதிப் பொருள்களுள் ஒன்றைப் பற்றி மட்டுமே கூறும்.**
4. **குறைந்த பாடல் எண்ணிக்கையைக் கொண்டு அமையும்.**
5. **பல்வேறு வகையான யாப்பு அமைப்புகளால் பாடப்படும்.**
6. **ஒவ்வொரு சிற்றிலக்கியமும் ஒவ்வொரு வகையான யாப்பில் அமைந்திருக்கும்.**

**பரணி**

போர்க்களத்தில் ஆயிரம் யானைகளைக் கொன்று வெற்றி கொண்ட வீரரைப் புகழ்ந்து பாடுவதைப் ‘பரணி’ என்று வழங்குவர்.

**ஆனை யாயிரம் அமரிடை வென்ற**
**மாணவனுக்கு வகுப்பது பரணி (இலக்கண., ப.206)**

என்பது இலக்கண விளக்கப் பாட்டியல் சூத்திரம். பெரும்போர் புரிந்து வெற்றி பெற்ற வீரனைச் சிறப்பித்துப் பாடுவதையும் பரணி என்று வழங்கும் மரபு உண்டு. இவ்வாறு பரணி நூல் அரசர் முதலியவர்கள் மேல் செய்யப்படுவதன்றி, தெய்வங்கள் மேலும் தத்தம் ஆசிரியர்கள் மேலும் அறிஞர்களால் இயற்றப் பெற்று வழங்கும். கலிங்கத்துப் பரணி, தக்கயாகப் பரணி, இரணியவதைப் பரணி, கஞ்சவதைப் பரணி, அஞ்ஞவதைப் பரணி, மோகவதைப் பரணி, பாசவதைப் பரணி என்பன அவற்றிற்கு எடுத்துக்காட்டுகளாகும். நூல் பாடுவோர் கொச்சகக்கலி என்னும் பாட்டின் உறுப்பாகிய ஈரடிக் கலித்தாழிசை என்ற உறுப்பை மேற்கொள்வது வழக்கம். இதனை,

**மயக்கறு கொச்சகத் தீரடி இயன்று**
**நயப்புறு தாழிசை உறுப்பிற் பொதிந்து**
**வஞ்சி மலைந்த உழிஞை முற்றித்**
**தும்பையிற் சென்ற தொடுகழல் மன்னனை**
**வெம்புசின மாற்றான் தானை வெங்களத்தில்**
**குருதிப் பேராறு பெருகுஞ் செங்களத்து**
**ஒருதனி ஏத்தும் பரணியது பண்பே (பன்னிரு பாட்டியல். ப.35)**

என்ற பன்னிரு பாட்டியல் சூத்திரத்தால் அறியலாம். பொதுவாக நூலில் கடவுள் வாழ்த்து, கடைதிறப்பு, காடு, காளிகோயில் முதலிய பல்வகைச் சிறப்புக்களும் பல்வேறு சுவைகள் கொப்புளிக்கும் படி அமைக்கப் பெறும் இந்த வழக்கத்தை,

**கடவுள் வாழ்த்துக் கடைதிறப் புரைத்தல்**
**கடும்பாலை கூறல் கொடுங்காளி கோட்டம்**
**கடிகணம் உரைத்தல் காளிக் கதுசொலல்**
**அடுபேய்க் கவள்சொலல் அதனல் தலைவன்**
**வண்புகழ் உரைத்தல் எண்புறத் திணை யுற**
**வீட்டல் அடுகளம் வேட்டல் (இலக்கண., ப.206)**

என்ற இலக்கண விளக்கச் சூத்திரப்பகுதியாலும்,

**தேவர் வாழ்த்தே கடைநிலை பாலை**
**மேவி அமரும் காளி கோயில்**
**கன்னியை ஏத்தல் அலகை விநோதம்**
**கனாநிலை நிமித்தம் பசியே ஒகை**
**பெருந்தேவி பீடம் அழகுற இருக்க**
**அமர்நிலை நிமித்தம் அவள்பதம் பழிச்சா**

Volume 3, SPL Issue 1, July 2025 E-ISSN: 2584-167X

**மன்னவன் வாகை மலையும் அளவு**
**மரபினி துரைத்தல் மறக்களம் காண்டல்**
**செருமிகு களத்திடை அடுகூழ் வார்த்தல்**
**பரவுதல் இன்ன வருவன பிறவும்**
**தொடர்நிலை யாகச் சொல்லுதல் கடனே (பன்னிரு., ப.35-36)**

என்ற பன்னிரு பாட்டியல் சூத்திரத்தாலும் அறியலாம். இதனைத் தேவபாணியில் அடக்குவர் பேராசிரியர் என்னும் தொல்காப்பிய உரையாசிரியர். "பரணியுள் புறத்திணை பலவும் விராய் வருதலின் அது தேவ பாணியாம் என்றது என்னையெனின் அவையெல்லாம் காடு கெழு செல்விக்குப் பரணிநாட் கூழுந்துணங்கையும் கொடுத்து வழிபடுவதோர், வழக்குபற்றி, அதனுட் பாட்டுடைத் தலைவனைப் பெய்து சொல்லப்படுவன ஆதலால் அவை யெல்லாவற்றானும் தேவபாணியாம்" என்பது அவர் உரையாகும். நச்சினார்க்கினியரும் அதே சூத்திரத்திற்கு உரையெழுதுங்கால், "பரணியாவது-காடு கெழு செல்விக்குப் பரணிநாட் கூழுந் துணங்கையும் கொடுத்து வழி படுவதோர் வழக்கு பற்றியது; அது பாட்டுடைத் தலைவனைப் பெய்து கூறலிற் புறத்திணை பலவும் விராயிற்று" என்று கூறுகிறார்.

**பரணி பெயர் காரணம்**

பரணி என்ற பெயர்க் காரணம் பலவாறாகக் கூறப்பெறுகின்றது. டாக்டர் உ.வே. சாமிநாதர் அவர்கள் பரணி என்ற நாள்மீன் காளியையும் யமனையும் தன் தெய்வமாகப் பெற்றது என்றும் அந்நாள்மீனால் வந்த பெயரே நூலுக்கும் பெயராக வந்தது என்றும் அவ்வாறு கொள்வதே ஏற்புடைத்து என்றும் கூறுகிறார்கள். இதற்கு,

**காடு கிழவோள் பூத மடுப்பே**
**தாழி பெருஞ்சோறு தருமனாள் போதமெனப்**
**பாகு பட்டது பரணிநாட் பெயரே (திவாகரம். ப.36)**

என்னும் திவாகரத்தையே அவர்கள் ஆதாரமாகக் கொண்டார்கள்.

பெரிய பரண் அமைத்து காவல் புரிவது போன்று போர்க்களத்தில் வீரன் ஒருவன் யானை மீது இருந்து எதிரிகளைத் துரத்துவதால் இப்பெயர் வந்திருக்கலாம். தொல்காப்பியத்தில் கூறப்படும் உழிஞ்சை, வாகை, பாடாண் திணை சார்ந்த சில துறைகளில் வளர்ச்சியே பரணி இலக்கியம். இத்துறைகள் புறநானூறு, பதிற்றுப்பத்து ஆகிய சங்க நூல்களில் தனித்தனி பாடல்களாக உள்ளன. களவழி என்னும் துறை களவழி நாற்பது என்னும் தனி நூலாயிற்று. முழுமையாகக் கிடைக்கும் பரணி காலத்தால் பழமையானது கலிங்கத்து பரணி ஆகும். (ராமகிருஷ்ணன் இரா, முனைவர்).

மேற்கண்ட கலிங்கத்துபரணிக்கு முன்பு சில பரணி நூல்கள் இருந்துள்ளதை பின்வரும் உலா நூல்கள் சான்று பகர்கின்றன.

**பப்பத் தொரு பசிப்பேய் பற்ற ஒரு பரணி**
**கொப்பத் தொருகளிற்றால் கொண்ட கோன் (மூவருலா. ப.57)**
**சங்கமத்துக் கொள்ளும் தனிபரணிக்கு எண்ணிறந்த**
**துங்க மதயானை துணித்தோனும் (மூவருலா. ப. 2)**

பரணியின் நோக்கம் காளியைப் போற்றுதலே என்று கொள்ள முடிகிறது; அரசனைச் சார்த்தி கூறுதல் சார்பாகவே இலக்கியத்துள் இடம்பெறுகிறது. ஆனால் அரசனது வெற்றியைப் போற்றுதலே பரணியின் நோக்கம் என்று பொதுவாகச் சொல்லப்படுகிறது. பிற்காலத்தில் தோன்றிய பரணிகளுள் போர் தவிர்த்த மெய்யியல் சார்ந்த பொருள் கூறுகளையும் நோக்கமாகக் கொண்டு பரணிகளும் உள்ளன. ஆகவே தொடக்கத்தில் காடுகெழு செல்வியைப் போற்றுதலை நோக்கமாகக் கொண்ட பரணி, பிற்காலத்தில் அரசனை மையம் இட்டு எழுந்திருக்கலாம் என்று எண்ணத் தோன்றுகிறது. ஏனெனில் பரணி இலக்கியம் தேவபாணி என்றே சொல்லப்படுகிறது. தெய்வத்திற்குரிய இடம் அரசனுக்கு என்று மாறி இருக்கலாம் என்கிறார் க. வெள்ளைவாரணார். (க.வெள்ளைவாரணர். ப. 705)

Academic Research News

# Academic Research News

*Peer-Reviewed Journal*



**Volume 3, SPL Issue 1, July 2025** **E-ISSN: 2584-167X**

இது குறித்து க. ஜவகர் கூறும் போது, "இராச பாரம்பரியம், அவதாரம் ஆகியன பரணிகளில் முக்கியமாக இடம்பெற்றுள்ளன. தொல்காப்பிய புறத்திணையில் போக்கின் அடிப்படையில் கடை திறப்பு என்னும் அகத்துறை உறுப்பு இடம்பெறுமா? என்று கேட்டால், பரணி இலக்கியத்தின் ஆக்கம் அதன் - அதன் வளர்ச்சிப் போக்குகள் போன்றவற்றை நோக்கும்போது பரணி இலக்கியம் போர் நிகழ்வு, போருக்குப் பிந்தைய நிகழ்வு என்னும் இருவேறு நிலைகளில் பயணிக்கிறது என்று கூற முடியும். பிற்கால இலக்கண நூல்கள் பரணி இலக்கியத்தின் உறுப்புகளை வகைத்தொகை செய்ததிலிருந்து இதனை உறுதிப்படுத்தலாம்" என்ற விளக்கம் பரணி இலக்கியத்தின் வளநிலைகளை அறியமுடிகிறது. (க.ஜவகர், ப. 226)

மேலும், தெய்வத்திற்குரிய இடம் அரசனுக்கு என்று மாறிப் போர் வெற்றியைக் கொண்டாடும் இலக்கியமாக பரணி வளர்ச்சி அடைந்திருந்தாலும் இதற்கான அடிப்படைகள் தொல்காப்பியத்தில் இருப்பதை அறிய முடிகிறது. குறிப்பாக தொல்காப்பிய புறத்திணையியலில் வெட்சித் திணையில் இடம்பெறும் கொற்றவை நிலையும் (நூ. 1005), வஞ்சியில் இடம்பெறும் கொற்ற வள்ளையும் (நூ. 1009), தும்பையுள் இடம்பெறும் தானை, யானை, குதிரை என்னும் மூவகை படை நிலையும் (நூ. 2018), களத்தில் உயிர் நீங்கிய உடல் தரையில் விழாது உள்ள வீரர் நிலைப் பற்றியதும் (நூ. 2017), வாகைத் திணையில் இடம்பெறும் மறக்கள வேள்வி, முன்தேர்க்குரவை, பின்தேர்க்குரவை (நூ. 1025), காஞ்சித் திணையுள் இடம்பெறும் பேய் காஞ்சி, முதுகாஞ்சி (நூ. 1025), தலைவன் அரசன் இவர்களது வெற்றியைப் போற்றிப் பாடும் பாடாண் திணையும் அதன் துறைகளும் எனப் பரணியின் அமைப்பைக் காட்டுகின்றன.

மேலும், பரணி இலக்கியத்தின் தோற்றப் பின்புலத்தை ஆராயுமிடத்து ந. வீ. செயராமனின் பின்வரும் கருத்து நோக்கத்தக்கது: "பாட்டுடைத் தலைவனைப் பாராட்டுவது என்பது பரணி இலக்கியங்களின் பொதுப்பொருளமைதியாயினும் அவற்றுள்ளும் வேறுபாடுகள் உள. தம்மை ஆதரித்த அரசரிடத்துத் தாம் கொண்ட நன்றியுணர்வின் காரணமாக, அவ்வரசர்களைத் தலைவர்களாக அமைத்துப் பரணி பாடுதலே பழமையான வழக்கு. ஆனால், அரசர்பால் செலுத்தப்படும் அன்பு கடவுளிடத்தும் செலுத்தப்பட்டப்போது, கடவுளைப் பாட்டுடைத்தலைவராகவும், அரசரைச் சார்த்து வகையில் தலைவராகவும் கொண்டு பரணி இலக்கியங்கள் எழுந்தன." (ந.வீ.செயராமன், ப.106)

**கடைத்திறப்பு**

கலிங்கப் போருக்குச் சென்ற வீரர்களுடைய மனைவியர் தம் கணவரின் பிரிவால் கவன்றும் ஊடியும் தம் வாயிற் கதவுகளை அடைத்துக் கொண்டு வீட்டினுள்ளேயிருக்க, செயங்கொண்டார் அவர் வீட்டு முன்புறம் சென்று தாம் பாடும் கலிங்க வெற்றியைக் கேட்கக் கதவு திறக்குமாறு வேண்டுகின்ற செய்தியைக் குறிப்பிடுகின்றது. முதற்குலோத்துங்கன் அடைந்த கலிங்க வெற்றியைக் கொண்டாடும் விழாவுக்கு நகரத்துப் பல்வேறு மகளிரும் அதிகாலையில் எழுந்து ஒருவரை யொருவர் துயிலெழுப்புவது என்பது திருப்பாவை, திருவெம்பாவைகளின் அடிப்படைக் கருத்துக்களை யொட்டியுமிருக்கின்றது. கோகுலத்திலுள்ள ஆய்ச்சியர் கண்ணபிரானின் பேர்பாடி மகிழ்வதற்குத் தம் தோழியரின் முன்றிலிற் சென்று அழைப்பதை,

**நாயகப் பெண்பிள்ளாய் நாரா யணன் மூர்த்தி**
**கேசவனைப் பாடவும்நீ கேட்டே கிடத்தியோ?**
**தேசம் உடையாய்! திறவேலோ ரெம்பாவாய் (திருப்பாவை., ப. 31)**

என்றும் ஆண்டாள் கூறுகிறார். திருவெம்பாவையிலும் சிவபெருமானின் புகழ் பாடுமாறு திருவண்ணாமலையிலுள்ள மகளிர் ஒருவரை யொருவர் வேண்டுவதாக மணிவாசகப் பெருமான்,

**முத்துஅன்ன வெண்ணகையாய்!**
**முன்வந்து எதிர்எழுந்து, என்**

**அத்தன், ஆனந்தன்**
**அமுதன் என்று அள் ஊறித்**
**தித்திக்கப் பேசுவாய்;**
**வந்துஉன் கடைதிறவாய்! (திருவெம்பாவை., ப. 16)**

என்றும் அவர் பாடியுள்ளார். இங்கு, கலிங்கத்துப்பரணியில் குலோத்துங்கனின் வெற்றியைச் சிறப்பித்துப் பாடுவதற்கு நகரத்து மகளிர் ஒருவரையொருவர் சென்று அழைப்பதாகச் செயங்கொண்டார் அமைத்துள்ளார். பெண்களின் இயற்கையழகு, செயற்கையழகு, மென்மைத்தன்மை, கணவன்மாருடன் அவர்கள் ஊடியும் கூடியும் அனுபவித்த இன்பம் முதலியவற்றை நேரில் எடுத்துக்கூறி அவர்களைத் துயிலுணர்த்துதல் மகளிர்க்கே இயல்பான செயலாகும். கடைதிறப்புப் பகுதியில் துயிலெழுப்பியவர்கள், உயர் குல மகளிர், அரசனும் தலைவரும் விழைந்த மகளிர், சிறையாகவும் திறையாகவும் பெற்ற மகளிர், ஓதுதல் போன்ற காரணம் பற்றிக் கணவனைப் பிரிந்து நிற்கும் மகளிர், பொது மகளிர் ஆகிய எல்லா வகுப்பைச் சார்ந்தவர்களும் இதில் பங்கு கொள்வதை அறியலாம்.

**கொற்றவை காளியானாள்**

கொற்றவை பொருட்டுப் பரணி நட்சத்திரத்தில் கொண்டாடப் பெறும் விழாவில் மகளிர் கூழும் துணங்கையும் கொடுத்து காடு கெழு செல்வியை வழிபடும் வழக்கம் சங்ககால பாலை திணைக்குரிய தெய்வ மரபாக இருந்துள்ளதை சங்கப் பனுவல்கள் குறிப்பிடுகின்றன. கலிங்கத்துப் பரணி தோன்றிய காலம் பிற்கால சோழர் காலம் என்பதால் இக்காலத்தில் சிவனின் மனைவி காளி பாலை நிலத்துக்குரிய கடவுளாக தோற்றம் பெற்றிருக்கின்றாள். ஆனால் சங்ககால விழாவின் பொழுது துணங்கை, குரவை முதலிய கூத்துக்களையும், அம்மானை, பந்து, ஊசல் முதலிய ஆட்டங்களையும் மேற்கொண்டு தம் அரசனைப் பாட்டுடைத் தலைவனாக்கி அவன் வெற்றித் திறன்களைக் கொண்டாடியுள்ளனர்; வெற்றிக்குரிய அரசனையும் அவனது நாட்டையும் வாழ்த்தியுள்ளனர். பழங்காலத்தில் இவ்வழக்கம் உண்டென்பதை குறுந்தொகை, மதுரைக்காஞ்சி, சிலப்பதிகாரம் ஆகிய நூல்களாலும் அறியலாம். காவிரிப்பூம்பட்டினத்திலுள்ள மறக்குடிப் பெண்டிர் நாளங்காடி பூதத்திற்குப் பூவும் பொங்கலும் சொரிந்து குரவையாடி அரசனை வாழ்த்துவதை,

**காவற் பூதத்துக் கடைகெழு பீடிகை**
**புழுக்கலும் நோலையும் விழுக்குடை மடையும்**
**பூவும் புகையும் பொங்கலும் சொரிந்து**
**துணங்கையர் குரவையர் அணங்கெழுந் தாடிப்**
**பெருநில மன்னன் இருநிலம் அடங்கலும்**
**பசியும் பிணியும் பகையும் நீக்கி**
**வசியும் வளனும் சுரக்கென வாழ்த்தி. (சிலப்பதிகாரம்., ப. 28)**

என்ற சிலப்பதிகாரப் பகுதியால் அறியலாம். அன்றியும் செங்குட்டுவனது வடநாட்டு வெற்றியை அறிந்த ஆயச் செவிலியர் அதிகாலையில் அரண்மனைக்குச் சென்று துயிலெழுப்பி யுணர்த்திப் பாட்டொடு தொடுத்து வாழ்த்தியதையும்,

**வெயிலிளஞ் செல்வன் விரிகதிர் பரப்பிக்**
**குணதிசை குன்றத் துயர்மிசைத் தோன்றக்…**
**…துணையணை பள்ளித் துயிலாற்றுப் படுத்தாங்கு**
**எறிந்துகளங் கொண்ட இயறேர்க் கொற்றம்**
**அறிந்துரை பயின்ற ஆயச் செவிலியர்**
**தோட்டுனை துறந்த துயரீங் கொழிகெனப்**
**பாட்டொடு தொடுத்துப் பல்யாண்டு வாழ்த்த (சிலப்பதிகாரும்., ப. 175, 176)**

Volume 3, SPL Issue 1, July 2025 E-ISSN: 2584-167X

என்று இளங்கோவடிகள் சுட்டுகிறார், எனவே செயங்கொண்டாரும் செருக்களத் தியல்புகளை மகளிர்க் கூற்றில் வைத்துச் சிறப்பித்தார். அங்ஙனம் கூறுவது பண்டைய மரபை யொட்டியே உள்ளது.

**இராச பாரம்பரியம்**

சோழர் குலப்பெருமை கூறும் பகுதியாக இராசபாரம்பரியம் கலிங்கத்துப்பரணியில் இடம்பெறுகிறது. கரிகால சோழன் முதலாக பல்வேறு சோழ மன்னர்களின் பெருமைகள் இப்பகுதியில் இடம்பெறுகிறது.

**அவ் அருக்கன் மகன் ஆகி மனு மேதினி புரந்து**
**அரிய காதலனை ஆவினது கன்று நிகர் என்று**
**எவ் வருக்கமும் வியப்ப முறை செய்த கதையும் (கலிங்கத்துபரணி. ப.79)**

என்ற பாடலின் வாயிலாக, மனுநீதி சோழனின் மகன் பசுவின் கன்றை கொன்ற தவறான செயலுக்காக, அவனை தேர்ச்சக்கரத்தின் அடியில் கிடத்தி கொன்றான். பசுக்கன்றின் உயிருக்கு ஈடாக தன் மகனின் உயிரைத் தந்து நீதியை நிலை நாட்டினான் மனுநீதி சோழன்.

புறாவுக்காக தன் உடல் சதையை அறுத்துக் கொடுத்த சிபிச்சக்கரவர்த்தியின் கொடைத்திறம் பற்றியும் பின்வரும் பாடல் குறிப்பிடப்படுகிறது.

**உடல் கலக்கு அற அரிந்து தசை இட்டும் ஒருவன்**
**ஒரு துலைப் புறவொடு ஒக்க நிறை புக்க புகழும் (கலிங்கத்துபரணி. ப.80)**

மேற்குறிப்பிடப்பட்ட இரு வரலாற்று நிகழ்வுகளைப் பற்றி, சிலப்பதிகாரத்தில் வழக்குரைக்காதையில் கண்ணகி பாண்டிய மன்னனிடம் தன் கணவனின் இறப்பிற்கு நீதி கேட்கும் பொருட்டு முறையிடுகிறாள். அப்போது, மனுநீதி சோழன் பற்றியும், சிபிச்சக்கரவர்த்தி பற்றியும், சோழர்கள் நீதி வழங்கிய புகார் நகரம் பற்றியும் எடுத்துரைக்கிறாள்.

**எள்ளுறு சிறப்பின் இமையவர் வியப்பப்**
**புள்ளுறு புன்கண் தீர்த்தோன்; அன்றியும்**
**வாயிற் கடைமணி நடுநா நடுங்க**
**ஆவின் கடைமணி உகுநீர் நெஞ்சு சுட, தான் தன்**
**அரும் பெறல் புதல்வனை ஆழியின் மடித்தோன்**
**பெரும் பெயர்ப் புகார் என் பதியே (சிலப்பதிகாரம்., ப.168)**

இராச பாரம்பரியம் என்ற பகுதியில், சோழர்களின் குலப்பெருமையும், அவர்கள் செய்த நற்செயல்களையும் செயங்கொண்டார் கலிங்கத்துப்பரணியில் குறிப்பிடுகிறார். இந்நிகழ்வு சிலப்பதிகாரத்தில் சுட்டப்பட்டிருப்பது ஒப்புநோக்கத்தக்கதாகும்.

**போர்கள்**

முதல் இராசராசன் சேர நாட்டில் சதய விழாவை ஏற்படுத்தி அந்த நாட்டிலுள்ள உதகை என்னும் நகரை வென்றவன். *கலிங்கத்துப்பரணி* இவனை 'உதகை வென்ற கோன்' என்று குறிப்பிடுகின்றது. இவன் மகன் இராசேந்திரன் கங்கைக்கரையில் களிறுகளுக்கு நீரூட்டினான்; பர்மா தேசத்தைச் சார்ந்த கடாரத்தை வென்றான். இச்செய்தியை,

**களிறு கங்கைநீர் உண்ண மண்ணையிற்**
**காய்சி னத்தொடே கலவு செம்பியன்**
**குளிறு தெண்டிரைக் குரைக டாரமும்**
**கொண்டு மண்டலம் குடையுள் வைத்ததும் (கலிங்க., ப. 118)**

என்று இந்நூல் குறிப்பிடுகின்றது. முதல் இராசாதிராசன் மேலைச் சாளுக்கியர்களுடன் போர்புரிந்து துங்கபத்திரை நதிக்கரையிலுள்ள கம்பிலி என்னும் நகரத்தையும் அதிலிருந்த அரண்மனையையும் அழித்தொழித்த செய்தி 'கம்பிலிச்சயத் தம்ப நட்டதும்' என்று குறிக்கப்பெற்றுள்ளது. இவனும் இவன் தம்பி இராசேந்திர தேவனும் மேலைச் சாளுக்கியருடன் கிருஷ்ணா நதிக் கரையிலுள்ள கொப்பத்தில் போர் புரிந்து போர்க்களத்திலேயே முடி கவிழ்த்துக் கொண்ட செய்தியையும் இந்நூல் குறிக்கின்றது. கிருஷ்ணாவும் துங்கபத்திரையும்

Volume 3, SPL Issue 1, July 2025 E-ISSN: 2584-167X

கலக்கும் இடத்திலுள்ள கூடல் சங்கமத்தில் வீரராசேந்திரன் குந்தளருடன் போர் புரிந்து வெற்றியடைந்த செய்தி,

**குந்தளரைக் கூடற்சங் கமத்து வென்ற**
**கோனபயன் குவலயங்காத் தளித்த பின்னை (கலிங்க., ப. 122)**

என்ற அடியால் குறிப்பிடப் பெறுகின்றது. இது விக்கிரமசோழனுலாவில்,

**சங்ககத்துக் கொள்ளுந் தனிப்பரணிக் கெண்ணிறந்த**
**துங்கமத யானை துணித்தோனும் (மூவருலா. ப.2)**

என்று குறிப்பிடப் பெற்றுள்ளது.

பாட்டுடைத் தலைவனாகிய குலோத்துங்கன் நிகழ்த்திய போர்களனைத்தும் நூலில் நுவலப்படுகின்றன. குலோத்துங்கன் இளவரசனானவுடன் திக்கு விசயஞ் செய்து வெற்றி கொண்ட நிகழ்ச்சிகள் முதல் பின்னர் பேரரசனானவரை அவன் அடைந்த வெற்றிகள் யாவும் அவதாரம் என்ற பகுதியில் குறிப்பிடப் பெற்றுள்ளன. குலோத்துங்கன் இளவரசுப் பட்டம் எய்தியதும் போர்வேட்டெழுந்து வடதிசை நோக்கிச் சென்று மத்திய மாகாணத்திலுள்ள வத்தவ நாடாகிய சக்கரக் கோட்டத்தை வயிராகரம் என்ற இடத்தே பொருது வெற்றி கொண்டதுதான் இவனது கன்னிப்போராகும். இதனைக் கவிஞர்,

**மனுக்கோட்டம் அழித்தபிரான்**
**வளவர்பிரான் திருப்புருவத்**
**தனுக்கோட்ட நமன்கோட்டம்**
**பட்டதுசக் கரக்கோட்டம் (கலிங்க., ப. 148, 149)**

என்று குறிப்பிடுகிறார்.

போர்களத்தில் தலைவெட்டப்பட்ட உடல்கள் பேய்கள் முன்பாக துள்ளி ஆடும். தங்கள் பசிக்கு நல்ல விருந்துணவு கிடைத்தது என்ற மகிழ்ச்சியில் பேய்கள் அவற்றின் பின்னே ஆடும். இதனை கவிஞர்,

**கவந்தம் ஆட முன்பு தம்**
**களிப்பொடு ஆடு பேய் இனம் (கலிங்க., ப. 176)**

பலநாட்கள் பசியோடு இருந்த பேய்களுக்கு போர்க்களத்தில் இறந்த வீரர்களின் உடல்கள் நினைத்து மகிழ்ந்து அவற்றின் முன்பாக பேய்கள் நடனமாடுவதாக இப்பாடல் பகுதி அமைந்துள்ளது. இச்செய்தியை நோக்குமிடத்து, புறப்பொருள் வெண்பாமாலையில் வாகைப்படலத்தில் உள்ள முன்தேர்க்குரவை என்ற பகுதியில் அமைந்துள்ள பாடலானது,

**புலவாய புன்றலைப்பே யாடும் கலவா**
**அரசதிர நூறி யடுகளம் வேட்டான்**
**முரசதிர வென்றதேர் முன் (புறப்., ப.76)**

கெடாத நன்மையினைச் செய்தானாகிய இவன்(அரசன்) நெடுங்காலம் வாழ்வானாக என்று சொல்லிப், புலால் நாறும் வாயினையும் புற்கென்ற தலையினையும் உடையவான பேய்கள் தேரின் முன்பு கூத்தாடும். புறப்பொருள் வெண்பாமாலையில் கூறப்பட்டுள்ள முன் தேர்க்குரவையும், கலிங்கத்துப்பரணியில் உள்ள போர்பாடியது பகுதியில், பேய்களின் கூற்றுகள் போர்க்களத்தின் செயல்பாடுகளை நமக்கு விளக்குகின்றன. மேலும், புறப்பொருள் வெண்பாமாலையில் அமைந்துள்ள இலக்கணத்தின் வாயிலாக பரணி இலக்கியத்தின் வளர்ச்சியினை நாம் அறிந்துகொள்ள முடிகிறது.

குலோத்துங்கன் துங்கபத்திரை நதிக்கரையில் நடைபெற்ற போரில் குந்தள அரசனையும் அவன் தம்பியையும் வென்று அவர்கள் தலைநகரமாகிய கலியாணபுரத்தைக் கைப்பற்றிய செய்தியும், மீண்டும் அளத்திப் போர்க்களத்தில் குந்தள அரசனை வென்ற செய்தியும் நூலில் குறிப்பிடப் பெறுகின்றன. மைசூர் நாட்டைச் சேர்ந்த நவிலையில் பல சிற்றரசர்களை வென்று பல யானைகளைக் கைக் கொண்டமை,

**கண்ட நாயகர் காக்கும்ந விலையில்**

Volume 3, SPL Issue 1, July 2025 E-ISSN: 2584-167X

**கொண்டதாயிரம் குஞ்சரம் அல்லவோ (கலிங்க., ப. 216)**

என்று குறிக்கப் பெறுகின்றது. பாண்டிய நாட்டின் மீது படையெடுத்த பொழுது முத்துக்கள் மிகுதியாகக் கிடைக்கும் மன்னார் குடாக் கடலைச் சார்ந்த நாட்டையும், பொதியிற் கூற்றத்தையும், கன்னியாகுமரியையும், கோட்டாற்றையும் தனக்கு உரிமையாக்கிக் கொண்டான். இவற்றை மீண்டும் பாண்டியர் கவராதவாறு கோட்டாற்றில் கோட்டாற்று நிலைப்படை என ஒரு படையை ஏற்படுத்தினான். இதனை, பின்வரும் பாடல் குறிப்பிடுகிறது.

**முள்ளாறும் கல்லாறும் தென்னர் ஒட**
**முன்னொருநாள் வாளபயன் முனிந்த போரின்**
**வெள்ளாறும் கோட்டாறும் புகையான் மூட**
**வெந்தவனம் இந்தவனம் ஒக்கில் ஒக்கும் (கலிங்க., ப. 52)**

சேரனை வெற்றி கொண்டு திருவனந்தபுரத்திற்குத் தெற்கேயுள்ள விழிஞம், காந்தளூர்ச்சாலை என்னும் சேரர் துறைமுகங்களில் இருந்த மரக்கலங்களைச் சிதைத்தழித்த செய்தி,

**வேலை கொண்டு விழிஞ மழித்ததும்**
**சாலை கொண்டதும் தண்டுகொண் டேஅன்றோ? (கலிங்க., ப. 214)**

என்ற பாடலில் குறிப்பிடப் பெற்றுள்ளது.

அரசர்கள் போருக்குப் புறப்படுங்கால் சங்கு முழங்கியும் முரசதிர்ந்தும், இயமரம் இரட்டியும், கொம்புகளை ஒலித்தும் செல்வது வழக்கம். பகையரசர் நாட்டினைப் படைகள் தாக்குங்கால் அவர் ஊரினை எரிகொளுவியும் சூறை கொண்டும் அழித்தல் இயல்பாக இருந்தது. கருணாகரனின் படை கலிங்க நாட்டினை அழித்த செய்தியை,

**அடையப் படர் எரி கொளுவிப் பதிகளை**
**அழியச் சூறைகொள் பொழுதத்தே (கலிங்க. ப. 154)**

என்று கவிஞர் கூறுவதைக் காண்க.

போர்க்களத்தில் இருதிறத்துப் படைகள் ஒன்றோடொன்று போரிடுங்கால், நால்வகைப்படையுள் ஒவ்வொரு வகைப்படையும் அவ்வப் படையுடனேயே போரிடுவது மரபு. உலக்கை, சக்கரம், குத்தம், பகழி, கோல், வேல் முதலியவை போர்க்கருவிகளாகப் பயன்பட்டன. இரவில் போர் செய்தலை மேற்கொள்ளும் வழக்கம் அக்காலத்தில் இல்லை. கலிங்கப்போரின் மேற்சென்ற படை,

**உதயத்து ஏகுந்திசை கண்டு அது**
**மீள விழும் பொழுது ஏகல் ஒழிந்து (கலிங்க., ப. 151)**

என்று கூறப்படுதலாலும், கலிங்க வேந்தன் படை சூழப்பற்றியிருந்த மலைக்குவட்டை சூரியன் மறையும் நேரத்தில் அணுகிய படை, “வேலாலும், வில்லாலும் வேலி கோலி” என்று கூறப்படுதலானும் இவற்றை அறியலாம்.

போர்க்களத்தில் தோற்றோடிய அரசர் விட்டுப் போன குடை, சாமரம் முதலியவற்றை வென்ற வேந்தர் கைப்பற்றி அவற்றைப் பெருமையுடன் பயன்படுத்துவர். குலோத்துங்கன் காஞ்சியிலமைக்கப்பெற்ற சித்திரமண்டபத்தில் வீற்றிருந்தபொழுது,

**வீழ்ந்த மன்னவர் வெந்நிடு முன் இடு**
**தங்கள் பொற்குடை சாமரம் என்று இவை**
**தாங்கள் தம் கரத்தால் பணி மாறவே (கலிங்க. ப.134)**

என்று கவிஞர் கூறுவதை நோக்குக. போரில் தோற்றோடிய அரசர்கள் மலைக்குகைகளிலும், மலைப் பள்ளத்தாக்குகளிலும், மறைவது அக்கால இயல்பாக இருந்தது. காடு, மலை, கடல் முதலியவை சிறந்த அரண்களாக மதிக்கப்பெற்றிருந்தன.

**கானரணும் மலையரணும் கடலரணும்**
**சூழ்கிடந்த கலிங்கர் பூமி**
**தான் அரணம் உடைத்தென்று கருதாது**
**வருவதும் அத்தண்டு போலும் (கலிங்க. ப. 156)**

**Volume 3, SPL Issue 1, July 2025** **E-ISSN: 2584-167X**

என்றவற்றால் இதனை அறியலாம். சினங்கொண்ட படைவீரர் பகையரசர் நாட்டில் புகுந்து எதிர்ப்பட்ட ஆடவரை யெல்லாம் அழிப்பர். போரிற் பிடித்த அரசர்களை விலங்கிடுதலும் அக்கால இயல்பாக இருந்தது. வெற்றி கொண்ட அரசர் தாம் வென்ற இடத்தில் வெற்றித் தூண் நாட்டலும் அக்கால வழக்கமாகும். கலிங்க நாட்டில் கருணாகரன் இவ்வாறு செய்தமை,

**கடற்கலிங்கம் எறிந்துசயத்**
**தம்பம் நாட்டி (கலிங்க. ப. 190)**

என்ற அடியால் அறியப்படும்.

**முடிவுரை**

முதலாம் குலோத்துங்க மன்னன் (கி.பி.11) காலத்தில் செயங்கொண்டாரால் கலிங்கத்துப்பரணி பாடப்பட்டதாகும். இப்பரணி இலக்கியம் முதலாம் குலோத்துங்கன் மற்றும் அவரது படைத்தளபதி கருணாகரன் போன்றோரின் பெயரில் அமையாமல் போரில் தோல்வி அடைந்தவரின் பெயரில் அமைந்திருப்பது அவர்களைப் பெருமைப்படுத்தும் விதமாக உள்ளது. கலிங்கத்துப்பரணி கற்பனைவளமிக்க ஒரு படைப்பாகும். கொற்றவையை சிறப்பித்துப்பாடும் பகுதிகள், போர்களச் செய்திகள், பேய்களைப் பற்றி எடுத்துரைக்கும் பகுதிகள், மன்னர்களின் குடிவழிப் பெருமைகளை கூறும் பகுதிகள் என சிறப்புடையனவாக விளங்குகின்றன. சிற்றிலக்கியங்களில் தனிச்சிறப்புடன் திகழ்வது கலிங்கத்துப்பரணியாகும். கடைத்திறப்பு என்ற பகுதியில் போருக்குச் சென்ற கணவனின் வருகைக்காகக் காத்திருக்கும் மகளிரின் தன்மை காட்சிபடுத்தப்படுகிறது. மேலும் போர் வெற்றியைக் கொண்டாடும் பொருட்டு, மகளிரை கதவைத் திறக்குமாறு பாடல்கள் பாடப்பட்டிருக்கின்றன. இக்கருத்து இறைவனைத் துயில் எழுப்புவதற்காக கதவைத் திறக்குமாறு திருப்பாவை, திருவெம்பாவையில் பாடப்பட்டிருப்பதை முன்னைய பனுவல்கள் எடுத்துரைக்கின்றன. கொற்றவையின் தன்மை, காடு பற்றியும், கோயில் பற்றியும் பாடல்கள் அமைந்துள்ளன. மேலும் சங்க காலத்தில் போர்க்கடவுளாக இருந்த கொற்றவை என்ற தெய்வத்தன்மை சோழர் காலத்தில் காளியாக மாற்றம் பெற்றதை ஆராயவேண்டியுள்ளது. பாட்டுடைத்தலைவன் எதிரியுடன் செய்த போரில் காளி பற்றியும், பேய்கள் பற்றியும் அமைந்த போர்க்கள வருணனைகள் நம் மனக்கண்முன் காட்சியளிக்கின்றன. கலிங்கத்துப்பரணி முதலாம் குலோத்துங்கச் சோழனின் போர் வெற்றியை, அக்காலச் சமூக வாழ்க்கையினை, பரணியில் அமைந்துள்ள உறுப்புகள் கொண்டு செயல்திறனோடு திறம்பட எடுத்துரைக்கிறார் செயங்கொண்டார்.

**குறிப்புகள்**


[1] இராகவையங்கர், ரா. *பன்னிரு பாட்டியல்.* செந்தமிழ்ப்பிரசுரம், 1951.

[2] இராமகிருஷ்ணன், இரா. *சிற்றிலக்கியம் ஓர் அறிமுகம்.* சாரதா பதிப்பகம், சென்னை, 2022.

[3] கன்னையா, ஆ.வீ. *கலிங்கத்துப்பரணி.* பி.என்.அச்சுக்கூடம், 1941.

[4] கோபாலையர், அ. *மூவருலா (இராசராச சோழன் உலா),* செந்தமிழ் மந்திரம், புத்தகச்சாலை, 1925.

[5] சண்முகம் பிள்ளை, மு. சுந்தரமூர்த்தி, இ. *திவாகரம் முதல் தொகுதி,* சென்னைப் பல்கலைக் கழகம், 1990.

[6] சாமிநாதையர், உ. வே. *புறப்பொருள் வெண்பாமாலை,* உ.வே.சாமிநாதையர் நூல்நிலையம், 1895.

[7] சிவஞானம், ம.பொ. *சிலப்பதிகாரம் மதுரைக் காண்டம்.* அய்ந்திணைப் பதிப்பகம், 2003.

[8] சீனிவாசன், ரா. *சிலப்பதிகாரம் மூலமும் திறனாய்வும்.* அணியகம் பதிப்பகம், 1990.

[9] செயராமன், ந.வீ. *சிற்றிலக்கியச் செல்வங்கள்.* மணிவாசகர் பதிப்பகம், சிதம்பரம், 2021.

[10] பாலசுப்பிரமணியன், சி. *திருப்பாவை விளக்கம்.* பாரி நிலையம், 1995.

[11] மாணிக்கவாசகன், ஞா. *கலிங்கத்துப்பரணி.* உமா பதிப்பகம், 1998.

[12] விமலானந்தம், மது. ச. *தமிழ் இலக்கிய வரலாறு.* முல்லை நிலையம், சென்னை, 2014.

**Volume 3, SPL Issue 1, July 2025** **E-ISSN: 2584-167X**

[13] வெள்ளைவாரணர், க. *தொல்காப்பியம் செய்யுளியல் உரைவளம்.* 1989.

[14] வைத்தியநாத தேசிகர், *இலக்கண விளக்கப் பாட்டியல்.* சரசுவதி மகால் நூலகம், தஞ்சாவூர், 1974.

[15] ஜவகர், க. *திணைக்கோட்பாடும் தமிழ்க் கவிதையியலும்.* காவ்யா பதிப்பகம், சென்னை, 2010.

**நிதிசார் கட்டுரையாளர் உறுதிமொழி:** இல்லை

**கட்டுரையாளர் நன்றியுரை:** இல்லை

**கட்டுரையாளர் உறுதிமொழி: இக்கட்டுரையில் எவ்வித முரண்பாடும் இல்லை என்று உறுதிமொழி அளிக்கிறேன்.**

இக்கட்டுரை கிரியேட்டிவ் காமன்சு ஆட்ரிபியூசன் 4.0வின் **Creative Commons Attribution4.0** கீழ் பன்னாட்டு உரிமம் பெற்றுள்ளது.

Academic Research News

# Academic Research News

*Peer-Reviewed Journal*



**Volume 3, SPL Issue 1, July 2025** **E-ISSN: 2584-167X**

# Sentiment of the Leader and the Beloved in *Thomas Malai Kuravanjil*

**Dr. T. Nisha,** Assistant Professor, Tamil Research Center, Scott Christian College, Nagercoil, Tamil Nadu, India.
**ORCiD: https://orcid.org/0000-0003-3515-9639**
Received: 15 April 2025; Revised: 29 May 2025; Accepted: 9 June 2025; Available Online: 30 July 2025.

## Abstract

*The hero (Thalaivan) and beloved (Thalaivi) experience sorrow for the same reason as love and its pangs on separation. This paper studies the internal aspects found in "Thomas Malai Kuravanji." The story integrates nature with the characters of the hero and heroine by portraying them as embodiments of divine love. In the hero's world, selfless love stands as the primary reason for all actions. The connection between the leader and beloved serves as the foundation of devotion. Their love is free from selfishness and remains the driving force of their everlasting relationship. The bond between them symbolises the essence of devotion, where both joy and sorrow are entwined with each other. Their sorrow is depicted as part of the spiritual journey of love in "Thomas Malai Kuravanji", and it serves as an expression of devotion. The emotional suffering of the leader and beloved becomes the symbol of the soul's longing for divine union and spiritual fulfilment. Hence, this article studies the state of the leader and beloved in "Thomas Malai Kuravanji."*

**Keywords:** Minor Literature, Thomas Malai Kuravanji, Bridal Mysticism, Kurathi.

## References

[1] Subramanian, Sa,Ve. *Tamil Ilakkiya Varalaru*. Manivasagar Publications, Chennai-108, P. 169
[2] Jeyaraman, N. V. *Sittilakia Selvangal*. Manivasagar Publications, Chithambaram – 608001, 2010, P. 27
[3] Sethuraman, C. *Tamil Ilakkia Varalaru*. NCBH (P) Ltd. Chennai-98, 2019, P. 201
[4] Ponnu , Sathia Satchi. *Thomas Malai Kuravanji*. CLS Printers, Chennai-07, 1999, P.viii
[5] Velupillai, A. *Tamilar Samaya Varalaru.* Pari Puthaka Pannai, Chennai, 1985, P. 95
[6] John Samuel, G. *Christhava Sittiilakia Thirattu*. Asiavial Niruvanam, Chennai-119, 2014, P.10
[7] John Samuel, G. *Christhava Tamil Ilakiam Sila Parvaigal.* Homeland Publications, Chennai-96, 2017, P.140

**Author Contribution Statement:** NIL.
**Author Acknowledgement:** NIL.
**Author Declaration:** I declare that there is no competing interest in the content and authorship of this scholarly work.
The content of the article is licensed under https://creativecommons.org/licenses/by/4.0/ International License.

Academic Research News

Academic Research News
*Peer-Reviewed Journal*



**Volume 3, SPL Issue 1, July 2025** **E-ISSN: 2584-167X**

# தாமஸ் மலைக் குறவஞ்சியில் நாயகன் நாயகி பாவம்

**முனைவர் தோ. நிஷா,** உதவிப்பேராசிரியர், தமிழாய்வு மையம்,
ஸ்காட் கிறிஸ்தவக் கல்லூரி, நாகர்கோவில், தமிழ்நாடு, இந்தியா.
ORCiD: https://orcid.org/0000-0003-3515-9639

**ஆய்வுச்சுருக்கம்**

*“தாமஸ் மலைக் குறவஞ்சி” ஒரு சிறந்த சிற்றிலக்கிய நூலாகும். இது தாமஸ் மலை ஆலயத்தை மையமாகக் கொண்டு எழுதப்பட்டுள்ளது. இந்நூலில் இயேசுவாகிய இறைவன் நாயகனாகவும். மேதினியாள் நாயகியாகவும் படைக்கப்பட்டுள்ளனர். தலைவனின் உலாவில், தலைவனை நேரில் கண்ட தலைவி காதலால் வருந்தி, தலைவனை அடையத் துடிக்கிறாள். அவள் ஆசை குறத்தியின் வார்த்தை மூலம் நிறைவேறும் என்று நம்புகிறாள். நாயகனாக உள்ள இறைவன் பக்தர்களுக்கு அளவிலா அமைதியும், பாதுகாப்பும் அளிக்கிறார். ஆனால் தவறிழைத்த மனம் இறைவனிடத்திலிருந்து தூரம் நிற்கிறது. இவ்வாறு இறைவன் காதலனாகவும், திருச்சபை காதலியாகவும் காட்டப்படும் நிலையே நாயகன் நாயகி பாவமாகும். அவ்வுத்தியின் அடிப்படையில் இந்நூல் ஆராயப்பட்டுள்ளது.*

**குறிப்புச்சொற்கள்:** சிற்றிலக்கியம், தாமஸ் மலைக் குறவஞ்சி, நாயகன் நாயகி பாவம், குறத்தி.

**முன்னுரை**

தொன்மை மிக்க தமிழ்மொழி சீரிளமைத் திறம் குன்றாமல் வளர்ந்து வருகிறது என்பதற்கு காலந்தோறும் தோன்றிய இலக்கியங்களே சான்று பகர்கின்றன. அவ்வகையில் நாயக்கர்களின் காலத்தில் போர்கள், போராட்டங்களால் பெரிய இலக்கியங்கள் தோன்ற முடியவில்லை. எனவே, பள்ளு, உலா, கலம்பகம், தூது முதலிய சிறு சிறு பிரபந்தங்கள் இயற்றி அங்கங்கே இருந்த செல்வந்தர்களையும், சிற்றரசர்களையும் மகிழ்வித்தனர் புலவர்கள். உறுதிப் பொருள்கள் நான்கனுள் ஒன்றோ சிலவோ குறைந்து வருவன சிற்றிலக்கியங்கள் ஆகும். சிற்றிலக்கியங்கள் தொண்ணூற்றாறு வகைப்படும். அவற்றில் குறவஞ்சியும் ஒன்று. கிறித்தவச் சிற்றிலக்கிய நூலான தாமஸ் மலைக் குறவஞ்சியில் வெளிப்படும் நாயகன் நாயகி பாவத்தை விளக்குவதாக இவ்வாய்வுக் கட்டுரை அமைகிறது.

**சிற்றிலக்கியங்கள்**

‘பிரபந்தம்’ என்ற வடமொழிச் சொல்லே தமிழில் சிற்றிலக்கியம் என வழங்கப்படுகிறது. பிரபந்தம் என்ற சொல்லுக்கு நன்றாகக் கட்டுதல் என்று பொருளாகும். சில சிற்றிலக்கியங்கள் அளவில் சிறியதாக இருந்தாலும் நூற்பொருளிலும், உணர்த்தும் திறனிலும் பேரிலக்கியங்களுக்கு இணையாக விளங்குகின்றன. தமிழில் சிற்றிலக்கியம் தோன்றி வளர்ந்த வரலாற்றினைக் கூறும் ந.வீ. செயராமன் “தொல்காப்பியர் காலத்தில் இடம்பெற்ற சிற்றிலக்கிய வித்து சங்க காலத்தில் ஆற்றுப்படையாக முளைவிட்டு, ஐந்தாம் நூற்றாண்டில் அந்தாதியாகத் துளிர்த்து, ஏழாம் நூற்றாண்டில் கோவையாகச் செடியாகி, எட்டாம் நூற்றாண்டில் உலாவாக மரமாகி, ஒன்பதாம் நூற்றாண்டில் பிள்ளைத் தமிழாக மொட்டாகி, பதினான்காம் நூற்றாண்டில் பள்ளாகக் காய்த்து, பதினெட்டாம் நூற்றாண்டில் குறவஞ்சியாகக் கனிந்தது” (செயராமன் ந. வீ. ப. 27) என்று குறிப்பிடுகிறார். சிற்றிலக்கியம் தொண்ணூற்றாறு வகைப்படும் எனக் கூறினாலும். முந்நூற்றுக்கும் மேலாக சிற்றிலக்கியம் விரிந்து செல்கிறது என ஆய்வாளர்கள் கூறுகின்றனர்.

**குறவஞ்சி**

குறவஞ்சி என்பது குறா + வஞ்சி என்று பிரியும். வஞ்சி என்றால் வஞ்சிக்கொடி போன்ற

Academic Research News
Academic Research News
Peer-Reviewed Journal

Volume 3, SPL Issue 1, July 2025 E-ISSN: 2584-167X

பெண் என்று பொருள். பிரபந்த மரபியல் இதனை குறத்திப் பாட்டு என்று குறிப்பிடுகிறது. குறத்திப் பாட்டு என்பதற்கு "முக்காலத்தையும் கணித்துக் கூறும் திறம் படைத்த குறத்தி குறி சொல்வதாக அமைத்துப் பாடப்பெறுவது, இதில் பத்துப் பாடல்கள் அமையும். குறத்திப் பாட்டு பிற்காலக் குறவஞ்சி இலக்கிய வகைக்கு அடிப்படையாக அமைந்தது எனலாம்." (சேதுராமன் சி. ப. 204) என சி. சேதுராமன் கூறுகிறார். குறவஞ்சி நூல்கள் பாட்டுடைத் தலைவன் பெயராலும், இடத்தின் பெயராலும், தலைவியின் பெயராலும், குறத்தியின் பெயராலும் பாடப்பெறும்.

**குறவஞ்சியின் அமைப்பு**

குறவஞ்சி நூல்களின் துவக்கத்தில் பாடப்பெறும் பகுதி பாயிரம் ஆகும். பின்னர் பாட்டுடைத் தலைவன் உலா வருதல், தலைவி பற்றிய செய்திகள், தலைவி தோழியைத் தூது அனுப்புதல், குறத்தியின் வருகை, குறி கூறுதல், குறவன் வருதல், வாழ்த்து, மங்கலம் போன்ற வகையில் குறவஞ்சி இலக்கியம் பாடப்பெறுகின்றது. குறவஞ்சி நூல்களில் புகழ்பெற்ற நூல் திருக்குற்றாலக் குறவஞ்சி ஆகும். இதனைப் பாடியவர் திரிகூட ராசப்பக் கவிராயர் ஆவார்.

**தாமஸ் மலைக் குறவஞ்சி**

தாமஸ் மலைக் குறவஞ்சி கிறித்தவச் சிற்றிலக்கிய நூலாகும். இதனை இயற்றியவர் பொன்னு ஆ. சத்தியசாட்சி என்பவராவார். 1923-இல் பிறந்த இவர் 'அன்பு தன் அரியணையில், தஞ்சை வேதநாயகர் தமிழ் விருந்து, நெஞ்சில் சுரந்த நீரோடைகள் (கவிதை), இரட்சணிய யாத்திரிக உரை' போன்ற நூல்களை எழுதியுள்ளார். தாமஸ் மலைக் குறவஞ்சியைப் படித்த ஔவை து. நடராசன் அவர்கள் "கலைவளம், கருத்து பெருமிதம், கற்பனை வளம், அணிநலம், அழகுணர்ச்சி, இசையொழுக்கு, நடப்பியல், நகைத்திறம், நடிப்பாற்றல் முதலிய நலங்கள் பல வாய்ந்தவராய் பல்வகை யாப்புக் கூறுகளோடு 'வாய்திறந்தால் வண்ணம் பாடும்' தகுதி நிரம்பிய தலைமைப் புலவர்களாலேயே வனப்பு வகை சார்ந்த புதுமைப் படைப்பை வரைய முடியும்" (பொன்னு ஆ. சத்தியசாட்சி, தாமஸ் மலைக்குறிஞ்சி, ப. viii) என்று பாராட்டியுள்ளார். கிறித்தவத் தமிழ் இலக்கிய வரிசையில் குறிப்பிடத் தகுந்தப் படைப்பாக அமைவது தாமஸ் மலைக் குறவஞ்சி. கல்வாரி மலைத் தொடரில் காணப்பெறும் ஒரு முகடு தாமஸ் மலை. புனிதத் தோமையர் கொல்லப்பட்ட இடம். இம்மலை புனித தாமஸின் வரவால் புனிதமாயிற்று. தாமஸ் மலை வழியே உலா வரும் இறைவன் உலகத்தாரால் உதாசீனப்படுத்தப்பட்ட மேதினியாளுக்கு மீட்பு அருளினார் என்பதே நூலின் மையச் செய்தியாகும். இந்நூலின் தலைவி மேதினியாள். இவளுடைய தோழி அபரஞ்சி, குறவஞ்சி செபமாலை, குறவன் வேதமாணிக்கம், தலைவியாகிய மேதினியாள் தலைவனாகிய இயேசு மீது கொண்ட தீராக் காதலால் தவிப்பதை இந்நூல் எடுத்துரைக்கிறது.

**நாயகன் நாயகி பாவம்**

இலக்கியப் படைப்பில் வெளிப்படும் உத்திகள் கவிஞனின் திறமையைக் காட்டுவதுடன், படிப்பவர்க்கு இன்பம் தருவதுமாகும். நாயகன் நாயகி பாவம் என்பது மிகச்சிறந்த உத்தியாகும். "இந்தியாவை பொறுத்தமட்டில் இறைவன் ஒருவனே ஆண் எனவும், ஏனைய ஆன்மாக்கள் பெண் எனவும் கொள்வது பல சமயங்களின் மரபாகும். அதுவே நாயகன் நாயகி பாவம் எனப்படும்" (ஜாண் சாமுவேல் ஜி, (ப.ஆ.). ப.10) நாயன்மார், ஆழ்வார் பாடல்களிலும் இந்த நாயகன் நாயகி பாவம் வெளிப்படுவதைக் காணமுடியும். இதனை "நாயன்மார்களும், ஆழ்வார்களும் கையாண்ட நாயகன் நாயகி பாவத்தில் அமைந்த பாடல்களில் மனித ஆன்மா மணப்பெண்ணாகவும், இறைவன் மணவாளனாகவும் உருவகம் செய்யப்பட்டிருப்பது உண்மையே. எனினும், இப்பாடல்களில் காதலியான ஆன்மாவின் ஏக்க உணர்வுகளே பெரும்பாலும் இசையோடு இணைந்து உணர்ச்சி ததும்ப இலக்கிய நயத்தோடு வெளிப்படுகின்றன. இறைவனை அடையத் துடிக்கும் ஆன்மா என்னும் பெண்ணின் ஏக்கங்களையும், மனவேதனைகளையும், பிரிவுத்துன்பத்தையும் இப்பாடல்கள் கலைநயத்துடன் வெளிப்படுத்தும்" (ஜாண் சாமுவேல், ஜி. ப. 140) என்று ஜி. ஜான் சாமுவேல்

Academic Research News
Peer-Reviewed Journal

Volume 3, SPL Issue 1, July 2025 E-ISSN: 2584-167X

கூறுகிறார். கிறித்தவத்தில் கிறிஸ்துவைக் காதலனாகவும், திருச்சபையைக் காதலியாகவும் வைத்துப் பாடுவது நாயகன் நாயகி என்னும் முறையாகும். இது போன்ற அன்பை ஆழ்வார்களில் ஒருவரான ஆண்டாளும் இறைவனிடம் கொண்டிருப்பதைக் காணலாம். வைணவ சமய ஆழ்வார்களில் முக்கியமானவரான பெரியாழ்வார் வளர்த்த பூங்கொடி ஆண்டாள். பெரியாழ்வார் நந்தவனத்தில் மலர்கொய்யச் செல்லும்போது அங்கு கண்டெடுத்த பெண்குழந்தை ஆண்டாள். அவள் வயதுக்கு வந்தபோது பெரியாழ்வார் தொடுத்த மாலையை கோவிலுக்கு எடுத்துச்செல்லும் முன்பு தனக்கு சூட்டி பார்ப்பாள். இறைவனைக் காதலனாகவும், தன்னைக் காதலியாகவும் பாவித்து ஆண்டாள் பாடிய பாடல்கள் நாச்சியார் திருமொழியும் திருப்பாவையும் ஆகும். காதற்சுவை ததும்ப உள்ளம் நெக்குருகி இப்பாடல்களைப் பாடியுள்ளார்.

**மத்தளங் கொட்ட வரிசங்கம் நின்றூத**
**முத்துடைத் தாமம் நிரைதாழ்;ந்த பந்தற்கீழ்**
**மைத்துனன் நம்பி மதுசூதனன் வந்து என்னைக்**
**கைத்தலம் பற்றக் கனாக் கண்டேன் தோழி நான் (ச.வே. சுப்பிரமணியன், ப. 169)**

ஆண்டாளின் இதுபோன்ற கடவுளைப் பற்றிய பாடல்களில் காதல் கரைபுரண்டோடும். வேகமும் விரைவும் கொண்ட ஆற்றொழுக்குக்கு இணையான சொற்கள் பாடல்களை அலங்கரிக்கும்.

**தலைவியின் நிலை**

தாமஸ் மலைக் குறவஞ்சியின் தலைவி மேதினியாள் உலகத்தவரால் வெறுக்கப்பட்ட பெண் ஆவார். இறைவன் உலா வருகிறார் என்ற செய்தியைக் கேட்டப் பெண்கள் யாவரும் தலைவனைக் காண வந்தனர். தலைவனின் உலாவானது தாம்பரத்தில் துவங்கி ஆவடி, வியாசர்பாடி வழியாக வந்து கொண்டிருந்தது. தலைவனைக் காண வசதிமிக்க பெண்கள், ஏழைகள், கடினமான வேலைகளைச் செய்வோர், காஞ்சிப் பட்டு கட்டியோர், கல்லுடைப்போர், வெள்ளை சேலை கட்டியோர், திருமணம் கூடிவந்தப் பெண்கள் என எல்லாப் பெண்களும் தைரியமாய் வந்தனர். ஆனால் மேதினியாள் தலைகுனிந்து நாணி மெதுவாக நடந்து வருகிறாள். மேதினியாள் வருவதை,

**மேதினி யாள்துணிந்து மெல்லமெல்ல நடந்து**
**மேசியா வைக்காண்பதற்குச் - சென்னை மாநகர்**
**சாலையோ ரம்வருகிறாள் - வெகு**
**வெட்கமும்மன துக்கமும்உள**
**விக்கலும்நடை சிக்கலும்வர**
**வாரிமு டித்த கூந்தலும்**
**விரிந்து வீழ**
**விம்மிவிம்மி நடக்குறாள் (தாமஸ் மலைக் குறவஞ்சி, ப.22)**

எனப் பாடுகிறார். தன்னை இறைவன் ஏற்றுக்கொள்ள மாட்டார் என்ற மனநிலையோடு மேதினியாள் உலாவைக் காண வருகிறாள். மேலும் மேதினியாள் அந்த ஊராரால்,

**அடிசருக்கி வீழ்ந்துவிட்ட அழகிஅந்த நகரெலாம்**
**மடிவிரித்த பாவியென்று பேரெடுத்த மேதினி (தா. ம. கு., ப. 21)**

என்று அந்த ஊராரால் பழிக்கப்பட்ட நிலையிலிருந்த பெண் என்று சுட்டிக்காட்டப்படுகிறாள்.

**தலைவனின் அன்பு**

இறைவனாகிய தலைவன் எல்லா உயிர்கள் மீது அன்பு காட்டுபவன். தலைவன் உலா வருகையில் உலா காண வந்த ஒருவரும் காணாத உன்னத காட்சியை மேதினியாள் கண்டாள். தன்னை இறைவன் நோக்குவாரா என்ற சந்தேகம் கொண்ட மேதினியாள் மகிழ்ந்தாள். இதனை,

**தள்ளற் கரியதாம் தொன்மை அன்பினால்**

Volume 3, SPL Issue 1, July 2025 E-ISSN: 2584-167X

**கொள்ளைத் தெய்விகக் காதல்ப ழுத்திட**
**வள்ளலும் நோக்கினான் வனிதையும் நோக்கினாள்**
**உள்ளமும் உள்ளமும் ஒன்றெனல் ஆயின (தா. ம. கு., ப. 27)**

என இறைவன் எல்லா மனிதரிடமும் சமமாய் அன்பு செலுத்துபவர் எனவும், இறைவனாகிய இயேசு பார்த்தபோது மேதினியாளும் இறைவனைப் பார்த்தாள். தலைவனாகிய இயேசு மேதினியாளிடம் தாமதிக்காமல் மறுபடியும் உன்னைப் பார்ப்பேன் என்று கூறி மறைந்தார். இவ்வாறு எல்லா மனிதர்களிடமும் சமமாய் அன்பு காட்டுபவர் என்பதை ஆசிரியர் எடுத்துரைக்கிறார்.

**தலைவியின் பிரிவாற்றாமை**

தலைவனாகிய இறைவனை உலாவில் கண்ட தலைவி மீண்டும் தலைவனைக் காண இயலாததால் தனிமையில் புலம்புகிறாள். தலைவன் சென்றவுடன் மயக்கம் போட்டு நிலத்தில் விழுந்து கிடக்கிறாள். மூச்சில்லாமல் கிடக்கும் மேதினியாளைப் பார்க்க பெண்கள் கூடி வருகின்றனர். மேதினியை கட்டில் மேல் படுக்க வைத்து வியர்வையைத் துடைத்து குடிக்க இளநீரும், எலுமிச்சைச் சாறும் கொடுத்து அவள் மயக்கத்தைப் போக்குகின்றனர். இதனை,

**மன்னவன் நோக்கிய நோக்கினிலே**
**தன்னை மறந்தனள் மேதினியாள்**
**தன்னை மறந்த ஒருகறுப்பு**
**மின்னல் விழுந்ததைப் போல்விழுந்தாள் (தா. ம. கு., ப.29)**

எனக் குறிப்பிடுகின்றார். மேலும் கண்விழித்த மேதினியாள் தனிமையில் புலம்பித் தவிக்கிறாள் என்பதை,

**கள்ள நோக்கில் அவர் கண்கள் பேசியதென்ன**
**உள்ளத்தைக் கொள்ளையாடி உயரப் பறந்ததென்ன (தா. ம. கு., ப. 32)**

என்று பாடுகின்றார். மேலும் இறைவன் மீது கொண்ட காதலால் உணவு மறந்து, உறக்கமில்லாமல் தவிப்பதாக தோழியுடன் உரைக்கிறாள் தலைவியாகிய மேதினியாள்.

**கண்களை மூடிகிட்டா**
**குருசுமரம் தெரியுதடி தோழி**
**காதுகளை – அடைச்சிகிட்டா**
**கசையடிகள் கேட்குதடி பாவி (தா. ம. கு., ப.35)**

என்று தோழிக்குக் கூறுகிறாள். தலைவி "இறைவன் - ஆன்மா என்பவற்றுக் கிடையிலான தெய்வீக உறவை தலைவன் தலைவிக்கிடையிலான உளவியல் உறவாகப் பாவனை செய்யப்படுதலையே நாயகன், நாயகி பாவம் என்ற தொடர் உணர்த்துகிறது" (வேலுப்பிள்ளை, ஆ. ப. 95) என்னும் கூற்றிற்கிணங்க தலைவியின் உளவியல் ரீதியான உறவாக தலைவன் மீது கொண்ட காதல் விளங்குகிறது.

**தலைவியின் மகிழ்ச்சி**

தலைவனாகிய இறைவனை நினைத்துப் புலம்பிய மேதினியாள் தோழியாகிய அபரஞ்சியை அனுப்பி குறத்தியாகிய ஜெபமாலையை அழைக்கிறாள். செபமாலை வந்து நன்மையாக குறி கூறுகிறாள். நீ ஆசை வைத்த உன் காதலன் உன்னை அழைத்து செல்வான் உனக்கு வெள்ளையாடைகள் உடுத்தி மாலையிட்டு, கிரீடம் சூட்டுவான். உனக்கு தாலி கட்டி வாழ்த்துவான் எனவும் கூறுகிறாள். இதனைக் கேட்ட மேதினியாள் மகிழ்ந்து,

**கன்னி யாயி ருந்தமேரி காத்திருந்த நாளிலே**
**மன்னுதேவ தூதன்சென்று நல்லசெய்தி சொன்னதும்**
**அன்னைகொண்ட பூரிதம்என் நெஞ்சிலின்று பொங்குது**
**கன்னிமைவி ழுந்துபோன காரிகை எனக்கிது**
**வன்னியில்ம லர்ந்தபூவை ஒத்திருக்கு தம்மையே (தா. ம. கு., ப.70)**

**Volume 3, SPL Issue 1, July 2025** **E-ISSN: 2584-167X**

என்று கூறுகிறாள். மேதினியாள் இறைவனிடம் காதல் கொள்ள இறைவனின் நிகரற்ற அன்பே காரணமாக இருக்கிறது.

**முடிவுரை**

சிற்றிலக்கியங்களில் குறவஞ்சி இலக்கியம் படிப்பதற்கும், புரிந்து கொள்வதற்கும் எளிமையானதாகும். தாமஸ் மலைக் குறவஞ்சியும் தலைவன் மீது தலைவியாகிய மேதினியாள் கொண்ட காதலை நயமாக வெளிப்படுத்துகிறது. இங்கு தலைவியின் காதல் சிற்றின்ப காதலாக அல்லாமல் பேரின்பக் காதலாக உள்ளது. உலா வரும் தலைவனைக் காணும் ஆவலில் வந்தப் பெண்கள் ஒருவரும் காணாத காட்சியை மேதினியாள் காண்கிறாள். பிரிவாற்றாமையில் வருந்துகிறாள். குறத்தி சொல்லும் வார்த்தைகளில் மகிழ்கிறாள். இவ்வாறு நாயகன் நாயகி உத்தியை ஆசிரியர் பயன்படுத்தி இயற்றப்பட்ட நூல்கள் படித்து இன்புறத்தக்கன. அகமரபைப் பின்பற்றி விளக்கப்படும் இவ்வுத்தியில் தலைவன், தலைவியின் அன்பின் சிறப்பு, பிரிவில் கலங்குதல் போன்றவை இலக்கிய நயத்தோடு வெளிப்படுத்தப்பட்டுள்ளன என்பதை இக்கட்டுரை புலப்படுத்துகின்றது.

**குறிப்புகள்**

[1] சுப்பிரமணியன், ச. வே. *தமிழ் இலக்கிய வரலாறு*. மணிவாசகர் பதிப்பகம், சென்னை-108, ப.169

[2] செயராமன். ந, வீ. *சிற்றிலக்கியச் செல்வங்கள்*. மணிவாசகர் பதிப்பகம், சிதம்பரம் - 608001, 2010, ப.27

[3] சேதுராமன். சி. *தமிழ் இலக்கிய வரலாறு*. நியூ செஞ்சுரி புக் ஹவுஸ்(பி) லிட், சென்னை – 600 098, 2019, ப. 204

[4] பொன்னு ஆ. சத்தியசாட்சி. *தாமஸ் மலைக்குறிஞ்சி*. சி. எல். எஸ். அச்சகம், சென்னை- 600 007, 1999, ப.viii

[5] வேலுப்பிள்ளை, ஆ. *தமிழர் சமய வரலாறு*. பாரி புத்தகப் பண்ணை, சென்னை-1985 ப. 95

[6] ஜாண் சாமுவேல், ஜி. (ப.ஆ.). *கிறித்தவச் சிற்றிலக்கியத் திரட்டு*. ஆசியவியல் நிறுவனம், சென்னை – 600 119, 2014, ப. 10

[7] ஜாண் சாமுவேல், ஜி. *கிறித்தவத் தமிழிலக்கியம் சில பார்வைகள்*. ஹோம்லாண்ட் பதிப்பகம், சென்னை – 600 096, 2017. ப. 140

**நிதிசார் கட்டுரையாளர் உறுதிமொழி:** இல்லை

**கட்டுரையாளர் நன்றியுரை:** இல்லை

**கட்டுரையாளர் உறுதிமொழி: இக்கட்டுரையில் எவ்வித முரண்பாடும் இல்லை என்று உறுதிமொழி அளிக்கிறேன்.**

இக்கட்டுரை கிரியேட்டிவ் காமன்சு ஆட்ரிபியூசன் 4.0வின் [Creative Commons Attribution4.0] கீழ் பன்னாட்டு உரிமம் பெற்றுள்ளது.

Volume 3, SPL Issue 1, July 2025 E-ISSN: 2584-167X

# Special Narration in *Azhagar Killai Vidu Thoothu*

**N. Padmasree,** Reg : No 21113154022030, Research Scholar of Tamil, S.T. Hindu College, Nagercoil -629 002, Manonmaniam Sundaranar University, Tirunelveli -12, Tamilnadu, India.
ORCiD: https://orcid.org/0000-0002-1153-1320
**Dr. P. M. Jayakala,** Associate Professor, Tamil Research Centre, S.T.Hindu College, Nagercoil, Manonmaniam Sumdaranar University, Tirunelveli-12, Tamil Nadu, India.
ORCiD: https://orcid.org/0000-0002-0736-0047
Received: 1 April 2025; Revised: 10 April 2025; Accepted: 19 May 2025; Available Online: 30 July 2025.

## Abstract

*A significant development in Tamil literature between the 15th and 19th centuries was the emergence of minor literary forms (Sitrilakkiyam). Among these, Thoothu literature occupies a unique position. The tradition of the Thoothu (message poem) holds an important place in the cultural life of the Tamils, with its origins traceable to earlier periods. Nenju Vidu Thoothu is recognised as the earliest Thoothu poem in Tamil. This genre employs a messenger to convey sentiments or intentions on behalf of the speaker. It may be often an animate or inanimate entity. In this tradition, "Alagar killai Vidu Thoothu" stands out for its imaginative use of a parrot as the messenger of love. The poet sends the bird to Lord Alagar, the presiding deity of Tirumaliruncholai to express the yearning and devotion of the speaker. Through this literary device, the poem portrays the splendour of Lord Alagar seated upon Tirumaliruncholai Hill, the charm of the Silambu River, the prosperity of the southern Thenpandi country, and the aesthetic beauty of the temple. The poem also highlights the divine majesty of Lord Alagar in his sacred holy appearance (tirukolam), as revealed through the parrot's message. Nevertheless, this article seeks to examine the literary merits and cultural significance of "Alagar killai Vidu Thoothu".*

**Keywords:** *Alagar killai Vidu Thoothu*, Parrot, Thoothu, Thirumaliruncholai Malai, Azhagar, Varunanaigal.

## References

[1] Anbu, A. *Thoothin Tholai Noku Parvai*. India Palkalaikazhaga Tamilasiriyar Matrum Aaivu Kovai, Madurai Kamarajar University, Madurai- 629 021, 2011.
[2] Annamalai. *Thirumanthiram Moola Padam Aaivu Pathipu*. India Aaraichi Niruvanam, 84, Kala Sethra Salai, Chennai-600 041, Second Edition - 2002
[3] Arunagirinathar. *Thirupugazh*. Sri Hindu Publication, Chennai-600035, 2012.
[4] Acharya, B, S. *Thirukkural*. Narmatha Pathipagam, T.Nagar, Chennai-17, 2020.
[5] Radhakrishnan, S. *Azhagar Killaividu Thoothu.* Chennai-17, 2009.
[6] Paramasivam, T. *Azhagar Kovil*. Chennai-600 015, 2022.
[7] Perumal, B. *108 Vainava Dhivya Desangal.* Sanker Printers, Chennai – 600 049, 2020
[8] Subramanian, P. *Paripadal Moolamum Uraium.* New Century Book House (P.Ltd), Chennai – 600 098, 2004.
[9] Tamizharas, P. *Tamil Vidu Thoothu Kattum Tamizhin Sirapu.* Kalaigyan Printers, Chennai – 600 017.
[10] Viswanathan, A. *Kalithogai Moolamum Uraium.* New Century Book House, (P.Ltd), Chennai-600 098, 2011
[11] Jegathretchagan, S. *Astaprabantham.* Azhvargal Research Center, Thiyagaraja Nagar, Chennai- 600 017.

**Volume 3, SPL Issue 1, July 2025** **E-ISSN: 2584-167X**

**Author Contribution Statement:** NIL.
**Author Acknowledgement:** NIL.
**Author Declaration:** I declare that there is no competing interest in the content and authorship of this scholarly work.
The content of the article is licensed under https://creativecommons.org/licenses/by/4.0/ International License.

Academic Research News

# Academic Research News

*Peer-Reviewed Journal*

78

**Volume 3, SPL Issue 1, July 2025** **E-ISSN: 2584-167X**

# *அழகர் கிள்ளை விடு தூது வெளிப்படுத்தும் வருணனை சிறப்பு*

**நா. பத்மஸ்ரீ,** பதிவு எண் : 21113154022030, முனைவர் பட்ட ஆய்வாளர், தமிழ்க்கலை ஆய்வகம்,
தெ.தி.இந்துக்கல்லூரி, நாகர்கோவில் – 629 002, மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழகம்,
திருநெல்வேலி -12, தமிழ்நாடு, இந்தியா.
**ORCiD: https://orcid.org/0000-0002-1153-1320**
**முனைவர் பா. ம. ஜெயகலா,** இணைப்பேராசிரியர், தமிழ் உயராய்வு மையம், தெ. தி. இந்துக் கல்லூரி,
நாகர்கோவில், மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழகம், திருநெல்வேலி - 12, தமிழ்நாடு, இந்தியா.
**ORCiD: https://orcid.org/0000-0002-0736-0047**

**ஆய்வுச்சுருக்கம்**

*தமிழ் இலக்கியங்களில் புதிய பரிணாமமான சிற்றிலக்கியம் 15 முதல் 19 ஆம் நூற்றாண்டை சார்ந்தது. இத்தகைய சிற்றிலக்கிய வகைகளில் தூது இலக்கியங்கள் சிறப்புப் பெற்றவை. தமிழர்கள் வாழ்வில் பண்டைய காலம் தொட்டு தூது முக்கிய இடத்தைப் பெறுகிறது. தமிழில் முதலில் எழுந்த நெஞ்சுவிடு தூது தொடங்கி அனைத்து தூதுவகை சிற்றிலக்கியங்களும் ஏதேனும் ஒரு பொருளைத் தூது விடுவதாக அமைகிறது. அந்த வகையில் ''அழகர் கிள்ளை விடு தூது'' அழகர் மீது கொண்ட காதலை தலைவி அழகரிடம் வெளிப்படுத்த கிளியைத் தூது அனுப்புவதாக அமைகிறது. திருமாலிருஞ்சோலை மலையில் வீற்றிருக்கும் அழகரின் சிறப்புகளையும், சிலம்பாற்றின் சிறப்பையும், தென்பாண்டி நாட்டின் சிறப்பையும், கோவிலின் அழகையும், அழகரின் திருகோலத் தோற்றத்தினையும் வருணனை சிறப்பையும் அறிய முடிகிறது.*

**குறிப்புச்சொற்கள்:** *அழகர் கிள்ளை விடு தூது,* கிளி, தூது, திருமாலிருஞ்சோலை, அழகர், வருணனை.

**முன்னுரை**

புதிய இலக்கிய வகைகளுக்கும் வடிவங்களுக்கும் இடங்கொடுத்து தன்னை வளப்படுத்திக் கொண்ட மொழி தமிழ்மொழி. இறையெண்ணம் முதிர முதிர மனிதனுக்கு இயற்கையின் மீதும் இறைவன் மீதும் அச்சம் கலந்த வியப்பு மிகுந்த அன்பு ஏற்படுகின்றது. இறை பக்தி என்பதற்கு அன்பே அடிப்படை ஆகும். அன்பு என்பது அறிவைக் கடந்து ஆருயிரை ஊடுருவி ஒரு கனலாக கரைகின்றது. இந்த இறையன்பே ஒரு இலக்கியமாகும்போது அது உலகே ஒரு நொடியில் ஈர்த்து விடுகிறது. இறையுறை கோயில்களின் வரலாற்றுத் தொன்மங்களும் மாலைகளும் கலம்பகம், பிள்ளைத்தமிழ், உலா, அந்தாதி என பலதர சிற்றிலக்கியங்களும் எண்ணிலடங்கா. அத்தகைய பக்தி ஈர்ப்பினைப் பெற்ற இலக்கியமாக அழகர் கிள்ளை விடு தூது அமைத்துள்ளது. திருமாலிருஞ்சோலையில் தொடங்கி அழகர் சிறப்பு அந்நூலில் இடம்பெற்றுள்ள வருணனை சிறப்புகளை உற்றுநோக்கி ஆராய்வதே இக்கட்டுரையின் நோக்கம் ஆகும்.

**சிற்றிலக்கியம்**

சிற்றிலக்கியம் முதல் முதலில் பிரபந்தம் என்னும் சொல்லால் குறிப்பிடப்படுகிறது. சிற்றிலக்கியம் என்பது தமிழ் மொழியில் காணப்படும் இலக்கிய வகைமைகளில் ஒன்று. தமிழில் 96 வகை சிற்றிலக்கியங்கள் காணப்படுகிறது. தமிழில் நெடும்பாடல்களாக அமைந்த பிரபந்த வகைகளை சிற்றிலக்கியம் என்பர். இத்தகைய சிறப்புடைய சிற்றிலக்கிய வகைகளுள் ஒன்றே தூது இலக்கியம் ஆகும்.

**தூது**

தூது என்பது ஒருவர் தம்முடைய கருத்தை வேறொருவருக்கு இடைநின்ற ஒருவர்

Academic Research News

# Academic Research News

*Peer-Reviewed Journal*



**Volume 3, SPL Issue 1, July 2025** **E-ISSN: 2584-167X**

வாயிலாக கூறி விடுப்பது ஆகும். (அ. அன்பு, பக். 79) இருவருடைய பிரச்சினைகள் அதற்கு செய்திகளை அல்லது கருத்துக்களை பரிமாறிக் கொள்வதற்கு உறுதுணையாய் இருப்பவரை தூதர் என்று வழங்குவர். காதலர்களிடையே தூது அனுப்பும் பழக்கம் உண்டு. அரசர்கள் இடையே தூது அனுப்பும் மரபு உண்டு. இன்றும் அரசுகளுக்கு இடையே கருத்து பரிமாற்றங்களுக்காக தூதர்கள் நியமிக்கப்படுகின்றனர். நாடுகள் தோறும் பிறநாட்டு தூதரகங்கள் உள்ளன. தொன்றுதொட்டு நடைமுறையில் இருக்கும் தூது என்பதே பழந்தமிழ் இலக்கியங்களும் உரைக்கின்றன. தமிழ்மொழியில் தோன்றிய முதல் தூது இலக்கியம் நெஞ்சுவிடுதூது ஆகும். இந்நூலின் ஆசிரியர் உமாபதி சிவாச்சாரியார் நெஞ்சத்தை தம் ஆசிரியருக்கு தூதாக அனுப்புகிறார். கி.பி.14 ஆம் நூற்றாண்டில் தோன்றிய நெஞ்சுவிடு தூது என்ற நூலை தொடர்ந்து தமிழ்விடு தூது மேகம்விடு தூது என பல தூது நூல்கள் தோன்றியுள்ளன. திருவள்ளுவர் திருக்குறளில் தூது என்று தலைப்பில் ஒரு அதிகாரத்தை அமைத்துள்ளார் சான்றாக,

**அன்புடைமை ஆன்றகுடிப் பிறத்தல் வேந்தவாம்**
**பண்புடைமை தூதுரைப்பான் பண்பு (குறள்.681)**

என்ற குறட்பாவில் தூது செல்பவருடைய இன்றியமையாத பண்புகளை அறியலாம். முதல் இலக்கண நூலாகிய தொல்காப்பியம்,

**ஓதல் பகை தூது இவை பிரிவே (அகத்திணையியல்.27 )**

என தூது பற்றி பகர்கிறது. மேலும் தூதுக்குரிய இலக்கணமாக இலக்கண விளக்கப்பாட்டியல்

**பயில்தரும் கலிவெண்பா வினாலே**
**உயர்திணைப் பொருளையும் அஃறிணை பொருளையும்**
**சந்தியின் விடுத்தல் முத்துறு தூதென**
**பாட்டியல் புலவர் நாடினர் தெளிந்தே (தமிழரசி. பக்.53)**

என குறிப்பிடுகின்றது. தூது இலக்கியம் தெய்வங்கள் அல்லது வள்ளலிடத்து உயர்திணையாகிய பாணன் விறலி போன்றோரையும் கிளி, வண்டு, மேகம் போன்ற அஃறிணைப் பொருள்களையும் தூது விடுவதாக அமைகின்றது. தமிழில் பல அக,புற தூது இலக்கியங்கள் காணப்படுகின்றன. இதில் சிறப்பு பெறுவது அழகர் கிள்ளை விடு தூது.

***அழகர் கிள்ளை விடு தூது***

சங்ககாலம் முதற்கொண்டு மக்கள் தூது விடுத்தல் பொருட்டு பறவைகளையும் உட்படுத்தினர். அவற்றுள் கிளியானது சிறப்பான இடத்தை கொண்டுள்ளது. திருமாலிருஞ்சோலை மலையில் கோயில் கொண்டிருக்கும் அழகர் இடத்து பலப்பட்டை சொக்கநாதப் புலவர் கிளியை தூது விடுவதாக அமைத்து பாடிய நூல் அழகர் கிள்ளை விடு தூது ஆகும். திருமாலிருஞ்சோலை மலையில் கோயில் கொண்ட அழகரிடம் உள்ளத்தைப் பறிகொடுத்த பெண் ஒருத்தி தன் காதலை ஏற்று அதன் அடையாளமாக மாலை ஒன்றை வாங்கி வருமாறு கிளியைத் தூது விடுப்பதாக பாடப்பட்டது அழகர் கிள்ளை விடு தூது. இது 239 கண்ணிகளைக் கொண்டதாக அமைக்கப்பெற்றது. பழமையான கிளி விடு தூதாகவும் இந்நூல் அறியப்படுகிறது. மேலும் அழகர் வீற்றிருக்கும் மலையின் அழகையும் அவ்வூரின் வளத்தையும் கிளியினுடைய சிறப்பையும் அழகராகிய திருமாலினைப் பற்றியும் இந்நூல் கூறுகிறது.

**அழகர் கோயிலின் அழகு**

தேவர்களுக்கெல்லாம் தலைவனாக விளங்கும் திருமால் கோயில் கொண்ட மலை திருமாலிருஞ்சோலை. இத்தலம் வைணவ திவ்ய தேசங்களில் ஒன்று. ஆழ்வார்கள் திவ்ய பிரபந்தங்களில் இக்கோயில் அழகை வியந்து பாடுகின்றனர். இதைப்போல அழகர் கிள்ளை விடு தூதும் அழகர் கோவிலின் சிறப்பை புகழ்ந்து பாடுகிறது. அழகர் கோவில் விமானம் ஆனது சந்திரன் வடிவில் இருப்பதால் திருமாலிருஞ்சோலை மலை கோயில் விமானத்தின் பெயர் சோமசந்திர விமானம். இதனை இந்திர விமானம் என்றும் கூறுவர். சிற்றிலக்கியமான அழகர் கலம்பகமே இப்பெயரை முதல் முதலில் குறிக்கின்றது.

Volume 3, SPL Issue 1, July 2025 E-ISSN: 2584-167X

**சந்திர வடிவமாம் சோமச்சந்திர விமானத்தை**
**இந்திர விமானம் இதுஎன்றும் மந்திரவிரு(து) (பா. 107)**

என்னும் பாடல் வரிகள் வழி அறியலாம். கோவிலில் விமானத்தைக் கடந்ததும் கோவிலுக்கு அழகு தருவது கொடி மரம். தீய சக்திகளை அகற்றுவதன் பொருட்டும். இறையாற்றலை அதிகரித்தல் பொருட்டும், கோயிலையும் பக்தர்களையும் பாதுகாத்தல் பொருட்டும். ஆலயங்களுக்கு முன்பாக கொடிமரம் நிறுவப்படுகிறது. கோவிலின் திருவிழா காலங்களில் கொடி மரத்தின் மீது கொடி ஏற்றப்படுகின்ற அழகை காமவல்லி கொடி பறந்த கற்பகமரமே என்று வர்ணிப்பதை,

**துக்கொடி ஏறுது சத்தம்பம் வல்லிசா(த)**
**தக்கொடி ஏறுகற்பதாறு என்றும்- மிக்கோர்க்கு' (பா. 108)**

என்னும் பாடல் அடிகள் கொடிக்கம்பத்தின் சிறப்பை கூறுகிறது. இத்தகைய சிறப்பை உடைய அழகர் குடி கொண்டுள்ள அமராவதி நகரை போன்ற திருமாலிருஞ்சோலை என்ற தெய்வீகமான ஊரினை உடைய அழகர்,

**ஆர்ப்பதியான அமராபதி போலும்**
**சீர்பதியான திருப்பதியான் மார்பு இடத்தில் (பா.111)**

**சிலம்பாறு**

அழகர் மலையில் பிறக்கும் சிலம்பாற்றினை பரிபாடலும் சிலப்பதிகாரமும் சிலம்பாறு என்றே குறிக்கின்றன. இதே பொருளில் இப்பெயர் நூபுரகங்கை எனவும் வழங்கப்படுகிறது. சிலம்பாறு மிகவும் புண்ணியமான நதியென்று கூறப்படுகிறது.

**அலங்கும் அருவி ஆய்ந்து இமிழ்பு இழியஅணிந்த**
**சிலம்பாறு அணிந்த சீர்கெழு திருவின்**
**சோலையோடு தொடர்மொழி மாலிருங் குன்றம் (பரி., பா. 19-23)**

என்று சிலம்பாற்றை பற்றி பரிபாடல் கூறுகிறது. இத்தகைய சிறப்புடைய சிலம்பாறு என்றும் வற்றாது பொன்மலையாகிய மேருமலையிலிருந்து வழிந்தோடும் சாம்பூநதம் என்னும் நதியைப்போல் அழகரின் சிலம்பின் மாணிக்க பரல்களாக அம்மலையில் பெருகிவரும் நதியாகிய சிலம்பாறு இதனை,

**பொற்சிலம்பில் ஓடும் சாம்பூநாதம்போல் மாணிக்க**
**நற்சிலம்பில் ஓடும் நதியாகிக் கல்சிலம்பில் (பா. 101)**

என்னும் பாடல் அடிகள் பகர்கின்றன. மேலும் கல்மலை இந்திரன் போலவும் மலையின் வளமிக்க சேனைகள் இந்திரன் மேனியிலுள்ள ஆயிரம் விழிகளைப் போலவும் காட்சி அளிக்கும். இதனை,

**மாலுடைய தோளின் மணிமார்பின் முத்தாரம்**
**போலவரு நூபுர நதியான் – சீலம் (பா.103)**

இன்னும் பாடல் வரிகள் உணர்த்துகின்றன. மேலும் எல்லா உயிர்களுக்கும் ஆதியானவனாகிய திருமாலின் தோளிலும் அழகிய மார்பிலும் கிடைக்கின்ற முத்து மாலையைப்போல தோன்றும் சிலம்பாற்றினை உடையவர் அழகர். இத்தகைய சிறப்புடைய சிலம்பாற்றினை பற்றி திருப்புகழ்,

**சீர்சிறக்கு மேனி பசேல பசேலென**
**நுபுரத்தின் ஓசை கலீர் கலிரென (திருப்புகழ்.பழமுதிர்ச்சோலை.445)**

என்னும் பாடல் அடிகள் சிலம்பாற்றின் புகழை எடுத்துரைக்கிறது.

**தென்பாண்டிநாடு**

தென்பாண்டிநாடு என்று சிறப்பித்து அழைக்கப்படும் திருநெல்வேலியில் பஞ்ச பூத தலங்கள் அமைய பெற்றுள்ளன. சேக்கிழார் தன் பொருநைப் புனல்நாடு எனக் கூறியுள்ளார். மேலும் ஒழுக்கத்தில் சிறந்தவையும் செந்தமிழ் வழங்குபவையும் ஆன தென்பாண்டி நாடு, குட்ட நாடு, குட நாடு, கற்காநாடு, வேணாடு, பூழிநாடு, பன்றிநாடு, அருவாநாடு, அருவா வடதலை

Volume 3, SPL Issue 1, July 2025 E-ISSN: 2584-167X

நாடு, சீத நாடு, மலநாடு, புனல்நாடு, என்னும் பன்னிரு நாடுகளும் பூமி தாய்க்கு இரு கைகள் இரு காதுகள், இரு முலைகள், முகம், இரு கால்கள், பின்னல், இரு கண்கள்ஆகிய பன்னிரு அங்கங்கள் ஆகும். இதனை,

**பன்னிரு செந்தமிழ்ச்சேர் நாடுகளும் பார்மகளுக்கு**
**முன்இருக்கை காதுமுலை முகம்கால் பின்னம்கண் (பா. 104)**

மேலும், இப்பன்னிரு அங்கங்களும் பொன் மலையாகிய இமய மலையின் மேல் தனது புகழை புனல் நாடாகிய சோழநாடும் தென்னாடு ஆகிய பாண்டியநாடு இரு கண்கள் ஆகும். இதனை,

**காட்டும் அவற்றுள் கனகவரை மீதுபுகழ்**
**நீட்டும் புனநாடும் தென்னாடும் நாட்டாடம் (பா. 105)**

என்னும் பாடல்வரி அறியலாம். இத்தகைய சிறப்பைப் பெற்று பூமித்தாயின் கண்களாக விளங்கும் அவ்விரு நாடுகளுள் அருள்நிறைந்த வலக்கண் என மதிக்க பெறும் நலமிக்க தென்பாண்டி நாட்டை உடையவர் அழகர்.

**இறைவனின் உடல்:**

உலகில் உள்ள உயிரினங்கள் அனைத்தையும் படைத்தவன் இறைவன் கண்ணுக்குத் தெரியாத உயிரினம் முதல் மிகப்பெரிய உயிரினங்கள் வரை பல்வேறு வகையான அமைப்பில் உயிரினங்களை இறைவன் படைத்துள்ளான். இத்தகைய படைப்புக்கு உரியவன் வெண்ணெய் உண்ட பொழுது உடம்பின் மேல் சிந்திய வெண்ணைத் துளிகளையும் தன்கையில் ஏந்தி இருந்த வெண்ணை உருண்டை வானத்தின் விண்மீன்கள் போலவும் நிலவு போலவும் தோன்றும் தன்மை உடையவன் இதனை,

**மேனியில் சிந்தியதும் என்கையில் ஏந்தியதும்**
**வானில் உடுவும்மதியும் எனத்தான் உண்டோன் (பா. 123)**

மேலும், சிவந்த கதிரவனும் வெண்ணிலவும் போன்ற இரு திருவிழிகளையும் சங்கு சக்கரங்களையும் உடையவன் என்பதை,

**செங்கதிரும் வெண்கதிரும் என்னத் திருவிழியும்**
**சங்கமும் சக்கரமும் தாங்கினேன் அங்கன்உலகு (பா.125)**

என்ற பாடல்வரிகள் மூலம் இறைவன் உடல் அழகை அறியலாம்.

**அழகரின் திருக்கோலத் தோற்றம்:**

நரசிங்கம் போன்ற திருவுருவத்தை எடுத்து இரணிய சங்காரம் செய்தவன். கிருஷ்ணாவதாரத்தில் பூதனையின் பாலை உண்டவன். பிள்ளைத்தன்மை நீங்காதவன், மாயன் என்னும் பெயருக்கு ஏற்ப என் மனதுள் இருந்தாலும் மாயம் செய்து ஒழிப்பவன், ஆதி மூலம் இவன் என்பதை உணர்த்தும் யானை ஒன்றை உடையவன், "நீ ஒருவருக்கும் மெய்யனல்ல" என்று பெரியாழ்வாரும், "வஞ்சகமாயமான்" என்று நம்மாழ்வாரும் இத்தலத்து இறைவனை பாடி இருக்கின்றனர். இதனை

**கட்டுரைகில் தாமரை நின்கண்பாதம் கைஒவ்வா**
**சுட்டுஉரைத்த நன்பொன் உன்திருமேனி ஒலிஒவ்வாது (நா.தி.பி.3122)**

என்ற பாடல் வரிகள் உணர்த்துகின்றன. இத்தகைய சிறப்புடைய அழகரை சொக்கநாத புலவரும் சிங்க வடிவம் முதலில் தோன்றிய பின்னர் நரனாம் மனித வடிவம் பெற்ற நரசிங்கமாக ஒரு பெரிய தூணின் உள்ளிருந்து வெளிப்பட்டு கரிய நிறமும் மலை போன்ற அகன்ற தோள்களும் உடைய அசுரனாகிய இரண்யனின் வலிமை நிறைந்த உடலைத் தரையில் தேய்த்து அழித்து அவன் போரில் ஈடுபடுத்திய சேனைகளை எமனுக்கு உணவாகியவர் இதனை,

**அறிவடிவுமாய்ப் பின்னரன் வடிவுமாகிப்**
**பெரிது ஒருதூணில் பிறந்து- கரிய (பா. 67)**

மேலும்,

**வரைத்தடந்தோள் அவுணன் வன்காயம் கூட்டி**

Volume 3, SPL Issue 1, July 2025 E-ISSN: 2584-167X

**அரைத்து இடும்சேனை அருந்தி- உருந்திரனாய் (பா. 68)**

என்ற பாடல் வரிகள் பகர்கின்றன. மேலும்

**புரந்தன்ஆம் எனபாபூ பதிஆகி புகர்முகமாத்**
**துறந்து அரசு ஆளில்என், நல்குரவு ஆகில்**
**என் -தொல்புவிக்கு**
**வரம்தர மாலிருஞ்சோலை நின்றார்க்கு (அழகர்அந்தாதி, 2)**

இந்த பாடல் அடிகள் திருமாலிருஞ்சோலை மலை அழகரைப் பற்றிக் கூறுகிறது. மேலும் சிவனாக வடிவெடுத்து அவனுடைய அழித்தல் தொழிலையும் தானே செய்து பின்னர் அழித்தல் தொழிலுக்கு பகையான தொழிலான புவியைக் காத்தலையும் செய்து உண்ண வேண்டிய முறைப்படி அடக்கிக் கொண்டு அருள் புரிந்தவன் இதனை,

**பண்ணும் தொழிலைப் பகைத்து நிலக்காப்பும் அணிந்து**
**உண்ணும்படி எல்லாம்உண்டு அருளி வெண்ணைய்உடன் (பா. 69)**

என்னும் பாடல் வரிகள் தெளிவுபடுத்துகிறது. மேலும் என் காதல் என்னும் வெள்ளத்தில் மூழ்கி கிடக்கின்றவன். ஆனால் கடையூக் காலத்தில் பிரபஞ்சங்களை அழிக்கும் கடல் நீர் பரப்பின் மேலாலிலையில் மிதப்பவன் ஒருவர் உள்ளத்தின் உள்ளும் இருப்பவன் எனினும் இவ்வுலகிற்கும் அப்பாற்பட்டவன். இதனை,

**வெள்ளத்து அமிழ்ந்திேனோனோன் வேலைக்கு மேல்மிதந்தோன்**
**உள்ளத்து உள்ளான் உலகுக்கு உப்பாலன்- தெள்ளிதின்**

என்ற பாடல் வழி அறியலாம். மேலும்,

**நீர்ஆளி வண்ணனை பாலாழி நாதனை**
**நின்மலனை**
**சீர்அழி அம்கைத் திருமகள் கேள்வனை,**
**தெய்வப்புள் ஊர் (அழகர்அந்தாதி, பா. 1)**

இதனை,

**மோதும்பரன் ஆதிமூலம் இவன்என்றே**
**ஓதும்கரி ஒன்று உடையமால்-மூதுவகைத் (பா. 85)**

என்ற பாடல் அடிகள் பொங்கு அலைமோதும் திருப்பாற் கடலில் அறிதுயில் புரியும் பரம்பொருள் தானே எனக்குப் படைத்த எறும்பு முதல் யானை ஈரான எண்பத்தி நான்கு லட்சம் பிறவிகளையும் தன் பத்து அவதாரங்களால் தீர்த்துருளியவன் அழகர். அழகரின் குதிரை

**வேதபுரவி**

குதிரையை போர்வீரர்களே அதிகம் பயன்படுத்துவார்கள். அழகரும் ஒரு போர்வீரரே! மானிடர்களின் பல பாவங்களை செய்து அவர்களுள் உறைந்து கிடக்கும் இந்த கெட்ட குணங்களுடன் போரிட்டு பாவ சுமையை குறைக்கவே அவர் குதிரை மீது ஏறி வருகிறார். அவரது குதிரையின் நான்கு கால்களும் தர்மபடி வாழ வேண்டும். வாழ்க்கையும் பொருள் உணர்ந்து வாழ வேண்டும். அதன் மூலம் இன்பம் பெற வேண்டும். பாவமற்ற வாழ்க்கை பின்பற்ற நிலையை நல்கும் என்ற நான்கு நிலையாக உள்ளன. இத்தகைய சிறப்புடைய வேதபுரவி என்னும் குதிரை உருவத்தில் திருமாலின் கல்கி அவதாரம் போல் இருக்கும். சொர்க்கத்து செல்லும் வழியே அதுகாட்டும் மக்களோடு நெருங்கிச் செல்லும் பெருமைமிக்க கலைகள் பலவற்றையும் கற்றது. வேதத்தின் ஆறு அங்கங்களும் அதன் உறுப்புகள். இதனை,

**வர்க்கத்துடன் எழுந்து வாயிநுரை கடந்து**
**கற்கிவடிவு நலம்காண்பித்துச்- சொர்க்கத்தில் (பா. 117)**

என்னும் பாடல் அடிகள் எடுத்துரைக்கிறது. மேலும்,

**உள்ளம் பெருங்கோயில் ஊனுடம்பு ஆலயம்**
**வள்ளல் பிரானாறர்க்கு வாய்கோபுர வாசல்**
**தெள்ளத் தெளிந்தாக்கு ஜீவன்சிவலிங்கம்**

Academic Research News

Peer-Reviewed Journal

Volume 3, SPL Issue 1, July 2025 E-ISSN: 2584-167X

**கள்ளப் புலனைந்தும் காலாமணி விளக்கே (திருமந்திரம். 1823)**

இந்த திருமந்திரப் பாடல் அம்பாளும் சுவாமியும் குதிரை வாகனத்தில் வரக்கூடிய அழகையும் குதிரையின் சிறப்பையும் எடுத்துரைக்கிறது.

**துளசி மாலை**

இந்தியா மற்றும் உலகின் பல பகுதிகளில் உள்ள பல விதமான மத நம்பிக்கையுடைய மக்கள் துளசியாலான அதாவது அணிகலன்களை கழுத்தணிகளாக அணிகின்றனர். துளசி மரம் பகவான் மற்றும் அவரது பக்தர்களுக்கு மிகவும் புனிதமானது ஆகும். துளசி மாலை அணிதல் மிகப்பெரிய பாவங்கள் ஆனது அழிகின்றது என கந்த புராண பாடல் கூறுகின்றது. இப்படிப்பட்ட துளசி மாலை மார்பில் அணிந்து உள்ள அடியவர்களால் நினைத்து துதிக்கபெறும் பல பொன் வயிறு அணிகலன்களுடன் கலந்து வான வில்லை போல காட்சி தருகின்ற பச்சை வண்ணத்தை மிகுதியாக காட்டுகின்ற துளசி மாலை அணிந்தவன் இதனை,

**எண்ணும் கலன்நிறத்தோடும் இந்திரவில் போல்பசந்த**
**வண்ணம் தரும்துலப மாலையான் உள்நின்று (பா. 112)**

என்னும் பாடல் வரிகள் பகர்கின்றன. மேலும் பரிபாடலிலும் அழகர் அணியும் துளசி மாலை பற்றிக் கூறப்பட்டுள்ளது.

**கள்அணி பசுந்துள் வினவை, கருங்குன்ற னையவை;**
**ஒளஒளியவை, ஒருகுழையவே (பரி., 15: 54-55)**

என்னும் பாடல் அடிகளில் கள்ளழகர் துளசி மாலை அணிந்தவன் கருகுன்றம் போன்றவன் என்று கூறப்பட்டுள்ளது.

**கருட கொடி**

கருடகொடி என்பது கருடன் எழுதப்பெற்ற கொடி. திருஷ்டியை நீக்குவதில் கருட கொடிக்கு அதிக ஆற்றல் உண்டு என்பார்கள். மேலும், கருட கொடிக்கு மந்திர சக்திகளை கிரகிக்கும் ஆற்றல் உண்டு. மேலும், இத்தகைய சிறப்பை உடைய கருடக்கொடி அழகருக்குச் சொந்தமானது. இந்த கருடகொடி அமுதம் கடைந்தபோது திருப்பாற்கடலில் நுழைந்த மந்திரமலை பம்பரம் போலவும், பூமி சக்கரம் போலவும் தன் நிலையில் சுழன்று கொண்டிருந்தபோது ஏற்பட்ட சுழற்சி வேகம் குறைந்தபோது வாசுகி, ஆதிசேடன் ஆகிய மிகப்பெரிய பாம்புகள்விழ அவற்றைப்பற்றிக் கொள்ளும் பெருவலிமை உடையவன்ஆன கருடனை தன் கொடியில் கொண்டவன் அழகர். இதனை,

**புக்கது ஒருமந்திரமும் பூமியும் பம்பரமும்**
**சக்கரமும் போலத்தலை சுழன்று- தொக்கவிசை (பா. 120)**

மேலும்,

**வற்றும் பொழுதுவிழ வாசுகியைச் சேடனைப்**
**பற்றும் கருடப் பதாகையான்- சுற்றியதன் (பா. 121)**

என்ற பாடல் அடிகள் மூலம் அழகருடைய கருட கொடியின் சிறப்பை அறியலாம்.

**மும்முரசு**

மும்முரசு என்பது நியாயமுரசு, வீரமுரசு, தியாகமுரசு ஆகிய மூன்று முரசுகளைக் குறிக்கும். இவை சேர, சோழ, பாண்டியர்களுக்குரிய மூன்று முரசுகளாகும். இந்த முரசின் சிறப்பினை,

**உறவுநீர்த் திரைஓங்கிய எக்கர்மேல்**
**விரவுப்பல் உருவின் வீழ்பெடை துணையாக,**
**இரைதேர்ந்து உண்டு அசாவிடூஉம்**
**புள்ளினம் இரைகொள**
**முரசுமூன்று ஆள்பவர் முரணியோர் முரன் (கலி., 132)**

Volume 3, SPL Issue 1, July 2025 E-ISSN: 2584-167X

என்ற பாடல் அடிகள் விளக்குகிறது. இத்தகைய சிறப்பினை உடைய மும்முரசுக்கு உரிமை உடையவர் அழகர். தன் மலையில் சிங்கமும் யானையும் மேகமும் நின்று முழங்கும் ஓசையை தன் கோயிலின் முற்றத்தில் மூன்று முரசுகளாக உடையவன்.

**முடிவுரை**

அழகர் கிள்ளை விடு தூதில் தேவர்களுக்கெல்லாம் தலைவனாய் விளங்கக்கூடிய அழகு வீற்றிருக்ககூடிய அழகர்கோயில் அழகும் திருமாலிருஞ்சோலை மலையில் பாய்ந்து ஓடக்கூடிய சிலம்பாற்றின் சிறப்பும் இடம்பெறுகிறது. தென்பாண்டி நாடானது பூமித்தாயின் அங்கங்களாக அமையப்பெற்ற பெருமையையும் உலகில் உள்ள உயிர்கள் அனைத்தையும் படைத்த இறைவன் உடைய உடல் அழகும் அழகர் உடைய கருட கொடியினுடைய சிறப்பையும் மும்முரசின் சிறப்பையும் பிறவி இன்பத்தைப் போக்கி மோட்சம் தரக்கூடிய அழகரின் வர்ணனையையும் விளக்குவதாக இவ்வாய்வுக் கட்டுரை அமைந்துள்ளது.

**குறிப்புகள்**

[1] அன்பு, அ. “தூதின் தொலைநோக்கு ஒரு பார்வை”. இந்திய பல்கலைக் கழகத் தமிழாசிரியர் மற்றும் ஆய்வுக்கோவை. மதுரை காமராஜர் பல்கலைக்கழகம், மதுரை - 625 021, 2011

[2] அண்ணாமலை. *திருமந்திரம் மூலபாட ஆய்வுப்பதிப்பு*. இந்தியப் பண்பாடு ஆராய்ச்சி நிறுவனம், 84, கலாசேஷத்ரா சாலை, சென்னை-600041, 2002.

[3] அருணகிரிநாதர். *திருப்புகழ்*. ஸ்ரீ இந்து பப்ளிகேஷன், சென்னை 600-035, 2012.

[4] ஆச்சார்யா, பி. எஸ். *திருக்குறள்*. நர்மதா பதிப்பகம், சென்னை- 17, 2020.

[5] இராதாகிருஷ்ணன், செ. *அழகர் கிள்ளை விடு தூது*. முல்லை நிலையம், சென்னை- 17, 2009.

[6] பரமசிவன், தொ. *அழகர் கோயில்*. சென்னை - 600 015, 2022.

[7] பெருமாள், பா. *108* வைணவ திவ்ய தேசங்கள். சங்கர் பதிப்பகம், சென்னை 600-049, 2020.

[8] சுப்பிரமணியன் , பெ. *பரிபாடல் மூலமும் உரையும்*. நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் (பி) லிட், சென்னை-600 098, 2004.

[9] தமிழரசி, பா. *தமிழ்விடு தூது காட்டும் தமிழின் சிறப்பு*. பக்திச்சோலை, கலைஞன் பதிப்பகம், சென்னை- 600 017.

[10] விஸ்வநாதன், அ. *கலித்தொகை மூலமும் உரையும்*. நியூ செஞ்சரி புக் ஹவுஸ், சென்னை 600 098, 2011.

[11] ஜெகத்ரட்சகன், எஸ். *அஷ்ட பிரபந்தம்*. ஆழ்வார்கள் ஆய்வு மையம், சென்னை - 600017.

**நிதிசார் கட்டுரையாளர் உறுதிமொழி:** இல்லை

**கட்டுரையாளர் நன்றியுரை:** இல்லை

**கட்டுரையாளர் உறுதிமொழி: இக்கட்டுரையில் எவ்வித முரண்பாடும் இல்லை என்று உறுதிமொழி அளிக்கிறேன்.**

இக்கட்டுரை கிரியேட்டிவ் காமன்சு ஆட்ரிபியூசன் 4.0வின் **Creative Commons Attribution4.0** கீழ் பன்னாட்டு உரிமம் பெற்றுள்ளது.

Academic Research News

# Academic Research News

*Peer-Reviewed Journal*



**Volume 3, SPL 1, July 2025** **E-ISSN – 2584-167X**

# Lushness of the Courtallam Hills and the Love of Vasantavalli

**Dr. P. M. Jayakala,** Associate Professor, Tamil Research Centre, S.T.Hindu College, Nagercoil, Manonmaniam Sumdaranar University, Tirunelveli-12, Tamil Nadu, India.
**ORCiD: https://orcid.org/0000-0002-0736-0047**
Received: 1 April 2025; Revised: 21 April 2025; Accepted: 29 May 2025; Available Online: 30 July 2025.

## Abstract

*Kuravanji literature is also known as Kurathi Pattu. It represents a distinctive form within the tradition of Tamil minor literary genres. Its origins may be traced as far back as the Tolkappiyam. The references to themes and motifs are later found in Kuravanji Literature. One of the earliest examples is "Kuttrala Kuravanji." It is set in the sacred landscape of Kuttralam, which is a region celebrated in ancient Tamil myth and song. In this work, the central character Vasantavalli is deeply enamoured of Lord Kutralanathar, the presiding deity of Kuttralam (Courtallam). Her devotion and longing are portrayed with poetic imagery. In the work, Vasantavalli's entire being radiates with the intensity of her love until she swoons under its power. Even nature participates in the drama. The swan, symbol of purity, recoils from her passion. Her ornaments, such as her bangles, slip away as she faints in yearning for Lord Shiva, who bears the river Ganga upon his head. Her hair is described as turning lustrously black, and it signifies the transformation brought by her love. The grandeur of the Lord Kutralanathar temple and the natural beauty of the surrounding mountain are connected with Vasantavalli's devotion. It creates a scene of sacredness and romantic emotion in the work. Thus, this article studies the love of the protagonist and the lushness of the Kuttralam hills.*

**Keywords:** *Kuttrala Kuravanji*, Thirikoodamalai, Malai Valam, Vasanthavalli, Kathal.

## References

[1] Ramakrishnan, R. *Sittilakkiyam Oor Arimukam*, Saratha Pathippkam, Chennai, 2022.
[2] Jeyaraman, N.V. *Sittilakkiya Selvankal*, Manivasakar Pathippakam, Cidambaram, 2021.
[3] Puliyoor Kesikan. *Kuttalak Kuravanji*, Pari Nilaiyam, Chennai-108, 2000.
[4] Punnai Vannatha Muthaliyar. *Thirukkuttalak Kuravansi Moolamum Uraium*. Tirunelveli Thenninthiya Saivasinthanth Noorpathippu Kazhakam, Chennai, 1995.

**Author Contribution Statement:** NIL.
**Author Acknowledgement:** NIL.
**Author Declaration:** I declare that there is no competing interest in the content and authorship of this scholarly work.
The content of the article is licensed under https://creativecommons.org/licenses/by/4.0/ International License.

Academic Research News

Peer-Reviewed Journal



**Volume 3, SPL 1, July 2025** **E-ISSN – 2584-167X**

# குற்றால மலை வளமும் வசந்தவல்லி காதலும்

**முனைவர் பா. ம. ஜெயகலா,** இணைப்பேராசிரியர், தமிழ் உயராய்வு மையம், தெ. தி. இந்துக் கல்லூரி, நாகர்கோவில், மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழகம், திருநெல்வேலி - 12, தமிழ்நாடு, இந்தியா.
ORCiD: https://orcid.org/0000-0002-0736-0047

## ஆய்வுச்சுருக்கம்

*குறவஞ்சி இலக்கியம் சிற்றிலக்கிய வகைகளில் ஒன்றாகும். இதனை 'குறத்தி பாட்டு' என்றும் அழைப்பர். குறவஞ்சி இலக்கியத்தின் தோற்றத்தை தொல்காப்பிய காலத்திலிருந்தே காண முடிகின்றது. குற்றால குறவஞ்சி என்னும் சிற்றிலக்கியம் குற்றாலம் என்னும் ஊரின் சிறப்பையும் அங்கு கோவில் கொண்ட குற்றாலநாதரையும் போற்றிப் பாடும் நூல். திரிகூட மலையில் தேவலோகத்து வாத்தியங்கள் இடைவிடாது முழங்கிக் கொண்டிருக்கும். ஆண் குரங்குகள் பல்வேறு வகையான பழங்களைப் பறித்து தன்மந்திகளுக்குக் கொஞ்சிக்கொடுத்துக் கொண்டிருக்கும் பழமையான நாடாகும். நீர்வீழ்ச்சியானது கானவர்கள் முற்றங்களில் ஓடிக்கொண்டிருக்கும். கானவர்கள் களிற்றுயானைகளின் கொம்புகளில் பூண்கட்டி தினையினை இடிப்பர். திரிகூட மலை முழுவதும் செண்பக மலரின் வாசம் நிறைந்து காணப்படும். அங்கு கோடான கோடி நவரத்தினங்கள் ஒளிபரப்பிக் கொண்டிருக்கும். அகில், குங்குமம், சந்தனம் முதலியவற்றின் நறுமணம் திரிகூடமலை முழுவதும் மணம் வீசி கொண்டிருக்கும். கயிலை மலைக்கு ஒப்பாகப் போற்றப்படும் மலை திரிகூடமலை. பழமையான நான்கு மறைகளும் பாடி பரவிய நாடு. குற்றாலநாதன் மீது வசந்தவல்லி கொண்ட காதலால் அவள் உடல் முழுவதும் பசலைபடர்ந்துக் காணப்பட்டது. குற்றால நாதர் மேல் கொண்ட மிகுதியான காதலால் அவளுக்கு அன்னம் (உணவு) பிடிக்காமல் போனது. கங்கையாகிய பெண்ணை தலையில் வைத்துள்ள குற்றாலநாதர் மீது கொண்ட காதலால் வசந்தவல்லியானவள் இரு செங்கைகளிலும் உள்ள வளையல்கள் கழன்று மயங்கி கிடக்கின்றாள். குற்றால நாதர் மேல் கொண்ட காதலால் வசந்தவல்லியின் மேனியானது கறுத்துப் போனது. குற்றால மலை வளமும் குற்றாலநாதர் மேல் கொண்ட வசந்தவல்லியின் காதலும் நூல் முழுவதும் மணம் பரப்பிக் கொண்டிருக்கின்றது.*

**குறிப்புச்சொற்கள்:** குற்றாலக் குறவஞ்சி, திரிகூட மலை, மலை வளம், வசந்தவல்லி, காதல்.

## முன்னுரை

திரிகூடராசப்ப கவிராயரால் எழுதப்பட்ட திருக்குற்றால குறவஞ்சியானது குற்றாலம் ஊரின் சிறப்பையும் அங்கு கோயில் கொண்ட குற்றாலநாதரையும் போற்றிப் பாடுகின்றது. குற்றால குறவஞ்சி நாட்டிய நாடகமாகவும், நவீன நாடகமாகவும் நாட்டார் இசைக்கலையாகவும் இயல், இசை, நாடகம் என்னும் முத்தமிழின் கூறுகளையும் கொண்டு ஓர் நிகழ்த்துக் கலையாக நடிக்கப்பட்டு வருகிறது. இதில் இடம்பெற்றுள்ள திரிகூட மலையின் வளத்தையும் வசந்தவல்லி குற்றாலநாதர் மேல் கொண்ட காதலையும் எடுத்துரைப்பது இவ்வாய்வு கட்டுரையின் நோக்கமாகும்.

## குறவஞ்சி

சிற்றிலக்கிய வகைகளில் ஒன்றான குறவஞ்சி இலக்கிய நயம் மிக்கது.நாடகச்சுவை நிரம்பிய இந்நூல் ஓசைநயமும் கற்பனை வளமும் கொண்டுள்ளது. குறவஞ்சி இலக்கியத்தின் பெயர் பாடப்படும் இடத்தின் பெயரிலோ, பாட்டுடைத் தலைவனின் பெயரிலோ, பாடப்படும் இடம் மற்றும் பாட்டுடைத் தலைவனின் பெயரிலோ, தலைவியின் பெயரிலோ அமையும். குறவஞ்சி இலக்கியத்தின் தோற்றம் தொல்காப்பியத்திலே காணமுடிகின்றது. களவு காலத்தில் தலைவனைப் பிரிந்து வாடும் தலைவியின் நிலையினைப் பார்த்த செவிலியும் நற்றாயும்

Volume 3, SPL 1, July 2025 E-ISSN – 2584-167X

இவளின் நிலையை அறிய முற்படுகின்றனர். எனவே கட்டு, கழங்கு என்பன மூலம் குறிப்பார்கின்றனர். தொல்காப்பியம் இதனை,

**கட்டினும் கழங்கினும் வெறி என இருவரும்**
**ஒட்டியத் திறத்தால் செய்திக் கண்ணும். (தொல். பொருள். களவியல். 24)**

என்ற நூற்பா எடுத்துரைக்கின்றது.முறத்தில் அல்லது சுளகில் நெல்லைப் பரப்பி குறிப் பார்ப்பது கட்டு என்பர். கழற்சிக்காய் மூலம் முருகனால் நோய் ஏற்பட்டு உள்ளதா என்று அறிவதற்காக வேலன் என்பவன் குறிப்பார்ப்பது கழங்காகும். குறிஞ்சி நிலத்தை அடிப்படையாகக் கொண்டு குறிச்சொல்லும் மகளிரை ஔவையார் குறுந்தொகைப் பாட்டில் 'அகவன் மகள்' என்று அழைக்கின்றார். பன்னிரு பாட்டியல் குறவஞ்சியை,

**இறப்பு நிகழ்வெதிர் வெண்ணுமுக் காலமும்**
**திறம்பட உரைப்பது குறத்திப் பாட்டே. (பன்னிரு பாட்டியல்)**

என்கிறது. தமிழில் நூற்றுக்கு மேற்பட்ட குறவஞ்சி இலக்கியங்கள் தோன்றியுள்ளன. *திருக்குற்றால குறவஞ்சி, அழகர் குறவஞ்சி, பெத்தலேகம் குறவஞ்சி, செந்தில் குறவஞ்சி, திருமலையாண்டவர் குறவஞ்சி* என இவைப் போன்ற பல புகழ்பெற்ற குறவஞ்சி நூல்கள் உள்ளன.

**குற்றால குறவஞ்சி**

குறவஞ்சி இலக்கியத்தில் ஒன்றான திருக்குற்றால குறவஞ்சி திரிகூடராசப்ப கவிராயரால் பாடப்பெற்றது. திரிகூடராசப்பர் திருநெல்வேலி மாவட்டத்தில் தென்காசி அடுத்துள்ள மேலகரம் என்னும் ஊரில் பிறந்தவர். இவர் தம் இளம் பருவத்திலேயே தமிழ் கல்வி பயின்று அதில் நன்கு தேர்ச்சி பெற்றவர். செய்யுள் ஏற்றுவதில் வல்லவர். சொல் அணிகளும் பொருள் அணிகளும் இவர் பாடலில் சிறப்பான இடத்தைப் பெறுகின்றன. திருக்குற்றாலநாதராகிய திருகூடராசாப்ப பெருமான் மீது 14 நூல்கள் பாடியுள்ளார். குற்றால குறவஞ்சி தென்காசிக்கு அருகில் அமைந்திருக்கும் குற்றாலம் என்னும் ஊரின் சிறப்பையும், அங்கு கோயில் கொண்ட குற்றாலநாதரையும் போற்றி பாடும் நூல். நாட்டிய நாடகமாக, நவீன நாடகமாக நாட்டார் இசைக்கலையாக இயல், இசை, நாடகம் என்னும் முத்தமிழின் கூறுகளையும் கொண்ட ஒரு நிகழ்த்துக் கலையாக நடிக்கப்பட்டு வருகிறது. இந்நூலில் குறவர்கள் வேட்டையாடும் முறை அவர்களின் பேச்சு வழக்கு குறத்தி குறிச் சொல்லும் முறை வசந்தவல்லியின் காதல் என்பன நயத்துடன் கூறப்பட்டுள்ளன. இந்நூல் ஆசிரியரை பாராட்டும் வகையில் 'குறவஞ்சி மேடு' எனும் நிலப்பகுதியை மதுரை ஆண்ட மன்னன் சொக்கலிங்க நாயக்கர் வழங்கியுள்ளார்.

**குற்றால மலையின் வளம்**

தேவலோகத்து வாத்தியங்கள் முழங்கிக் கொண்டிருக்கும் திருகுற்றாலம் மலையில் ஆண் குரங்குகள் பல்வேறு வகையான பழங்களைப் பறித்து தம் மந்திகளுக்குக் கொடுத்துக் கொஞ்சி கொண்டிருக்கும். அப்பழங்களில் இருந்து சிந்தும் கனிகளுக்கு தேவர்கள் கெஞ்சி கொண்டிருப்பர். வேடுவர்கள் தம் கண்களால் வானவர்களை கீழே வருமாறு அழைத்துக் கொண்டிருப்பர். சித்தர்கள் காய சித்தி மூலிகைகளை விளைவிப்பர். தேன் அருவியானது வானில் ஒழுகிக் கொண்டிருப்பதால் செங்கதிரோனின் தேர்குதிரைகள் வழுக்கி விழும். இத்தகைய வளமுடைய மலை தான் எங்கள் திரிகூட மலை. இதனை,

**வானரங்கள் கனி கொடுத்து மந்தியொடு கொஞ்சும்**
**மந்தி சிந்து கனிகளுக்கு வான் கவிகள் கெஞ்சும்**
**கானவர்கள் வழியறிந்து வானவரை அழைப்பர்**
**கமன சித்தர் வந்து வந்து காய சித்தி விளைப்பார்…**
**…குற்றாலத் திருகூட மலைஎங்கள் மலையே (திரி., 8:5-7)**

இப்பாலடிகள் வழி அறிய முடிகின்றது. நீர்வீழ்ச்சியானது கானவர்களின் முற்றங்களில் எல்லாம் பரவி ஓடிக் கொண்டிருக்கும். அங்குள்ள பெண்கள் கிழங்குகளையும், தேன் இறால்களையும்

Volume 3, SPL 1, July 2025 E-ISSN – 2584-167X

எடுப்பர். களிற்றுயானைகளின் கொம்புகளை ஒடித்து அதில் பூண்கட்டி வறுத்த தினையினை உடலில் இட்டு இடிப்பர். தேன் பெருகியிருக்கும் செண்பக மலர்களின் வாசம் வானுலகம் வரை சென்று பரவும். இத்தகைய வளமுடையது திரிகூடமலை இதனை,

**முழங்கு திரைப் புனலருவி கழங்கெனமுத் தாடும்**
**முற்றம் எங்கும் பரந்து பெண்கள்**
**சிற்றிலைக் கொண்டோடும்**
**கிழங்கு கிள்ளித் தேனெடுத்து வளம்பாடி நடிப்போம்**
**கிம்புரியின் கொம்பொடித்து**
**வெம்புதினை இடிப்போம்**
**செழுங்குரங்கு தேமாவின் பழங்களைப் பந் தடிக்கும்**
**தேனலர்சண் பகவாசம்**
**வானுலகில் வெடிக்கும். (திரி., 8:5-7)**

இவ்வடிகள் வழி அறியலாம்.

நாகரத்தினங்கள் கோடி கோடியாக கிடந்து ஒளிபரப்பிக் கொண்டிருக்கும். வேடுவர்கள் காட்டினை நெருப்பிட்டு அழிப்பதனால் அகில், குங்குமம், சந்தனம் முதலியவற்றின் நறுமணம் திரி கூடமலை முழுவதும் மணம் வீசிக் கொண்டிருப்பதை,

**ஆடுமர வீனுமணி கோடிவெயில் எறிக்கும்**
**அம்புலியைக் கவளமென்று தும்பி வழி மறிக்கும்**
**வேடுவர்கள் தினை விரைக்கச் சாடு புனந் தோறும்**
**விந்தை அகில் குங்குமமுஞ் சந்தனமும் நாறும்**
**காடுதொறும் ஓடி வரை ஆடுகுதி பாயும்**
**காகமணு காமலையில் மேகநிரை சாயும்**
**நீடு பல வீசர்கயி லாசகிரி வாசர்**
**நிலை தங்கும் திரி கூடமலை எங்கள் மலையே. (திரி., 8: 9-12)**

இப்பாடலடிகள் எடுத்துரைக்கின்றன.

கயிலை மலைக்கு ஒப்பாகப் போற்றப்படும் மலை திரிகூடமலை. இம்மலை பொன்னிறமான மகாமேருமலை போல் உயர்ந்து விளங்கும். சிவசயில மலைக்கு வடதிசையில் இம்மலை அமைந்துள்ளது. எல்லா சிறப்புகளையும் தன்னுள் அடக்கி கொண்டிருக்கும் மலையாகும். இம்மலையில் கதிரவன் மலை குகைகள் தோறும் நுழைந்து ஒளிபரப்பும் மலையாகக் காட்சி அளிக்கின்றது. இதனை,

**கயிலை எனும் வடமலைக்குத் தெற்கு மலை அம்மே**
**கனக மகா மேரு என நிற்குமலை அம்மே.**
**சயிலமலை தென்மலைக்கு வடக்குமலை அம்மே**
**சகலமலை யுந்தனுக்குள் அடக்குமலை அம்மே**
**வயிரமுடன் மாணிக்கம் விளையுமலை அம்மே**
**வானிரவி முழைகள் தொறும் நுழையுமலை அம்மே**
**துயிலுமவர் விழிப்பாகி அகிலமெங்கும் தேடும்**
**துங்கர்திரி கூடமலை எங்கள் மலை அம்மே (திரு., 8: 13-16)**

இப்பாடலடிகள் நமக்கு சுட்டுகின்றன. இளந்தென்றல் ஆகிய தேரினையுடையவனாக காமதேவன் உலா வருகின்ற மலை கரும்பு வளம் உடையதான திரிகூட மலையாகும். பூமிக்குள்ளே முதன்மை உடையதாக விளங்கும் வளநாடு. எல்லா தேவர்களுக்கும் அன்புடையதாக விளங்கும் தெய்வீக நாடு. திசைகள் அனைத்திலும் ஓங்கி வளர்ந்த நாடு. தீமை அறவே நீங்கிய சிவ நாடு. பழைமையான நான் மறைகளும் பாடி பரவிய நாடு. மை தீற்றிய கண்களையுடைய குழல்வாய் மொழியினைப் பாகமாக உடையவரின் இளந்தென்றல் உலவும் ஆரிய நாடு என்பதனை,

Volume 3, SPL 1, July 2025 E-ISSN – 2584-167X

**தக்க பூமிக்கு முன்புள்ள நாடு**
**சகல தேவர்க்கும் அன்புள்ள நாடு**
**திக்கெல்லாம் வளர்ந்தோங்கிய நாடு**
**சிவத்து ரோகமும் நீங்கிய நாடு**
**முக்கணான்விளை யாடிய நாடு**
**முதிய நான் மறை பாடிய நாடு**
**மைக்க ணாள்குழல் வாய்மொழி பாகர்**
**வசந்த ஆரிய நாடெங்கள் நாடே (திரி., 10:5)**

இவ்வடிகள் வழி அறிய முடிகின்றது.

குற்றால மலையில் அகத்திய முனிவர் ஐந்நூறு வேள்விகளைச் செய்து முடித்ததற்கு இடமாயிருந்த நாடு. கோடி யுகங்களை கண்ட பழைய நாடு. நான்முகன் பிறந்த நாடு. திருமகளும் கலைமகளும் போற்றுகின்ற நாடு. சிவந்த கண்களை உடைய திருமால் சிவனாகிய நாடு. உமையம்மையை ஒரு பாகத்தில் கொண்ட திரிகூடநாதரின் தென்றல் உலவும் நாடு என்பதனை,

**அஞ்சுநூறு மகம் கொண்ட நாடு**
**அநேக கோடி யுகங்கண்ட நாடு**
**கஞ்ச யோனி உதிக்கின்ற நாடு**
**கமலை வாணி துதிக்கின்ற நாடு**
**செஞ்சொல் மா முனி ஏகிய நாடு**
**செங்கண் மால்சிவன் ஆகிய நாடு**
**வஞ்சி பாகர் திருகூட நாதர்**
**வசந்த ஆரிய நாடெங்கள் நாடே (திரி., 10: 6)**

இவ்வடிகள் பகர்கின்றன. மூன்று மாதம் தவறாமல் மழை பொழிகின்ற நாடு. ஆண்டுதோறும் மூன்று போகங்கள் விளைகின்ற நாடு. பிறப்பு, வாழ்வு, இறப்பு என்னும் மூன்று நிலைகளிலும் நன்மை விளைவிக்கும் சிவ நாடு. அரி, ஐயன், அரன் என மூன்று உருவாக விளங்கும் குற்றாலநாதரின் ஆரிய நாடாகும். இதனை,

**மாதம் மூன்றும் மழையுள்ள நாடு**
**வருடம் மூன்றும் விளைவுள்ள நாடு**
**வேதம் மூன்றும் பலாவுள்ள நாடு**
**விசேஷம் மூன்றும் குலாவுள்ள நாடு**
**போதம் மூன்றும் நலம் செயும் நாடு**
**புவனம் மூன்றும் வலஞ்செயும் நாடு**
**நாதம் மூன்றுரு வானகுற் றால**
**நாதர் ஆரிய நாடெங்கள் நாடே. (திரி., 10: 7)**

இவ்வடிகள் வழி அறியலாம்.

**வசந்தவல்லியின் காதல்**

குற்றாலநாதரின் மேல் காதல் கொண்ட வசந்தவல்லியின் மனம் உருகியது. அவள் மேனி முழுவதும் பசந்துப் போனது. தாயின் சொல்லும் கசப்பாக தோன்றியது. கைகளில் உள்ள வளையல்களும் இல்லாமல் நிலைகுலைந்துப் போனாள். குற்றாலநாதன் மீது காதல் கொண்டதனால் மயங்கி பூமியில் விழுந்தாள். விளையாட்டையும் பாடுவதையும் மறந்தாள். இதனை,

**ஆசை கொண்டு பாரில் வீழ்ந்தாள்**
**நேசமான் என்பார்**
**யாடாள் பாடாள் வாடா மாலை**
**சூடாள்காண் என்பார். (திரி., 13: 1)**

Academic Research News

Peer-Reviewed Journal



Volume 3, SPL 1, July 2025 E-ISSN – 2584-167X

இவ்வரிகள் நமக்கு சுட்டுகின்றன. உமையமைக்கு உடற்பாதியை கொடுத்தவர் தந்த மயக்கத்தினாலே வசந்தவல்லியானவள் மண்ணிலே மயங்கி கிடக்கின்றாள். குற்றால நாதர் மீது கொண்ட காதலால் குறும்பலாவினடியிலே எழுந்தருளியிருப்பவரின் திருமுடியின் மீதுள்ள நிலவின் மீது வசந்தவல்லியானவள் சினம் கொண்டு அதனைப் பழித்துப் புலம்பத் தொடங்கினாள். திரு குற்றாலநாதர் மீது காதல் கொண்ட வசந்தவல்லி என்னை ஏன் நீ காய்த்து வருத்துகின்றாய் என்று நிலவைப் பார்த்து பழித்துக் கூறியதை,

**விண்ணிலே பிறந்ததற்கோ வெண்ணிலாவே –எரு**
**விட்டு நான் எரிந்ததற்கோ வெண்ணிலாவே**
**கண்ணில்விழி யாதவர் போல் வெண்ணிலாவே – மெத்தக்**
**காந்தியாட்டம் ஆடுகிறாய் வெண்ணிலாவே. (திரி., 17: 2)**

இவ்வரிகள் எடுத்துரைக்கின்றன. இடப்பத்தின் மேலேறி வரும் குற்றால நாதரிடத்தில் மையல் கொண்ட வசந்த வல்லிக்கு உணவுப் பிடிக்காமல் போனதை,

**திக்கெல்லாம் தென்றற் புலிவந்து**
**பாயுதே மன்மதா- குயிற்**
**சின்னம் பிடித்தபின்**
**அன்னம் பிடியாதே**
**அக்காள் என்னுஞ்சகி வெட்காமல்**
**ஏசுவாள் மன்மதா- அவள்**
**அல்லாமல் தாயொரு**
**பொல்லாத நீலிகாண் (திரி., 19: 2)**

இப்பாடலடிகள் எடுத்துரைக்கின்றன. வசந்தவல்லியானவள் காதலால் துன்பப்படுகிறாள். ஆதலால் காதல் கடவுளான மன்மதனிடம் என்னை விட்டுவிட்டு குற்றால நாதர்முன்னே உன் செயலை செய்ய போவாய் என கூறுவதை,

**நேரிழை யாரையும் ஊரையும்**
**பாரடா மன்மதா – கண்ணில்**
**நித்திரை தானொரு**
**சத்துரு வாச்சுதே**
**பேரிகையே அன்றிப் பூரிகை**
**ஏன் பிள்ளாய் மன்மதா – சிறு**
**பெண் பிள்ளை மேற்பொரு**
**தாண்பிள்ளை யாவையோ**
**வார்சடை ஈதல்ல கார்குழற்**
**பின்னல்காண் மன்மதா நெற்றி**
**வந்தது கண்ணல்ல**
**சிந்தூர ரேகைபார்**
**நாரிபங் காளர்தென் ஆரிய**
**நாட்டினர் மன்மதா – எங்கள்**
**நன்னகர்க் குற்றாலர்**
**முன்னமே செல்லுவாய் (திரி., 19: 3, 4)**

இவ்வரிகள் வழி அறிய முடிகின்றது.

கங்கையாகிய பெண்ணைத் தலையில் வைத்துள்ளவர். தெய்வங்களுக்கு உயர்வானவர். குளிர்ச்சியான திங்கட்கொழுந்தாகிய மூன்றாம் பிறையினை உடையவரை சங்க வீதியிலே உலா வரக் கண்டு வசந்த வல்லியானவள் காதல் கொண்டாள். ஆனால் இரு செங்கைகளிலும் இருந்த சங்கு வளையல்களையும் இழந்து மயங்கியதை,

**மெய்யர்க்கு மெய்யர் திரி கூட**

**Volume 3, SPL 1, July 2025** **E-ISSN – 2584-167X**

**நாயகர் மீதில்- மெத்த**
**மையல் கொண் டேனந்தச் செய்தியைக்**
**கேளாய்நீ பாங்கி**
**செய்ய சடையும் திருக்கொன்றை**
**மாலை அழகும்- அவர்**
**கையில் மழுவுமென் கண்ணைவிட்**
**டேஅக லாவே.**
**கங்கைக் கொழுந்தணி தெய்வக்**
**கொழுந்தை நான் கண்டு- குளிர்**
**திங்கட் கொழுந்தையும் தீக்கொழுந்**
**தாக்கிக் கொண் டேனே**
**சங்கக் குழையாரைச் சங்க மறுகினிற்**
**கண்டு – இரு**
**செங்கைக்குள் சங்கமும் சிந்தி**
**மறுகிவிட்டேனே (திரி., 21:1-2)**

இப்பாடல் வரிகள் எடுத்துரைக்கின்றன. நம் பெருமானை ராஜ வீதியில் உலா வர கண்ட வசந்தவல்லி அவர் கையில் ஏந்தி இருக்கு மானை கண்டதும் ஆடையை நெகழவிட்டதையும், அவர் மீது கொண்ட மோகத்தினால் வசந்த வல்லியின் மேனி கறுத்துப் போய்விட்டதையும்,

**பெம்மானை நன்னகர்ப்பேரரச**
**வீதியிற் கண்டு – அவர்**
**கைம்மானைக் கண்டு கலையை**
**நெகிழவிட் டேனே**
**செம்மேனி தன்னிற் சிறு கறுப்**
**பாரை நான் கண்டு - இப்போது**
**அம்மாவென் மேனியடங்கலுமே**
**கறுத்தேனே (திரு., 21: 4)**

இப்பாடலடிகள் வழி அறிய முடிகின்றது.

குற்றாலநாதர் மேல் உள்ள காதலால் வசந்தவல்லி உணவும் உறக்கமும் இல்லாமல் துன்பப்பட்டதை,

**வெள்ளி விடையில் வியாளம்**
**புனைந்தாரைக் கண்டு – சிந்தை**
**நள்ளிய திங்களை ஞாயிறு**
**போலக்கண் டேனே**
**எள்ளள வூணும் உறக்கமும்**
**இல்லாரைக் கண்டு – நானும்**
**ஒள்ளிய ஊணும் உறக்கமும்**
**அற்றுவிட் டேனே (திரு., 21:5)**

இவ்வரிகள் சுட்டுகின்றன. வசந்தவல்லியானவள் ஒரு பெண்ணிடம் குற்றாலநாதன் என்னிடமிருந்து பறித்துப் போன எனது நெஞ்சை திருப்பித் தரச் சொல் என்று தூது அனுப்பியதை,

**தூதநீ சொல்லி வாராய் பெண்ணே**
**குற்றாலர் முன்போய்த்**
**தூது நீ சொல்லி வாராய்**
**ஆதிநாட் சுந்தரர்க்குத் தூதுபோ**
**னவர் முன்னே.**

Volume 3, SPL 1, July 2025 E-ISSN – 2584-167X

**உறங்க உறக்கமும் வாராது மாயஞ் செய்தாரை**
**மறந்தால் மறக்கவும் கூடாது- பெண்சென்மம் என்று**
**பிறந்தாலும் பேராசை ஆகாது அஃத றிந்துஞ்**
**சலுகைக் காரரர்க்கு ஆசையாயி னேன் இப்போது**
**நேற்றைக் கொல்லாங்குளிர்ந்து காட்டி இன்று கொதிக்கும்**
**நித்திரா பாவிக்கென்ன போட்டி - நடுவே இந்தக்**
**காற்றுக்கு வந்ததொரு கோட்டி விரக நோய்க்கு**
**மாற்று மருந்து முக்கண் மருந்தென்று பரஞ்சாட்டு**
**வந்தால்இந் நேரம்வரச் சொல்லு வாராதி ருந்தால்**
**மாலையா கிலுந்தரச் சொல்லு குற்றாலநாதர்**
**தந்தாலென் நெஞ்சைத் தரச்சொல்லு தராதி ருந்தால்**
**தான்பெண்ணா கியபெண்ணை நான் விடேன் என்று (திரு. 28: 1-3)**

இவ்வரிகள் எடுத்துகின்றன.

**முடிவுரை**

சிற்றிலக்கிய வகைகளில் ஒன்று குறவஞ்சி இலக்கியமாகும். குறவஞ்சி இலக்கியங்களில் ஒன்றான குற்றால குறவஞ்சியில் திரிகூடராசப்பக் கவிராயர் திரிகூடமலையின் வளத்தையும், குற்றாலநாதரின் மீது கொண்ட வசந்தவல்லியின் காதலையும், குறவர்களின் வாழ்வியலையும் குறத்தி குறி கூறும் முறையினையும் சிறப்புற எடுத்துரைக்கின்றது. திரிகூட மலையானது வாத்தியங்கள் முழங்க கனிகளுடன் செழிப்புற்றுக் காணப்படுகின்றது. அருவிநீரானது கானவர்களின் வீட்டு முற்றங்களில் எல்லாம் ஓடிக் கொண்டிருக்கிறது. களிற்று யானைகளின் கொம்புகளினால் தினையினை உரலில் இடித்துள்ளனர். கோடான கோடி நவரத்தினங்கள் ஒளிவீசி கொண்டிருக்கும் குற்றால மலையில் சந்தனம், அகில், குங்குமம் இவற்றின் மணம் வீசிக்கொண்டிருக்கும். கயிலைமலைக்கு நிகரான திரிகூட மலையில் காம தேவன் உலா வந்து கொண்டிருப்பான். இம்மலை இருக்கும் நாடு திசைகள் அனைத்திலும் ஓங்கி வளர்ந்த நாடு.நான்கு மறைகளும் பாடி பரவின நாடு. வசந்தவல்லியானவள் குற்றாலநாதர் மீது கொண்ட காதலால் அவள் மேனி முழுவதும் பசலை படர்ந்து நிலைகுலைந்து விழுந்தாள். அவளுக்கு உணவுப் பிடிக்காமல் போனது. கங்கையாகிய பெண்ணை தலையில் சூடியவர். தெய்வங்களுக்கு உயர்வான குற்றாலநாதர் மீதுகொண்ட காதலால் வசந்தவல்லியின் கை வளையல்கள் கழன்று விழுமாறு பசலை படர்ந்து மயங்கி கிடந்தாள்.

**குறிப்புகள்**

[1] இராமகிருஷ்ணன், இரா. சிற்றிலக்கியம் ஓர் அறிமுகம், சாரதா பதிப்பகம், சென்னை,2022
[2] செயராமன், ந.வீ. சிற்றிலக்கியச் செல்வங்கள், மணிவாசகர் பதிப்பகம், சிதம்பரம், 2021.
[3] புலியூர்க்கேசிகன். திருக்குற்றாலக் குறவஞ்சி. பாரிநிலையம் சென்னை-108, 2000.
[4] புன்னை வனநாத முதலியார். திருக்குற்றாலக் குறவஞ்சி மூலமும் உரையும். திருநெல்வேலித் தென்னிந்திய சைவசிந்தாந்த நூற்பதிப்பு கழகம், சென்னை, 1995.

**நிதிசார் கட்டுரையாளர் உறுதிமொழி:** இல்லை
**கட்டுரையாளர் நன்றியுரை:** இல்லை
**கட்டுரையாளர் உறுதிமொழி: இக்கட்டுரையில் எவ்வித முரண்பாடும் இல்லை என்று உறுதிமொழி அளிக்கிறேன்.**

இக்கட்டுரை கிரியேட்டிவ் காமன்சு ஆட்ரிபியூசன் 4.0வின் **Creative Commons Attribution4.0** கீழ் பன்னாட்டு உரிமம் பெற்றுள்ளது.